# சுவாதீன சுதந்தி

## சி. துரைசிங்கம்

Y
N23
86029

4 - APR 1923
MADRAS

# சுவாதீன சுதந்தரி.

கி. துரைசிங்கம்.
(ஆசிரியர்).

1923.

Copy Right Registered.] [இதன் விலை ரூ. 1—8—0.

Pages ı tc 32 were printed at the Theodore Printing Works,and the rest at Jananukoola Press, Trichinopoly.

301/5
1064

Y
N23

86029

4 - APR 1923

# முகவுரை

1. இந்துகுடியானவர் * அனைவரும் யாசகமே * ஒரு தொழிலாகவும் அதைப் பரம்பரையாகவும் கொள்ளர்து ஆணும் பெண்ணும் இரவும் பகலும் வெகு பாடுபட்டு பட்டினிகிடந்து பொருள் சம்பாதித்து, அப்பொருளைக் காப்பாற்றி அனுபவிக்க வகைதெரியாமல் சாஸ்திர ஆதாரமற்ற "வழக்கம், வழக்கம்" எனும் கொடும் பேய்க்கு இரையாகி அபாத்திரத்தில் தர்மம் செய்து அதனால் விளையுங் கீர்த்தி அபகீர்த்திக்கும், பொய்க்குருக்களுக்கும்*, பொய்ப் போதனைகளுக்கும் அடிமைகளாகி பொய்ந்நின்றழன்று சாமளவும் புலம்பித் தவிக்கிறார்கள்; அந்தோ பரிதாபம்!

2. ஆகையால், இப்பெரும் மயக்கத்தினின்று நம்மவர்களை அகற்றி முதலில் சுவாதீனர்களாக்கி விடுவது மிகவும் பிரதானமான காரியம். இக்காரணத்தினால், நமது வாழ்நாளில் நம்மால்கூடியமட்டும் அனுசரித்து வருகிற நமது முக்கிய ஜீவாதார விதிகள் இன்னவை என்றும், ஷை "வழக்கம், வழக்கம்" எனும் கொடும் பேயால் நம்மவர்களுள் பெரும்பாலார் படுங் கஷ்டங்கள் இன்னவை என்றும், இப்புத்தகத்தின் முற்பாகத்தில் கூறியபின், ஷை குறைகளை நிவர்த்தித்து நம்மவர்கள் இல்லறத்தில் கூடியமட்டும் சுகமாய் வாழும் விதம் வரையப்பட்டிருக்கிறது. அந்தப்படி நடந்தால், "சுவாதீனமும், பொருளும், சாவகாசமும்" நம்மவர்களுக்கேற்படும்.

3. பின்பு நம்மத முடிவு; சுதேசக்கல்வி, துரைத்தனக்கல்வி, கைத்தொழில், மேல்நாட்டு வியாபாரம்

---

☞ * இக்குறிப்பிட்ட வார்த்தைகளின் விவரம் இதின் பிற்பாகத்திலுள்ள பொருளகராதியில் வரையப்பட்டிருக்கிறது.

முதலிய விஷயங்களில் நம் பிள்ளைகள் தேர்ச்சி அடையுமாறு பிரத்தியேக கல்விச்சாலை * அமைத்து, அங்கிலேயர்கள் தங்கள் ஜன்மதேயத்தில் எவ்வளவு இராஜ சுதந்தரத்தோடு சுகமாக வாழ்கின்றார்களோ அப்படியே நாமும் நம் நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி ஏற்பட்ட "அறநெறியை" அனுசரித்து சுகமாக வாழ முயற்சிக்கவேண்டும்.

4. நம் பெரியோர்கள் சத்தியம்*, அருள்நீதி*, முதநூல்*, அனுபவ வாயிலாக இச்சிறிய புத்தகத்தில் ஏற்படும் தப்பிதங்களைத் திருத்தி, நம்மவர்களுள் பற்பல தொழிலால் ஏற்படும் சிற்சில வித்தியாசமான வழக்கங்களை அனுசரித்து, அந்தந்த தொழிலுக்குத் தக்கபடி வேண்டிய சீர்திருத்தங்களையும் காலத்துக்குக்காலம் ஏற்படும் மாறுதல்களையும் பெரும்பான்மையாகிய ஏழைகளின் சௌகரியத்தை உத்தேசித்து சமயோசிதமாய் மேன்மேலும் அபிவிர்த்தி செய்து, நம்மவர்கள் தத்தம் உழைப்புக்குத் தக்க பயனைத் தாமே பூரணமாய் இம்மையிலேயே அனுபவிக்கும்படிச் செய்வார்களென்று நான் நம்புகிறேன்.

5. "மாறுபடு தர்க்கந் தொடுக்க வறிவார்......" என்று தாயுமான சுவாமிகள் கூறியபடி, இப்புத்தகத்தில் அடங்கிய சில விஷயங்களை விதண்டாவாதமாய் நம்மவர்களிலுஞ் சிலர் மறுக்கக்கூடும்; அறிஞர்கள் அவைகட்குச் செவி கொடாமலிருப்பதே சீர்.

6. இலக்கண இலக்கியங்களில் மிக தேர்ச்சியடைந்து எனது வித்வ சாமர்த்தியத்தை வெளியிடுவதற்காக இப்புத்தகம் எழுதப்படவில்லை; நம் குடியான கூட்டத்திலுள்ள அறிஞர்கள் முன்வந்து நமது எண்ணிறந்த கஷ்ட நிஷ்டூரங்களை மெள்ள மெள்ள நிவர்த்தி செய்வதற்காக ஏற்பட்ட ஒரு ஞாபகப்பத்திரமேயன்றி வேறன்று; ஆகையால், இதில் ஏற்படும் சொற்சோரம், பொருட்சோரம் முதலிய பல தோஷங்களுக்காக என்னை மிக்கோர்கள் மன்னிக்கும்படி மிகவும்

வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்; மேலும், நம்மவர்களில் அநேகர் அனுபவமூலமாகத் தெரிந்த விஷயங்களைத் தமிழில் மிகு தேர்ச்சி யடையவில்லை யென்று கருதி பின்னிடாமல், முன்னுக்கு வந்து தங்களது அரிய கருத்துகளை வெளியிட்டு நம்மவர்களது அறியாமை யெனும் ஒரு பெருங் கோட்டையைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தகர்த்தெறிய முயலல்வேண்டும்.

7. இச்சிறியபுத்தகத்தில் அடங்கிய விஷயங்களை அங்கீகரிக்கும் தேசாபிமானிகள், தங்கள் தெருக்களிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் மூலமாய்ப் பிள்ளைகள் பத்து அல்லது பன்னிரண்டு வயதானவுடன் (அதாவது எண்சுவடி, சதகம் முதலியவைகள் படித்தானபிறகு) இப்புத்தகத்தைப் படிக்கும்படிச் செய்வித்தும், விசேஷ விவேகமுடைய ஏழைப்பிள்ளைகளுக்கு (தங்கள் வீட்டில் நடக்கும் சுபாசுப கார்ரியங்களை முன்னிட்டு) தங்களால் கூடிய மட்டும் இப்புக்தகத்தை வாங்கி இலவசமாகப் பரிசளித்தும், ஷை அபிமானிகள் தத்தம் குடும்பத்திலுள்ள பெண் பாலர்களுக்கும் தங்களால் இயன்ற மட்டும் இப்புத்தகத்திலுள்ள விஷயங்களையும் தத்தம் அரிய பெரிய கருத்துகளையும் சமயோசிதமாய் எடுத்துச் சொல்லி அறிவை விளக்கினாலொழிய, நம் நாடு நன்னிலையடைவது அசாத்தியம்.

8. சிலர் இப்புத்தகத்தில் வெளியிட்ட சீர்திருத்தங்கள் எக்காலத்தில் பயன் தருமென்று கருதலாம். எந்த மனிதர் எப்பொழுது செலவைச் சுருக்குகிறாரோ, அப்பொழுதே அவர் பயனடைந்தார். இது எல்லோரும் சாத்தியமாவெனின், சாத்தியமே. செலவைச் சுருக்கிச் சுகமடைவது அசாத்தியமா? மனம் இருந்தால் கஷ்டம் ஒன்றுமில்லை. நம் சனங்கள் எல்லோரும் இவைகளை அங்கீகரிப்பதெப்போ, பயனடைவதெப்போவெனின், ஒவ்வொரு செங்கலாக வைத்தே பிரம்மாண்டமான மாளிகைகள் கால அளவில்

கட்டப்படுவதுபோல் உத்தமர்கள் ஒவ்வொருவராய்ச் சேர்ந்து ஆங்காங்கு ஒரு சங்கம் கூட்டி ஒத்துழைத்தால், நாளடைவில் பெரும் பயனைத் தருமென்பதற்கு ஐயமே இல்லை.

9. இப்புத்தகத்தைப்போல் அநேக புத்தகங்கள் இருக்கிறதென்றும், அதனால் இது தேவை இல்லையென்றும் சிலர் நினைக்கலாம். இரவில் ஒரு பெருங் கூட்டமாக செல்லும் ஊர்க்கோலத்திற்கு பல தீவர்த்திகள் வேண்டி இருப்பதுபோல், அஞ்ஞான இருளில் அகப்பட்டுச் செல்லும் சுமார் 26 கோடி இந்துக்களுக்கு இதைப்போன்ற புத்தகம் இலட்சக் கணக்காய் வேண்டுமென்றே சொல்லவேண்டும்.

10. இப்புத்தகம் ரூபமாகும் வரையில், சரவை எழுதுதல், சுத்தப் பிரதி தயாரித்தல் முதலிய பல உதவிகள் புரிந்த எனது நண்பர்களுக்கும், இதன் பெரும்பாகத்தை அச்சிட்ட திரு. தி. கி. இராஜகோபால் நாயுடு அவர்களுக்கும் மிகுந்த அன்புடன் வந்தனம் அளிக்கிறேன்.

இப்படிக்கு,

கி. துரைசிங்கம்.

(ஆசிரியர்).

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| அருள் நீதி | 212 |
| இந்து குடியானவர் | 106 |
| இந்து குடியானவர்கள் முக்கிய ஜீவாதாரங்களாவன | 1 |
| எட்டு | 81 |
| கம்மாளர் | 137 |
| கருட புராணம் | 239 |
| கருமாந்தரம் | 82 |
| கலியாணம் | 36 |
| கல்விச்சாலை | 200 |
| காடாத்து | 78 |
| குடியானவர்களின் கஷ்டங்கள் | 12 |
| கொல்லாவிரதர் | 140 |
| கொள்ளி வைக்கிறவர் | 228 |
| கோகுலம் | 131 |
| சங்கம் | 93 |
| சத்தியம் | 211 |
| சமாதி | 238 |
| சமையற்காரர் | 241 |
| சவரம் | 236 |
| சில்லரைக் கிரியைகள் | 222 |
| தலைச்சங்கம் | 102 |

| | பக்கம். |
|---|---|
| திதி | 90 |
| திராவிட-ஆரியர்கள் | 219 |
| நற்குலம் | 221 |
| நித்தியா நித்தியவஸ்து விவேகம் | 219 |
| பஞ்சமர் | 148 |
| படையாட்சி | 128 |
| பரம்பரைப் பிராமணர் | 157 |
| பிரசவம் | 18 |
| பிள்ளைக்குக் காதுகுத்தல் | 25 |
| புரோகிதர் | 214 |
| பெண் கல்வி | 202 |
| பொய்க் குருக்கள் | 197 |
| பொருளகராதி | 106 |
| மந்திரம் | 215 |
| மரணக் கிரியைகள் | 66 |
| முதநூல் | 213 |
| முத்திரைதானம் | 234 |
| யாசகம் | 185 |
| ருது | 82 |
| வித்தியாரம்ப விதி | 29 |
| வேளாளர் | 125 |

ஓம்.

அஞ்ஞான மகல

மெய்ஞ்ஞான நிலவ.

# இந்து குடியானவர்கள் முக்கிய ஜீவாதாரங்களாவன.

---

**11.** (1) இந்துக்கள் ஒவ்வொருவரும் கடவுளைத் (தன் மனைவியோடு வீற்றிராநின்ற திவ்விய க்ஷேத்திரத்திற்) தரிசிப்பதென்றும், அல்லது அவர் பாதாரவிந்தத்தைச் சேர்வதென்றும், அல்லது அவருடன் இரண்டறக்கலப்பதென்றும் ஆகிய இம்மூவித நோக்கங்களில் ஒன்றைப் பிரதான ஆதாரமாகக்கொண்டு தன் வாழ்நாளிற் பெரும்பாகத்தை ஷடி விஷயத்திற் செலவுசெய்து, குச்சு உபாதையைச் சொற்ப பிரயத்தனத்தால் நிவர்த்தித்து விஷய சுகங்களுக்கு அதிக இடங்கொடாமல் தம் தெய்வநோக்கம் பூர்த்தியாகும் வரையில் இடைவிடாது ஜன்ம ஜன்மங்களாக முயற்சிக்கவேண்டு மென்பதோர் கொள்கை.

(2) இந்துக்கள் ஒவ்வொருவரது மனோநிலைக்குத்தக்கபடி அவரவர் இஷ்டம்போல் அவரது 16-வது வயதுமுதல் அவர் நடந்துகொள்ளும்படி விட்டுவிடுவதோர் வழக்கம். பலாத்காரமாயாவது, அல்லது எவ்வித தந்திரத்தாலாவது ஒருவர் தன் நிலையை மற்றொருவர் அனுசரிக்கும்படிச் செய்வது மேற்படியாருடைய உள்ள நிலையுங்கெட்டு போதிப்பவருடைய நிலையுங்கொள்ளாது திண்டாடவேண்டி நேரிடும்.

முக்கிய கவனிப்பு:—1. இதனால்தான் இந்தியாவிலுள்ள பூர்விக அநாகரிகக் கூட்டங்கள் (அதாவது குறவர், குறும்பர் முதலியோர்கள்) இன்றளவு தங்கள்

இஷ்டம்போல் நம் நாட்டில் யாதொரு இம்சையு மின்றி வசித்துவருகிறுர்கள்.

2. பிற மதஸ்தர்கள் தாங்களே நம் மதத்திற்குவர இஷ்டப்பட்டாலன்றி, நாம் அவர்களை மதவெறி கொண்டு மாற்றுவது முற்றிலும் பிசகு. தற்காலம், இந்துமதத் தூதர்கள் (Hindu Missionaries) இதைச் சற்றுக் கவனிக்கவேண்டும்.

(3) தேகத்துக்கும் தேகிக்கும் (அதாவது மனத்திற்கும்) இயற்கையாயுள்ள சம்பந்தாசம்பந்தத்தை யனுசரித்து, I இலௌகிக, II இராஜிக III தெய்விக சட்டங்கள் நம் முன்னேர்கள் வெகுநாள் அனுபவமூலமாகக் கட்டியுள்ளார்கள். அதாவது, நம் நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கும், ஜனங்களின் நடையுடை பாவனைக்கும், இந்துமதக்கொள்கைக்கும் முரண்படாது வேண்டிய சன்மார்க்க விதிகள் அமைப்பது வழக்கம். உதாரணமாக,

I. இலௌகிகத்தில்,

(I) "சனிபுதன்றனி லெண்ணெய் வெந்நீரின் முழுகுவார்
சாருமிளவெயில் விரும்பார்
தம்வயதின் மேலான மங்கைதனை மணவார்
சதாகாலம் வழியினடவார்
பனியிலுங் காற்றிலும் மெய்வருந்தார் மடைப்
பள்ளியிற் சேவகமிரார்
பழங்கறி யருந்தா ரிரண்டடக்கா ரொன்று
பலகாலமும் விட்டிரார்
கனியொடு கிழங்குகள் மிகுந்து புசியார்பசி
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பர்நீர்மோர் கூட்டுவார்தினங்
காவேரிதனின் முழ்குவார்
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்குநோய் சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங்கடராயனே,"

என்று திருவேங்கிட சதகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அதாவது, ஒருவர் விசேஷமாகக் காலையில் நீராடினால், வேர்வை, அழுக்கு, துர்நாற்றம் முதலியவை நீங்கி அங்கங்குளிர்ந்து அவர் ஆரோக்கியமா யிருப்பது மன்றி அவர் மனமுஞ்சாந்தம் அடைந்து தியானஞ் செய்வதற்கு ஏதுவாகிறது. இவ்வண்ணமே மற்றவை களையுங்கொள்க. இன்னும் இது சம்பந்தமான விஷயங்கள் ஆசாரக்கோவை முதலிய பல நூல்களிலுங் காணலாம்.

(2) இது நிற்க, கொடிய பஞ்சத்தாலும், மிகத் தரித்திரத்தாலும், ஒய்வற்ற உழைப்பாலும் வெகு சுத்த சுசிகரமாயிராத நம் ஏழைகளைப்பார்த்து சுகாதாரமற்ற காட்டுமிராண்டிகளென்றும், அநாகரிகளென்றும் கூறுவது அறிவீனமன்றோ? இப்பிரபஞ்சத்திற் சுகாதாரத்தில் மிகச்சிறந்த நம்மவர்கள், அங்கிலேயம் (English) படித்து அல்லது மேல்நாடு சென்று மேற்படி சுகாதார விஷயங் கற்கவேண்டு மென்பது பெரும் பேதமையே.

II. (1) இராஜிகத்திலும், அப்படியே இம்மைக்கும் மறுமைக்கும் தூல சூக்ஷம சரீரங்களுக்குள்ள சம்பந்தத்துக்கு விரோதமின்றி உலக நிர்வாக விதிகள் ஏற்படுத்துவது வழக்கம்.

(2) அதாவது ஒருவர் மற்றொருவரிடத்திற் கடன் வாங்கினால் அக்கடனைக் காலபயம் (Time bar) அற்று இம்மையிலாவது அல்லது மறுமையிலாவது கடன்காரர் கடன் கொடுத்தே தீரவேண்டும் என்பதோர் விதி. சிலர் கடன் கொடுபடாவிட்டால் கோவிலிற் சீட்டு எழுதிக் கட்டுவதுமுண்டு. இவ்வித விதிக்கு விரோதமாய் காலபயம் என்னும் இராஜாங்கச் சட்டம் ஏற்பட்டபிறகு கடன் கொடுத்தவர் சில சமயம் தன் பொருளை இழக்க நேரிடுகிறது. இதனாலேற்படும் அவரது மனப்பதைப்பு (மனம் சமஷ்டியாதலால், அதாவது மனம் எங்கும் வியாபித்

துளதாதலால்) கடன்காரன் மனதைத் தாக்கி அம் மனம் மெலிவுற, பின் அதன் பிரதான நாடிகள் கெட்டுப் படிப்படியாய் அவரது தேகம், அவரது சந்ததிகள் நசிக்கிறதை நாம் அடிக்கடி காண்கிறோம்.

(3) ஆகையால் இதுபோன்ற சட்டங்களை மாற்றவேண்டியது முக்கிய அவசியமாகும். எப்படியெனில், ரூ. 200/-க்கு ஒரு கைம்மாத்துப் பத்திரம் (Pronote) மூன்று வருஷத்திற்குத்தான் செல்லுமெனுஞ் சட்டத்தை ரத்து செய்து அரசாங்கத்தாருக்குக் கிடைக்கும் வருமானத்திற்குப் பங்கமில்லாமல், அதாவது பத்திரம் வாங்கி கச்சேரியில் பதிவு (Register) செய்திருந்தால் எவ்வளவு ஆதாயம் அரசாங்கத்தாருக்கு ஏற்படுமோ அதற்குத் தகுந்த அபராதம் விதித்து அந்த கைம்மாத்துப் பத்திரம் எக்காலத்திலுஞ் செல்லும்படி செய்யவேண்டும்.

(4) ஒருவர் ஒரு வீடுகட்ட மனை வாங்கிய பின் சில அசந்தர்ப்பத்தால் கட்டமுடியாமல் இருந்துவிட்டால், அம்மனையின் அக்கம்பக்கத்திலுள்ள ஒருவன் அம்மனையின்பேரில் தனது சாமான்களைப் போட்டு, உடையவர் எடுக்கும்படிச்சொன்னால் சாக்குப்போக்குச் சொல்லி, 12-வருஷ காலத்திற்குமேல் அது தன்னுடையதென்றும், தனக்குப் பூர்விகச் சொந்தமென்றும், தன் அனுபவத்திலிருப்பதாகவுஞ் சொல்லி மறுத்துவிடுகிறான். அரசியலிலும் மேற்படி அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு உடையவருக்கு விரோதமாய் சில சமயம் தீர்ப்புசெய்யப்படுகிறது. இது அநீதியன்றோ? மனை வாங்கினவருடைய மனமானது துடிக்கத்துடிக்க அக்கிரமமாகப் பிரவேசித்தவனும் அவன் குடும்பமும் முன் சொன்னதுபோல் பின்னால் நாசமாகிறதை நாம் அடிக்கடி காண்கிறோம். ஆகையால், மேற்படி சட்டத்தை ரத்துசெய்து அக்கிரமஞ் செய்கிறவர்களைத்

தண்டித்தாலன்றி†, நம் நாட்டில் மேற்படி அக்கிரமம் விருத்தியாகி நாளுக்குநாள் நம் ஜனங்கள் பாழாகிப் பரதவித்துக் கொண்டேயிருப்பார்கள்.

மு-க:—1. நீதித்தலங்களில் (Civil & Criminal Courts) நடக்கும் எவ்வளவு சிறிய வியாச்சியமானாலும் அதைக் கூடிய சீக்கிரத்தில் (அதாவது ஆறு மாதத்திற்குள்) விசாரித்தபிறகு, அக்கிரமம் செய்தவனும் அவனைப்போன்றவர்களும், நீதிக்குப் பயப்படும்படி தக்க தண்டனைவிதித்து, நீதியாளரின் கஷ்ட நிஷ்டூரங்களுக்குத் தக்க பரிகாரம் தேடுவதே அரசாங்கத்தாரின் முக்கிய கடமையாகும்.

2. மேற்படி நீதித்தலங்களில், சில அதிகாரிகள் தங்கள் அதிகார பலத்தால் கட்சிக்காரர்

---

† தண்டிப்பதென்பது சொற்ப செலவு தொகையை (அதாவது விவாதபலனடைந்தவர் செய்த செலவில் சுமார் நான்கில் ஒரு பங்கை) தோல்வியுற்றவன், மேற்படியாருக்குக் கொடுக்கும்படித் தீர்ப்பு செய்யப் படுவதல்ல. விவாத பலனடைந்தவர் செலவு செய்த முழுத்தொகைக்கு இருமடங்குக் குறையாமலும், மேற்படியாருக்கு மெத்த மனக்கவலை, இரண்டு மூன்று வருடங்களுக்குக் குறைவில்லாத அலைச்சல் முதலிய பல இம்சைகளை அனுவசியமாய் உண்டுபண்ணினப் பாதகனை நீதித்தலத்தில் (Criminal Court) தகுந்தபடி தண்டித்தாலன்றி, இவ்வரசாங்கத்தில் விவகார விஷயமாக மிக்க தனம் செலவழிந்தும் பயனற்று, நாளுக்குநாள் அக்கிரமம் அதிகரித்து இந்நாட்டிற் சன்மார்க்கம் க்ஷீணிக்கிறது; அதனால் ஜனங்களின் இராஜ விசுவாசமும் வரவரக் குறைவுபடுகிறது. ஆகையால், கூடிய சீக்கிரத்தில், அரசாங்கத்தார் ஷை விஷயங்களைக் கவனித்து, குடிகளின் இராஜ விசுவாசத்திற்குப் பங்கம் நேரிடாமல் சட்டங்கள் உண்டுபண்ணுவதே சீர்.

களைச் சமாதானமாகும்படிச் சொல்லி வியாச்சியத்தைச் சுலபமாய் முடித்துவிடுகிறார்கள்; இது சாதுவான பசுவையும் சீறு புலியையும் ஒரே அறையில் அடைப்பதற் கொப்பாகும். மேலும், மேற்படி சமாதானத்திற்கு இணங்கின அக்கிரமக்காரன்மேல் விருப்பும், இணங்காத நீதியாளர்மேல் வெறுப்பும், மேற்படி அதிகாரிகளுக்குச் சிலசமயம் ஏற்படுகிறது; இதன் பயன் இன்னதென்று இங்கு சொல்லாமலே விளங்கும். "துஷ்ட நிக்ரகஞ் சிஷ்ட பரிபாலனஞ்" செய்யத் தலைப்பட்டவர்கள் இவ்விதம் நடப்பது அழகல்ல.

"கொட்டஞ்செய் துட்டர்கண்ணில் விரலைவிட்
கூ! கூ! யெனப்போய் கதறும்படி மாட்டி [டாட்டி
நானே பொதுநீதி தானே செலுத்திட
நல்வரம் அருள் கோனே,"

என்று ஸ்ரீமான் வேதநாயகம்பிள்ளை அவர்கள் கூறியதை நன்குணர்க.

(5) ஒருவன் தன்னிடத்திலுள்ள ரூபாய் ஆயிரத்தை, மூலதனமாக வைத்து தன் சக்தி மீறி ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்து பெரும் நஷ்டம் ஏற்படில், திடீரென நீதித் தலத்தில் (Insolvent Court) ஏழை மனுக் (Insolvent Petition) கொடுத்துக் கடன் கொடுத்தவர் வாயில் மண்ணைப் போடுகிறான். ரூபாய் ஆயிரம் கையிலுள்ள ஒருவர் மேற்படி தொகைக்குள்ளாகவே வியாபாரஞ் செய்வாராகில் அவருக்கு இவ்விதக் கஷ்டம் நேரிடாது. அப்படிக்கில்லாது ஒருவன் தனது சக்திமீறி வியாபாரஞ்செய்து நஷ்டமடைந்து அநேகருக்குத் துன்பம் விளைவிக்கிறதால் இத்தகைய பெருங் கடன்காரர்களை நீதிபதிகள் தக்கபடி தண்டித்தாலொழிய நம் நாட்டிற் தற்காலம் பரவிவரும் மோசடியான வழிகள் குறைவுபடா.

(6) ஆனால், கப்பல் மூலமாக சாமான்கள் வெகுதூரம்போகும்பொழுது, கப்பலுக்குச்சிலசமயம் அபாயம் நேரிடுதலாலும், கடைகள் சிலசமயம் திடீரென்று தீப்பற்றி எரிந்துபோகிறதாலும், ஏராளமான நஷ்டம் அகஸ்மாத்தாய் ஏற்படும் வியாபாரிக்கு மாத்திரம் மேற்படி ஏழை மனு சட்டம் பொருந்தும். சிலர், ஏழை மனு சித்தி பெற முடியாதபோது, சொத்துக்களை ஒளித்து வாதியின்படிவாங்கிச் சிறைச்சாலையில் சுகமாக வசிக்கிறார்கள். இதுவும் பிசகு. இவர்களைத் தண்டித்துக் கடுங் காவலில் வைப்பது அவசியம்.

III. (1) தெய்வ வழிபாட்டிலும் நம்முன்னோர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிகளை ஒவ்வொருவரும் தன் தேக தேகிக்குத் தக்கவாறு அனுஷ்டிக்கும்படி வெகு அருமையாய் அமைத்துள்ளார்கள். இது விஷயத்தில் நாம் எல்லோரும் இவ்வுலகில் பூரண சுவாதீனம் நாளது வரையில் அனுபவித்து வருகிறோமாதலால் இதற்குச் சம்பந்தமான கோவில், குளம், சத்திரம் முதலிய பல பொதுதலங்களில் நம் குடியானவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரிடாமல் சட்டசபைகளில் நமக்கு அனுகூலமான சட்டங்கள் செய்து மேற்படி சுவாதீனத்தை நாம் ஒவ்வொருவரும் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

(2) மேற்கூறிய காரணங்களினால், தேகத்துக்கும் தேகிக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை உத்தேசித்து சட்டசபைகளிற் சட்டங்கள் உண்டுபண்ணுவதும், ஏற்கனவேயுள்ள அயுக்தமான சட்டங்களைத் திருத்துவதும் அத்தியாவசியம். அரசாங்கத்தார் ஆதாயத்துக்குப் பங்கமில்லாமல் (அதாவது இடாம்பு சட்டத்துக்கு- Stamp Act-விரோதமின்றி)சீர்திருத்தங்கள் செய்வது உசிதம்

(4) ஒவ்வொருவரும் தனது குச்சு உபார்ஜிதையை யும், விஷய சுகங்களையும், நீதி வழியாகச் சம்பாதித்து பூர்த்திசெய்யவேண்டுமேயன்றி, பொய், களவு, மோசம் முதலிய பல துர்வழிகளிற் பிறர்பொருளைக் கவர்ந்தால், அது சஞ்சித கர்ம்மாகித் தன்னைச்சூழ்ந்து திரும்பவும் தான் அன்னோருக்கு ஜன்ம ஜன்மங்களாக உழைத்துத்தீர்க்கவேண்டுமென்று ஏற்பட்டதோர்விதி.

(5) தோழனேடும் ஏழமை பேசேல், என்ற அருமொழிப்படியும், காடிக்கஞ்சியானாலும் மூடிக்குடி, என்ற பழமொழிப்படியும், நமது தரித்திரத்தை வெளியே சொல்லாமலும் அற்ப உணவாயினும் அறையில் அருந்தி மானமுடன் வாழ்ந்து வரவேண்டுமென் பதோர் கொள்கை; இதனால்தான் இக்கொடிய நித்திய பஞ்சகாலத்தில் நம் ஏழைகள் அடிக்கடி பட்டினி கிடக்க நேரிட்டும், நாளது வரையில் பெருங்கலகமின்றிக் காலங்கழிக்கலாயிற்று.

(6) (1) உலகசுகத்தை அநித்தியமென்று கருதி, அதனால் ஆயுள் முழுவதையும் விஷய சுகத்திலேயே செலவழிப்பது அறிவீனமென்றும், படிப்படியாய்ப் பஞ்சேந்திரியம் அடக்கி வசிக்க ஒரு குடிசையும், பசிக்கு ஏதையும் புசித்து, அரைக்கு அற்ப ஆடையுந்தரித்து, வாழ்நாளை வீணாக்காமல் தன்னைத் தான் அறிந்து பூரண அறிவுடன் விளங்குபவரெவரோ அவரே மகாப் பெரியோரென்றும், அந்நிலையை நாம் ஒவ்வொருவரும் ஒரு மலை யிலக்காகக்கொண்டு பின் தொடரவேண்டுமென்றும், ஓர் பெரும் நோக்கம் வெகுநாளாக நம் கூட்டங்களில் போதிக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக, திருவள்ளுவர், குசேலர் முதலியவர்கள் இல்லறத்திலும், கௌபீனத்தோடு வசித்த தாயுமானவர், கௌபீனமுமற்று பிறந்த மேனியாயிருந்த பட்டினத்தடிகள் முதலானவர்கள், துறவறத்திலும் இப்பெரும் நிலையை அடைந்தவர்கள்.

(2) சிலர் ஏகதேசம் இரண்டொருவர் அப்படி இருந்தனரேயன்றி குடியானவர்கள் அனைவரும் அப்படி இல்லையேயென்று கருதலாம். அது அப்படி அல்ல. மிக்க தனம் சம்பாதிக்கக்கருதி வியாபாரத்திற் தலையிட்ட அனைவரும் சித்தி பெறுவதில்லை. சிலர் நஷ்டமடைந்தும், சிலர் சொற்பலாபமடைந்தும், நூற்றுக்கு இரண்டொருவர் மாத்திரம் மிக்க சித்தி பெறுகிறதுபோல, இப்பெரும் நோக்கங்கொண்டு செல்லுகிற நம் கூட்டங்களில் இரண்டொருவர் சித்தி பெறுகிறது இயற்கை.

(3) இவ்வித நோக்கங்கொண்டு வெகு யுகங்களாகக் காலங்கழித்து வருகிற நம் கூட்டங்களைப் பார்த்து, ஒருவர், "நீங்கள் முற்காலத்தில் மிகக் கேவலமான குடிசைகளில் எளிய உணவோடும் அற்ப ஆடையுடனும் வசித்து, அற்ப வாழ்வு வாழ்ந்தீர்களென்றும், இப்பொழுது மாடமாளிகை, கூடகோபுரம், காந்தவிளக்கு, காந்தவிசிறி, காந்த ரதம் (Motar car) முதலான சிறந்த வாகனங்கள் ஏறி சுகமடைகிறீர்களென்றும்," மேற்படி சுகத்தால் விளைகிற தீங்குகள் இன்னதென்றுணராது, கூறுவது மதியீனமன்றோ?

"கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமருஞ்செல்வமு மிவ்வரசு மியான்வேண்டேன்
எம்பெருமா னீசனெழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்குந் தவமுடையே னாவேனே,"

என்று இராஜகுல திலகராகிய குலசேகர ஆழ்வார் கூறியதைக் நன்குணர்க.

மு-க:— (1) நம் ஜனங்கள் ஒவ்வொருவரும் தங்களது விஷய சுகங்களைச் சுருக்கி தங்களால் கூடியமட்டும் மிகச் சொற்ப ஜீவனஞ் செய்வதற்கே வழிதேடுகிறதனால் பொய், களவு, பிறர்பொருளை வஞ்சித்தல் முதலிய பல துர்க்குணங்கள் மிகப்பெருகி, அவை

களால் பிறதேசவாசிகளோடு அடிக்கடி பெரும் யுத்தங்கள் செய்யாமலே காலங்கழிக்கிறார்கள். ஆனால் மேல் நாட்டிலோ, ஒவ்வொருவரும் தனது விஷய சுகங்களை எவ்வளவு அதிகமாக அனுபவிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக அனுபவிக்க முயற்சி செய்கிறதனால் ஒருவருக்கொருவர் ஏற்படும்பொறாமை, பகை, வஞ்சகம் முதலான துர்க்குணங்கள் அதிகரித்து அடிக்கடி தேசங்கள் ஒன்றோடொன்றாவது அல்லது பல சேர்ந்தாவது பெருஞ் சண்டைகளிட்டு, வெகுநாள் பிரயாசையால் விருத்தியான அழகிய நகரங்கள், விசித்திரமான கோவில்கள், நேர்த்தியான வீடு முதலானவைகள் இடிந்து தகர்ந்து பாழாகுவதன்றி, ஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஐயோ! இதுதானா பகுத்தறிவுள்ள மனிதர் செய்யும் நாகரிகச்செய்கை?

(2) ஆனால், அக்கிரமமாக சண்டை யிட்டு பிறர் தேசத்தை அல்லது பிறர் பொருளை அபகரிக்க வந்த ஒருவனை எதிர்த்து போர்புரிந்து அடித்துத் துறத்துவதுவே புருஷலட்சணம். இவ்வுலகில் அவ் வித வீரதீரமில்லாத ஒரு குடியானவன் மனிதப் பதரேயன்றி வேறன்று.

(3) இம்மாட்சிமை தங்கிய அபாரக் கருத்துகள்தான் நம்மவர்களை ஆதியில் வெகு தனவந்தர்களாக்கியும், இவ்விதம் உழைத்துச் சாப்பிட அஞ்சின சில சோம்பேறி அன்னியர்கள், நம் தேசத்தை அநேகந் தடவைகள் படையெடுத்து கொள்ளையடிப்பதற்கும், சிலர் வியாபாரத்தால் இன்றையவரையில் அளவிறந்த பொருள் சம்பாதிப்பதற்கும், சிலர் நம் ஜனங்களின் ஒரு பெருந்தொகுதியை (நம்நாட்டிலும் பிற நாடுகளிலும்) கூலியாட்களாகக்கொண்டு சாறாய்ப் பிழிவதற்கும், மிகு நாகரிகம் பெற்ற அமெரிக்கா ஐக்கிய மாகாணம்(U. S. A), ஜப்பான் (Japan) முதலிய

புறத்தேச அரசாங்கச் செலவோடு இந்திய அரசாங்கச் செலவை ஒத்துப்பார்க்கில், இது மிக அதிகமாயினும், அதை அளவற்ற பொறுமையுடன் நிர்வகிப்பதற்கும் ஏதுவான ஓர் பெருஞ்சக்தியை நமக்குக்கொடுத்திருக்கின்றன. இங்கிலாந்துக்கேற்பட்ட கப்பல் படையைப் போல் நம் நாட்டிற்கு, மேற்படி ஜீவாதாரங்கள் ஒரு பெரும் மூலபலமாயிருக்கிறது.

(4) ஆகையால், மேற்கூறிய ஜீவாதாரங்களுக்குப் பங்கமில்லாமல் இலௌகிக, இராஜீக, தெய்விக விஷயங்களில் வேண்டிய சீர்திருத்தங்கள் செய்தால்தான், நம் ஜனங்கள் அவைகளை அங்கீகரித்துப் பின்தொடரும். அப்படிக்கின்றேல் அத்நீய சட்டங்களைக் கண்டு அஞ்சி ஒதுங்கிவிடும்.

## குடியானவர்களின் கஷ்டங்கள்.

12. இதன் 11—6-வது பத்தியிற் கண்ட ஜீவாதாரக் கொள்கைப் பிரகாரம் நம் குடியானவர்கள் சொற்ப ஜீவனம் வெகுகாலமாய்ச் செய்துவருகிறவர்களாய் இருந்தும் தற்காலம் அளவற்ற உணவு பொருள்களும் மற்ற விளைபொருள்களும் கப்பல் மூலமாக அன்னிய நாடுகளுக்கு (நமக்குவேண்டிய அளவுகூட இங்கில்லாதபடி) அளவுக்கு மிஞ்சி அனுப்பப்படுவதால் நாளுக்கு நாள் அகவிலை அதிகரித்து சொற்ப வருமானமுள்ளவர்கள் அடிக்கடி பட்டினி கிடக்க நேரிடுகிறது. அதிலும் நம் ஏழைப்பெண்டுகள், தங்கள் குழந்தைகளுக்கும், புருஷர்கள் வெளியில் போய் உழைத்துச் சம்பாதித்து வருகிறவர்களென்று கருதி அவர்களுக்கும், சமைத்த ஆகாரத்தின் பெரும்பாகத்தைப் படைத்துவிட்டு, இனி உழைக்கும் புத்திரர்கள் தங்களிடத்திலிருந்து உதிக்கவேண்டியிருக்கிறதேயென்று தாங்கள் உணராமல், அநேகமாய் அடிக்கடி சொற்ப நீராகாரம் அருந்தி பட்டினியுடன் காலம் கழிக்கிறார்கள்.

13. இதனால் இவர்கள் சரீரம் நாளுக்குநாள் மெலிந்து அதில் ஜனிக்குங் குழந்தைகள் அதற்குத் தக்கபடி மெலிந்து போகின்றன. மேலும் தாய்ப்பால் குறைவாலும், பசும்பால் அதிக விலையால் வாங்கச்சக்தியற்றதாலும், குழந்தைகள் நல்ல ஆகாரமற்று வளருகின்றன. இவ்விதம் வளர்ந்த பிள்ளைகள் ஆளான பிறகும் தேக திடமற்றிருக்கிறதினால், அற்பவியாதிகளுக்குச் சடுதியில் இரையாகி மடிகிறார்கள். ஐயோ! இதன் கொடுமையை என்னென்றெடுத் துரைப்பது?

14. இது நிற்க, புருஷரிழந்த ஏழை விதவைகளின் கதி இன்னதென்று பார்ப்போம். ஒருவர் தன் மூன்று பிள்ளைகளுடன் தனது பத்து அல்லது பன்னிரெண்டு ரூபாய். மாதச் சம்பளத்தினாலும், மேற்படியாரின்

மனைவி பகல் பன்னிரண்டு மணியிலிருந்து சாயங்காலம்ஆறுமணி வரையில் நெல்குத்திக்கிடைத்த வருமானத்தாலும், தனது குடும்பத்தை காப்பாற்றிவந்தார். சில வருஷங்களுக்கு முன் மேற்படியார்இறந்துவிட்டார். அவர் இறக்குங்காலத்தில் அவருக்கிருந்த சொத்து ரூபாய் 250/-. அவர் தகன கிரியைக்கும், கருமாந்திரத்தில் புரோகித ஐயருக்கு சோமஞ் சேர்டு, குடை, பாதரச்சை தக்ஷிணை முதலானது உள்பட ரூபாய் 100/- ஆய்விட்டது. அதற்கப்பால் அவரது மனைவி விடியற்காலையிற் சுமார் 3 அல்லது 4 மணி முதல் ஆறுமணிவரையிலும் உளுந்து அல்லது துவரை உடைத்து, வீட்டிற்கு வந்துவீட்டை சுத்தம் பண்ணி கலங்கழுவி, பாழும் இரும்புக்குழாயில் வம்பு செய்து வேகுபாடுபட்டுத் தண்ணீர் பிடித்த பிறகு, பிள்ளைகளுக்கு மாத்திரம் சாதம்படைத்துவிட்டு,நெல் காயவைத்து, மறுபடியும் போய் உடைத்த உளுந்தை அல்லது துவரையைப் புடைத்து சுத்தப்படுத்தி சுமார் 11-மணிக்கு பருப்புக்காரருக்குப் பருப்பை அளந்துகொடுத்து, அப்புறம் தான் நீராகாரம் அருந்தி பிள்ளைகளைத் தங்களுக்குப் பசிவந்தபோது இரண்டாம் வேளைசாப்பிடும்படிச் சொல்லிவிட்டு சாயந்திரம் ஆறுமணி வரையிலும் முன் காயவைத்த நெல்லைக் குத்தியபின் வீட்டுக்கு வந்து சாதஞ்சமைத்து, தானும் தன் பிள்ளைகளும் உண்டுவந்தார்கள்.

15. இவ்விதம் இரண்டொரு வருடம் கழிந்தன. பிறகு மூத்த மகளின் ருது, கலியாணம் முதலிய விஷயத்தில் ரூ. 150/-ம்செலவழிந்து போயின. பையனைப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயருக்குப் பணங்கொடுத்துப் படிப்பித்தும் வருடாவருடம் புருஷனுக்குத் திதி காலத்தில் புரோகிதருக்கு அரிசி, தக்ஷிணை முதலியவைகள் கொடுத்தும் உறவுமுறைக்குச் செய்யவேண்டிய சீர் வரிசைகளைச்செய்தும் யாசகம் வாங்காமல் வெகு பிரயாசையுடன் ஜீவித்து வருகிறார்.

16. மற்றொருவர் இவ்விதம் கைம்பெண்சாதியான வுடன் உழைத்துச்சாடபிட்டு, தனது ஒரே மகனை வளர்த்து ஆளாக்கியபின் அவன் துர்நடக்கை யுடையவனாகித் தாயை விட்டுப் பிரிந்ததற்கப்பால், தானே தனியாகச் சற்றேறக்குறைய 60 வயது வரையிலும் சுமார் 4 அல்லது 5 மைல் தூரத்திலுள்ள கிராமங்களுக்குத் தள்ளாடிப்போய் விராட்டி, முள்விறகு முதலியவை சுமந்து வந்து அதைப் பட்டினத்தில் விற்று அதில் ஜீவனம் பண்ணி, சில சமயம் தேக அசௌக்கியத்தாற் சக்தியற்றபோது அருகேயுள்ளஒரு பெரிய வீட்டில் சும்மா உண்ணப்படாதென்றுகருதி, அவர் வீட்டுக் கட்டுத்துறை முதலான இடங்களைத் தானே கூட்டி அவர்களிட்ட சாதத்தை அருந்தியும், மிகச் சக்தியற்றபோது தன் சகோதரிகளிடத்திலும் அவர்கள் பிள்ளைகளிடத்திலும் உண்டு வந்துகாலஞ்சென்றனர்.

17. ஒருவர் தன் தகப்பனார் இறந்தபோது அவரது கருமாந்திரத்திற்கு மாத்திரம் ரூ. 75வட்டிக்குக்கடன் வாங்கி மேற்படி காரியத்தை நிறைவேற்றிவிட்டார். அவர் அப்பொழுது சுருட்டு வேலையிலமர்ந்து தினம் சுமார் 10-அணா சம்பாதித்துக் கொண்டிருந்தவர். இந்த சொற்ப வருமானத்திலிருந்து தானும் தன் பெண்சாதி பிள்ளைகளும் ஜீவிப்பதன்றியும், தாயார் தங்கைக்கு வேண்டிய உதவியுஞ் செய்யும்படி நேரிட்டது. ஆதலால், இராத்திரி 8 மணி முதல் 12-மணி வரையில் சொந்தத்தில் சுருட்டு செய்து அதை விற்று அந்த வருமானத்திலிருந்து மேற்படி கடனையடைப்பதற்கு 3வருடமாயிற்றென்று வெகு துயரமாய்த் தெரிவித்தார்.

18. சுமார் 25 வருடங்களுக்கு முன் ஒருவர், கடையில் நாலு ரூபாய் சம்பளத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அவர் தனதுவயது சென்ற தகப்பனாரையும், தங்கையையும் அந்தச் சொற்ப சம்பளத்தைக்கொண்டு

ஆதரிக்கும்படி நேர்ந்தது. அவருடைய உறவினர்களுள் கலியாணம் நடந்தால் அவர் தகப்பனுர், மொய் வகையில் மாப்பிள்ளை வீட்டுக்கு இரண்டணுவும், பெண் வீட்டுக்கு இரண்டணுவும், கும்பிடு பணம் வகையில் மாப்பிள்ளைக்கு இரண்டணுவும், பெண்ணுக்கு இரண்டணுவும், கொடுக்கவேண்டி யிருக்கிறதென்று மிகவும் விசனமாய்க் கூறுவதுண்டு.

19. மேற்கூறியவைகளை உற்று நோக்குங்கால் வட்டிக்குப் பணம் கடன் வாங்கி பரம்பரைப் பிராமணருக்கு சோமஞ்சோடு, தக்ஷிணை முதலிய தருமங்களிட வேண்டுமென்றும், அனுவசியமான சடங்குகள் செய்ய வேண்டுமென்றும், சொல்லுவது சுத்தப் பிசகு.

20. இவ்விதம் தத்தம் ஐம்புலன்களை முக்கிய ஜீவாதார சட்டத்திற்குள் கூடியமட்டுங் கட்டுப் படுத்தி தேகசுகங் கவனியாது, வெகுபாடு படும் பெண்டுகளும், புருஷர்களும் நம்மவர்களுள் பலர் உளர்.

21. இவ்வீசுவரர்களின் தேகம் மிகுந்த உழைப்பால் பளபளப்பற்றிருப்பதினுலும், சொற்ப வருமானங் கொண்டு ஜீவிப்பவராகையால், சதா உடுத்தப் பட்டாடை யற்றிருப்பதினுலும், நம் முன்னோர்களால் நம்மவர்களின் சௌகரியத்தை உத்தேசித்து கட்டிவைக்கப்பட்ட (நீராடும்) படித்துறைகளில், மேற்படி பிராமணர்கள் நம்மவர்களை இந்தப்பாகத்தில் இறங்கப்படாதென்றும், கோவிலின் அந்தப்பாகத்தில் நுழையப்படாதென்றும், ஸ்ரீரங்கத்தில் முத்தங்கி முதலிய சேவை காலங்களில் அணு நாலு கொடுத்துத்தான் உள்ளே போகவேண்டுமென்றும், பிரபல வக்கீல்கள், அதிகாரிகள் முதலானவர்கள் இலவசச்சீட்டு (Free ticket) பெற்று உள்ளே போகும்படியாகவும், தற்காலத்திலுள்ள தர்மகர்த்தாக்கள் நூதன சட்டங்கள் உண்டு பண்ணுகிருர்கள்.

22. இவ்வேழை உழைப்பாளிகளிடத்திலும் யாசகம் வாங்கி பிழைப்பதோர் கூட்டம் சென்ற சுமார் ஐம்பது வருடங்களாக நம்மாதரவின் பேரில் அங்கிலேயம் படித்து அரசாங்கத்தில் உயர்தர உத்தியோகத்தில் அமர்ந்து இலேசாய்ப் பொருள் சம்பாதித்து மெள்ள மெள்ள கோவில்களிற் தர்மகர்த்தர்களாகி நம் நாட்டில் எந்நாளுமில்லாத தீச்செயல்களை இவர்கள் இந்நாளிற் புரியும்படி நேரிட்டிருக்கிறது.

23. ஆகையால் நம்மைப்போல் உழைத்துச் சாப்பிடாதவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் அப்படிப் பணத்தும் ஏட்டுச்சுரக்காயாயிருப்பதை உத்தேசித்து நம்மவர்கள் முன்னுக்கு வந்து நமது எவ்விதக் குறைகளையுந் தங்கள் யுக்தி அனுபவத்துக்குத் தகுந்தபடி நிவர்த்தி செய்வதற்கு அஞ்சி,பின் நிற்கும் வரையில், நம் துன்பம் நாளுக்குநாள் அதிகரிக்குமே யன்றி குறையாது. இக்காரணங்களால் நம்மவர்கள் குடும்ப நிர்வாகத்திற் செய்யும் அனுவசியச்செலவுகளை முதலில் நிறுத்தும்பொருட்டு பின் வருஞ் சீர்திருத்தம் எழுதப்பட்டது. அதாவது, தற்காலத்தில் நம் நன்மை தீமைகளில் நாம் அனுஷ்டித்துவரும் நடை இன்னதென்றும், அவைகளுக்கு மூலாதாரமான நம் முதியோர்களின் மூலக்கருத்துகள் இன்னதென்றும், மேற்படி மூலக்கருத்துகளுக்குப் பங்கமில்லாமல் நம் தரித்திர நிலையை உத்தேசித்து நாம்செய்யவேண்டிய சீர்திருத்தம் இன்னதென்றும், எனது அற்ப அறிவுக் கெட்டினமட்டும் இதிற் கூறப்பட்டிருக்கிறது.

24. மேற்படி சீர் திருத்தங்களைச் செய்ய நாம் கட்டாயம் முன் வந்தே தீரவேண்டும். "ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி அழுகுமா?" அதுபோல, நாம் நாளுக்குநாள் அஞ்ஞானம் தடித்து கொடிய தரித்திரத்தில் ஆழ்கிறதை ஒரு பெரும் அதிர்ஷ்டமாகக் கொண்டு, முகஸ்துதி பேசி, நம்மை ஏமாற்றி, நம்

வெகு பிரயாசையால் சம்பாதித்த சொற்ப பொருளின் ஒரு பாகத்தைக் கொடையாகப் பெற்று அதனல் விருத்தியடைகிறவர்கள், நமது குறையைத் தீர்க்க முன்வருவார்களா? வரவே வரார்கள். ஏனெனில், நமது குறையைத் தீர்ப்பது என்பது மேற்படியார்களுக்குக் குறையை விளைவிப்பது ஆகும்.

25 மேலும் இச்சிறிய புத்தகத்தில் கண்ட சீர்திருத்தப்பிரகாரம் அனுஷ்டித்த ஒருவருக்கு இயல்பாகச் சில துன்பங்கள் சம்பவித்தால், மேற்படியார் மேற்படி சீர்திருத்தஞ் செய்ததனல் மேற்படி தீங்குகள் விளைந்தனவென்று சுளர் பட்டி மிரட்டு மிரட்டுவார்கள்.

> "அரன்பிரம னரிமுதலோ ரடைந்தனரே லுடற்கொண்டார்சிறுமை பெருமையடையா திருப்பார் கலங்கேனமறமலிந்த நெஞ்சுடையார் வார்த்தையினு னெஞ்சே
> வருவவர வாராத வரலொழிக வெனவே,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகரவர்கள் கூறியதை நன்குணர்க. சீர்திருத்தஞ்செய்யுஞ் சிங்கங்களே! அவை கேட்டு அஞ்சாதீர்கள்.

26. மேற்படி காரியங்களை நிறைவேற்றும்பொருட்டு ஊருக்கு ஒரு சங்கமும் இராஜதானிக்கு ஒரு தலைச்சங்கமும் வேண்டியிருப்பதால் அவைகளைப்பற்றி மேற்படி சீர்திருத்தத்திற்குப் பின் கூறப்பட்டிருக்கிறது.

பிறப்பு முதல் இறப்பீருக ஏற்படும் நன்மை தீமைகளில் நடக்கும் செலவுகளைச் சுருக்கி காலத்துக்கேற்றபடி ஒவ்வொருவரும் சுகஜீவனம் செய்யவேண்டுமென்பது கருத்தாதலால் முதலில் பிறப்பு எழுதப்பட்டது.

## பிரசவம்.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 27. 1. கருப்பவதியை (தலைப் பிள்ளைக்கு) அநேகமாக ஏழாவது மாதத்தில் தன் தாயார் வீட்டிற்கு அழைத்துப் போகிறார்கள். | மாமியார் வீட்டிற்கு வந்த சொற்ப காலத்திற்குள் பிரசவத்திற்கு வேண்டிய சௌகரியம் ஏற்படாதென்று தாய் வீட்டிற்கு அழைக்கப்பட வேண்டுமென்பது கருத்துபோலும். | |
| 2. சிலசமயம் புத்திர சோகத்தால் வெகுகாலம் வருந்தியபின் பிள்ளை பிறந்தால் அன்றைக்குச் சர்க்கரை, கற்கண்டு முதலியவைகள் சிலர் | | |

வழங்குவதுண்டு. இது மிகு களிப்பின் சிறப்பாகும்.

3. குழந்தை பிறந்தபின் பதினாறாம்நாள் வீட்டை வெள்ளையடித்து†, சந்திரசித்து குடும்பத்தார்களனைவரும் நீராடி புரோகிதரை அழைத்து புண்ணியதானம் பண்ணுகிறார்கள்.

† வெகு காலத்திற்கு முன்னாலேயே நம் முன்னோர்கள் நமது சுகாதாரத்தைக் கருதி மேற்படி தினத்தில் மேற்படி விஷயங்களை அனுஷ்டிக்கும்படிச் செய்தனர்போலும்.

## புண்ணியதானம்.

புண்ணியம் என்றால் நன்மை, தானம் என்றால் கோடை, புண்ணியதானம் என்றால் நன்கோடை.

தானம் பண்ணவேண்டுமென்பதின் கருத்து என்னவென்றால், வேலைசெய்து சாப்பிடச் சக்தியற்றவர்களுக்கும், பஞ்சேந்திரியம் அடக்கி உலக இச்சையைத் துறந்த யோகிஞானிகளுக்கும், பசியால் வருந்தும் இதர ஜீவ பிராணிகளுக்கும், ஒருவர் தன் மனங்கசிந்து இரக்கமுற்றுச் செய்யுந்தானத்தால் மேற்படியாரின் சுய நலத்தால் கட்டுண்ட மனம் மெள்ள விசாலிக்க ஏதுவாதும் என்பதைத்தவிர வேறன்று. மேலும், வேலைசெய்து சாப்பிடச் சக்தியற்ற ஏழைகளுக்குச் சாப்பாடு போடவேண்டும்.

உண்மை ஞானிகள் கிடைத்தபோது அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுக்கவேண்டும்.

தற்காலம், பரம்பரைப் பிராமணர்களுக்கு, மகாப் பெரியோர்களுக்குரிய மரியாதையைக் கொடுத்தும், சுவாமி என்று அழைத்தும், அவர்களும் தங்களை ஆதரிப்பவர்களின் மதிப்பை உணராது மேற்படி ஆதரிப்பவர்களையே கீழ்ஜாதி யென்றும், தாங்கள் மேல்

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| | யோகி, ஞானிகளுக்குச் செய்வதனால் தனது மனம் மேலே சொன்ன பிரகாரம் விசாலிப்பதுடன் மேற்படியார்களின் பார்வை, சகவாசத்தால் அஞ்ஞானம் நீங்கி நற்கதி அடையஏதுவாகும். இதற்கிணங்க,<br>"நல்லாரைக் காண்பதுவும் நன்றே<br>நலமிக்க<br>நல்லார் சொற் கேட்பதுவும்<br>நன்றே—நல்லார்<br>குணங்களுரைப்பதுவும்<br>நன்றே அவரோடு<br>இணங்கி இருப்பதுவும்<br>நன்று,"<br>என்று ஔவையார் கூறியுள்ளார். இதுபற்றியே நம் முன்னோர்கள் குடும்பத்தில் ஏற்படும் நன்மை தீமை | ஜாதியென்றும், அப்படிச் சொல்வதுதான் வழக்கம் என்றும், நமது வழக்கம், நன்னிலை முதலியவைகளை உள்ளபடி உணராது அவள், இவள், அவன், இவன், என்று அவமதித்துப் பேசியும், புரோகிதத்தொழிலைப் புரிந்தும், மேற்படி தொழிலால் ஏற்படும் எஜமானன் வேலைக்காரன் என்ற தாராளமற்ற அகம்மனத்தைக் கொண்டு அழிதலாலும், நம்மவர்களும் அடிமைத்தன்மை பூண்டு தாழ்ச்சலாலும், இவர்களை ஷெ தொழிலிலிருந்து சட்டாயம் விலக்கவே வேண்டும்.<br>இவர்களை இனிமேல் நாம் சுவாமீ என்றழைப்பதை விட்டு |

களுக்கு இப்பெரியோர்களைத் தேடி அழைத்து உபசரித்து அவர்களுடைய ஏவலைத் தலைமேற்கொண்டு செய்வது வழக்கம்; இச்கருத்துக்கிணங்க தாயுமானவரும்,

"தம்முயிர்போ லெவ்வுயிருந்
தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று
செய்வேன் பராபரமே,"

"அன்பர்பணி செய்யவெனை
யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே,"

என்று கூறியுள்ளார்.

மேலும், "சென்றதுகருதார் நாளைச் சேர்வது நினையார் கண்ணின்முன் அவர்கள் நம்மை எப்படி அழைக்கிறார்களோ அப்படியே நாம் அவர்களை அழைக்கவேண்டும்.

இப்பரம ஞான சூனியர்களைப் பரம்பரைப் பைத்தியங்கொண்டு பிராமணர்களென்றும், இவர்களே பிரம்ம ஞானத்துக்கு உரியவர்களென்றும், அதனால் இவர்கள் உயர்ந்தவர்களென்றும், நம்கூட்ட முழுவதும் சூத்திரர்களென்றும், பிரம்ம ஞானத்துக்கு அருகரல்லர்களென்றும் ஷையார்கள் கூறும் துர்ப்போதனையை நம் பாமரர்கள் நம்பி மோசம்போன வழக்கத்தால், மற்றொரு அன்னியர், "உலகாளுந் திறம் உங்களுக்கு (இந்தியர்களுக்கு) எப்பொழுதும் வாய்க்காதென்று," சொல்வதை

| தற்கால நிலை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| | னின்றது புசிப்பர்" எனுங் கருத்து கொண்ட மகா பெரியவர்களுக்கு அன்னவஸ்திரம், குடை, பாதரக்ஷை முதலானவைகளை நம் முன்னோர்கள் மிக அன்புகொண்டு வலியக் கொடுத்து உதவுவது வழக்கம். ஏனெனில், அவர்கள் காசு பணத்தைக் கையால் தொடாது சகல உலக இச்சையையுந் துறந்த மகா ஞானிகள்.<br><br>ஆனல், பரம்பரைப் பிராமணர்களோ பணம் தட்சிணையாகப் பெற்று பொருள்சேர்த்து மிராசுதார், ஜமீன்தாரென்று பட்டமுந்தரித்து, வெகு பாடுபட்டு உழைத்துப் பொருள் சம்பாதித்த நம் குடியான மிராசுதார் | நம்மவர்களில் பலர் அங்கீகரிக்க ஏதுவாகிறது.<br><br>சிலர், வேளாள சைவக் குருக்களை அல்லது தத்தம் ஜாதியில் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்து புரோகிதராக வைக்கிறார்கள். இதுவும் பின்னல் பல இம்சைகளையே தரும். இப்புரோகிதத் தொழிலில் பொய் உற்பத்தியாகிறது; எப்படியெனில், அதிக தக்ஷிணையைக் கருதி கற்பனையாக ஜனங்களுக்குச் சொர்க்கத்தில் அது கிடைக்கும், இது கிடைக்கும், என்று மேற்படி தொழிலாளர்கள் வாய்ப்பந்தல் போட்டு மோசம் பண்ணுவதால், மேற்படி கற்பனைகளை |

ஜமீன்தார்களுடன் ஒப்பிட்டு தாங்கள் பல விஷயத்திலும் மேம்பட்டவர்களென்று தங்களைத் தாங்களே பெருமைப் படுத்திக்கொள்ளுந் தன்மையை என்னென்று எடுத்துரைப்பது?

நம்மவர்கள் நிசமென்று நம்பி உள்ளதை உள்ளபடி அறியச் சக்தியற்று நாளுக்கு நாள் அந்தகாரத்தில் ஆழ்கிறார்கள்.

மேலும், மேற்படி புரோகிதர்களின் பிள்ளைகளும் பாடுபட்டுச் சம்பாதிக்குந் திறமை போய், இடைவிடாமல் ஜனங்களை ஏமாற்றி, யாசகம் வாங்கி, உண்டு உடுத்த ஆரம்பித்து, பரம்பரைப் பிராமணர்கள்போல் ஒரு பெருங் கூட்டமாகி உழைப்பின்றி நம்மைப் பின்னால் மறுபடியும் உபாதிக்க ஏதுவாகும்.

ஆகையால், குருக்கள் முதலானோர்களை வைத்து சுபாசுப காரியங்களை நடத்துவதும் திர்ப்பலனையே

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| | | தரும். இப்போது உழைத்துச் சாப்பிடுகிறவர்களையும் வீரதீரமற்ற யாசகர்களாக்குவது உசிதமல்ல. பெரியோர்கள் இது விஷயத்தைப் பற்றி தீர்க்காலோசனைசெய்யும்படி மிகவும் பிரார்த்திக்கின்றேன்.<br><br>மேற்கூறிய காரணங்களால் தான் பரம்பரைப் பிராமணர்களையுங் குருக்கள் முதலிய மற்றெவர்களையும் புரோகிதராக *வைக்சவேகூடாது. மேலும், இதன் தொடர்ச்சி 293 முதல் 302-வது இலக்கம் ஈறாகவுள்ள பத்திகளில் காண்க. ஷ தினத்தில் ஒவ்வொருவரும் தம் தேவதையை |

4. மேற்படி காலத்தில் அத்தைமார் அப்பிள்ளைக்குக் காப்பு, பாசி போடுகிறார்.

5. பிள்ளை பிறந்த மூன்றுவது மாதம் மேற்படி குழந்தைக்குத் தொட்டித் துணி, பாய் முதலியவைகளுடன் பெண்ணைப் புருஷன் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள்.

**28.** 1. பிள்ளை பிறந்த ஏழாவது மாதத்தில் அல்லது பெற்றோர்களின் சௌகரியப்படி புரோகிதரைக் கூப்பிட்டு நல்ல நாள் பார்க்கிறார்கள்.

2. உறவின்முறையாருக்குச் சொல்லி மேற்படி சுப தினத்தில் தெய்வத்தலத்திற்குப்

புருஷன் வீட்டில் போன உடனே மேற்படி சௌகரியங்கள் ஏற்படாது என்று கருதி இவ்வழக்கம் செய்தார்கள்போலும்.

## பிள்ளைக்குக் காதுகுத்தல்.

பிள்ளைக்குத் தக்க வயதிலும் நல்ல வேளையிலும் காதுகுத்த வேண்டுமென்பது கருத்து.

**தம் வீட்டில் நிறுத்தி, தேங்காய், பழம், பூ, சர்க்கரை முதலியவைகளை வைத்து தூபதீபத்துடன் தாமே ஆராதனை செய்துகொள்ளவும்; இவ்விதமே மற்ற சுபாசுப காரியங்களையும் நடத்திக்கொள்ளவும்.**

குடியான ஜோதிடரைக் கொண்டு நல்லநாள் பார்த்துக்கொள்ளவும்; ஏனெனில், பரம்பரைப் பிராமணர்கள் தங்களுக்குப் பயனுள்ள பல சடங்குகளை மறுபடியும் இதன் மூலமாக உண்டாக்கி விடுவார்கள்.

மூ–க:—உலகாபிமானமற்ற உண்மைப் பிராமணர் சோதிடம் பாரார்; ஜோசியம்-

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| போய் பிள்ளைக்கு முடி எடுக்கிறார்கள். பின்பு பிள்ளையைத் தாய்மாமன் மடியில் உட்காரவைத்து அே மாமனால் கொடுக்கப்பட்ட வாளியினால் காது குத்துகிறார்கள். | | ஜனவசியம், ஆசையால் பரம்பரைப்பிராமணர் தம்புரோகிதத் தொழிலுக்கு அனுகூலமாகச் சோதிடத் தொழிலையும் மெள்ள மெள்ளக் கையாடினதாகக் காணப்படுகிறது. |
| 3. பிறகு சுவாமி சந்நிதிக்குப்போய் மாவிளக்குடன் நைவேத்தியம் செய்கிறார்கள். | | கோவிலில் ஒவ்வொருவரும் தாங்களே தேங்கா யுடைத்து கூடங்கொளுத்தி ஆராதனை செய்துகொள்ளவும். ஏனெனில், ஈசுவர சந்நிதானத்தில் நாம் அர்ச்சனை பண்ணினால் நமது மனம் சாந்தமாகி நமக்குப் பயனுரும். மற்றொருவர் செய்தால் நமக்குப் பயனுகாது. ஆனால் |

கோவிலில் அர்ச்சகர் ஆதியில் எதற்காக, எப்படி ஏற்பட்டிருக்கிருரென்ருல் கோவிலைப் பெருக்கிச் சுத்தப்படுத்தி விக்கிரகத்தைச் சுத்தி செய்து புஷ்பங்களால் அலங்கரித்து வைப்பதற்கு ஏற்பட்ட ஒரு வேலைக்காரர், கால அளவில் ஜனங்கள் கூட்டமாக வருங்காலத்தில் சச்சரவு உண்டாகாதபடி தேங்காய்,பழம், உடைத்துக்கொடுக்க ஆரம்பித்து மெள்ள பாவனை மந்திரம்* படித்து அர்ச்சகரெனப் பெயர் பூண்டு, தட்சிணைவாங்கத் தலைப்பட்டு, அதன் மூலமாக ஏற்பட்டதோர் வழக்கமேயன்றி வேறன்று; ஆகையால், பரம்பரைப் பிராமண அர்ச்சகரைக்கொண்டு கோவிலில் மேற்படி ஆராதனை செய்யப்படாது.

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 4. பின்பு உறவின்முறையாருக்கு அமுதளித்து மொய் வாங்கினபின் அவரவர் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். சிலர் மேளதாளத்துடன் ஷெ காரியத்தை முடிப்பதுமுண்டு. | | தாய்மாமனுக்கு மாத்திரம் சொல்லிச் சுருக்கமாக மேற்படி காரியத்தைத் தெய்வத்தலத்தில் அவரவர்கள் இஷ்டப்பிரகாரம் முடித்துக்கொள்வது உசிதம்.<br><br>பணம் மிகுந்திருந்தால் உறவின் முறையாருக்குச் சொல்லி அவர்களுக்குச் சாப்பாடு செய்விக்கவேண்டுமே தவிர யாதொரு விதமான பிரதி பிரயோஜனத்தைக் கருதவும்படாது.<br><br>வந்த உறவுமுறையார் (வஸ்திரம், மொய்) எது கொடுத்தாலும் அதை வாங்கக்கூடாது. ஏனென்றால், அது பிறகு வட்டி இல்லாக் |

கடனைய் இழிச்சொல், பகைமை முதலிய துர்க்குணங்களுக் கிடமாகி உறவுமுறைகளைப் பாழாக்கி விடுகிறது.

ஆகையால் இத்தகைய கொடிய செய்கையை நிறுத்திவிடவே வேண்டும். மேளதாளம் இஷ்டப்படி வைத்துக்கொள்ளலாம்.

மூ-க:—கடன் வாங்கி மேளதாளம் முதலிய வீண்டம்பங்கள் இந்தச் சொற்ப காரியத்திற்குச் செய்யப்படாது.

## வித்தியாரம்ப விதி.

**29. 1.** பிள்ளைக்குச் சுமார் ஐந்து வருஷமான பிறகு பாடசாலையில் வைக்கப் புரோகிதர்களைக் கொண்டு நல்ல நாள் பார்க்கிறார்கள்.

நல்ல நாளில் வித்தியாரம்பம் செய்யவேண்டுமென்பது கருத்து.

குடியான ஜோதிடரைக் கொண்டு நல்லநாள் பார்க்கவும்.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| 2. தாய்மாமனுக்கு பெற்றோர்கள் மேற்படி விஷயத்தை அறிவிக்கிறார்கள். மாமன் பையனுக்கு மேற்படி சுபதினத்தில் வஸ்திரம், அரிசி, தேங்காய், பழம், சர்க்கரை, புஷ்பம் முதலியவைகளுடன் சீர் செய்கிறார். | அன்பால் செய்யப்படுகிறதோர் காரியம். | தாய்மாமன் திரவியந்தர்களாயிருந்தாலொழிய, அவர்களால் கடன் வாங்கிச் செய்யப்படுஞ் சீர் மனதில் அதிருப்தியை உண்டாக்குவதால் கண்டிப்பாய் நிறுத்திவிடுவது உத்தமம். |
| 3. பின் பெற்றோர் உபாத்தியாயரை அழைப்பித்து கோடி வேஷ்டி, தாம்பூலம், தட்சிணை முதலியவைகள் கொடுத்துப் பையனைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுபோய் புதிய அரிச்சுவடியை அவனது கையில் கொடுத்து வித்தியாரம்பஞ் செய்கிறார்கள். | முற்காலத்தில் நம் முன்னோர்கள் உபாத்தியாயருக்கு வேஷ்டி, தட்சிணை முதலானவைகளைக்கொடுத்து, வாரத்திற்கு ஒருமுறை எண்ணெயும், மாதத்திற்கு ஒருமுறை விறகு விராட்டி முதலியவைகளையும், வருஷத்திற்குஒருமுறை உணவுக்குவேண்டிய தானியங்களையுங் கொடுத்து, | தற்காலம் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய மூலதனம் ஏற்படுத்தி உபாத்தியாயர்களை மாதச் சம்பளத்திற்கு அமர்த்தி பிள்ளைகளுக்கு வித்தை கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் பிள்ளைகளும் மாதம் இவ்வளவு சம்பளம் தரவேண்டுமென்று திட்டம் செய்யப்பட் |

| | |
|---|---|
| பையன் (வயது வந்து) கலியாணஞ் செய்யுங்காலத்திலும் மேற்படி உபாத்தியாயருக்கு வேஷ்டி, சேலை முதலியவைகள் கொடுத்து ஆதரித்து வருகிறது வழக்கம் | டிருக்கிறது. பிள்ளைகள் குறித்த தேதியிற் சம்பளங் கொடுக்கத் தவறினால் பள்ளிக்கூடத்தினின்று விலக்கப்படுகிறார்கள். அபராதத்துடன் சம்பளம் வசூலித்தபின் மேற்படி பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.<br><br>ஆகையால் உபாத்தியாயர்களுக்கு வஸ்திரம் முதலான வெகுமதிகள் கொடுக்க வேண்டிய அவசியமில்லை; யாதொரு ஆடம்பரம் இன்றி பிள்ளையைச்சுபதினத்தில் பள்ளியில் சேர்ப்பதே உத்தமம்.<br><br>ம-க:—முன்னோர் வழக்கம் போல் சம்பளம் வாங்காமல் தானியாதி முதலியவைகளை வாங்கிக்கொண்டு வரும் உபாத்தியாயருக்கு முன்னோர் செய்த பிரகாரஞ் செய்யவேண்டும். |

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| | **ருது.** | |
| **30.** 1. பெண் புஷ்பவதி ஆன போது தாய்மாமனுக்குச் சொல்லி அழைப்பித்து அந்தப் பிள்ளை தனியாய் இருக்கவும், குளிக்கவும் மறைப்புகள் கட்டச்சொல்லுகிறார்கள். | கூச்சம், சங்கை இன்றி மறைப்புகள் கட்டுவதற்குத் தகுந்த மனுஷன் தாய்மாமன் அல்லது மேற்படி வகைபரா பேர்வழிகளைத் தெரிந்தெடுத்தா இருக்கிறார்கள்; ஏனென்றால், இப்புத்தகத்தின் 11—6—வது பத்தியில் கண்டபடி நம்மவர்கள் சொற்ப ஜீவனம் செய்து வருகிறபடியால் தங்கள் நன்மை தீமைகளில் வேலையாள் வைத்து வேலை வாங்குவது மிகவும் துர்லபமென்று கருதி உறவு முறைகளுக்குள்ளாகவே இந்தந்த வேலையை இன்னாரின்னார் செய்து முடிக்கவேண்டுமென்று முன்னோர் ஏற்படுத்தினர் போலும். | |

| | | |
|---|---|---|
| 2. பெண்ணின் அத்தை அல்லது ஷை வகையரா பேர் வழிகள் அப்பிள்ளையை நீராடும்படிச் செய்து, தேங்காய், பழம், பால், பூ, மஞ்சள், வெற்றிலைப் பாக்கு முதலியவைகளுடன் சீர் செய்கிறார்கள். | அத்தை, தனக்குச் சகோதரன் மகளாதலாலும், அநேகமாய் தன் மகனுக்கு அப்பிள்ளையைப் பின் கலியாணஞ்செய்துகொள்ளப் பாத்தியப் பட்டவராதலாலும் அன்போடு நீராட்டிவிப்பார் என்பது கருத்து. (இதுசரீர சோதனைக்கும் ஒரு நல்லசமயம்). | |
| 3. அன்றையதினம் பருப்புச்சாதம் சமைத்து கிட்டின உறவினருடன் சாப்பிடுவது வழக்கம். | | |
| 4. பின்னர் பதினறும் நாள் வரைக்கும் உறவினர்கள் மேற்படி பெண்வீட்டுக்குத் தேங்காய், பழம், பால், பூ, மஞ்சள், குங்குமம் முதலியவைகள் கொண்டுவந்து கொடுப்பதும், அவ்விதம் கொடுத்தவுடன் அவைகளில் பெரும் பாகத்தை எடுத்துக்கொள்ளுவதும் வழக்கம். | பெண்ணின்குணம், வேலைத்திறமை, கல்வி, அழகு முதலிய குணதிசயங்களைப் பலபேர்கள் தெரிந்து அதன்மூலமாய் ஷை பிள்ளையைப் பிறர் கொள்ள ஏதுவாகுமென்பது கருத்து. | மூன்று தேங்காய், ஐந்து பழம், பால், பூ, குங்குமம், மூன்று உருண்டை மஞ்சள், வெற்றிலைப்பாக்கு முதலியவைகள் கொண்டுபோனால் போதும். |

ருது.

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 5. தாய்மாமன் ஷை கெடுவுக்குள் மேற்படி பெண்ணுக்குச் சீலை, இரவிக்கை, தேங்காய், பழம், பலகாரம், சாப்பாடு முதலிய வரிசை செய்து உறவினருக்கு விருந்தளிக்கிறார்; இது அன்பின் சிறப்பு. | | உறவினருக்கு விருந்து பிரதான மன்று. |
| 6. இதர ஜாதியார்களும் சீர் செய்வதுண்டு. | | மேற்படி வீட்டில் பெண்ணைக் கொள்ளக்கொடுக்க இல்லாத இதர ஜாதியார்கள் சீர் செய்வது பயனற்றதாம். |
| 7. பதினாரும் நாள் வீட்டை வெள்ளை அடித்து ஷை பெண் நீராடி நல்லாடை உடுத்திய பின் உறவு முறைக்கு விருந்து அளிக்கிறார்கள். | | கிட்டின உறவுள்ள பெண்டுகளுக்கு மாத்திரம் சாப்பாடு செய்தால் போதும். |
| 8. பின்பு இரவில் ஷை பிள்ளையை ஊஞ்சலில் வைத்து பாட்டுடன் ஆட்டி ஆரவாரஞ் செய்கிறார்கள். | | |

ழ-க:--(1) திரவியவான்கள் தங்கள் சக்திக்குத் தக்க படி (விரிவாய்ச் செலவு செய்ய இஷ்டம் இருந்தால்) சாதாரண காலத்தில் இடம்பமின்றி பிரத்தியேகமாய் இஷ்டப்பிரகாரம் செய்துகொள்ளலாம்.

(2) தற்காலத்தில் உறவுமுறையோடு மேற்படி சீருடன் ஊர் சுற்றிவந்து, வந்த மனிதர்களுக்கெல்லாம் சாப்பாடு செய்விப்பதில், சிலசமயம் மேற்படி பெண் வீட்டில் சாதம் அல்லது பலகாரம் முதலிய பதார்த்தங் கள் குறைவுற்று போட வகையில்லாமல் கைவிட்டு, சீர் செய்தவர் நளினமாய் தன் வீடு செல்லும் வழக்கம் கொடிதினுங்கொடிது. மேற்படி விஷயத்தில் பிற மனி தர்களுக்கு விருந்தளிப்பது மிகவும் கேவலம். பெண் ணின் குணாதிசயங்களை அறிவதற்கு பெண்பாலரையே போக்குவரவேற்படுத்தவேண்டும். ஆகையால், இவ் விஷயத்தில் ஆண்பாலர்களை அழைப்பது மிகவும் பிசகு.

(3) தேவைக்காரர் வீட்டில் பதிவிரதாபங்கம் பண்ணின உறவினர்களை உள்ளே விட்டு யாதொரு விதமானவேலையையும் செய்யச்சொல்லக்கூடாது. ஏனெ னில், அவர்களுடைய சகவாசத்தால் நற்குலப் பெண் கள் பயமற்று செய்யத்தகாத காரியங்கள் செய்ய ஏது வாகும். ஆனால் உறவினரல்லாத அத்தகைய அன்னி யர்களைச் சமயத்திற்கு வேலைக்கு அமர்த்திக்கொள்வது ஒரு பெருங் குற்றம் அன்று. ஏனெனில், குழந்தை கள் மேற்படி வேலைக்காரர்களை முறைப் பெயரிட்டு அழைத்து அதனால் அவர்களுடன் அன்னியோன்னிய மாகி மோசம் போகார்கள்.

**31.** கலியாணம் என்றால் கைப்பற்றல்; இது எட்டு வகைப்படும். அவையாவன :—

(1) காந்தருவ கலியாணம்:—ஆணும் பெண்ணும் தாங்களே ஒருவருக்கொருவர் மனமொத்துக் கூடி வாழ்வது.

(2) பைசாச கலியாணம் :—ஒருவர் தன் கருத்துக்கு இணங்காத மற்றொருவரை அவமோசமான வேளையிலேயும், நித்திரை வேளையிலேயும், துன்மார்க்க வசம் செய்வது.

(3) பிரம கலியாணம்:—ஒருவர் ஞானமார்க்க வுத்தமரை வலிய அழைத்து, வேண்டிய வஸ்திராபரணங்களும் அளித்து, மாப்பிள்ளை யினுடைய பொருளில் திரணமும் செலவு செய்யாமல், தம்பதிகளின் போஜனத்திற்கு வேண்டிய விளை பூமியுங்கொடுத்து, தன் பெண்ணுக்கு விவாகம் தானே செய்விப்பது. (ஒரு ஞானி, தனது நிலையறிந்து, தன்னை மிகவும் மதித்து, தனக்குக் கலியாணம் செய்வித்த ஒருவரை, "ஷி யார் தன் பெண்ணை வலியக்கொடுத்தார்" என்று பின்பு இகழ்ந்துரையாரென்பது கருத்து).

(4) தெய்வ கலியாணம்:—ஞான மார்க்கமும் விசுவாசமும் எதார்த்தமுமுள்ள ஒருவர், தன் மகளைக் கேட்டால் அவ்விருவருக்கும் அலங்கார வஸ்திராபரணங்களைப்பூட்டி திரவியமும் கொடுத்து கலியாணம் செய்விப்பது.

(5) ஆரிஷ கலியாணம்:—ஒருவர் தன் மகளைக் கேட்டால் அவர் யோக்கியதை யறிந்து, அவருக்கு வஸ்திராபரணங்களும் அணிவித்து, சகல செலவும் தானே செய்து கலியாணம் செய்விப்பது.

(6) பிரஜாபத்திய கலியாணம்:—ஒருவர் தன் மகளைக்கேட்பாரேயானால் தீர விசாரித்து, ஆலோசனை செய்து அவர் யோக்கியதையை அறிந்து, தன் மகளுக்கு வேண்டிய ஆபரணம் முதலியவைகளுக்குத் தானே செலவு செய்து, கலியாணம் செய்து கொடுப்பது.

(7) அசுர கலியாணம்:—தன் மகளை ஒருவர் கேட்டால், இவ்வளவு திரவியம் தரவேண்டுமென்று நிர்ணயம் செய்துகொண்டு கலியாணம் செய்து முடிப்பது.

(8) இராட்சத கலியாணம்:—தன் மகளைக் கேட்கவந்த ஒருவன் மூடனானாலும், குறை மனிதனானாலும், வியாதியஸ்தனானாலும், அவை யொன்றையும் யோசியாமல், அவனிடம் அதிக திரவியம் வாங்கினதுமன்றி அவன் பொருள்கொண்டு கலியாணத்தைச் செய்விப்பது.

மு-க:—இவ்வெட்டும் மூன்று வகைக்குள் அடங்கும்; அதாவது, (1) ஆணும்பெண்ணும் மனம் ஒத்துக்கூடி வாழ்வது; (2) ஒருவர் மனம் ஒவ்வாதபோது மற்றொருவர் பலவந்தத்தால் அவமோசம் செய்வது; (3) இருவர் மனம் ஒத்ததுமன்றிப் பெற்றோர்களின் சம்மதத்தோடு பலர் முன்னிலையில் மேளதாளத்துடன் திருமணஞ் செய்வித்துக் கூடிவாழ்வது.

**32.**

"ஐயோபுலவீர் பொருளீட்டி யழியும்போக மவை பேணிச்
சையோகித்துஞ் சயனித்துஞ் சருவகாலங் கழிப்பீரேல்
மைசேர்மனத்தின்மாசறுமோமாடாடதனிற்சிறந்தேங்கோல்
கைகால்விதிர்த்துச் சோர்வுறுநாட் கலங்காதறிவாய்க் கதிப்போமே,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகர் அவர்கள் கூறியபடி, மாடு ஆடு முதலிய மிருகங்கள் அனுபவிக்கிற சுக துக்கத்தோடுகூட மானிட ஜன்மத்தில், நித்தியாநித்திய

வஸ்து விவேகத்தினல்* நித்தியப்பொருளைப் படிப் படியாய்த்தேடி அடையவேண்டும் என்பதே இந்துகுடி யானவர்களென்று கூப்பிடப்படும் திராவிட—ஆரியர் களின்* கொள்கையென்று முன் 11—1-வது பத்தியில் கூறப்பட்டிருக்கிறது; மேற்படி நோக்கம் சித்தி பெறுவ தற்கு இல்லறம், துறவறம், என இரண்டு வழிகள் உண்டு. அவற்றுள் இல்லறமாவது ஒருவன் தன் மனே நிலைக்குத் தகுந்த ஒரு பெண்ணைப்பார்த்து மேற்படியாளின் பெற் ரோர்களின் சம்மதத்தின்பேரில், பலபேர் முன்னிலையில், அபதூருக்கிடமின்றி மேற்படியாளை விவாகம் செய்து கொண்டு, தான் வெளி வேலையும், தன் மனையாள் வீட்டில் சமையல் முதலிய உள் வேலையும் செய்து, இத ளுல் ஏற்படும் சாவகாசத்தைத் தங்களுடைய மோட்ச சாதனத்துக்கு ஏதுவாகிய வழிகளில் செலவு செய்து, முக்தி பெறும் வரையில் இச்சைகளை நீதி வழியாய்த் திருப்திசெய்து மேற்படி மனையாளோடு கூடி வாழ்வதே இல்லறம்; இப்படிக்கில்லாது இச்சை துறந்து பஞ் சேந்திரியம் அடங்கினபிறகு, காஷாயம் பூண்டு யோக ஞான மார்க்கங்களில் விசேஷ சிரத்தையுடன் சென்று அப்பியாசிக்கும் மார்க்கமே துறவறம்.

**33.** நித்தியவஸ்துவை அறிவதற்கு அல்லது மோட்ச நிலையை அடைவதற்கு இல்லறத்தில் மனைவியினுல் ஏற் படும் சாதகம் எப்படியென்ருல், சாதாரணமான ஒரு குடியானவர், சம்சாரமின்றி மோட்ச நிலையை அடைய வேண்டுமானுல், அவருக்கு மேற்படி மோட்ச சாதனத் துக்குரிய கர்மானுஷ்டானங்களை இன்னவை என்று தெரிந்துகொள்ளவும், தெரிந்தபடி அப்பியாசிக்கவும், சாவகாசம் கிடைப்பது அரிது. ஏனென்ருல், ஜீவனத் தைக்கருதி அவர் காலையில் வெளியே புறப்பட்டு ஒரு தொழிற்செய்து தனக்கு வேண்டிய உணவு பொருள் முதலியவைகளைச் சம்பாதித்த பின்பு மாலையில் வீட்டுக் குத் திரும்பி வந்து தனது ஆகாரம் முதலியவைகளைத்

தானே சமைத்துப் புசித்தபின் மிகவும் அலுப்புற்று, நித்திரை போகத்தான் மீதி நேரம் ஆகுமே தவிர சத்காலக்ஷேபஞ் செய்வதற்குக் காலங்கிடைப்பது வெகு துர்லபம்.

**34**. ஆகையால் இருவர் சேர்ந்து, ஒருவர் வெளியே போய் இருவருக்கும் ஆகாராதி முதலியவைகள் சம்பாதிக்கவும், மற்றொருவர் அதே காலத்தில் மேற்படி இருவருக்கும்வேண்டிய வுணவு முதலியவைகளைச் சமைத்து வெளியேபோய் வேலை பார்த்து வந்தவருக்குச் சிரமபரிகாரஞ் செய்து சாதம் படைக்கவும் ஏற்படில், தங்கள் சத்காலக்ஷேபத்திற்குச் சமயம் கிடைக்கும்.

**35**. மேற்படி இருவரும் ஒரே ஜாதியாய் (அதாவது ஆண் ஜாதி அல்லது பெண் ஜாதியாய்) இருப்பின் ஒரு காலத்தில் தங்களுக்குள் அதிர்ப்தி உண்டாகி பிரிவுபட ஏதுவாகும். அப்படிக்கில்லாமல் ஆணும் பெண்ணுமாகில் அவர்களின் சம்பந்தத்தாலும், அவர்களுள் ஜனிக்குங் குழந்தைகளின்மேலுள்ள அன்பாலும் ஒற்றுமை அதிகப்பட்டு சொற்ப அதிர்ப்தியினால் குடும்பம் பிளவு படாமல் சத்காலக்ஷேபம் இடையூறின்றி நடந்து வருமென்பது கருத்து.

## பெண்பார்க்கும் விதம்.

**36**. ஒரு வாலிபருக்கு வயது வந்தபோது, அதாவது 18 வயதான பிறகு, மணமகள் தேட ஆரம்பிக்கிறார்கள். அநேகர் ஒருவரது குணம், கல்வி, தேகதிடம் முதலியவைகளுக்குத் தகுந்த மற்றொருவரைத் தேடாமல் பெற்றோர்களின் இஷ்டப்பிரகாரம் பொருளை அல்லது உறவைக்கருதி ஒருவரது கருத்துக்கு விரோதமாய் இருப்பினும், கலியாணம் பலவந்தமாய்ச் செய்து முடித்து விடப்படுகின்றது. அதனால் அவர்களின் மனதில் அதிருப்தி உண்டாகி சில சமயம் அவர்கள் குடும்பம் பல அசந்தர்ப்பங்களுக்கும், அசுப சந்ததிக்கும், அபகீர்த்திக்கும் ஏதுவாகின்றது.

**37.** விபசார தோஷம் சந்ததிகளுக்கு ஏற்படுமென்று அஞ்சி பலர் முன்னிலையில் தம்பதிகளின் (அதாவது, மணவாளர், மணமகளின்) பெற்றோர்கள் நிச்சய தாம்பூலஞ்செய்து, திருமணத்தேதி குறித்து, மேற்படி தேதிக்கு முன்னதாகவே உறவுமுறையோர், சிநேகிதர் முதலிய பலபேர்களுக்கு வெற்றிலைப்பாக்கு வைத்து அழைத்து, குறித்த தேதியில் மகா சபையின் முன்பாக மேளதாள ஆரவாரத்துடன் பகிரங்கமாய் மிகச்செலவு செய்து கலியாணஞ் செய்யப்படுகிற தாகையால் விபசார தோஷம் உள்ளவர்களிடத்தில் சம்பந்தஞ் செய்வது பொருத்தமன்று.

**38.** சிலர், பணம், நற்குலம்*, நவீனக் கல்வி முதலிய வைகளின் மேன்மையை உத்தேசித்து பெண்ணை வலி யக் கொடுப்பதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்து, மேன் மையைக் கருதி தாழ்மை அடைவாரும் உளர்; உதார ணமாக, ஒரு தாழ்ந்த குலத்திலுள்ள பெண்ணை உயர்ந்த குலவானுக்குக் கொடுக்க எத்தனிப்பதனால், அப்பைய னுடைய உறவினர்கள் பெண்ணினது மறைந்துகிடந்த குலதோஷங்களை எடுத்துக்கூறி தங்களால் இயன்ற மட்டும் மேற்படி காரியத்தை தடுக்க எத்தனிக்கிறார்கள். இதனால் பெண்ணினது மறைந்துகிடந்த சில தோஷங் கள் மறுபடியும் புதுப்பிக்கப்படுகின்றன; உயர்குலப் பெண்ணைத்தேடும் இழிகுலவான் கதியும் அவ்விதமே யாம்.

**39.** மேற்படி குலதோஷமுடையவர்கள் தங்களைப்போ லொத்தவர்களிடத்திற் கொள்ளவுங் கொடுக்கவும் இருப் பது நலம். ஏனெனில், அவர்களைச் சேர்ந்த உறவினர் கள் தோஷாரோபணஞ் செய்ய இடமில்லை.

பரிகாரம்:—ஒரு குலத்திற்கு எக்காரணத்தால் முதலில் தோஷம் உண்டானதோ அக்காரணத்திற்குச் சுமார் ஐந்தாறு தலைமுறை வரையில் மறுபடியும்

இடங்கொடாமல் பாதுகாத்தால், அக்குலம் படிப் படியாய்நன்னிலை அடையும். இதுவே குல இழிவுடைய வர்கள் குல நலம் அடையும் வழி.

## பெண்தேடி வெளியூர் செல்லல்.

**40.** சிலர் பெண் பார்ப்பதற்காக வெளியூர்களில் சென்று ஆங்காங்கு தமக்குக்கிட்டின உறவினர் அல்லது சற்று அறிமுகமானவர் வீட்டில் போய்த் தங்கி மேற் படியார்களைக் கூட்டிக்கொண்டு தங்களுக்கு இஷ்ட மான இடங்களுக்குச் சென்று பெண் பார்க்கிறார்கள். இதனால் அந்த வீட்டார்கள் இந்தப் பஞ்சகாலத்தில் சாப்பாடு போடுவதன்றியும், இவர்களைப் பல இடங் களுக்குக் கூட்டிக்கொண்டு போவதனால், தங்களுடைய சொந்த வேலையையும் இழந்துவிடுகிறார்கள். இந்த கஷ்டத்தை முன்னிட்டு பலர் வெளியூருக்குச் சென்று பெண்ணெடுத்தால், வீட்டுக்கு வருஷாவருஷம் விருந்துமேல்விருந்து வந்து வீட்டை வெறும் வீடாக்கு வார்களென்று கூறி வெளியூர் சம்பந்தம் கூடாதென்று தடை செய்கிறார்கள். இதனால் உள்ளூரில் தகுந்த மாப்பிள்ளை அல்லது தகுந்த பெண் கிடைக்காமல் சில குடும்பங்கள் பல துன்பங்களில் ஆழ்கின்றன.

**41.** வெளியூர் சென்று பெண் தேடுகிறவர்கள் தாங் கள் எப்பொழுதோ ஒருசமயம் இரண்டுவேளை சாப்பிடு கிறதில்தானா குறைந்துபோகிறது என்று எண்ணுகிறார் களே யொழிய விருந்தளிப்பவர்கள், வருஷாவருஷம் கலியாண மாதங்களில் சொந்தக்காரர்களாலும், அறி முகமானவர்களாலும், அடிக்கடித் துன்பம் அடைகிறார் களென்று உணர்கிறதில்லை.

**42.** ஆகையால், மேற்படி காரணமாக வெளியூருக்குச் செல்பவர்கள் தங்கள் சாப்பாடு முதலியவைகளுக்கு வேண்டிய செலவை கண்டிப்பாய் பிறர்மேற் சுமத்தப் படாது. (மிகவுங் கிட்டின உறவினராகில் தோஷமில்லை).

**43.** சாப்பாட்டுக்குத் தரித்திரம் இல்லாத காலத்தில் நமது முன்னோர்கள் கலியாணம் 7, 5 அல்லது 3 நாட்கள் என்று தரத்துக்குத் தக்கபடி கொண்டாடினார்கள். இப்போது நமது மூடபுத்தியால் நம் நாட்டிலிருந்து முக்கிய உணவுபொருள்களையுங்கூட (நம்து நாட்டுக்கு வேண்டிய அளவு வைத்துக்கொள்ளாமல்) அன்னிய நாட்டுக்கு ஏராளமாய்க் கப்பலில் சதா ஏற்றி விடுகிறபடியாலும், கைத்தொழிலால் அல்லது இயந்திரங்களால் உற்பத்தியான அன்னிய சரக்குகளை நாம் வாங்குவதனாலும், மேற்படி உணவுபொருளும் பணமும் நஷ்டமானதுமல்லாமல் நம் நாட்டுக் கைத்தொழிலாளர்கள் தொழிலற்றுப் பிச்சைக்காரர்களாகி, அடிக்கடி பட்டினி கிடக்க நேரிட்டு, அதனால் தேகதிடம் இழந்து வியாதி மேலாடி, நம் ஜனங்கள் நாளுக்குநாள் அழிந்துகொண்டிருக்கிறதைக் கண்ணுற்றும், இக்கொடிய பஞ்சகாலத்தில், செலவை மிக்கசுருக்கி, நமது இராஜ சிரேஷ்டரான பரோடா மகாராஜா அவர்கள் (His Highness the Maharajah of Baroda) தனது குமாரத்தி ஸ்ரீமதி இந்திராணி அம்மையார் அவர்களுக்கு ஒரேநாளில் கலியாணஞ்செய்வித்து, 30 பேருக்கு மாத்திரம் காலை ; போஜன அழைப்புப்பத்திரம் (Ticket) கொடுத்து, மேற்படி சுபகாரியத்தை முடித்ததைக் கேள்வியுற்றும், நாம் ஒவ்வொருவரும் நடத்தும் கலியாணங்களை ஒரே நாளில் எவ்வளவு சொற்ப செலவுடன் முடிக்கவேண்டும் என்பதை ஒருவர் சொல்லவும் வேண்டுமா? ஒவ்வொருவரும் சுமார் தனது ஆறுமாத மொத்த வரும்படிக்கு அதிகப்படாமல் மிகச்சுருக்கமாய்ச் செலவு செய்து கலியாணம் முடிப்பது உத்தமம்.

மு-க:—இதுபோலவே குடும்பத்தில் நடக்கும் நன்மை தீமை ஒவ்வொன்றிலும் 'செலவைச் சுருக்கி, னல் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், மார்வாடிகள்

முதலியவர்களுக்கு அடிமையாக வேண்டுவதில்லை. அவர்களும் பணம் வட்டிக்கு விடுவதே ஒரு தொழிலாகக் கொள்ளாது வேலைசெய்து சாப்பிட ஆரம்பித்துவிடுவார்கள்.

**44.** சிலர், மேல் நாட்டாரைப்போல் நம்மவர்களும் கலியாண உடன்படிக்கையைப் பணங்கொடுத்து புஸ்தகத்தில் பதிவு (Registration) செய்யவேண்டுமென்று கருதுகிறார்கள். அது நமக்குத் தேவையில்லை; ஏனெனில், நம் இந்தியாவில் அநேக யுகங்களாக மணம்புரிந்த மணவாளராவது அல்லது மணமகளாவது ஒருவரையொருவர் நீங்கிக்கலியாணத்தை அரசாங்க மூலமாக ரத்து (Divorce) செய்ததுமில்லை, அல்லது அன்னிய தேசத்தில்சென்று கலியாணம் செய்யாததாகச் சொல்லி வேறொருவரை மறு கலியாணம் செய்ததுமில்லை.

**45.** மேலும், பெற்றோர்கள் தம்பதிகளின் சம்மதத்தின்பேரில் பலர் முன்னிலையிற் திருமணவோலை எழுதியும், மாப்பிள்ளைப் பலரோடு மேளதாளத்துடன் ஊர் சுற்றி வந்து, முகூர்த்தக்கா லூன்றின பிறகு சுவாமி சந்நிதியில் சூரைத்தேங்காய் உடைப்பதற்காக ஊர்வலம் வந்தும், திருப்பூட்டின பிறகு பெண்ணுடனும் ஒரு ஊர்க்கோலம் வருகிறபடியால், இது ஆயிரம் பதிவுக்குச் சமானமென்றே சொல்லலாம். இஃதன்றியும், நம் கோவிலிலேயாவது, கச்சேரியிலேயாவது, கலியாண உடன்படிக்கையைப் பதிவு செய்வதென்றால் நமது பாமர ஜனங்கள் பல அர்ச்சகர்கள் அல்லது அதிகாரிகளின் தயவை எதிர்பார்க்க நேரிட்டு சுவாதீனமிழந்து வெகு துன்பத்துக் காளாகுவார்கள். ஆகையால், இது விஷயத்தில் தேசாபிமானிகள் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

**46.** (1) சிலர் பாரம்பரைச் சாதியைச் சுட்டி, உயர்ந்த வருணத்தி லுதித்ததாகக் கருதப்படும் ஒருவன் தாழ்ந்த வருணத்திலுதித்ததாகக் கருதப்படுகிற ஒரு பெண்ணைக்

கலியாணஞ் செய்து கொள்ளலாமென்றும், அப்படிச் செய்யுங் கலியாணத்திற்கு "அனுலோமா" (Anuloma) என்றும், தாழ்ந்த வருணத்தினுதித்ததாகக் கருதப்படும் ஒருவன் உயர்ந்த வருணத்தில் பிறந்ததாகக் கருதப்படும் ஒரு பெண்ணைக் கலியாணம் (விலோமா-Viloma—அல்லது—பிரதிலோமா-Prathiloma) செய்யக்கூடாதென்றும், சாஸ்திரஞ் சொல்லுவதாகக் கூறுகிறார்கள். உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று, மனிதவர்க்கத்தைப் பிரிப்பது அவரவர் குணம், தொழிலை அனுசரித்துக் கூறினாலொழிய மேற்படி சட்டம் பொருந்தாது; எப்படியெனில், இவ்வுலகத்தில் மூவகையான மனிதர்களுண்டு; அதாவது, (1) மிருக ஜாதிகள்போல் நன்று தீது அஃதொன்றுங் கருதாது பஞ்சேந்திரிய இச்சையைப் பூர்த்திசெய்பவர், மிருக மனிதர் (இராக்ஷதகணம்); (2) மேற்படி பஞ்சேந்திரிய இச்சையை நீதி வழியாகப் பூர்த்தி செய்யக்கருதி அநீதிவழியை அப்போதைக்கப்போது கண்டித்து வருகிறவர் சன்மார்க்கர் (மனிதகணம்); (3) அநீதி வழியை அறக்கண்டித்து அணுவளவேனும் நீதி தவறாமல் நடப்பவர் தெய்வ மனிதர் (தெய்வ கணம்). ஒரே குடும்பத்தில் இம்மூவிதக் குணமுடையோர்களை நாம் காணலாம். அவர்களுக்குத் திருமணம் செய்யுங் காலத்தில் அவரவர் நிலைமைக்குத் தகுந்தவரைத் தேடி மணம் புரிந்து வாழ்வதே உத்தமம்; அப்படிக்கில்லாது தெய்வ கணமுடையோர் மனித கணத்தோடு சேர்வது மத்திமம்; தெய்வகண முடையோர் இராக்ஷத கணத்தோடு சேர்வது அதமம்.

(2) சிலர், தெய்வகணம் பொருந்திய ஒருவருக்கு இராக்ஷதகணம் பொருந்திய ஒரு பெண்ணை அனுலோமோ கலியாணஞ்செய்வது சரியா, அல்லது, இராக்ஷதகணம் பொருந்திய ஒருவனுக்கு தெய்வ கணம் பொருந்திய ஒரு பெண்ணை விலோமா திருமணஞ் செய்வது சரியாயெனின், முற்கூறியவையேசரி,

பிறகூறியவை சரியன்று; ஏனெனில், பெண் இராக்ஷதகணமாயின் அவள் செய்யும் இடருக்கு ஒரு எல்லையுண்டு. புருஷன் தானே பொருள்தேடி குடும்ப காரியம் சகலத்தையுந் தானே தலைவனயிருந்து நடத்துபவனுதலால், தனது குடும்பத்தில் ஸ்திரீ இராக்ஷதமனைவியாலுண்டாகுங் குறைகளைச் சுலபமாகப் பரிகாரஞ் செய்துகொள்ளக்கூடும். ஆனல், புருஷன் இராக்ஷதகணமாயின் அவனல் விளையுந் தீங்கிற்கு எல்லையிலை; எப்படியெனில், அவன் தான் சம்பாதித்த பொருளை சூது, மதுபானம் முதலிய துர்வழிகளில் செலவுசெய்து தெய்வகணம் பொருந்திய தன் மனைவிக்கு அளவிறந்த துன்பங்கள் விளைவிப்பான். ஆதலால், தெய்வகணமுடையோருக்கு இராக்ஷதகணமுடைய பெண்ணைத் திருமணஞ் செய்தாலுஞ் செய்யலாம்; ஆனல், இராக்ஷதகணமுடைய ஒருவனுக்கு தெய்வகணமுடைய ஒரு பெண்ணை மணம் புரிவது கூடவேகூடாது. அப்படிக்கில்லாமல் பரம்பரைச்சாதியையேஆதாரமாகக்கொண்டு மேற்படி அநுலோமா கலியாணஞ்செய்யலாம் என்றலோ, தாழ்ந்த வருணத்திலுதித்ததாகக் கருதப்படும் ஒருவன் தன் பெண்ணை உயர்ந்த வருணத்திலுதித்ததாகக் கருதப்படும் ஒருவனுக்குத் திருமணஞ்செய்து கொடுப்பான? கொடவே கொடான். இது அநுபவத்தில்தான் தெரிந்துகொள்ளவேண்டும். "காக்கைக்குந் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழமொழிப்படி ஒவ்வொரு ஜாதியும் அவரவர்களுக்குப் பத்தரைமாத்துத் தங்கமேயாகும். **பரம்பரையாக உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதியேன்று கூறுவது வெறுஞ் சோல்லளவேயாம்.**

**47.** சிலர் தற்காலம் ஏற்பட்டிருக்கிற இராஜிகக் கலக்கத்தால் பரம்பரைப் பிராமணர்கள் குடியானவர்களோடு விவாக சம்பந்தம் பண்ணினலன்றி சுய ஆட்சிக்கு (Home Rule or Self-Government நாம் அருகரல்லவென்று கூறுகிறர்கள். விவாக சம்பந்தத்தால் ஒற்றுமை

யுண்டாகி அரசியல் முறை விரோதமின்றி நடைபெறும் என்று இவர்கள் கருத்துபோலும். ஆனால், இந்து குடியானவர்கள் இப்புத்தகத்தில் 11-வது பத்தியின் கீழ்கண்ட முக்கிய ஜீவாதாரங்களை இயன்றமட்டுங் கடைப்பிடித்து நாளது வரையில் வாழ்ந்து வருகிறார்கள்; பரம்பரைப் பிராமணர்களோ அப்படிக்கில்லாது, உழைத்துச் சாப்பிடுந் தொழிலற்று, யாசகம் எடுத்து, அதில் அகௌரவமின்றியும் நமது முக்கிய ஜீவாதாரங்களைப் பெரும்பான்மை இழந்தும், ஜீவித்து வருகிற படியால், மேற்படி சம்பந்தத்தினால் மாத்திரம் எங்ஙனம் ஒற்றுமை உண்டாகும்?

**48.** சிலர், மேல் நாட்டாரோடு (The Westerners) சம்பந்தஞ் செய்தால் தோஷமில்லையென்று கூறுகிறார்கள். இதன் 11—6-வது பத்தியில் கண்டபடி நம்மவர்கள் சொற்ப ஜீவன வாசியாயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் தன்னாலியன்றமட்டும் இராஜசுகம் அனுபவிக்கும் இயல்புடையவர்கள். இவ்விதம் மாறுபாடான நோக்கத்தையும் அவரவர் நாட்டின் சீதோஷ்ணத்தால் வேறுபாடான நடையுடை பாவனையையுமுடைய இவ்விரு வகையார்களின் சம்பந்தத்தில் பிறக்குங் குழந்தைகள் நமது முக்கிய ஜீவாதாரங்களைக் கைவிட்டு பின்னால் இந்நாட்டில் பாதவிக்கும்படி நேரிடும்.

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| **49.** 1. ஒரு வாலிபருக்கு வயது வந்தவுடன் தாய்மாமனைக்கொண்டு பெண் பார்க்கிருர்கள். | தாய்மாமன் மூலமாய்ப் பெண் எடுத்தால், மேற்படியார் போகாத இடத்திலேபோய் சம்பந்தஞ் செய்ததாகப் பின்பு குறை கூருரென்பது கருத்து போலும். | |
| 2. புரோகிதரைக் கொண்டு நிச்சயதாம்பூலஞ் செய்வதற்கு நல்ல நாள் பார்க்கிருர்கள். | | குடியான சோதிடரைக் கொண்டு ஷை காரியத்திற்கும் பந்தக்கால் ஊன்றுவதற்கும், மணவரை போடுவதற்கும், நெல் அவிப்பதற்கும், முகூர்த்தக்கால் ஊன்றுவதற்கும், திருப்பூட்டுவதற்கும், பெண் அழைப்பதற்கும், சுபவேளை குறிக்கப்பட வேண்டும். |
| 3. மேற்படி குறித்த தேதியில் பெண்ணுக்குப் | கலியாணமானபின்பு, பெண் புகுந்த வீட்டில், மேற்படியாளை | பரிசமாக நகை வைப்பதால், ஏழைகள்முதலில் கடன்வாங்கி |

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| பரிசமாக, சிலர் நகை கொடுக்கிறார்கள் ; சிலர் 4 அல்லது 5 வராகனெடை ரொக்கமாய் ரூபாய் கொடுக்கிறார்கள். | வலியக் கொடுத்தான், என்ற இழிச்சொல்லுக் கிடமில்லாமல், மாப்பிள்ளை வகையரா பேர்வழிகள், மேற்படி பெண்ணை அநேகந்தரம் கேட்டும், பரிசு கொடுத்தாங் கொண்டதாகக் கருதும்படி, மேற்படி வழக்கம் உண்டு பண்ணினார் போலும். | மேற்படி காரியத்தை முடித்துவிட்டு, பிறகு மார்வாடிகள், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் முதலிய பல நகை வியாபாரிகளிடம் அதிக வட்டிக்கு மேற்படி நகையை அடைமானம் வைத்துக் கடன் வாங்கி மீட்க முடியாமல் இழந்துவிடுகிறார்கள். இதன் கொடுமையை யார்பால் எடுத்துரைப்பது? இதைச் சொற்பமாக மூன்று அல்லது நான்கு வராகனெடை ரொக்க ரூபாயாக வைத்துவிட்டால், பவுனுக்கு அதிகவிலை கொடுத்து வாங்குதல், தட்டார் கூலி, வட்டி முதலிய அனுவசியச் செலவு மிச்சமாகும். |

| | | |
|---|---|---|
| 4. (1) பிறகு புரோகிதர் முகூர்த்தத்தேதி முதலான வைகளை உறவினர் முன்னிலையில் குறித்து, அதை ஒரு ஓலையில் எழுதிச் செந்திரிக்கம் போட்டு இருதாரத்தாருக்கும் ஆளுக்கொன்று கொடுக்கிறார். | மேற்படியார்களில் ஒருவரும் பின்னால் மேற்படி உடன்படிக்கையை மறுக்காமல் இருப்பதற்காக, பலர் முன்னிலையில் மேற்படி காரியத்தை நிச்சயிக்க வேண்டுமென்பது கருத்து போலும். | மேற்படி தினத்தில் மேற்படி சுபவேளையில் "ஆசாரியர்," (அதாவது எற்கனவே தயாரித்து வைத்த 18 வயதுக்குக் குறைவில்லாத ஒரு குடியான சிராளர்) ஷை ஓலை† எழுதி ஷை காரியத்தை நிறைவேற்றுவதே ஒழுங்கு. |

† மேற்படி ஓலை எழுதும்விதம் அடியில் வருமாறு காண்க:—நிகழும்......வருஷம்......... மாதம்......தேதி......கிழமையில், திருச்சிறுப்பள்ளி கோட்டை சின்னக்கடைத் தெருவிலிருக்கும் மளிகை வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ......... அவர்கள் குமாரர் சிரஞ்சீவி.........க்கு, கருவூர் சிங்காரத் தெருவிலிருக்கும் மரக்கடை வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ.........அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி......அம்மாளை, ......வருஷம்.........மாதம்......தேதி.........கிழமை.........பக்ஷம்......... திதி......நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை......க்கு மேல்.........க்குள்ளாக.........இலக்கணத்தில் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாக அடியில் கண்டவர்கள் முன்னிலையில் உபயானுசம்மதியில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,
மாப்பிள்ளையின் தகப்பனார்:......
பெண்ணின் தகப்பனார்:......

சாக்ஷிகள்:—1. ......... 2. ......... 3. ......... 4. ......... 5. .........

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| (2) வந்த உறவினர்களுக்குச் சாப்பாடு செய்வது வழக்கம்; சிலர் சாப்பாடில்லாமல் ஷ்டி யார்களுக்குச் சந்தனம், தாம்பூலம் கொடுத்து அனுப்புவது முண்டு. | | |
| 5. (1) தாய்மாமன் முதலியவர்கள் மணவாளரை முகூர்த்தத்தேதிக்கு முந்தின ஒரு சுப தினத்தில் தம்வீட்டிற்கு அழைத்து, கோடி ஆடை எடுத்துக் கொடுத்து அன்ன மளிப்பதுண்டு. | | |
| (2) சிலர் மேற்கூறியபடிச் செய்கிறதுமன்றி, உறவுமுறைக்கு விருந்தளித்து மண | | தாய்மாமன் கடன் வாங்கியானை யேற்றம் பார்ப்பது முற்றிலும் பிசகு. |

| | | |
|---|---|---|
| ...வாள்ளை யானைமேலேற்றி ஊர்க்கோலம் செய்விப்பது முண்டு. (அன்பின் சிறப்பு). | | |
| 6. கலியாண தேதிக்குச் சுமார் மூன்று நாளைக்கு முன் நவதானியம் முளைக்கவைக்கிருர்கள். | அவைகள் நன்ருய் முளைத்து, வளர்ந்து, செழித் தோங்கினல் மேற்படி குடும்பம் க்ஷேமமாயிருக்குமென்பது கருத்து. | |
| 7. உறவினர்களுக்கு வெற்றிலைப் பாக்கு வைத்து அழைக்கிருர்கள்; நாத்தி நங்கையர்களுக்கு வெற்றிலைப் பாக்குடன் பணமும் வைக்கிருர்கள். | தூரத்திலுள்ள கிட்டின உறவினர்கள் செலவிற்குத் தங்கள் கையில் பணம் இல்லாவிட்டாலும் மேற்படி பணத்தைப் பெற்ருவது கட்டாயம் மேற்படி காரியத்திற்கு வரவேண்டுமென்று கருதி, மேற்படி பணம் வைக்கும் வழக்கம் உண்டுபண்ணினர் போலும். | நாத்தி நங்கையர்களுக்குப் பணம் வைப்பதனுல் தற்காலத்தில் அற்பமனஸ்தாபங்களுக்கு இடமுண்டாகிற தாகையால் இவ்வழக்கத்தை நிறுத்தி விடுவது உத்தமம். |
| 8. முகூர்த்த வேளைக்கு முன்பாக மாப்பிள்ளை குதிரை மேலேறி ஊர்ச்சுற்றிவந்து | நிச்சய தாம்பூலம் செய்த பிறகும், முகூர்த்த வேளைக்கு முன்னும், இடைநடுவில் யாதொரு | |

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| பெண் வீட்டில் † முகூர்த்தக் கால் ஊன்றுகிறார். | அசந்தர்ப்பத்தால் பெண்வகையரா பேர்வழிகள் வாக்குப் பிறளாமல் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, கலக்கமற்று மாப்பிள்ளை திருப்பூட்டப்புறப்படுவதற்காக ஏற்பட்ட ஒரு வழக்கம். | |
| 9. (1) மாப்பிள்ளை, தனக்குச்சவரம் முதலியவை செய்வித்து, தன்னை அலங்கரித்துக்கொண்டு ஊர்ச்சுற்றிவந்து பெண் வீட்டிலுள்ள மணவறையில் உட்காருகிறார்;<br>(2) அப்பொழுது கங்கணங்கட்டுதல் முதலிய சில்லறைக் கிரியைகள் செய்கிறார்கள். (ஷை கிரியை முறைகளைப்பற்றி 317-வது பக்கத்தைப் பார்க்கவும்). | மேற்படி சுபகாரியம் முடிவாகும் வரையில் வேறொரு காரியத்தில் பெண் மாப்பிள்ளைகள் பிரவேசிக்காமலிருக்கும்படிக்குக் கங்கணங்கட்டுவதென்று ஒரு வழக்கம் ஏற்படுத்தினர்போலும். | " நான் கோரிய சுபகாரியம் முடியும் வரையில், பிற காரியங்களில் பிரவேசிக்காமல் இருப்பேனாகவும்," என்று தம்பதிகள் தனித் தனியாய்க் கூறும்படிச் செய்வித்து, கங்கணத்தை மாப் |

| | | |
|---|---|---|
| | | பிள்ளைக்கு வலது கையிலும், பின்பு பெண்ணுக்கு இடது கையிலும் ஆசாரியர் கட்டி விடவேண்டும். (கலியாணத்தை ஒரே நாளில் செய்து முடிப்பவர்களுக்கு இது தேவையில்லை). |
| 10. மறுபடியும் சுவாமி தரிசனத்திற்காக மாப்பிள்ளை புறப்பட்டு ஊர்வலம் வரும்போது, பாதையிலுள்ள விக்கினேசுவரர் முதலிய பல தெய்வத் தலங்களின் தலைவாசல்களில்சூரைத்தேங்காய் உடைக்கிறார்கள். | எடுத்தகாரியம் விக்கினமின்றி முடியவேண்டும் என்று விக்கினேசுவரர் முதலிய பலதெய்வ வணக்கஞ் செய்வது வழக்கம். | |

† பெண்ணுக்குத் திருப்பூட்டுவதற்கு முன் மேற்படியாரை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து, அங்கு அவருக்குத் திருமணஞ் செய்விப்பது உசிதமன்று. ஆனால் தூரதேசத்தில் சேவகத்திலமர்ந்த மாப்பிள்ளைக்குப் போக்கு வரத்தால் ஏற்படும் காலதாமதம் முதலான சங்கடங்களை உத்தேசித்து, பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து திருமணஞ்செய்ய நேரிட்டு, அதன் மூலமாகச் சிலர்களுக்கு இதுவே ஒரு வழக்கமானதாகக் காணப்படுகிறது.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (எதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (எதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| 11. மணவாளர் பெண் வீடு சேர்ந்ததும் பெண்மாப் பிள்ளைக்கு மிஞ்சி முதலியவை போடுகிறார்கள். | மண அறி குறி. | |
| 12. (1) தம்பதிகள் ஒவ்வொருவரும் அவரவர் தாய் தகப்பனுக்குப் பாத பூஜை செய்வது வழக்கம். பெற்றோர்கள் இல்லாவிட்டால் தமையனை அல்லது உடன் பங்காளியை வைத்து அக்காரியத்தை நிறைவேற்றுகிறார்கள். | "உப்பிட்டவரை உள்ளளவும் நினை," என்றபழமொழிப்படி, தாய் தகப்பன் தனக்குச்செய்த நன்றியை மறவாத நல்லறிவாளர்களால் செய்யப்படுகிற தோர் வணக்கம். | சற்புத்திரர்கள் சற்குணத் தாய்தந்தையர்களுக்குஅவ்விதம் தானகவே செய்யவேண்டிய திருக்க, அதை ஓர் வழக்கமாக்கி பெற்றோர் இல்லாவிடினும் தமையன் அல்லது உடன் பங்காளிகள் கொடும் பாவிகளாய் இருந்தாலும் அவர்கள் காலில்விழும்படிச் செய்வது சுத்த மதியீனமன்றோ? |
| (2) மாப்பிள்ளை தனக்குக்கிட்டின உறவினர்களுக்குச் சேலை அல்லது வேஷ்டி எடுத்துக்கொடுத்து ஷை யார் | மணவாளரின் பெற்றோர்கள் ஆதியில் மிக்க அன்பினால் தங்கள் கிட்டின உறவினர்களுக்கு இலவசமாக ஆடை எடுத்துக் கொடுத்தார்கள். | தற்காலம் விலைவாசிகள் உயர்ந்திருப்பதால் ஷை வஸ்திரங்கள் பெற்று அதற்குத்தகுந்த மொய் போடுவதற்கு இயலாமல் உற |

கள் அதைப்பெற்று திருப்பூட்டுந்தினத்தில் தரித்துக்கொள்வது வழக்கம். ஆனால் ஷை வஸ்திரத்திற்குப் பதிலாய் அதற்குத்தகுந்த பணத்தை மொய்யாகத் திருப்பிச்செலுத்தப்படுகிறது.

13. புரோகிதர் பாவனே மந்திரம் படித்தவுடன், பெண் கழுத்தில் சங்குநாத † மேளதாள ஆரவாரத்துடன் மாப்பிள்ளை திருப்பூட்டுகிறார்.

"†முதற்சங்க முதூட்டு
மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு
பூட்டுங்—கடைச்சங்க
மாம்போதன தூதுமம்
மட்டோ விம்மட்டோ
நாம் பூமி வாழ்ந்த நலம்,"

பின்பு மேற்படி உறவினர்கள் "இலவசமாய்ப் பெறுவது சரியல்ல," என்று கருதி, அதற்குப் பதிலாய் பணத்தை மொய்யாகத் திருப்பிக் கொடுத்து, அதன்மூலமாய் இக்கொடிய வழக்கம் ஏற்பட்டதாகத் தோற்றுகிறது.

புரோகிதர் பாவனே மந்திரம் படித்து, நடத்தும்பல சடங்குகள் நமது மூதாக்களால் ஏற்பட்டதன்று. பரம்பரைப் பிராமணர்களில் சிலர் பள்ளிக்கூடம் வைத்து உபாத்திமைத் தொழில் செய்து, அதன் மூலமாகக் கலியாணம் முதலிய சுபகாரியங்களில் வஸ்திரம், தக்ஷிணை முதலியவைகள் ஜனங்களிடமிருந்து பெற்றார்கள். பிறகு காலக்கிரமத்தில் ஷை பல சடங்குகள் செய்தால்

வினர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இவ்வழக்கத்தை நிறுத்தவேண்டும். (தனவந்தர்களானால் உறவினர்களுக்கு வஸ்திரம் இலவசமாக எடுத்துக்கொடுத்து அதற்குப் பதிலாய் மொய் வாங்காமல் இருப்பது நலம்).

மாப்பிள்ளைக்கு மிஞ்சிபோட்டவுடன், பெண்ணை அழைப்பித்து பெண்ணின் தாய்மாமன் அல்லது தகப்பன் (தகப்பன் இல்லாவிடில் பெண்ணை ஆதரிப்பவர் அல்லது உடன் பங்காளி) பெண்மாப்பிள்ளைகளின் சுண்டு விரல்களைக் கோர்த்து, மணவரையை மூன்று தரஞ்சுற்றி† வரும்படி நடத்திய

† மேற்படி காரியத்தை அம்மான் செய்யத்தவறிடில் பெண்ணின் தகப்பனலேயே மேற்படி

| தற்கால நடை. | பூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| என்று பட்டினத்தார் கூறியுள்ளார். உற்பத்தி விருத்தி வழியில் வெளியான சகலமும் நாசமடையுமென்று நாம் உணர்ந்து அகமமதை அற்றிருக்கும்படி ஷை சங்கை ஷை சமயங்களில் நம் முன்னோர் உபயோகப் படுத்தினர் போலும். | மிகு சுகிர்தமென்று மேற்படி உபாத்தியாயர்கள் ஜனங்களுக்குப் புகட்டி, அவர்கள் மேற்படி போதனைகளை நம்பி அனுஷ்டித்ததாகக் கருதப்படுகிறது. உலகாபிமான மற்ற உண்மைப் பிராமணர் பஞ்சேந்திரியப் பேயால் சுழன்று மந்திர தந்திரத்தில் மயங்கார்; இதற்கிணங்க தாயுமானவரும்,<br><br>"மந்திரத்தையுன்னி மயங்கா<br>தெனக்கினியோர்<br>தந்திரத்தைவைக்கத்<br>தகாதோ பராபரமே,"<br>என்று கூறியதை நன்குணர்க. | பின் மணவரையிலுள்ள ஒருதனி<br>———<br>இருவர்களின் சுண்டுவிரல்கள் கோர்க்கப்பட்டு, மணவரையை மூன்றுதரஞ் சுற்றி ஆசனத்தில் இருக்கும்படிச் செய்வதே சீர். ஏனெனில், அம்மான் தம்பதிகளைச் சுற்றிவைத்தால் பின்னால் கொடாத யிடத்தில் பெண்ணைக் கொடுத்ததாகக் குறை கூறுர் என்பது கருத்து. அம்மான் செய்யத்தவறிடில், மேற்படியார் பங்காளிகளை விட, பெண்ணின் தகப்பனுர் அல்லது மேற்படியார் பங்காளி மேற்படி காரியத்தைச் செய்வதே சிறப்பு. |

(சீர்திருத்தத் தொடர்ச்சி)

ஆசனத்தின்மேல் அவர்களை உட்காரவைக்கவேண்டும். ஆசாரியர் ஒரு தாம்பாளத்தில் தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு, பூ, மஞ்சள் வைத்து, அத்துடன் திருமங்கிலியத்தில் மஞ்சள் தடவி

குங்குமமிட்டு, அவைகளை அல்லி அரசாணிக்கு எதிரில் வைத்தபின், மாப்பிள்ளை தனது இஷ்ட தேவதையைக்கோரி, தேங்காய் உடைத்து தூபதீபத்துடன் ஆராதனை செய்ததற்கப்பால், ஆசாரியர் அக்ஷதாம்பாளத்தை எடுத்து அங்குள்ள சில பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்ற பின் ஷை திருமங்கிலியத்தை மாப்பிள்ளையின் கையில் கொடுத்து அடியில் வருமாறு சொல்லவும்; அதைக் கேட்டு மாப்பிள்ளை அவ்வண்ணமே உடனுடன் சொல்லும்படிச் செய்யவேண்டும்; அதாவது, "நிகழும்.........வருஷ......மீ......உ ......கிழமையில், திருச்சிறுப்பள்ளி கோட்டை சின்னக் கடைத் தெருவிலிருக்கும் மளிகை வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ......... அவர்கள் குமாரர் ......... தொழில்...........என்னும் எனக்கு, கரூர் சிங்காரத்தெருவிலிருக்கும் மரக்கடை வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ......... அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி........... அம்மாளை, மேற்படியார் திருமணஞ்செய்து கொடுப்பதாக.........வருஷ......மீ......உயில் பலபெரியோர்கள் முன்னிலையில் நிட்சயித்தபடி அவர்கள் பாணிக்கிரகணம் செய்ததினுல், ஆகாசவாணி பூமாதேவி சாட்சியாக, அக்கினி அருந்ததிசாட்சியாக, உற்றுர் உறவுமுறைசாட்சியாக, இஷ்டமித்திரர் முதலிய சபையோர் சாட்சியாக, நான் மேற்படி சௌபாக்கியவதி.........அம்மாளுக்குத் திருப்பூட்டுகிறேனுகையால், இதுமுதல் எங்கள் ஆயுள்பரியந்தம் எங்கள் இருதேகங்களையும் ஏகதேகமாகப் பாவித்து சகல இன்பதுன்பங்களையும் இந்து குடியானவர் இல்லற ஆசாரப்படி சமமாகப்பாவித்துக்கொள்வோமாகவும்," என்று மாப்பிள்ளை கூறியபின் "அவ்வண்ணமே யானும் உடன்பட்டு வாழ்வேனுகவும்," என்று பெண்ணைச் சொல்லும்படிச்செய்து, தம்பதிகள் பழம், சர்க்கரையை வாயில் அடக்கிய பின்பு சங்குநாதமேளதாள கோஷ்டத்துடன், மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் திருப்பூட்டி, ஒரு முடிச்சுப் போட்டவுடன், மேற்படியாரின் சகோதரி அல்லது சகோதரிமுறையோர் அதைநன்றாய் முடிந்துவிடும்படிச் செய்விக்கவேண்டும்.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 14. (1) மைத்துனர், மோதிரம் மாப்பிள்ளைக்குப் போடுவதும் இதற்குப்பதிலாய் அவர் சீர்செய்வதுமுண்டு. | | இவ்விதம் ஒருவருக்கொருவர் செய்யும் சீரால் பணச்செலவேயன்றி பயன் ஒன்று மில்லையாதலால், இதைநிறுத்துவதுஉசிதம். |
| (2) பெரியோர்கள் தேங்காயுடைத்து அர்ச்சதை போடுகிறார்கள். | ஆசீர்வாதம். | |
| 15. நாத்தி நங்கைகள் பட்டம் முதலியன கட்டுகிறார்கள். | "பட்டம்" என்றால் "பதவி," என்று பொருள். அரசர்கள் முடி சூடுவதுபோல, பெண்ணுக்குப் பொன்னால் செய்த ஒரு வாரடையை நெற்றியில் கட்டிச் சிறப்பிக்கும்படிச் செய்தனர் போலும். | நாத்தி நங்கைக்கு வெற்றிலைப் பாக்குடன் பணம் வைக்கும் வழக்கத்தை நிறுத்தினதினாலும், மேற்படி காரியத்தினால் பல கஷ்டங்கள் நேரிடுதலாலும் அதை நிறுத்துவது உசிதம். |
| 16. மாப்பிள்ளை மாமன் பெண்மாமன் சீர் செய்கிறார்கள். | | சீர் செய்கிறதனால் பணச் செலவாகிறது மல்லாமல் பல பேர்களுக்குப் பகை, மனஸ் |

17. (1) வந்த ஜனங்களுக்குத் தாம்பூலாதி முதலியவைகள் பகிர்கிறார்கள். பிறகு மாப்பிள்ளை தன்வீடு போய்ச் சேருவார். பெண்வீட்டில் உறவுமுறையார்களுக்கு விருந்தளிக்கிறார்கள் †; அடுத்த நாள் தம்பதிகள் ஊர்வலஞ் செய்கிறார்கள்.

† தற்காலத்தில் சில புண்ணியவான்கள் ஒருவருக்கு ஒரு கரண்டி நெய், ஒரு அப்பளம், ஒரு வடை முதலியனவும், மற்றொருவருக்கு அதிகப்படியாயும் பந்தியில்

தாபம் முதலியன அடிக்கடி விளைகிறதால், இக்கொடிய வழக்கத்தை நீறுத்துவது மிகவும் அவசியம்.

மாப்பிள்ளையின் இடதுபக்கத்திலிருந்து தாம்பூலாதிகள் † வரிசையாக (எவ்வித பேதமன்னியில்) வந்தவர்களுக்குக்

† சுமார் 15 அல்லது 20 வெற்றிலையும் அதற்குத் தகுந்த பாக்குக்குக் குறைவில்லாமல் ஜனங்களுக்கு வழங்கவேண்டும்; ஏனெனில், மேற்படியார்கள் அதைப்பெற்று, தங்கள் மக்கள் முதலியவர்களுக்குக் கொடுத்து, அதன் மூலமாக மேற்படி மங்களகாரியம் நாட்டில் மணம் பெறும்; இதை ஒரு பெருஞ்சிலவாகக் கருதப்படாது.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| ஓரவஞ்சனை செய்து அநேகர்களுக்கு அதிருப்தியை விளைவித்து உறவினர்களுக்குள் கடும்பகை விருத்தியாகி ஒற்றுமைச் சிதைக்கப்படுகிறது. ஒருவரை வசியஞ்செய்வதற்கு இது தானு வழி? பலர் மனஸ்தாபத்திற் கிடமின்றி ஷை புண்ணியவான்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களுக்கு பிரத்தியேகமாய் வேண்டியது செய்துகொள்ளக்கூடாதா? ஐயோ! இவர்கள் மடமையை என்னென்று எடுத்துரைப்பது ? | | கொடுத்தவுடன் தம்பதிகளை அரைமணி நேரத்திற்குள்ளாக ஊர்க்கோலம் வரும்படிச் செய்வித்து பெண்வீட்டில் ‡ பெண்ணை விட்டுவிட்டு மாப்பிள்ளை தன் வீடுபோய்ச் சேரவேண்டும்.<br><br>‡ மாப்பிள்ளை வீட்டிலாவது அல்லது பொதுவாக ஒரு சாகாவிலாவது மேற்படி கலியாணம் நடைபெற்ருல், தம்பதிகள் ஊர்வலம் வந்த பிறகு அந்தச் சாகாவைச் சேரவேண்டும். |
| 17. (2) ஷை ஊர்க்கோலத்தில் மேளக்காரர்களுக்கு வழி | முன்னுளில் சொற்ப கூலி (அதாவது தானியாதி முதலிய பல சுதந் | தற்காலத்தில், மேற்படி தொழிலாளர்கள் முதலில் கூலி |

| | | |
|---|---|---|
| ஒ...டுக சிலர் காசுபணம் கொடுப்பதுண்டு. | தரம்) பெற்று மேளம் வாசிக்கிற வர்கள் என்று கருதி, இவ்வழக்கம் ஏற்படுத்தினர் போலும். | இவ்வளவென்று கரார் செய்துக் கொள்ளுகிறார்கள் ; ஆகையால், மறுபடியும் அவர்களுக்குக் காசு பணம் கொடுப்பதை (முன் எச்சரித்து) நிறுத்திவிடவேண்டும். |

மூ-க:—தம்பதிகள் ஊர்வலம் வந்த பிறகு, வேளைக்குகந்த ஒரு போஜனம் (அதாவது காலை அல்லது மாலையாயின் "சிற்றுண்டியும்," மதியம் அல்லது இரவாயின் "போஜனமும்") கிட்டின உறவினர்களுக்கும் நெருங்கின சிநேகிதர்களுக்கும் மாத்திரம் அளிக்கவேண்டும். இதற்காகப் பிரத்தியேகமாய் ஆளுக்கொரு சீட்டு முகூர்த்தத் தேதிக்கு முதல் நாளே நேரங்கண்டு கொடுப்பது உசிதம். மேற்படிச்சீட்டு பெற்றவர்கள் திரும்பத்திரும்பத் தன்னை அழைக்கப்படாமலே குறித்த நேரத்தில் சென்று சாப்பிடுவதே அழகு. (மேற்படிச்சீட்டு பெற்றவர்களை மாத்திரம் சபையில் பலர் முன்னிலையில் திரும்பவும் அழைப்பது கொடிதினுங் கொடிது).

| | | |
|---|---|---|
| 18. மூன்றும் நாள் மொய் வாங்குகிறார்கள். | முற்காலத்தில் ஏற்பட்ட பணக் குறைவால் கலியாணக்காரர்களின் பெருஞ் செலவை உத்தேசித்து உறவு முறையார்கள் சாப்பிட்டு விட்டு சும்மா போகக்கூடாதென்று கருதி, உபகாரமாக மொய் யென்று வழங்கிவரும் ஒரு சிறிய பண உதவியைச் செய்து வழக்கம் உண்டுபண்ணினர் போலும். | மொய்போடுவதினால் பல தீங்குகளும் உறவு பங்கமும் ஏற்படுகிறதாகையால் அது வேண்டுவதில்லை; அதற்குப்பதிலாகச் செலவைச் சுருக்குவதே உத்தமம். |

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 19. கங்கணம் அவிழ்த்தல். | | ஒரே நாளில் கலியாணம் ஆரம்பித்து முடிவாகிறபடியால், ஊர்வலம் வந்தவுடன் கங்கணத்தை அவிழ்த்து விடவேண்டும். |
| 20. கும்பிடுபணம் வாங்குகிறார்கள். | பெரியோர்களது பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவர்களது ஆசீர்வாதம் பெறுவது முன்னோர் வழக்கம். சமீபகாலத்தில் அப்படி நமஸ்கரித்தவர்களுக்கு ஆசீர்வாதத்தோடு பணமுங் கொடுத்து அதையும் ஒரு வழக்கமாக்கிவிட்டார்கள். | இம்சை விளைகிறதால் பணங் கொடுப்பதை நிறுத்திவிடவேண்டும். மூ-க:—சன்மார்க்கருக்கே சன்மார்க்கரின் வாழ்த்துதல் பயன் தரும். |
| 21. மஞ்சன நீர் ஆடுகிறார்கள்; இச்சமயத்தில் மாமன் மைத்துனர் முறையுள்ளமற்றவர்களும் ஒருவருக்கொருவர் களி தடவல், மஞ்ச | முற்காலத்தில் 30, 40 வயது வரையிலும் கலியாணஞ் செய்யாமல் இருந்தும் வெகு கூச்சத்துடன் இருந்தார்களாகையால், மேற்படி கூச்சம் நீங்கி அன்னியோன்னிய | மிக்க சூதுங் கபடமு முள்ள தற்காலத்தில் அத்தகைய விளையாட்டு அனுவசியம். (வேண்டுமானால் பெண்ணும் மாப்பிள்ளையும்மாத்திரம் ஒருவருக்கொருவர் |

| | | |
|---|---|---|
| நீராடல் முதலிய பரிகாசமான காரியங்கள் செய்கிறார்கள். | மாகும்படி ஷ வழக்கம் உண்டு பண்ணினர் போலும். | முன்தானையை மஞ்ச நீரில் நனைத்துக்கொள்ளலாம்). |
| 22. பின்பு ஆற்றுக்குப் போய்நீராடி வீட்டிற்குவந்து, உறவு முறையாருடன் சாப்பிடுவது வழக்கம். | | மஞ்ச நீர் ஆடாததினுல், நீராடல் முதலியவை தேவையில்லை. |
| 23. இதற்குப்பின் மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் பண்யார விருந்துகள் போடுவதுண்டு. சிற்சிலர் மாப்பிள்ளை வீட்டு விருந்தைத் தற்காலம் நிறுத்தி விடுகிறார்கள். | | கலியாணம் ஒரே நாளில் முடிந்து போவதனுல் அடுத்த நாட்களில் விருந்துகள் வேண்டுவதில்லை. |

மு-க:—(1) ஊரிலுள்ள வெற்றிலைப் பாக்கு பெற்றுக்கொண்டவர்கள் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்ட சுபகாரியத்திற்குக் கட்டாயம் வரவேண்டும் என்பது உசிதமல்ல. முன்பகையிருந்தாலல்லாமல் சமயபேதத்தால் வராததற்காக மனஸ்தாபப்படுவது பிசகு.

(2) தூரதேசத்திலுள்ள கிட்டின உறவினரும் கட்டாயம் வரவேண்டுமென்பது சுத்தப் பிசகு. அவர்கள் அனுவசியமாய்ச் செலவுசெய்து தரித்திரதிசை அடைகிறார்கள். இதனுல் தூர சம்பந்தம் விர்த்தியாகாமல் போகிறது. உள்ளன்போடு ஆசீர்வதித்து ஒரு கடிதம் போட்டால்

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|

போதும். ஆனுல்மேற்படி சுபகாரியத்தை இருந்து நடத்த பந்துக்கள் இல்லாதவர்களுக்குக்கிட்டின உறவினர் ஒருவ வந்து அக்காரியத்தை நிறைவேற்றுவது அவசியம். தூரதேசத்திலிருப்பவர்கள் நன்னிலையில் இருந்தால் வந்து கண்டுகளிக்கலாம்.

(3) கலியாணத்திற்கு வேண்டிய சமுக்காளம், பன்னீர்ச்சொம்பு, சந்தனக்கும்பா, தாம்பாளம், மனவரையில் போடும் விசுப்பலகை முதலியவைகளும், சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களும் சொற்ப வாடகைக்கு விடப்படுமானுல் அநேகருக்கு சுவாதீனமும் சௌகரியமும் ஏற்படும். தேசாபிமானிகள் இதைக்கவனிக்கவும்.

(4) குட்டரோகம் முதலிய தொத்துவியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் சந்தனம், தாம்பூலம் முதலியவைகளைத் தொடாமல், பகிர்ந்து கொடுக்கிறவர் தானே அவைகளை அவர்களுக்குக் கொடுத்து, பிரத்தியேகமாய் சாதம் அளிப்பதே சீர்.

| | | |
|---|---|---|
| 24. மூன்ருவது மாதத்தில் சாந்தி முகூர்த்தத்திற்காக புரோகிதரைக்கொண்டு நல்ல நாள்பார்த்து டி யார்பாவனை மந்திரத்துடன் டி காரியத்தை நிறைவேற்றுகிறுர். | நற்சந்ததியை உத்தேசித்து சுப வேளையில் மேற்படி காரியத்தை நடத்தவேண்டுமென்பது கருத்து. | பெண்ணின் பெற்றோர்களால் கொடுக்கப்பட்ட சீர் வரிசைகளைப் பெற்று, தம்பதிகள் சுப வேளையில் ஒரு அறையில் தங்கள் இஷ்ட தேவதையை நிறுத்தி, தேங்காய், பழம், பூ |

| | | |
|---|---|---|
| | | முதலியவைகளுடன் தாங்களே ஆராதனை செய்து மேற்படி காரியத்தை முடித்துக்கொள்வதே சீர். |
| 25. சிலர் திருப்பூட்டின மூன்றாம்நாள் ஷெ காரியத்தை நடத்திவிடுகிறார்கள். | | திருப்பூட்டின மூன்றாம் நாளானால் மேற்படி காரியத்திற்காக புதிய ஆடைகள், சீர் முதலியன தேவையில்லை. |

## மரணக் கிரியைகள்.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 50. 1. குழந்தை, பிறந்த 16ம் நாளுக்குள் இறந்துவிட்டால், அதை மயானத்திற்குச் சங்கு நாதத்துடன் தூக்கிக்கொண்டு போய் ஏற்கனவே தயாரித்திருந்த குழியில் வைத்து பால் தெளித்த பின், புதைத்து விட்டு நீராடி‡ வீட்டிற்குத் திரும்புகிறார்கள். | அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் பாதையில் போகும் போது எதிரில் வருகிறவர்களுக்கும் துக்கச் செய்தியை அறிவிக்கும் பொருட்டு ஷை சங்கு நாதம் ஏற்படுத்தினர் போலும். | |
| 2. குழந்தை மேற்படி 16 நாட்களான பிறகு இறந்தால், உறவினருக்கு ஓலை† அனுப்பி மேற்படி காரியத்தை மேற்கூறியபடி செய்து முடிக்கிறார்கள். | | |

| | |
|---|---|
| 3. மாமன் மைத்துனர் முறை யுள்ளவர்கள் துக்கக் காரர்களுக்குச் சாப்பாடு போடுகிருர்கள்;(ரசஞ்சாதம்). | துக்கத்திலுள்ளவர்கள் அன்றைய தினம் தாங்களே சமைத்துச் சாப்பிடுவது வெகு துர்லபம் என்று கருதி, மாமன் மைத்துனர்கள் உணவழிக்கும்படி ஏற்படுத்தினர் போலும். |

‡ துக்கச் செய்தியைக்கேட்டுத் துக்கக்காரரின் துக்கத்தைப் பாகிக்கும்போது முகம் வாட்டமுறுதலால் அதைத் "தீட்டு" என்று கூப்பிட்டு, அதற்குப் பரிகாரமாக நீராடி, அதனுல் அங்கம் முழுவதும் குளிர்ந்து மேற்படி முகவாட்டம் நீங்கி ஒவ்வொருவரும் தன் இயற்கை நிலையை மறுபடியும் அடையும் பொருட்டு இவ்வழக்கம் ஏற்படுத்தினர்போலும்.

† (1). இளவு ஓலை அனுப்பியபோது தூரத்திலுள்ள உறவினர்கள் கட்டாயம்போகவேண்டுமென்று இருப்புப்பாதை மார்க்கமாக வெகுபணம் செலவுசெய்து போகிருர்கள்;இது அனுவசியம். துக்கசமாசாரம் வந்தவுடன் தங்கள் அனுதாபத்தைக் குறித்து ஒருகடிதம் எழுதினுல் போதும்; போவதால் ஒரு பெருங்காரியம் ஆகிவிடுகிறதில்லை. ஆனுல் இறந்த வீட்டில் ஆதரவுக்கு ஜனமே இல்லாவிட்டால் இரண்டொருவர் போகவேண்டியது அவசியம்.

(2). மேற்படி 16ம் நாளுக்கு மேல் ஒருவர் இறந்தால் பந்து ஜன மித்திரர் முதலியவர்களுக்கு இளவு ஓலை அனுப்புவது வழக்கம்.

| தற்கால. நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 4. (1). மூன்று மாதத்திற்குமேல், பையன் பதினறு வருடத்திற்குள்ளாக அல்லது பெண் ருதுவாகிறதற்கு முன் இறந்தால், மேற்படி காரியத்தை மேலே கூறியபடி செய்து முடிக்கிருர்கள் ; | | |
| (2.) இரண்டாம் நாட் காலையில் அப்பம், சர்க்கரை, கூடம், சாம்பிராணி, ஊதுவர்த்தி முதலியவைகளுடன் சென்று, புதைத்த மேடையில் வைத்துப் படைத்து, அவைகளைக் காக்கைக் கிட்டு நீராடி, வீட்டிற்கு வந்து அங்கேவந்தவர்களுடன் துக்கக்காரர்கள்சாப்பிடுகிருர்கள். | துக்கக்காரர்கள் நெருங்கின உறவுடன் கூடிச் சாப்பிடுவதனுல் ஒருவருக் கொருவர் உபசாரம் பண்ணும் வழியில் சற்று துக்க நிவர்த்தியாகு மென்று கருதி போஜனம் ஏற்படுத்தினர் போலும். | மயானம் போய்த் திரும்பி வந்து கொஞ்ச நேரங்கழிந்த பிறகு சுமார் 5 அல்லது 6 கிட்டின உறவினர்களை மாத்திரங் கூப்பிட்டு அவர்களுடன் போஜனஞ் செய்ய வேண்டுமே தவிர, மற்ற உறவு முறையாருடனல்ல. தற்காலம் இதை ஒரு பெரிய விருந்தாக்கி விடுகிருர்கள். துக்கத்தில் விருந்து செய்வது அயுக் |

5. ஒருவன் 16 வயதுக்கு மேல் அல்லது பெண் ருது வான பிறகு இறந்தால், சிலர் வீரகுடியானை அழைத்து பாடைக்குவேண்டிய மூங்கில், கீத்து முதலிய சாமான்களை வாங்கி, அதைத்தயாரிக்கும் படிச் செய்கிறார்கள். அப்பால் அவன் தாரை, சங்கு முதலிய வைகள் ஊதுவான். பின்பு தலைவாயிலில் ஒரு சிறிய நாற்கால் பந்தல் போடுவான்; இதை "எட்டு" செய்த பிறகு எடுத்து விடுவார்கள்.

6. சில இடங்களில் கொள்ளிச்சட்டி, கருப்பங் கொழுத்தாடை முதலியவை களை வாங்கி வந்து, அம்பட்டன் நெருப்புத் தயாரிப்பான்.

தாரை முதலிய சத்தங்கள் அக்கம் பக்கத்திலுள்ள வர்களுக்கும் பாதையில் போகும் பொழுது எதிரில் வருகிற ஜனங்களுக்கும் இச் செய்தியை அறிவிக்கும் பொருட்டு ஏற்பட்டது.

அன்னியர்களுக்கும், யாசகர்களுக்கும் துக்க அறிகுறியாகும்படி ஷை பந்தலைஏற்படுத்தினர்போலும்.

தம். ஆனால் தூரத்திலிருந்து வருகிறவர்கள் அனைவருக்கும் சாப்பாடு போடுவதவசியம்.

50-15-ன் இரண்டாவது பத்தியில் கண்ட சீர்திருத்தப்படி சவவண்டி ஏற்படுத்தினால் பாடை வேண்டியதில்லை.

சவவண்டியேற்பட்டால், கொள்ளிச் சட்டிக்குத் தகுந்த ஒரு சிறிய இருப்புறியை அதில் மாட்டிவிடுவது உசிதம்.

| நற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 7. தாதர்கள் பாட்டுப் பாடி தப்பு, சேகண்டி அடிக்கிறார்கள்.<br>8. பறைத் தப்புகளும் வைக்கப்படுகின்றன;<br>9. சிலர் பசனைக்கோஷ்டியும் வைக்கிறார்கள்.<br>10. பின்னர் ஓர் ஆள் அனுப்பி சவத்திற்கு வேண்டிய கிரியை சாமான்களை † வாங்கி வரும்படிச் செய்கிறார்கள். | | தப்பு, தாரையே போதுமானது; பறைத் தப்பு முதலானவைகள் அனாவசியம். |

† புஷ்பம், சந்தனம், செடிக்குச்சி (ஊதுவர்த்திகள்), கதம்பப்பொடி (வாசனைத்தூள்), சட்டி, கலயம், சந்தனக்குச்சி, பொரி, திரவியப்பொடி, சுருட்டுக்கட்டு, நெருப்புப்பெட்டி, நவதானியம், வஸ்திரம் முழம் 12 (பன்னிரண்டு), எண்ணெய், சீயக்காய் முதலியன.

பெண்களுக்குப் பிரத்தியேகம்:—மஞ்சள், குங்குமம், புடவை.

வயதுசென்றவர்களுக்கு:—நெய்ப்பந்தம்.

பாடையில் நாகப்படம் கட்டப்பட்டால்:—இரண்டு முழ வஸ்திரமும் 5 எலுமிச்சம் பழமும் வாங்க வேண்டும்.

11. பின்பு கொள்ளிவைக்கிறவர்* அவரது பங்காளிகள் இரண்டொருவருடனும், உறவு முறையாருடனும், ஆறு அல்லது கேணிக்குப் போய் நீராடி தப்புத் தாரையுடன் தண்ணீர் கொண்டுவருகிறார்.

முன்னோர்கள் வெகு அருமையாய் இறந்தவரது குமாரர் கொள்ளிவைக்கவேண்டுமென்றும், ஆண் சந்ததி யற்றிறந்தால் பங்காளிகளுக்குள் அடுத்தகரைக்காரர் (இறந்தவருக்கு சொத்து இல்லாவிட்டாலும்) தன் கைப்பணம் போட்டு (அல்லது தானும் தன் சகோதரரும் பொதுவாகச் செலவு செய்து) ஷை துக்ககாரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், சொத்திருக்கும் பட்சத்தில், இறந்தவரின் சமுசாரத்திற்கு ஜீவனாம்சம் கொடுத்து விட்டு ஷை சொத்தைத் தானும் தன் சகோதரர்களும் சமமாய் பாகித்துக் கொள்ளவேண்டுமென்றும், ஓர் பொறுப்பு (Responsibility) ஏற்படுத்தியுள்ளார்கள். அப்படி இல்லாவிடில் தெருக்களில் பிணங்கள் அநாதியாய் அடிக்கடி நாறிக்கிடக்க நேரிடும்.

ஒருவர் சந்ததியற்றிறந்தால் மேற்படியார் சொத்து அவர் மனைவிக்கென்றும், பெண்சந்ததியிருந்தால், மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுத்துவிட்டு மேற்படி சொத்தை மேற்படி பெண்ணும் அதன் சந்ததியும் அனுபவிக்கவேண்டுமென்றும், மேற்படி பெண்ணுக்கும் சந்ததியற்றபோது ஷை சொத்தின்பேரில் அனுபவபாத்தியமென்றும் நமது வழக்கத்தின் மூலக்கருத்துகளை அறியாது தற்காலத்தில் சட்டம் ஏற்படுத்தினார்களே யன்றி, பங்காளிகள் சொத்து இல்லாவிட்டாலும், தங்கள் சொந்தச் செலவில் துக்ககாரியத்தைப் பூர்த்தி செய்யும் பாத்தியத்தை ரத்து செய்யவில்லை; அதுவிஷயத்தைப் பற்றி அவர்கள் கவனிக்கவில்லை போலும்.

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| 12. சவம், பங்காளிகளால் குளிப்பாட்டப்படுகிறது. பிறகு திருமண் அல்லது திருநீறு சாற்றி, (முத்திரைதானம் * பெற்றிருந்தாலதை இறக்கி) கொள்ளிவைக்கிறவரைக்கொண்டு நவதானியங் கலந்த எரு முட்டையைக் கையாலேந்தி, சவத்தை மூன்றுதரஞ் சுற்றிவந்து சவத்தின் அருகேயுள்ள சுவற்றில்தட்டி அதற்குத் தண்ணீர் ஒவ்வொருவேளை தெளிக்கிறார்கள். | எருமுட்டையைச் (விராட்டியைச்) சுவற்றில் தட்டுவது ஏனென்றால், அதிலுள்ள நவதானியம் நன்றாய் முளைத்து செழித்தோங்குமானால் இறந்தவர் மறுமையில் நன்றாயிருப்பதாக அனுமானம் போலும். | மூ-க:— இது விவரம் இதன் 318 முதல் 326வது ஈருகவுள்ள பத்திகளில் காண்க. |

| | |
|---|---|
| 13. வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம் முதலியவைகளை சவத்தின் கையில் வைத்தெடுத்து வீட்டுக்குள் வைத்துக்கொள்ளுகிறார்கள். | இலக்ஷ்மியை (சவத்தோடு போகாவண்ணம்) நிறுத்திக்கொள்வதாக பாவனை போலும். |
| 14. கொள்ளி வைக்கிறவர் கோடி வஸ்திரம் போடுகிறார். மங்கிலியப் பெண் அல்லது விதவையானால் பிறந்த வீட்டிலிருந்து கோடி போடுவதுண்டு. | அன்பின் அறிகுறி. |
| 15. (1) வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இடலைக்கண் (வாழை) அல்லது கரும்புத்தோகை சில சமயங்களில் கொடுக்கப்படுகிறது. | காலை 10 மணிக்குமேல் மாலை 5 மணிக்குள்ளாகப் பிரேதத்தை எடுக்கும்படி நேரிட்டபோது (துக்ககாரியத்திற்கு வந்த ஜனங்கள் குடைபிடிக்கமாட்டார்களாதலால்) உஷ்ணத்தைச்சற்று தணிக்கும்பொருட்டு இடலைக்கண் அல்லது கருப்பந் தோகையைக் கையில் பிடித்துக் கொள்ளும்படி ஏற்படுத்தினர் போலும். |

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| (2) குளிகைகாலம் நீக்கி தப்புத்தாரை முதலிய கொட்டுடனும் சில சமயம் வேட்டுடனும், சவத்தைப் பாடையில்கட்டி மாமன் மைத்துனர் முறையுள்ளவர்கள் தூக்குகிறார்கள். | வேட்டுப் போடுவது வெகு கீர்த்திமானுகி பலராலும் புகழப்பட்டவருக்கே உரித்தானது; ஏனெனில், இச்சத்தத்தால் இறந்தவர் யார் என்று பலர் கேட்பதின் மூலமாய் அவருடைய நற்குணம் முதலியவைகள் வெளியாகும். அதைக்கேட்டுப் பலரும் விருத்தியடைய ஏதுவாகும். (அப்படிக்கில்லாது அபகீர்த்தியுள்ளவர்களுக்குச் செய்வதால் அவர்களது பழய துர்ச்செய்கைகளெல்லாம் வெளியாகி நிந்தனைக்கிடமாகும். ஆகையால் அபகீர்த்திக் காரர்களுக்கு இது உசிதமல்ல). | தற்காலத்தில் சர்க்கார் உத்தியோகம், வியாபாரம் முதலிய பலதொழில்கள் மூலமாகப் பெருஞ்செல்வம் படைத்த மாமன் மைத்துனர்கள் பிரேதத்தைத் தூக்குவது அகௌரவமென்று நினைத்து ஒதுங்கிவிடுகிறார்கள். திடீரென வேறு ஆள் பிடிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் பிரேத வண்டியொன்று உண்டுபண்ணி, மாடுபூட்டி ஓட்டுவது உத்தமம்; இது எளியவர் பணக்காரர் எல்லோருக்கும் சௌகரியம்.<br><br>மூ-கு:—மயானம் தூரமுள்ளவர்களுக்கு இது அத்தியாவசியம். |

| | |
|---|---|
| 16. நடைபாவாடை விரிக்கிறார்கள். | காலை 10 மணிக்குமேல் மாலை 4 மணிக்குள்ளாகப் பிரேதத்தை மயானத்திற்கு எடுத்துக்கொண்டு போகும்படி நேரிட்டால், முக்கியமாக துக்கக்காரர்கள் காலில் செருப்பு முதலியவை யில்லாமல் நடந்துபோவதனால் ஏற்படும் உஷ்ண உபாதையை தணிக்கும் பொருட்டு இவ்வழக்கம் உண்டு பண்ணினர் போலும். இது மேலே குறித்தநேரத்திற்கு உரித்தானதே யன்றி இளநேரத்திலும் இராக் காலத்திலும் அனுவசியம். |
| 17. கொள்ளிக்குப் பாத்தியக்காரர் கொள்ளிச்சட்டித் தூக்குகிறார். | |
| 18. மயானஞ் சென்றதும் கொள்ளி வைக்கிறவர் மீசை யெடுத்துச் சவரம்* செய்வித்துக்கொண்டு நீராடின பிறகு பங்காளி முதலியவர்கள் எருமுட்டையை அல்லது | துக்கத்திலுள்ளவர்கள் கருமாந்திரத்திற்கு முன் ஷை துக்கத்தால் சவரஞ் செய்யாரென்றும், துக்க அறிகுறியாக மீசை எடுக்கவேண்டுமென்றும் மேற்படி வழக்கம் ஏற்படுத்தினர் போலும். |

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| விறகைத் தகனமேடையிலடுக்கிவித்து சவத்தை அதன் மேல் வைக்கிருர்கள். | | |
| 19. சவத்தின் வாய்க்கு அரிசி போட்டு, சங்கு ஊதி குடமுடைத்து, பிணத்தைத் தான் பாராது கொள்ளி வைத்து ஷெயார்செல்லுகிருர். | சவத்திற்குத் தீவைப்பது அத்தியாவசியமாயினும் தீவைக்க மனம் அஞ்சுமென்று கருதி முதலில் வாய்க்கரிசியிட்டு பிறகு பாராமல் தீவைத்து செல்லும்படி நியமித்தனர்போலும். இதற்கிணங்க பட்டினத்தடிகளும் அடியில் வருமாறு கூறியதை ஊகித்துணர்க;<br>" அரிசியோ நானிடுவே<br>ஞுத்தாடனக்கு<br>வரிசையிட்டுப் பார்த்து<br>மகிழாமல்-உருசியுள்ள<br>தேனேயமிர்தமே<br>செல்வத்திரவியமே<br>மானேயெனவழைத்த<br>வாய்க்கு. | |
| மு-க:—சிலர் சவத்தைப் புதைத்து அதன் பேரில் ஒரு சிறிய கட்டடம் கட்டுகிருர்கள். அதற்குச் சமாதி* யென்று பெயர். | | |

20. பின்பு வெட்டியான் விறகு அல்லது எருமுட்டை அடுக்கி நிரம்பத் தீவைத்து மண்குழைத்து மூட்டம் போட்டு துக்கக்காரரின் உத்திரவின்பேரில் காளவாய் திறந்துவிடுகிறான்.

21. தொழிலாளிகளுக்கு கூலிமுதலிய சுதந்தரங் கொடுத்தனுப்பிவிட்டு நீராடுகிறார்கள் †.

அள்ளியிடுவ தரிசியோ
தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ
கூசாமன்—மெள்ள
முகமேன் முகம்வைத்து
முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த
வாய்க்கு.''

பிணம் வேகாவிட்டால் மறுபடியும் எருமுட்டையிட்டு வேகவைப்பதற்காக பட்டினங்களில் வெட்டியானை ஏற்படுத்தினார்கள் போலும். (கிராமங்களில் வெட்டியான் இல்லாமல் போனால் துக்கக்காரர்கள் தாங்களே அருகேயிருந்து ஷை காரியத்தை முடிப்பதுண்டு).

† பிரேதத்தின் தகனகிரியை முடிந்தபிறகு ஜனங்கள் நீராடுகிறார்கள். சிலர் வேஷ்டியைத் துவைத்தபின் தலைமுழுகுகிறார்கள். இதனால் சில சமயம் அற்பமனஸ்தாபம் இரண்டொருவருக்கு

(தந்காலநடைத் தொடர்ச்சி).

22. அதிகாலையில் இறந்தவரின் சவத்தை மாலையிலெடுக்கும்படி நேரிட்டால், உறவினர்கள் பட்டினியாயிருப்பதை உத்தேசித்து, ஆற்றில் நீராடினதும் பழம், சர்க்கரை முதலியவைகளை சிலர் கொடுக்கிறார்கள்.

23. துக்கக்காரர் வீட்டில், வந்த உறவுமுறைக்குச் சிற்றுண்டி (மொச்சைக்கொட்டை அல்லது அவல், பொட்டுக்கடலை முதலியவைகள்) கொடுக்கிறார்கள்.

மூ-க:—சிரம பரிகாரமாக ஷை சிற்றுண்டியை வழங்கினர்போலும்.

24. மாமன் மைத்துனர்கள் துக்கக்காரர்களுக்கு உணவளிக்கிறார்கள்.

## காடாத்து.

(காடு + ஆத்து = காடாத்து; அதாவது, சுடும் அஸ்திகளை நீரிட்டாற்றல்).

25. இரண்டாம் நாட்காலையில் எலுமிச்சம்பழம், இளநீர், கரும்பு, சந்தனத்திரவியம், நவதானியம், பால், அவல்கடலை, தேங்காய், பழம், சூடஞ் சாம்பிராணி, ஊதுவர்த்தி முதலியவைகளுடன் (குளிகை காலம் நீக்கி) மயானத்திற்குப் போகிறார்கள். அவ்விடத்தில் சிலர் சேர்ந்து தீயணைத்து மூட்டம் பிரித்து எலும்புகளைப் பொருக்கித் தலைமாட்டில் குவித்து விடுகிறார்கள். கொள்ளிவைத்தவர் நீராடின பிறகு எலுமிச்சம்பழச்சார், கருப்பஞ்சார், இளநீர் முதலியவைகளை ஷை அஸ்தியின்மேல் ஊற்றுகிறார்.

மூ-க:—அவைகளை ஆற்றில் சுத்திகரித்து கொட்டினால் துர் நாற்றத்திற்கு இடமில்லாமலிருக்குமென்பது கருத்து போலும்.

26. பின்பு தேங்காய், பழம் முதலியவைகள் வைத்துப் படைத்து வீரகுடியான், வெட்டியான் முதலியவர்களுக்கு அவைகளைக் கொடுக்கிறார்கள்;

27. ஷை எலும்புகளில் ஒன்றை எடுத்து (அம்பட்டனால் வாங்கிவரப்பட்ட) ஒரு பச்சைக்கலயத்திற்குள் (சூளையிலிடாத கலயம்) மெதுவாக வைக்கிறார்கள்.

ஙூ-க:—பச்சைக் கலயம் தண்ணீரில் போட்டபிறகு பிறர்காலில் குத்தாமலும் மேடுண்டாகாமலும் மண்ணோடு மண்ணாய் கரைந்து போகுமென்பது கருத்து.

28. பிறகு சங்குநாதத்துடன் கொள்ளிவைத்தவர் ஷை எலும்புகள் அடங்கிய கலயத்தை சமுத்திரம் அல்லது ஆறு முதலியவைகளில் போட்டு நீராடி உறவுமுறையுடன் வீட்டிற்குத் திரும்புகிறார்.

29. வீடுவரையிலும் வந்த உறவுமுறைக்குச் (ரசஞ்சாதம், அகத்திக்கீரையுடன்) சாப்பாடு செய்கிறார்கள்.

ஙூ-க:—ஆற்றிலிருந்து வீட்டிற்கு வந்த உறவினர்களுக்குச் (அதாவது 10 அல்லது 15 பேர்களுக்குச்) சொற்பச் செலவுடன் சாப்பாடு செய்தால் போதும். **சமீபத்தில் வசித்தும் கிட்டின உறவினால்லாதவர்களும் சாப்பிடவேண்டுமென்பது உசிதமல்ல.**

---

சேரிடுகிறது. ஒரு மையொத்துங் கடிதாசித் துண்டை (A piece of blotting paper) ஒருதரம் மையில் முழுக்க நனைத்தபிறகு உடனே மறுபடியும் அது மையை இழுக்காது. அதுபோலமுதலில் தலைமுழுகிய பிறகு வேஷ்டியைத் துவைப்பதினால் அசுத்தத்திற்கு இடமில்லை. துவைத்துக் கரையேறினபிறகு தேகத்தை ஈரத்துண்டால் ஒருதரம் துவட்டிவிட்டால் அது சுத்தமாகிவிடும். மனஸ்தாபத்திற்கும் இடமில்லை; துவைத்தபின் குளிக்கிறவர்களைக் கோபிக்கவும் வேண்டியதில்லை.

30. (1). சவத்துக்குச் செய்யவேண்டிய கிரியைகள் இவ்வளவுதான்; பட்டினத்தடிகளும்,

"வீற்றிருந்தா ளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்று வெந்துநீரானுள்—பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்களே தென்றிரங்காம
லெல்லாஞ் சிவமயமேயாம்," என்றூர்.

(2). சிலர் அது ஞானிகளுக்கென்றும் நமக்கல்லவென்றுஞ் சொல்லுகிறுர்கள்; அது சுத்தப் பிசகு. எனெனில், இல்லந்துறந்து, துறவறம் பூண்டபிறகும் தாயார் தகனகிரியையைத் தானே செய்ய முயன்றபோது உறவுமுறையோர் சந்நியாசியானவர் செய்யக்கூடாதென்று மறுக்க, இவர் பிடிவாதமாய்த் தானே செய்யவேண்டுமென்று சொல்ல, அதனுல் இவருக்கும் அவர்களுக்கும் சச்சரவு உண்டாகி இவர் அவர்களைக் கடைசியில் துறத்திவிட்டபிறகு, அவர்கள் கட்டுப்பாட்டால் இவருக்கு விறகும் தீயும் கிடைக்கவில்லை; அதன்பேரில் இவர் வாழை மரங்களைக் கொண்டுவந்து அடுக்கி அதன்மேல் தன் தாயைத் தூக்கிவைத்து,

" முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே,"

என்று பாடிய உடனே தீப்பற்றியதாம்.

(3). தான் அங்கேயேயிருந்து எரித்து மூட்டம்பிரித்து அஸ்தியை எடுத்துச்முத்திரத்தில் கொட்டினபிறகு, நீராடி மணலைக்குவித்துச்சுண்டலாக்கி அங்குவந்திருந்த உறவுமுறையாரைக் கூப்பிட்டு நீராடியபின் சுண்டலை ஆளுக்கொருகை எடுத்துப்போகும்படிச் சொன்னதாகக் கூறப்படுகிறது.

(4). கௌபீனமின்றியும், திருவோடின்றியும், முற்றுந்துறந்த இப்பெருமான் தாயார்பால்
௭ அளவற்ற அன்புகூர்ந்து தாய்க்குச் செய்யவேண்டிய கடமையைத் தானே செய்யவேண்டுமென்று உறவுமுறையோரையும் தள்ளி வெகு சிரத்தையுடன் இவ்வளவுதூரம் கிரியை முதலியவைகள் நடத்தினவர் எட்டு, கருமாந்தரம் முதலியவைகள் தாய்க்குப் பிரயோஜனப்படுமாயின் அவைகளைச் செய்யாமலிரார். இனிச்செய்யுங் கருமங்கள் தாய்க்கு யாதொரு சம்பந்தமுமில்லை என்று கருதி விட்டதேயன்றி வேறன்று. அவரைவிட நாம் தெரிந்தவர்களல்ல; ஆகையால், இனிச்செய்யுங் கருமங்கள் இறந்தவருக்கு யாதொரு பிரயோஜனமில்லையென்றும், ஷையாரைச் சேர்ந்தவர்களுடைய துக்கத்தைப் படிப்படியாய் நிவர்த்திக்கும்பொருட்டும், தூரத்திலுள்ளவர்கள் வந்து கண்டுகொள்வதற்கும், அதுவும் 16-ம் நாள் முடிவுபெறும்படி கருமாந்தரமென்று ஏற்படுத்தப்பட்டதென்றறிக.

## எட்டு.

எட்டு. 31. (1). எட்டு என்ற பெயராலேயே இது எட்டாம் நாள் செய்யப்படுங் காரியமென்று விளங்கும். ஷை காரியத்தை துக்கக்காரரின் சௌகரியத்தை உத்தேசித்து மூன்றாம் நாள் வைத்துக்கொண்டார்கள். அன்றையதினம் ஷை காரியத்தை உறவினர்களுக்குத் தெரிவிக்கிறார்கள்.

மு-க:—கிட்டின உறவினர்களுக்கு மாத்திரஞ்சொல்லி மிகவும் சொற்பச்செலவுடன் இதை முடிக்க வேண்டும்.

(2). மேற்படி யார்கள் கொண்டு வருகிற தேங்காய், பழம் முதலியவைகளின் பெரும்பாகத்தை எடுத்துக்கொண்டு துக்கக்காரர்கள் சுண்டல் அல்லது பொரி, அவல், கடலை முதலியவைகளை அவர்களுக்குக் கொடுத்தனுப்பியபின், இறந்தவரைக் குறித்து பலவகைப் பழங்களுடன் சாதம் வைத்துப் படைக்கிறார்கள்.

| தற்கால நடை. | மூதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| (3). கிட்டின உறவினர்களுக்கும் துக்கக்காரர்களுக்கும் படைத்த பதார்த்தங்களைப் பகிர்ந்து கொடுத்த பின் ஷை யார்கள் மிளகுபால் தேய்த்துக்கொண்டு இறந்தவிடத்தருகே தட்டி இருக்கிற எரு முட்டையைப் பெயர்த்தெடுத்து ஆற்றில் எறிந்துவிட்டு, நீராடிவீடுவந்து பருப்புக்குழம்பு, ரசம், மோர், இரண்டு மூன்று காய் கறிகளுடன் சாதம் சாப்பிட்டவுடனே வெற்றிலைப் பாக்கு அளிக்கிறார்கள். | விசனத்தால் உண்டான (துக்கக்காரருடைய) உஷ்ணத்தைத் தணிக்கும் பொருட்டு மிளகுபால் தேய்த்து நீராடும் படிக்கும், சற்று சுகமாகச் சாப்பிடும் பொருட்டு பல சுவைப் பதார்த்தங்களை சமைத்து அருந்தும் படிக்கும், இவ்வழக்கம் ஏற்படுத்தினர் போலும். | மு-க :—(1). துக்கக்காரருக்கு மேற்படி பதார்த்தங்களை முதலில் பகிர்ந்துகொடுத்து, அவர் மிளகுபால் தேய்த்தபிறகு மற்றவர்கள், தேய்த்துக்கொண்டும், நீராடியபின் மேற்படியாருடன் சாப்பிடுவதே முறை. (2). சிலர் ஷை காரியத்தைக் காடாத்தன்றைய தினம் வைத்துக் கொள்ளுகிறார்கள். இது உசிதமல்ல; ஏனெனில் இறந்தவரின் அஸ்திகளை எடுத்து ஆற்றில் போட்ட அன்றைய தினமே நல்லுணவருந்தி வெற்றிலைப்பாக்குப்போடுவது முறையன்று. |

## கருமாந்தரம் (கரும முடிவு).
## (தற்கால நடைத்தொடர்ச்சி).

32. பதினாறும் நாளுக்கு முன்பதாக ஒரு நாளில் வீட்டை வெள்ளையடித்து சுத்திகரிக்கிறார்கள்.

33. பதினைந்தாம் நாள் இரவில் பெண்டுகள் பலகாரம், பழம் முதலிய பலவகைப் பதார்த்தங்களுடன் படைத்து இறந்தவரை நினைத்து அழுகிறார்கள்.

மு—க:—கிட்டின உறவினர்களுக்கு மாத்திரஞ் சொல்லி சொற்பச் செலவுடன் மேற்படி காரியத்தை நிறைவேற்றவேண்டும்.

34. புருஷன் இறந்தால் பெண்ஜாதியின் தாலியை 15-ம் நாள் இரவு வாங்கிய பின் அதிகாலையில் தாரைச் சத்தத்துடன் ஷியார் ஆற்றிற்குப் போய்கீராடி அருகிலுள்ள கோவிலுக்குச் சென்று அர்ச்சனைசெய்து வீட்டிற்குத் திரும்புகிறார்;

மு—க:—(1). ஷியார் கர்ப்பிணி யாயிருந்தால் குழந்தை பிறந்து வீட்டிற்கு அழைத்த பின் ஷியாரின் தாலியை வாங்குவது வழக்கம்.

(2). புருஷன் இறந்த அன்றையதினம் பெண்ணின் சகோதரர்கள், கோடிச் சீலைக்குப் பதிலாய் வண்ணாத்தி மாத்து வாங்கிப் பெண்ணுக்குப் போட்டு, எட்டு அன்றையதினம் ஒரு கோடிச்சேலையும், தாலி வாங்கும்பொழுது ஒரு கோடிச்சேலையும் கொடுப்பது வழக்கம்.

| | | |
|---|---|---|
| 35. ஷி 15-ம் நாளிரவு கல்லூன்றி, 16-ம் நாள் காலையில் வீரகுடியான் தாரைஊத, உறவு முறையாருடன் கிரியைகளுக்கு வேண்டிய, கலயம், நூல், பல நிறப்பொடிகள், மாவிலை, சமத்துக்குச்சி, வாழைத்தண்டு முதலிய | | 16-ம் நாள் காலையில் எள்ளு, தேங்காய், பழம், பூ, சூடஞ் சாம்பிராணி, சர்க்கரை, மஞ்சத்தூள் முதலியவைகளை யெடுத்துக்கொண்டு உறவினருடன் தாரை சத்தத்தோடு ஆறு அல்லது கேணிக்குப் புறப்பட்டுப் போய் கொள்ளிவைத்தவர் |

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
| --- | --- | --- |
| சாமான்களும் தானத்திற்கு வேண்டிய வஸ்திரம், குடை, பாதரட்சை, உத்தரணி (கரண்டி), பஞ்சபாத்திரம்முதலியவைகளுடன் ஆற்றங்கரை அல்லது குளக்கரைக்குச் சென்று வீரகுடியானுல் கிரியை மண்டபம் ஏற்படுத்துகிறார்கள்;<br>36. புரோகிதரைக் கொண்டு அப்பொழுது இறந்தவரைக்குறித்து சிறிய வாழைத்தண்டு ஒன்றைப் பாவனை மந்திரத்துடன் கொளுத்தியபிறகு அதன்மேல் நீரிட்டு ஆற்றி முன் அஸ்திக்குச் செய்ததுபோல் எலுமிச்சம் பழச்சார், கருப்பஞ் | | நீராடி திருமண் அல்லது திருநீறு அணிந்து (பரம்பரைப் புரோகிதர் அன்னியில்) தனது இஷ்டதேவதையைக் கோரி, அதை நீர் கலந்த மஞ்சள் பொடியால் நிரூபித்து, அதன்முன் தானே தேங்காயுடைத்து தூப தீபத்துடன் ஆராதனை செய்து இறந்தவரை நினைத்து, தானே வலதுகையில் எள்ளை வைத்துக்கொண்டு "கிருஷ்ணார்ப்பணம்" அல்லது "எல்லாஞ் சிவமயமேயாம்" அல்லது "ஈசுவரார்ப்பணம்" என்று சொல்லி இடது கையால் நீர் வார்க்கவேண்டியது.<br>மறுபடியும் நீராடிச் சுவாமியை நிரூபித்து தேங்காய் திருவல் பண்ணி அர்ச்சனை செய்து |

| | |
|---|---|
| சார் முதலியவைகள் சமர்ப்பித்து சாதம்முதலியவைகள் வைத்துப் படைத்து மறுபடியும் மண்டபத்தில் கிரியைகள் செய்கிறார்கள். | அங்கு வந்த உறவினர் முதலியோருக்குக் கொடுக்கவேண்டும். அப்பால் மாமன் மைத்துனர்கள் கோடி வேஷ்டிகளை கொள்ளி வைத்தவருக்கும் அவருடைய |

(சீர்திருத்தத் தொடர்ச்சி).

சகோதரர்களுக்கும் (மாத்திரம்) கொடுத்தவுடன் சந்தனம் தாம்பூலாதி சகலருக்கும் அளித்து வீட்டிற்குத் திரும்புவதே சீர்.

குழந்தைகளைப் பூச்சாண்டியென்று நன்னோக்கத்துடன் பயமுறுத்துவதுபோல் "கருட புராணத்தில் * " கண்ட விஷயங்களை நம் பாமர ஜனங்கள் படித்து அச்சமுற்று பிறருக்குத் தீங்கிழைக்காவண்ணம் கற்பனையாக விவேகிகள் எழுதினார்களே யன்றி அவையனைத்தும் யதார்த்தமல்ல.

அப்படிக்கில்லாது ஒருவன் தான் செய்த தீவினைப்பயனாக இறந்த பின் எமதூதர்களால் இம்சை யடைவதென்பதைப் புரோகிதர் தான் செய்யும் மந்திர தந்திரத்தாலும் பிண்டப் பிரசாதத்தாலும் நிவர்த்திப்பாரென்றால், நம்மவர்கள் ஒவ்வொருவரும் இவ்வுலகில் அநேகருக்குப் பலவித இம்சைகள் செய்து வேண்டிய கொள்ளை யடித்து மிகு தனம் சம்பாதித்த பின், இலகுவாக புரோகிதருக்குத்தக்க பூதானம், கோதானம், சுவர்ண தானம் செய்து அவர்களது மந்திர தந்திரம் முதலியவைகளால் மறுமையில் எவ்வித இம்சையின்றி சுவர்க்கலோகம் அடையலாமே! இதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான சாதன சதுட்டயங்கள் வேண்டியதில்லையே! **"கேடுவான் கேடு நினைப்பான்," "கேடு வரும் பின்னே மதிகேட்டு வரும் முன்னே"** என்ற பழமொழிகளுக்கிணங்க, ஒருவன் பிறருக்குக் கெடுதல் நினைத்த பொழுதே தன் மனம் கெட்டுத் துக்கத்தில் ஆழ்கிறான்; இதை

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|

(சீர்திருத்தத் தொடர்ச்சி).

(மேற்படியான் இறந்த பின்) புரோகிதரின் பாவனை மந்திரம் எங்ஙனம் பரிகரிக்கும்? இதன் பேதமையை என்னென்று எடுத்துரைப்பது?

"செத்தபின் மோக்கமென வூதடா காளம்
சேர்ந்தார் பொருட்கவர வூதடா காளம்,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகரவர்கள் தான் இயற்றிய "அநுபவாநந்த தீபிகை" இரண்டாந்திருமுறையில் கூறியதை நன்குணர்க.

மேலும், இது விவரம் இதன் 50—43-வது இலக்கம், சீர்திருத்தத் தலைப்பின் கீழ்கண்ட பத்திகளிலும், 293 முதல் 302 ஈருகவுள்ள பத்திகளிலும் காண்க.

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம். | சீர்திருத்தம். |
|---|---|---|
| 37. தானங்கள் கொடுத்தானபின் கடைசியாக எள்ளுந்தண்ணீர் இறைக்கிறார்கள். | "எள்ளுக்கு ளெண்ணெய்போ<br>லெங்கும் வியாபகமா<br>யுள்ள வொன்றை யுள்ளபடி<br>யோருநா ளெந்நாளோ,"<br>என்று தாயுமானவர் கூறியபடி எள்ளுக்குள் எண்ணெய் இருப்பது போல் கடவுள் எங்கும் உளதாதலால் இறந்தவர் கடவுளை விட்டுத் | |

38. (1). துக்கக்காரர் கடையாய் மறுபடியும் ஸ்நானபுண்ணியதானஞ் செய்தபின்பு சோமஞ்சோடு மாமன் மைத்துனர்கள் கொண்டுவந்து கொடுக்க அதைப் புரோகிதர் பாவனை மந்திரம் படித்து கொள்ளி வைத்தவருக்கும் அவர் பங்காளிகளுக்கும் கொடுக்கிறார். சிலர் ஷெ

தனித்து வேருக ஓரிடத்தில் நசிக்க இடமில்லையென்று கருதி அவரைச் சேர்ந்தார் **மனம் நேர்ச்சி அடையும்படி** ஏற்படுத்தப் பட்டதோர் சாதனம். (இளவு ஓலையிலும் வைகுண்டப்பதவி யடைந்தாரென்றும், சிவலோகப் பதவி யடைந்தாரென்றும் ஜனங்கள் சகசமாய் எழுதுவதை அடிக்கடி காணலாம்).

சற்றேறக்குறைய 50 வருடங்களுக்குமுன் பங்காளிகளுக்குள் ஒருவருக்கொருவர் மிக அன்பு பாராட்டி துக்கத்தைப் பாகித்தாராகையால் மேற்படி துக்கநிவர்த்தி செய்யும் பொருட்டு அவரவர் மாமன் மைத்துனர் முறையே அவரவருக்குச்சோமஞ்சோடு எடுத்துக் கொடுக்கிறது வழக்கம்.

தற்காலத்தில் அதிக தரித்திரத்தால் பங்காளிகளுள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம், சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு, அன்பற்றிருக்கிறார்களாகையால், அவர்கள் முன்போல் துக்கத்தைப் பாகிப்பதில்லை; மேற்படி காரணத்தினால், ஷெ யார்களுக்குக் கோடி ஆடைகள் தேவையில்லை. கொள்ளி வைத்தவருக்கும் அவர் சகோதரர்களுக்கும்

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| வஸ்திரங்களை அன்றிரவில் கொடுப்பதுண்டு. | | (மாத்திரம்) மாமன் மைத்துனர்கள் கோடி ஆடைகள் கட்டினால் போதும். |
| (2). பிறகு மொய் போடுவதுண்டு; ஷை தினத்தில் மொய் போடாதார் அடுத்த நாள் காலையில் கொடுப்பதுவுமுண்டு. | மரணம் அகஸ்மாத்தாய் சம்பவிக்கிற படியால் துக்கக்காரருக்கு ஏற்படும் செலவின் பளுவை ஒருவாறு குறைக்கும் பொருட்டு இவ்வழக்கம் உண்டு பண்ணினர் போலும். | ஜனங்களுக்கு, மொய்போடுவதினால் தற்காலத்தில் பலஇம்சைகள் நேரிடுவதால், அதை நிறுத்துவது உத்தமம். |
| 39. பின்பு ஓர் கோவிலுக்குச்சென்று அர்ச்சனை செய்கிறார்கள். | | கருமாந்தரம் பண்ணினபிறகு துக்கக்காரர் கோவிலுக்குச் சென்று (பர்ம்பரைப் பிராமண அர்ச்சகர் உதவியின்றி) தானே தேங்காயுடைத்து அர்ச்சனை பண்ணவும்; தானே உடைக்கிறதற்கு கோவிலில் இடையூறு நேரிடில், தனது வீட்டிலேயே |

40. வந்த உறவுமுறைக்கு நல்லுணவு அளிக்கிறார்கள். சிலர் பிறஜாதி மனிதர்களுக்காகப் பாம்பரைப் பிராமணர்களை சமையற் காரர்களாக* நியமித்து ஒரு தனிச்சாலையில் சமைத்து அமுதளிக்கிறார்கள்.

சிரமபரிகாரம்.

தான் கோரிய தெய்வத்தை நிருத்தி பூசை செய்துகொள்ளவும்.

மு-கு :—கருமாந்தரத்திற்கு முன் துக்கக்காரர்கள் மற்றொரு இளவுக்குப்போகக்கூடாதென்ற ஒரு வழக்கம் இருக்கிறது. இது மிக அவசியம்; எனெனில், ஏற்கனவே துக்கமாயிருப்பவர் மற்றொரு துக்கத்தை பாகிப்பது அயுக்தம்.

சமையற்காரர்களாக நம்மவர்களை நியமித்து ஷை காரியத்தை நிறைவேற்றவேண்டும். இது விவரம் 338 முதல் 341 ஈருகவுள்ள பத்திகளில் காண்க.

மு-கு :—ஷை கிரியை காலத்தில் வந்திருந்த பந்துக்கள் சினேகிதர்கள் முதலானவர்கள் தான் துக்கக்காரர் வீட்டில்

| தற்கால நடை. | முதாக்களின் நோக்கம் (ஏதாவதிருந்தால்). | சீர்திருத்தம் (ஏதாவதிருந்தால்). |
|---|---|---|
| 41. அன்றிரவு தங்கள் குல தெய்வத்தைக் கும்பிடுகிறார்கள். | | (தங்கள்சிரமபரிகாரமாக) சாதம் சாப்பிடுவது அத்தியாவசியம்; அப்படிக்கில்லாமல் சிலர் தங்கள் சொந்தவேலைகளையெல்லாம் முடித்துவிட்டு சாவகாசமாய் அவ்விடம்வந்து நீராடிமேற்படி காரியத்திற்கு வந்தவர்கள்போல் நடித்து, துக்கக்காரர் வீட்டில் புகுந்துண்ணுவது பந்துக்களுக்கழகல்ல; யாசகர்களுக்கே அழகாம். |
| 42. மறுநாள் அல்லது தங்களுக்குச் சௌகரியமாயுள்ள ஒரு நாளில் துக்கக்காரருக்கு மாமன் மைத்துனர்கள் அப்பியங்கனஞ் செய்வித்து நல்லுணவளிக்கிறார்கள். | துக்கம் நேரிடுவதற்கு முன் இருந்த பழைய நிலையை துக்கக்காரர் மறுபடியும் அடையும் படிக்குச் செய்கிறதோர் உபாயம். | |
| | **திதி.** | |
| 43. (1). வருஷத்திற்கொருமுறை, இறந்த திதிக்கு முதல் நாள் விரதமிருந்து, அந்தத் திதியில், புரோகிதர் | பெற்றோர், மூதாதை முதலியவர்களுக்கு, நன்றி பாராட்டுவதற்கும், அவர்களுடைய நற்குண முதலியவைகளைப்பற்றி நினைக்கவும், | பெற்றோர்களின் அல்லது மூதாதைகளின் இறந்த திதி நாளில் அவர்களைப் பூசிப்பது உசிதமல்ல; ஷியார்கள் பிறந்த |

யாவனே மந்திரம் படித்து, தானந் தர்மம் செய்தபிறகு சகலரும் சாப்பிடுவது வழக்கம். (தலைத்திதிக்கு மாத்திரம் உறவினர்களை அழைப்பதுண்டு).

(2). மாளைய அமாவாசியில் பிதுர்களுக்குத் தர்ப்பணம் செய்கிறார்கள்.

பேசவும் சமயம் ஏற்பட்டு அதன் மூலமாய் நாமும் நம் குழந்தைகளும் படிப்படியாய் அப்படி நடக்க முயலுவதற்கும் ஏதுவுண்டாகுமென்பது கருத்து.

திதி நாளே சிறப்புற்றது. (நம் பெரியோர்களாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீ விநாயகர் முதலானவர்களின் பிறந்த திதி, நட்சத்திரங்களில் ஷெயார்கள் பூசிக்கப்படுகிறார்களென்பது சகலரும் தெரிந்த விஷயம்).

(சீர்திருத்தத் தொடர்ச்சி).

ஷை தினத்தில் சக்திக்குத்தக்கபடி நம்மைச்சேர்ந்த உறவு முறைக்கும் எக்குலத்தவராயினும் பஞ்சேந்திரியந் துறந்த யோகிகள், ஞானிகள் அகப்படுவார்களாயின் அவர்களுக்கும் இன்னும் சம்பாதிக்க சக்தியற்ற பரம ஏழைகளுக்கும் தாய் தகப்பனற்ற ஏழைப்பிள்ளைகளுக்கும் (தலைத்திதிக்கு மாத்திரம் வஸ்திரம், புஸ்தகம் முதலியவைகள் இலவசமாகக் கொடுத்து) நமது மூதாதைகள் பேரால் கூடிய வரையில் நல்லுணவு அளித்துச் சந்தோஷமடையவேண்டும்.

மேற்படி நாள் திதியைக் குறித்துவைத்து அப்படிச் செய்துகொள்ள சக்தியற்றவர்கள் புரட்டாசி மாதம் மாளைய அமாவாசி யன்றைய தினம் வருடத்திற் கொருமுறை தங்களுடைய மாதா பிதாக்களை நினைத்து மேற்சொல்லியபடிச் செய்தால் போதுமானது; தவிர, மற்ற விஷயங்கள்

வீண்மயக்கம். நாம் தற்காலம் புரோகிதரைக்கொண்டு மேற்படி காரியத்தை நிறைவேற்றுவதால் இறந்தவருக்குப் பயனுண்டெனின், அது எப்படியாகும்?

கரும சாஸ்திரப்பிரகாரம் இறந்தவர் தனது ஊழ்வினைக்குத்தக்கபடி மறு ஜனனமெடுத்து இன்ப துன்பங்களை அனுபவிக்கிறாரென்று கூறப்படுகிறது. அப்படியிருக்கையில் பிறர் அவர்பால் செய்யுங் கிரியைகளின் பலனை அவரெப்படி பெறுவதற்குச் சாத்தியமாகும்? அல்லது அவ்விதம் சாத்தியப் படுமென்றால், நமக்கு முன் ஜன்மத்திலேற்பட்ட நம் பிள்ளைகள், திதி காலத்தில் கொடுக்கும் பிண்டப் பிரசாதம் நமக்கு வரக்காணோமே? இஃதன்றியும் தூலமாகியப் பிண்டப்பிரசாதங்களை இறந்தவரின் சூட்சம தேகம் எவ்விதம்பெற்று உட்கொள்ளும்? இது சுத்தப்பொய். இத்தகையப் பொய்ப் போதனையை நம் ஜனங்கள் நம்புகிறவரையில், அஞ்ஞானந்தடித்து, நாம் தாழ்ச்சியடைவோமே யன்றி மேன்மை அடைவதற்கு வழியில்லை.

மு-க:—(1). மற்ற சுபாசுப காரியங்களை (அதாவது, கிரகப்பிரவேசம், கோவிற் கும்பாபிஷேகம் முதலிய பல காரியங்களை) சுப வேளையில் இஷ்ட தேவதையைக் கோரி, தேங்காய், பழம், பூ முதலியவைகளை வைத்து தூப தீபத்துடன் ஒவ்வொருவரும் தானே அல்லது குடியானவர்களுள் உதித்த ஒரு சீராளரைக்கொண்டு முடித்துக்கொள்ளவும்.

(2). இது நிற்க, சூரிய சந்திர கிரகண் காலங்களில், ஷ கிரகணங்களுக்கு முன் சாதம் அருந்த வேண்டும்; ஷ கிரகணந்தீர்ந்த பிறகு நீராடிச் சாப்பிடவும்; (கிரகண காலத்தில் அந்தந்தக் கிரகத்திற்குரிய சக்தி குறைவுபடுதலால், வியாதிக்கு இடங்கொடாமலிருக்க வேண்டுமென்பது கருத்து. உபவாசம் இருப்பது நலம்).

# சங்கம்.

---

**51.** 1. சங்கம் என்றால் சபை அல்லது கூட்டம் என்று பொருள்; பலர் கூடி தங்கள் பொதுக் குறையை இன்னதென்று ஆராய்ந்தறிந்து ஏக மனதுடன் அதைக் காலத்தில் நிவர்த்திப்பதற்கு இன்றியமையாதது சங்கமாகும்.

2. நமது அரசர்கள் ஒழுக்கமுடன் அரசாண்டு வந்த காலத்தில் அவர்களே தகப்பன் போல் நமது இலௌகிகக் குறைகளையுங் கவனித்து வேண்டிய உதவி புரிந்து வந்தார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட ஓர் சந்தர்ப்பம் நமக்குக்கிடைக்கவில்லை.

**52.** தற்காலம் நமது அங்கில சக்கரவர்த்தியின் அதிகாரம் தன் நாட்டிலேயே இவ்வளவுதானென்று வரையறுக்கப்பட்டு (Limited Monarchy) சாமானிய சபை (House of Commons), பிரபு சபை (House of Lords) என்ற இரு சபைகளால் தன்னுடு ஆளப்பட்டு வருவதால், நம் சக்கரவர்த்தி இந்நாட்டில் நமது குறைகளைத் தானே நேரில் அப்போதைக்கப்போது பரிகாரஞ் செய்வது அசாத்தியம்; அல்லது நமது நடை, உடை, பாவனையைப்பூராவும் தெரிந்து அவைகளுக்கு முரண்படாமல் நம்மை ஆளுவதற்கு ஷை இரு சபையோர்களாலும் முடியாத காரியம்.

**53.** ஆதலால் நம்மவர்கள் அங்கிலேயர்கள் போல் முன்னுக்கு வந்து தங்கள் குறைகளை இராஜ சட்ட சபைகளில் தெரிவித்து பரிகாரம் தேடினலொழிய வேறு கதியில்லை.

**54.** ஆனல் தற்காலம் பொது விஷயத்தில் ஒருவர் பிரவேசித்தால், தன் சொந்தக் காரியங்கள் கெட்டுப் பிழைப்பற்று யாசகராகி கேவல நிலைமையை யடைய நேரிடு மென்றும், அல்லது தான் அதற்குத்தக்க அந்தஸ்துள்ளவரல்லவென்றும், அல்லது தான் சிறந்த கல்விமான் அல்லவென்றும், அல்லது ஒருவரால் அது

ஆகாதென்றும், பலவிதமாகச் சொல்லி பொதுக்காரியங்களில் தாம் பிரவேசிக்காமலும், பிரவேசிக்கிறவர்களை இகழ்ந்தும் நம் ஜனங்களில் அநேகர் பொதுக்காரியங்களை அலக்ஷியஞ்செய்து விட்டார்கள். இதனால் நம்மவர்களுக்கு எண்ணிறந்த தீமைகள் விளைந்திருக்கின்றன.

**55.** இனியாகிலும் இராஜிக சட்ட சபைகளுக்கு அங்கத்தினர்களாக அமரும் அந்தஸ்தைப் பெற்றவர்கள், ஷை சபைகளுக்குப் பிரதி நிதிகளாகத் தங்களை, விசேஷ அபிப்பிராய உரிமை (theFranchise or the right of Vote) பெற்ற நம் ஜனங்கள் அனுப்புவார்களென்று தெரிந்தும், மேலே சொன்னபடி உபேட்சையாயிராமல் மிக்க ஊக்கத்துடன் முன் வந்து உழைத்தால்தான் நட்கலிதீருமென்று நாம் ஒவ்வொருவரும் நன்ருய் மனதில் கொள்ளல் வேண்டும். இங்கிலாந்தில் சாமானிய சபையில் (House of Commons) தொழிலாளிகளும், (Labourers) பிரதி நிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கள் குறைகளுக்குத் தாங்களே பரிகாரந்தேடுகிருர்கள். இராஜ சபையில் குறையை எடுத்துச்சொல்வதற்கும், தன் அபிப்பிராயங் கூறுவதற்கும் பிரமாதக் கல்வி வேண்டுமா? வேண்டுவதில்லை. குறைகளை எளிய பாஷையிலேயே† வெளியிட்டால் போதும். ஒவ்வொரு தொழிலாளிகளும் தங்களுக் கேற்பட்ட குறைகளைத் தாங்களே பலர் விவரமாய் அறிய எடுத்துச்சொல்வதே மேன்மை; எனெனில் குழந்தைகள் தம் குறைகளைத் தாமே தம் தகப்பனுக்கு அறிவித்துப் பரிகாரம் தேடுவது உத்தமம். பிறரைக்கொண்டு ஷை பரிகாரம் தேடுவது அதமம். உயர்ந்த கலாசாலைகளில் பாஷாஞானம் புகட்டுவதற்கே கல்வியில் மிகு தேர்ச்சியடைந்தவர்கள்

† நம் நாட்டு இராஜ சட்ட சபைகள் தற்காலம் அங்கில பாஷையில் நடை பெறுதலால், ஷை பாஷையைச் சற்றும் அறியாதவரைப் பிரதிநிதியாக ஷை சபைகளுக்கு அனுப்புவது பயனற்றதாகும்.

அவசியம். "சட்டசபை கல்வி பயிலுங் கலாசாலை யன்று", என்று நாம் ஒவ்வொருவரும் நன்ருய் அறியவேண்டும்.

**56.** நம் ஜனங்கள் தங்களுடைய சாவகாச வேளை யில் தினந்தினம் அரை மணி நேரம் ஒரு சமாச்சாரப் பத்திரிக்கையைப் (News paper) படித்தும், குறைந்த பக்ஷம் மாதம் ஒருமுறை (அதாவது, அமாவாசி யன் றையதினம்) அரை நாளாவது தங்கள் வேலையை நிறுத்தித் தங்களது பொதுக் குறைகளைப்பற்றி ஒரு சங்க ‡ மூலமாகப்பேசித் தீர்மானஞ்செய்து, அதைத் தலைச்சங்கத்துக்கு அறிவித்தும், அல்லது ஷை குறை கள் அரசியல் சம்பந்தமானவைகளாயிருப்பின், அவை களைத் தலைச்சங்கத்தலைவர் மூலமாயும், சட்டச்சபையி லுள்ள நமது பிரதிநிதி மூலமாயும் அரசாங்கத்தாருக் குத் தெரிவித்தும், நாம் பரிகாரம் தேடும் பரியந்தம் நாம் சீரழியவேண்டியதே.

**57.** சங்கம் எப்படி ஏற்படுத்தவேண்டுமென்ருல், முதலில் நமது குறைகளைக் கவனித்து நிவர்த்திசெய் யத்தக்க உத்தமகுணசீலர்கள் குறைந்தபக்ஷம் ஐவர் சேர்ந்து ஒரு சுபதினத்தில் "நம் இலௌகிக, இராஜிக, தெய்விக முதலிய விஷயங்களில் நாம் நாளுக்குநாள் சமயோசிதமாய் நம் அறநெறிகளுக்கு முரண்படாமல் அபிவிர்த்திசெய்யவேண்டுமென்றும், இதற்குச் சத்தி யம், அருள் நீதி வாயிலாகப், பெரும்பான்மையோர் தீர்மானத்தின்பேரில் ஏற்படுஞ் சட்டங்களுக்குக் கட்டுப் படுவோமென்றும் ஒரு புத்தகத்தில் † வரைந்துக் கையொப்பமிடவேண்டும்.

---

‡ ஷை சங்கத்துக்கு "இந்து குடியானவர் சங்கம்" என்று, நமது பூர்வீக நாமமிட்டு வழங்குவதே சீர்.

† ஷை புத்தகத்தில் வருஷம், மாதம், தேதி, சபை கூடும் வீட்டின் விலாசம் முதலியவைகள் எழுதப்பட வேண்டும்.

**58.** பிறகு சங்க விஷயங்களைச் சம்பாஷிப்பதற்கு ஒரு நிலைவரமான வீடு வேண்டுவது அவசியமாகையால், நம்மவர்களின் ஆதீனத்திலுள்ள சத்திரம், கோவில் முதலிய பொது இடங்களில் ஒன்றைத்தேர்ந்தெடுப்பது நலம். அப்படிக்கிடைக்காத பக்ஷத்தில் சற்று பெரிய வீடுடைய ஒரு சங்கத்தினர் வீட்டை ஆரம்பத்தில் அமர்த்திக்கொள்வது உசிதம். இதுவும் தவறிடில், ஊருக்கருகேயுள்ள தோட்டங்களின் மா நிழலின் கீழ் அமர்ந்து தங்கள் சங்கத்தை நடத்திக்கொள்ள வேண்டும். நம் நாட்டில் மகரிஷிகளெல்லாம் மரத்தடியிலிருந்தே வெகு சித்தி பெற்றிருக்கிறார்களாகையால், இதை அகௌரவமாகக் கருதப்படாது.

**59.** பிறகு தங்களுக்குள் சற்று சாவகாசமுடையவராகவும், விசேஷகுணசீலராகவுமுள்ள ஒருவரை அக்கிராசனாதிபதியாகவும் எளியவர், பணக்காரர், வயதிற் சிறியவர், பெரியவர் என்ற வித்தியாசமன்னியில், அங்கத்தினர்களுடன் அகமமதையற்று அன்பாய்ச் சம்பாஷிக்கும் ஒருவரை காரியதரிசியாகவும், சற்று நாணயமுள்ள ஒருவரை பொக்கிஷதாரியாகவும், வருஷத்துக்கொருமுறை இவ்விதம் நியமித்துக்கொள்ள வேண்டும்.

**60.** கூடிய மட்டும் சற்குணவானாகவும் அருள் நீதிமானாகவும் உள்ளவர்களைப் பொதுக்காரியத் தலைவராகவும், காரியதரிசியாகவும் நியமிக்கவேண்டும்; ஏனென்றால், உத்தமர்களுக்கே உள்ளதை உள்ளபடியுரைக்கவும், ஜனங்களுக்கு அரிய விஷயங்களை எளிதில் உணர்த்தவும், "உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்" என்ற பழமொழிப்படி, ஜனங்கள் உத்தமர் வாக்குக்குக் கட்டுப்பட்டு விருத்தியடையவும் ஏதுவாகும். சிலர் ஒரு எளியவர் எவ்வளவு சற்குண விவேகியாயிருந்தாலும், உலகத்திலும், இராசாங்கத்திலும், அவருக்குச் செல்வாக்கு இராதென்று சொல்லுவார்கள்; ஆனால் சத்தியம், அருள்நீதியோடு செல்லும் ஒரு சங்கத்திற்கு அந்தஸ்தும், மதிப்பும், அச்சங்கத்திலேயே பிறந்து

அதன் மூலமாக அதன் தலைவருக்கும் ஏற்படுமென்ப தற்கு ஐயமே இல்லை. மேலும், எவ்வித இராஜ பயமும் ஷை .சங்கத்துக்கு ஏற்படாது. ஷை சங்கத்துக்கு அ பா ய ங் க ள் நேரிடுமானால், அது கால அளவில் சூரியனைக்கண்ட பனிபோல் தீர்ந்து விடும். சங்கத்தினர் களும் அதில் விளையும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பொறு மையுடன் அனுபவித்து, முடிவில் நிச்சயம் ஜயம்பெறு வார்கள்.

பூ-க:—இராஜதண்டனை$, மதுபானம், விபசாரம் முதலிய தோஷ முடையவர்களைக் காரிய நிர்வாகிகளாக நியமிக்கக்கூடாது; ஏனெனில், ஷை யார்கள் சொல் லுக்கு செல்வாக்கு இராததினால், அங்கத்தினர்களுள் அதிர்ப்தி யுண்டாகி சங்கம் பிளவுபட்டுப் போகும்.

**61.** ஐந்து அங்கத்தினர்களுள்ள ஒரு சங்கத்தில் குறைந்த பக்ஷம் 3 பேர்கள் † (காரியதரிசி அல்லது அக்கிராசனாதிபதி யுள்பட) குறிப்பிட்ட நேரத்தில் சபைக்கு வந்திருந்தால்தான் ஷை யார்கள் ஒரு விஷ யத்தைப்பற்றி பேசி முடிவுகட்டலாம். ஆனால் 10 அல்லது 100 அங்கத்தினர்களுள்ள சங்கங்களுக்கு, முறையே 5 அல்லது 30 பேர்கள் குறித்தவேளையில் ஆஜரானால், அவைகளை நிறை சபைகளாகக் கொள்ள லாம்.

**62.** 1. மேற்படி குறித்த நேரத்திற்கப்பால் 30 நிமி ஷத்திற்குள்ளாக நிறைசபை கூடாவிடில், ஷை காரணத் தினால் "குறை சபை" கலைந்ததென்று "விஷய இடாப் பில்" எழுதி, அங்கு வந்தவர்களின் கையொப்பம் வாங்கி ஷை சபை கலையவேண்டும்.

---

$ ஷை தண்டனை தேசாபிமானிகளைப் பந்தப்படுத் தாது.

† ஷை 3 பேர்கள் அடங்கிய சபையை "நிறை சபை" (Quorum) என்றும், ஷை தொகைக்குக் குறைந்தபோது அதைக் "குறை சபை" என்றும் வழங்கவும்.

2. சபையின் பெரும்பான்மையோர்களின் தீர்மானத்தின்படியே அக்கிராசனதிபதி நடக்கவேண்டும்.

3. சபையோர்கள் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசி, கட்சி, பிரதிகட்சி யுண்டாகி அது சமபலமாகில், அக்கிராசனதிபதி தனக்கு இஷ்டமுள்ள ஒரு கட்சியைச்சார்ந்து தன் அபிப்பிராயத்தைக் கொடுத்து ஷை பலத்தைப் பேதமாக்கி அவ்விஷயத்தைத் தீர்மானஞ் செய்யவேண்டும் செய்த தீர்மானங்கள் ஒவ்வொன்றையும் ஷை விஷய இடாப்பில் தாய் பாஷையில் பதிவு செய்யவேண்டும்.

4. ஒரு அங்கத்தினர் ஏதோ ஒரு விஷயத்தைச் சபையோர்களுடைய தீர்மானத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால், ஒரு மனு தயாரித்து அதில் இரண்டு அங்கத்தினர்களின் கையொப்பம் வாங்கி, சபைகூடுந் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பதாக, அம்மனுவைக் காரியதரிசி யவர்களிடம் சேர்ப்பித்து விடவேண்டும். ஷை யார் உள்ளூரிலுள்ள சங்கத்தினர்களுக்கு, வழக்கமாய் அல்லது விசேஷமாய் சபைகூடும் தினத்திற்கு 2 நாள் முன்னதாக அதைத் தெரிவித்து, ஷை விஷயத்தை சபையின்கண் தீர்மானத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

5. சில காரணத்தால் ஒருவர் திடீரென ஒரு விசேஷ சபை (Special Meeting) கூட்ட வேண்டுமானால், ஒருமனு தயாரித்து அதில் இருவர்கையொப்பமிட்டு, காரியதரிசியிடம் கொடுத்தவுடன் ஷை யார் அதைப்பெற்று மேற்கூறியபடி சங்கத்தினர்களுக்குத் தெரிவித்து ஷை சபையைக் கூட்டவேண்டும்.

6. (1) தேவையானபோது காரியதரிசி தானே ஒரு விசேஷசபை (Special Meeting) மேற்கூறியபடி கூட்டலாம்.

(2) சபைக்கு தக்கநிதி ஏற்படும் வரையில் சபை சம்பந்தமான விஷயங்களைக் (அச்சிட்ட

அறிவிப்புப் பத்திரம் முதலியவைகளில்லாமல்) கடித மூலமாய் யாவருக்கும் அறிவிப்பதே சீர்.

7. பொக்கிஷதாரிடத்தில் தங்கள் சங்கத்துக்கு வேண்டிய சுமார் இரண்டுமாதச் செலவுக்குள்பட்ட தொகைதான் இருக்கவேண்டும் அதற்கு மேலுள்ள பணத்தை சங்கத்தின் பேரால் நாணயசாலையில் †(Bank) போட்டு தேவையானபோது காரியதரிசி சபையிற்கூடிய அங்கத்தினர்களின் பெரும்பான்மையோர் அனுமதியின் பேரில் வேண்டிய தொகையை ஷ சாலையிலிருந்து பெற்றுக்கொள்ளவும்.

8. ஒருவர் அங்கத்தினராக புதிதாய்ச் சேரும்போது ஒரு மனு தயாரித்து அதில் பழைய அங்கத்தினர் இருவர் கையொப்பம் வாங்கி அதைக் காரியதரிசியிடம் சேர்ப்பிக்கவேண்டும். அவர் அம்மனுவைப் பெற்று மனுதாரரன்னியில் ஷ மனுவை சபையின் முன்பாகக் கொண்டுவந்து, சபையோரால் அங்கீகரிக்கப்பட்டால், அங்கத்தினர்களுக்காக ஏற்பட்ட தனி இடாப்பில் அவர் பெயரைப் பதிவுசெய்து ஷ மனுதாரருக்கு அதை அறிவிக்கவேண்டும். ஆனால் ஒருவரையும் பலவந்தப்படுத்தி சபைக்கு அங்கத்தினராகச் சேர்க்கப்படாது. அது முடிவில் துன்பததைத் தரும்.

† பொதுப் பணத்தைத் தக்க நாணயசாலையில் செலுத்திப் பத்திரப்படுத்தாமல், அதிகவட்டியை உத்தேசித்து பொக்கிஷதாரி மூலமாய் பலபேர்களுக்கு வட்டிக்குக் கொடுத்தால், ஷ பொக்கிஷதாரிக்கும் சங்கத்தின் காரியதரிசி அல்லது அக்கிராசனாதிபதி முதலிய மற்றவர்கட்கும் மனஸ்தாபம் சில சமயம் நேரிடில், ஷ திரவிய விஷயமாய் விவகாரமுண்டாகி அதனால் அனாவசியச் செலவும் பல இம்சைகளும் ஏற்படும். மேலும் தர்ம திரவியத்தை வட்டிக்குவிட்டுப் பெருக்குவது கொடையாளரின் நோக்கமன்று. எடுத்த காரியத்தை முடிப்பதுவே புருஷலட்சணம்; இதுவே பலர் ஊக்கத்திற்கும் காரணமாகும்.

9. (1) சங்க சபையில் நடைபெறும் ஒவ்வொரு விஷயத்தின் தீர்மானங்களை விஷய இடாப்பில் பதிவு செய்தும்,

(2) பொக்கிஷதாரிடம் காரியதரிசி பணம் கொடுக்கும்பொழுதும் அல்லது வாங்கும் பொழுதும் ஒருவருக்கொருவர் ரசீது கொடுத்தும் தனித் தனியாய் ஒவ்வொருவரும் கணக்கு வைத்தும்,

(3) அங்கத்தினர் சந்தா ஜாப்தா ஒன்றேற் படுத்தியும்,

(4) சங்கசட்டங்களை ஒரு தனிப் புத்தகத்தில் எழுதி, புதிய அங்கத்தினர்கள் அவைகளைப் படித்துத் தெரிந்துகொள்ளும்படி செய்வித்தும்,

(5) வருஷத்திற் கொருமுறை வரவு செலவு கணக்குகளைத் தயாரித்தும், காரியதரிசியும் அக்கிராசனாதிபதியும் அதில் கையொப்பமிட்டு சபையோர் முன்னிலையில் படிக்கவேண்டும்.

10. ஒரு கொடையாளர் சில நிபந்தனைகளுடன் தனங்கொடுத்து அதன் வருமானத்திலிருந்து, பள்ளிக்கூடம் முதலிய தர்மசாலைகள் சங்கமூலமாக ஏற்படுத்தி நடத்தும்படி கேட்டுக்கொண்டால், ஷை சங்கத்தார் ஷை யாரின் நிபந்தனைகளைச் சோதித்து அங்கீகரித்தால் மாத்திரம் ஷை காரியத்தைக் கைக்கொண்டு நடத்த வேண்டும்.

மூ-க :—சங்கத்தார் தீர்மானப்படி ஏற்பட்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் தர்ம திரவியத்தை துர்வினியோகஞ் செய்தாலன்றி, கொடையாளராவது அல்லது அவர் சந்ததி முதலிய பிறர் எவரும் சங்க நிர்வாக விஷயத்தில் பிரவேசிக்கக் கூடாதென்ற ஒரு நிபந்தனையுடன் ஷை தர்ம கைங்கரியத்தைச் சங்கத்தார் அங்கீகரிக்கவேண்டும்.

11. சந்தா தொகையை அதிகப்படுத்தி அல்லது பிரத்தியேக நன்கொடை (Donation) ஏற்படுத்தி, அந்த வசூலிப்பதற்கும் அல்லது அவ்விதம் வசூலித்த பணத்தைச் செலவு செய்வதற்கும் அப்போதைக்கப்போது சபையின் பெரும்பான்மையோர்களின் உத்திரவுபெற்றே அக்கிராசனாதிபதி ஷை காரியத்தை நடத்தவேண்டும்.

86029

12. சங்கத்தை ஒரு தெய்வ சபையாகப் பாவித்து சங்க விஷயங்களை வெகுமரியாதையுடன் ஒருவர்க்கொருவர் சம்பாஷித்து முடிவு செய்யவேண்டும்; ஒருவரும் தம் சொந்த விஷயமாக ஏற்பட்டுள்ள விரோதத்தை முன்னிட்டு சபையில் எவ்விதமான துவேஷத்தையும் பிறர்மேல் பாராட்டக்கூடாது.

13. சபையின்கண் ஒருவர் ஒழுங்கீனமாக நடக்கும்பொழுது சங்கத்தார் அபிப்பிராயத்தை அனுசரித்து அக்கிராசனாதிபதி அவரை எச்சரித்தும், அதையும் மீறுவாரானால் அப்பொழுதே சபையைக் கலைத்து, பிறகு ஒரு தனிச்சபை கூட்டி, ஷை விஷயமாய் ஒரு தீர்மானம் (Resolution) கொண்டுவந்து சங்க அங்கீகாரத்தின்பேரில் அவரை சங்கத்தைவிட்டு நீக்கிவிடவேண்டும்; ஏனெனில் துஷ்ட சகவாசம் பிராண சங்கடம் என்ற பழமொழிப்படி, ஒழுங்கீனமுள்ளவர்களால் ஒற்றுமைகெட்டுச் சங்கம் பாழாகிவிடும்.

14. மேற்படி சங்கத்திற்கும் இனி கூடப்படும் தலைச்சங்கத்திற்கும் தனித்தனியே மாதம் ஒன்றுக்குத் தலைக்கு அணா ஒன்று வீதம் சந்தா ஏற்படுத்தவேண்டும். பிரபுக்கள் தங்கள் இஷ்டப்படி இதற்குமேல் சந்தா தொகை எவ்வளவு கொடுத்தாலும் அதை வந்தனத்துடன் அங்கீகரிக்கவும். ஆனால் அதிகத்தொகை கொடுக்கிறவர்கள் மற்றவர்களைவிட எவ்வித விசேஷ

சுதந்தரத்தைச் சபையில் பாராட்டாது பாதுகாக்கப்படவேண்டும்.

15. இப்படியே ஒவ்வொரு தெருவிற்கும் ஒவ்வொரு சங்கம் இரு பாலர்களுக்கும் தனித்தனியாயிருப்பது அத்தியாவசியம்.

மு-க:—(1). மாதர்கள் தங்கள் சங்கத்தில் (அதாவது, "இந்து குடியான மாதர் சங்கத்தில்") நடைபெறும் இராஜிகச் சம்பந்தமான தீர்மானங்களைத் தங்கள் மானவர் சங்கத்தலைவர்கள், இராஜ சட்ட சபைப் பிரதிநிதிகள் மூலமாய் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துப் பரிகாரம் தேடுவதே கிரமம்;

(2). ஆனால் அவ்விதம் தங்கள் காரியம் சித்தி அடையாதபோது, சொல்வண்மையுள்ள சில நற்குலமாதர்கள் ஷை விஷயத்திற்காக இராஜ சமுகம் செல்வது குற்றமன்று.

## தலைச் சங்கம்.

---

**63.** மேற் கூறியபடி ஒவ்வொரு கிராமங்களிலும், பட்டினங்களிலுமுள்ள ஒவ்வொரு தெருக்களிலும், சங்கங்கள் ஏற்படுத்திய பிறகு வருஷத்துக்கொரு முறை நம் இராஜதானியிலுள்ள ஒரு பட்டினத்தில் ஒரு தலைச்சங்கம்† கூட்டவேண்டும். இம் மகா சபைக்கு அக்கிராசனாதிபதி, காரியதரிசி முதலானவர்களும், சங்கத்தில் அனுசரிக்கவேண்டிய சகல விஷயங்களும், முன் சொன்ன பிரகாரமே நியமித்து நடத்தவேண்டும்.

**64.** 1. ஒவ்வொரு கிளைச்சங்கத்திலிருந்தும் குறைந்தபக்ஷம் இரண்டொருவரைத் தேர்ந்தெடுத்து

---

† ஷை தலைச்சங்கத்துக்கு இந்து குடியானவர் தலைச்சங்கம் என நாமமிட்டு வழங்குவதே சீர்.

சங்கச்செலவில் தலைச் சங்கத்துக்கு அனுப்பி தங்கள் கிளைச்சங்கத்தின் அபிப்பிராயத்தை ஷை மகா சபையில் தெரிவித்துக்கொள்ளவேண்டும். முற்கூறியது போல, பெரும்பான்மையோர் தீர்மானத்தின் பேரில் ஒவ்வொரு . விஷயத்தையும் முடிவுசெய்யவேண்டும்.

ம-க :— சங்கப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து சங்கச் செலவில் மகாசபைக்கு அனுப்ப வேண்டுவது அவசியம்; ஏனெனில், ஒரு சற்குணவான் சங்க விஷயங்களை நன்றாய் எடுத்துச் சொல்லும் திறமையுடனிருந்தும், ஏழையாய் இருப்பின், அவர் மகா சங்கத்துக்குப் பிரதிநிதியாகப் போகத் தலைப்படார். சற்குணமற்ற வெறுங் கல்விமான்களும், அல்லது வெறும் பணக்காரர்களும் மகா சபைக்குப் பிரதிநிதிகளாக அனுப்பப்படுவதால், அவர்கள் தங்கள் சொந்தச்செலவில் சபைக்குப் போய் தங்கள் சங்கக் கருத்தை அவ்விடம் தெரிவிக்காமல், தமது சொந்த அபிப்பிராயத்தை அநேகமாய் வெளியிடுகிறதினால் சில சமயம் சங்கத்தார்களுக்கு அநேகந் தீங்குகள் விளைகின்றன.

2. ஒவ்வொரு கிளைச்சங்க அங்கத்தினர்கள் பிரதிநிதிகளாக மகாசபைக்குப்போகும்போது கூடிய மட்டும் அவர்கள் சேர்ந்தேபோகவேண்டும்; அதாவது, ஒருவர்க்கொருவர் முன்பகை யிருந்தாலன்றி, பிரயாணத்தில் தனித்தனியாய்ப்போகுவது உசிதமன்று; ஏனெனில், பிரதிநிதிகள் ஒருவர்க்கொருவர், பல விஷயங்களைப்பற்றி அடிக்கடி சம்பாஷிக்கவும் பல உதவிகள்புரிந்து அன்னியோன்னியமாகவும் சமயம் நேரிடுகிறதினால், அவர்கள் அறிவு விசாலிப்பதுடன் அன்பும் பெருகும். "அன்பே சிவம்" என்று திருமூலர் முதலிய பல பெரியோர்கள் கூறியபடி, அதன் பயன் இன்னதென்று இங்கு வரையத்தேவையில்லை.

3. மகாசபைக்குப் போகிறவர்கள் ஒவ்வொருவரும் கட்டில், மெத்தை, முதல்தர சாப்பாடு முதலான

அற்ப சுகங்களை அவ்விடத்தில் எதிர்பாராமல், சகலருக்கும் பொதுவாக ஏற்பட்ட சுக சௌகரியங்களையே ஒரு பெருஞ்சுகமாகக்கருதி, மகாசபை கூட்டுவோருக்கு இவ்வற்ப விஷயங்களில் அனுவசியமான மனஸ்தாபங்கள் ஏற்படாவண்ணம் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் இதன் 11—6-வது பத்தியில்கண்ட விஷயங்களை நன்ருய் ஞாபகத்தில்வைத்து உள்ளங்தைக்கொண்டு நல்லது செய்யவேண்டும். ஆனல் இஷ்டப்பிரகாரம் தங்களது சொந்தச் செலவில் வேண்டிய சௌகரியங்களைப் பிரத்தியேகமாய் வேறு இடங்களில் செய்துக் கொள்ளலாம்.

4. தலைச்சங்கம் கூடுவதற்கு ஏற்பட்டபந்தலின் கீழ் மணல்பரப்பிவிட்டால், அதன்பேரில் உட்காரவும், சபைகலைந்த பிறகு வெளியூரிலிருந்துவந்த பிரதிநிதிகள் இருக்கப்படுக்க ஜாகையாகவும் ஆகிவிடும். அதிகச் செலவிற்கு இடமில்லை. செலவு விரிவானல் நமது ஏழை சங்கத்தினர்கள் அதிக சந்தா அல்லது நன்கொடை (Donation) கொடுக்கமுடியாமல் சங்கத்தைவிட்டு விலகிவிடுவார்கள்.

5. சங்கங்களில் பிறமதஸ்தர்களையும், பரம்பரைப் பிராமணர்களையும் எக்காரணத்தாலும் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படாது; ஏனெனில், சென்ற 2000, 3000 வருஷங்களாக நம் பூர்வீக நிலைதவறி உள்ளதையுள்ளபடியறியாமல் சீர்கேடுற்ற நாம் முன்னுக்கு வருங்காலத்தில், நமது கஷ்டநிஷ்டூரங்களைப் பற்றி, நம் நடையுடைபாவனைக்கு முற்றும்மாருகவுள்ள இதர மதஸ்தர்களுக்கும், பரம்பரைப் பிராமணர்களுக்கும் என்ன தெரியும்?

6. இந்தியசுதேச மகாசபை (The Indian National Congress) இந்திய மாகாண மகாசபை (The Indian Provincial Conference) முதலிய (இந்தியர்கள் சகலருக்கும் பொதுவான) மகாசபைகளுக்கு நம்

சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பி நமது சுதந்தரங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

7. சங்கங்களில் தாய்பாஷையிலேயே விஷயங்களைப் பிரசங்கித்துத் தீர்மானஞ்செய்யவேண்டும். அரசாங்கத்தாருக்கு அனுப்பும் தீர்மானம் எதுவோ அதை மாத்திரம் அங்கில பாஷையில் மொழி பெயர்த்து அனுப்பவேண்டும்.

8. சங்க ஆதரவின்கீழ் நடைபெறும் தனிப்பிரசங்கங்களுக்கு அங்கத்தினரல்லாத நம் பொதுஜனங்களை வரும்படி அழைக்குங்காலத்தில், அறிக்கைப் பத்திரத்தில் (Notice) "ஷை சங்கத்தார் கருத்தையும் குறிப்பிட்டதினத்தில் நடக்கும் பிரசங்க விஷயத்தையும் ஆதரிக்கும் நண்பர்கள் வரவேண்டும்" என்று அப்பத்திரத்தில் நன்றாய் எழுதியிருக்கவேண்டும்; ஏனெனில், உலகத்தில் எவ்விஷயத்தையும் மறுத்து குதர்க்கம் செய்கிறவர்கள் சிலர் உளராகையால், அவர்களை விலக்கி, எடுத்த காரியம் முடிவுபெறவேண்டுமென்பது கருத்து.

9. பஞ்சேந்திரியர் துறந்து காஷாயம்பூண்டவர் சங்கத்தில் ஒரு அங்கத்தினராகச் சேராராகையால், அவரைப்போல் வேஷம்பூண்டவர் எவராயினும் அவரைச் சங்க அங்கத்தினராக அங்கீகரிக்கக்கூடாது.

# பொருளகராதி.

---

**65.** இந்து குடியானவர்: "இந்து" என்றால் "சந்திரன்" அதாவது, தனது குளிர்ச்சியினால் பிறரை மகிழ்விக்குந் தன்மையுடைய சுபக்கிரகம் என்பது பொருள்; இந்து குடியானவர் என்றால், தீங்கற்றுப் பிறரை மகிழ்விக்கும் சுபாவமுடைய குடியானவர் என்பது கருத்து. இது நிற்க, "குடியானவர்" என்ற வார்த்தை, குடி, ஆனவர், என்ற இவ்விரு பதங்களாலாயிற்று; அதன் பொருள் தேசாந்தரியாய் நாடெங்குந் திரியாது ஓர் இடத்தில் நிலைபெற்று வசிப்பவர் என்றாகும். ஆனால் மனிதவர்க்கம் ஆதியில் எப்படி உற்பத்தியாகி, தேசாந்தரி, குடியானவர், என விருத்தியடைந்ததென்று பலர் நினைக்கலாம். அதன் மூலம் இதனடியில் எனதெளிய அறிவிற்கெட்டின மட்டும், ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டுள்ளது.

**66.** மனம் எனும் ஒரு சக்தி இருக்கிறதென்று நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம்; எப்படியென்னில், அம்மனோ சக்திதான் நமது பஞ்சேந்திரிய மூலமாக உலக விஷயங்களை அறிகிறது. அச்சக்தியின் மகிமையை இன்னதென்று எடுத்துரைப்பது எளிதல்ல. அது நுண்ணிய அணுக்களை உற்ற சமயத்தில் பல அளவோடு திரட்டிப் பலவிதமான புழுக்களாகிறது; உதாரணமாக, அரிசியின் தவிட்டிலும், கோதுமை ரவை முதலியவைகளிலும் அடிக்கடி புழுக்கள் ஜனிக்கிறதை யாவரும் பார்க்கலாம். காளானை எடுத்து ஒரு மாடத்தில் வைத்தால், இரண்டு தினங்களுக்குள் அதில் பல புழுக்களைக் காணலாம். மேலும் நீரிலும் புல் பூண்டுகளிலும் பலவிதமான புழுக்களின் உற்பத்தியைப் பார்க்கலாம்; இவைகளுக்கிணங்க,

"உறவுடலை யெடுத்தவரில் பிரமாதி
யேனு மூனை யொழிந்து தள்ளற்
கறவுமரி தன்றோ விகபரமு
முன்னை † யன்றி யாவதுண்டோ
வறுதிலுன்னை யசத்தென்னல்
வழக்கன்று சத்தெனவும் வாழ்த்துவேனென்
சிறுமைகெடப் பெருமையினின்
சென்மதேயத்தினி னீசெல்லல்வேண்டும்."
"எந்தவுடலேனு மெடுத்த வுடனல்ல தென்று
சிந்தை செய்வதந்திறஞ் செப்பாய் பராபரமே,"

என்று தாயுமானவரும்,

"வீடு கட்டிக் கொண்டேன் நானேநு
வீடு கட்டிக் கொண்டேன்.
வீடுகட்டினேன் விண்ணொடு மண்ணையுங்
கூறதாச்சுக் குறியிது ரண்டினல்
பாடுபட்டுச் சலத்தைத் தெளித்துடன்
பற்றி நெருப்பையும் காற்றையும் சேர்த்துமே
கூடுண்டான குறிமண்ணுந்தண்ணீரும்
கூட்டி பிசைந் துலவாட்டி யந்தமுடன்
நீடுலகம் புகழாவியதுக்குள் நிலைக்க
வெண்சாணுடல் நேர்த்தியைப் பார்த்திரும்,"

என்று ஞான வெட்டியிலும்,

"புல்லாகிப் பூடாகிப், புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யே யுன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்,"

என்று மாணிக்கவாசக சுவாமிகளும்,

† உன்னை = மனத்தை.

"மண்ணீரையலது புற்பூடாதி யுண்டோ
மகன்மாடு மாதராய் மற்றவைகண் மாறக்
கண்ணூரவே கண்டு காதல் வைப்பதனூற்
காமாதிகுண மெய்தலே மாறிடாதே
பெண்ணேண வளரசர் சேவகராணேசேனே
பிதாமகன் முதற் சிலேயணுக் கூட்டமலவோ
வுண்ணூடிலுறவு பகைதமர்தார முண்டோ
வொருங்குபட லுண்டெனவு ஞெழியாதமயலே,"

என்று ஸ்ரீமான் நாராயண சுவாமி நாயகர் அவர்களும் கூறியதை நன்குணர்க.

**67.** இவ்விதம் விருத்தியாகிற புழுக்களில் சில வளர்கின்றன. அவைகள் பருவமடைந்தபிறகு ஒன்ருேடொன்று ஆணும் பெண்ணுமாய் சகவாசஞ்செய்து கர்ப்பமாகி, அதேவிதமான வர்க்கம் விருத்தியாகிறது. இது நிற்க. மனிதவர்க்கத்திலும் அணுக்களின் அளவு பேதத்தால் கிரமந்தப்பி மாறுபாடான உற்பத்தியை நாம் சில சமயங்களில் காண்கிருேம்; உதாரணமாக,

1. கொல்லம் (Quilon) என்னும் ஊருக்குச் சம்பத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பெண் அநேக முட்டையிட்டதாக 17—5—1903-ல் வெளியான திடெலிகிராப் (The Telegraph) என்னும் கல்கத்தா பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

2. ஒரு மங்கை ஏழுபிள்ளேகளேப் பதினென்கு மாதத்தில் பெற்றதாக 23—8—1913ல் வெளியான ஷை பத்திரிகையில் கண்டிருந்தது.

**68.** இவ்விதவிருத்தி வழியில் பக்ஷி, மிருகம், மனிதர் முதலிய சகல சீவராசிகள் வெகுகால அளவில் தோன்றின. சிலர் சிறிய புழுக்களிலிருந்து ஷை பெருஞ்சீவன்கள் எவ்விதமுண்டாகுமென்று கருதலாம். எவ்வளவு பெரிய சீவனுயினும் இந்திரியத்தில் ஒரு சிறிய புழுவாயிருந்து கர்ப்பத்தில் வளர்ந்து, காலத்தில்

வெளியாகி தாய்ப்பாலுண்டு தடித்து பெரிதாகிறதென்று பண்டித பாமரர் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

**69.** மேற்படி மானிடர் ஆரம்பத்தில் மிருகத்தன்மையோடிருந்து வேட்டையாடிப் புசித்து, கிழங்கு காய் கறி முதலியவைகளைப் பச்சையாகத்தின்று, காடு தீப்பற்றி எரியுங்காலத்தில் வெந்தகாய் கறி முதலியவைகளைத்தின்று பழகியபின் சமைத்துச் சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டிருக்குமென்று ஊகிக்கப்படுகிறது. சமைக்கப் பாத்திரமில்லாததினால் கற் பாறைகளில் நெருப்புக்கொளுத்தி அந்தப் பாறைகளின்பேரில் கறி சமைத்து உண்டதாகக் காணப்படுகிறது. (இவ்வழக்கம் இன்றளவும் சிற்சில இடங்களில் ஏகதேசம் அநுஷ்டிக்கப்படுகிறது).

**70.** மேற்படியார்கள் வெகுகால அளவில் காட்டில் சஞ்சரிக்கும் மாடாடுகளின் பாலைக்கறந்து குடித்துப் பழகியபின்; ஷை சீவராசிகளை வைத்துப் பரிபாலித்ததாகத் தோற்றுகிறது. அப்பொழுதுதான், "தான்†" என்றும், "தன் பொருள்" என்றும், தன்னைப்போல் தொழில் செய்பவர்களை "தன் கூட்டம்" அல்லது "தன்னினம்" என்றுங் கருதி ஒன்று சேர்ந்து வாழத் தலைப்பட்டதாகத் தோற்றுகிறது. இக்காலத்தில்தான் பாஷை ‡ விருத்தியானதாக ஊகிக்கப்படுகிறது. தினம் திருவோட்டில் (தேங்காய் ஓட்டில்) பால் கறக்கும்

---

† "தான்" அல்லது "நான்" என்னும் எண்ணம் மனிதருக்கு உதயமானபோதுதான் இருவினை தோன்றிற்று;

"இன்றோ விருவினை வந்தேறியது நானென்றே
வன்றே விளைந்ததன்றோ வாற்றேன் பராபரமே;"

என்று தாயுமானவர் கூறியதை நன்குணர்க.

‡ பாஷை என்றால் கருத்தை உணர்த்தும் ஒலியணுத்திரள். சீவராசிகளுக்கு அன்பு உதயமானபோதே, இது உதய மாயிற்று; உதாரணமாக

வழக்கம் ஏற்பட்ட பிறகு மண்பாத்திரஞ்செய்து பழகி, அதன்மூலமாய்க் குயத்தொழில் பிறந்திருக்குமென்று கருதப்படுகிறது. இவ்விதம் ஒரு கூட்டமான பிற்பாடு, மனிதர்களுக்கும் மாடு ஆடுகளுக்கும் உண்டாகும் வியாதிகளுக்குப் பண்டையோர் இதம் செய்து பழகி, அதன் மூலமாகப் பண்டிதம் (வைத்தியத் தொழில்) பிறந்தது. அப்பொழுது ௸ யார்கள் பிறமேக வியாதியற்றுச் சுகமாக வாழும் பொருட்டு இருபாலர்களுக்கும் திருமணம் செய்யத்தொடங்கி அதன் மூலமாக பதிவிரதம். பத்தினி விரதம் ஏற்பட்டது. அவர்களுக்குக் கம்பளி அவசியமாய் இருந்த படியால் தாங்களே கம்பளி நெய்ய ஆரம்பித்து, அதன் மூலமாக நேசவுத் தொழில் பிறந்தது; (தென்ன மரத்தின் பன்னுடையைப் பார்த்து நெசவு செய்திருக்கலாம்). அதற்கு பின் பெற்றோர்களின் சொத்துக்களை பிள்ளைகள் அடைய வேண்டுமென்ற பலநீதிகள் $ நாளுக்கு நாள் ஒன்றின் பின் ஒன்றாக அனுபவ மூல்மாய் மநுவானது (விளைவானது).

---

கோழி முதலியன தத்தம் சிறிய குஞ்சுகளுக்கு ஒரு விதமான சத்தத்தினால், "இறை, இதுவென்று உணர்த்துகிறது," பலருக்கும் தெரிந்த விஷயம். இவ்விதம் பலகருத்துகளை உணர்த்தும் பல ஒலித்திரள்களுக்குப் பாடை (பாஷை) என்று பெயராயிற்று. மேற்கூறியபடி மனிதவர்க்கத்தில் உதயமான பாஷை, மனிதகணம் கூட்டமாக வசித்த பிறகு விருத்தியடைந்து இருக்கிறதாகத் தோற்றுகிறது. இம்மாதிரி விருத்தியான, பல பாஷைகளுள் தமிழ் ஒன்று; எப்படியெனில் குடியானவர், பட்டினம் முதலிய பல வார்த்தைகளின் உற்பத்தியை நோக்குமிடத்து, அது வெளியாகும்.

$ ஷை மநுவான பல நீதிகள், ஆதியில் மநு நீதிகள் என வழங்கப்பட்டு வெகு காலமான பிறகு,

**71.** தங்களுடைய மாடு, ஆடு, பால், தயிர், வெண்ணெய், உருக்குநெய் முதலிய **பண்டங்களை மாற்றுதல்**செய்ய நேரிட்டு, அதன் மூலமாக **வியாபாரம்** பிறந்தது. மாடாடுகளை எண்ணிக் கணக்கிடும் வகையில் **கணிதசாஸ்திரம்** பிறந்தது. சிவராசிகளுடன் சதாவசித்து அவைகளைக்காத்து இரட்சிப்பதால், அன்புவளர்ந்து **சமரசஞானம்** உதயமாயிற்று. மாடாடு மேய்க்குங் காலத்தில் புல்லாங்குழல் ஊதும் வழக்கத்தால் **சங்கீதம்** தோன்றிற்று.

**72.** முதலில் புல்லரிசி, மூங்கிலரிசி முதலியவைகளைச் சமைத்துச் சாப்பிட்டு வழக்கமானபிறகு, அவைகளைத் தாங்களே பயிரிட ஆரம்பித்து, அதன் மூலமாக **விவசாயம்** பிறந்தது. பின் ஷி யார்கள், சதாவிவசாயஞ்செய்ய ஆரம்பித்த காலத்தில் அந்தத் தொழிலாலும், அந்தத்தொழிலின் பயனாகிய தானியங்களைச் சேர்த்துக் காத்து அனுபவிக்கும் பொருட்டும், ஓர் இடத்தில் நிலையாக **குடிசை** கட்டி அதில் **குடிஆன** நாள் எந்நாளோ அந்நாள்முதல் **குடியானவர்** எனப் பெயர் தரித்ததாகக் காணப்படுகிறது,

**73.** விவசாயம் முதலியவைகள் விருத்தியான பிறகு காலமழை யற்றால் **இந்திரனையும்**; (வருணபகவானையும்), குளிர் அல்லது மழை யதிகமானால் **சூரியனையும்**, இவ்விதமேற்படும் ஒவ்வொரு குறைக்கும் ஒவ்வொரு

---

அவைகளைத்திரட்டி ஒரு நூலாக வெளியிட்ட ஒரு சக்கரவர்த்தியை, "மநுச்சக்கரவர்த்தி" என ஜனங்கள் கூப்பிட்டு வழங்கினதாகத் தோற்றுகிறது. அப்படிக்கில்லாமல் "மநு" எனும் நாமம் பூண்ட ஒரு சக்கரவர்த்தி ஆதியில் தானே திடீரென ஷி நீதிகளைப் புதிதாய் உற்பத்தி பண்ணினர் என்பது யுக்திக்கும் அநுபவத்திற்கும் பொருந்தாது. மேலும் இதுவிவரம் இதன் 228, 229-வது பத்திகளில் காண்க.

தேவதைதயைப் பாவனைசெய்து, அதைத்தொழ நேரிட்டு அதன் மூலமாய்த் தெய்வம் பிறந்தது; உதாரணமாக, இப்பொழுதும் வாந்தி பேதி அதிகமானால் காளியம்மனுக்கு நம்மவர்கள் காப்புக்கட்டுவது வழக்கம். சில பக்திமான்கள் சாவகாசமான அந்தி சந்தி வேளைகளில் தெய்வ வணக்கம் இடைவிடாமல் அப்பியாசித்து, யோகஞானங்களில் அதிதீவிர நிலையை அடைந்து, **ஆதிமூலப் பொருளை** அனுபவமாய் அறிந்துணர்ந்த பின் அதைப் பக்குவிகளுக்கு உபதேசிக்கலாயிற்று. ஷை உபதேசிகளைத்தான் **அந்தணர்** என்றும், **மகரிஷிகள்** என்றும், **பிரம்மஞானிகள்** என்றும், நம்மவர்கள் அவரவர்கள் நிலைக்குத் தக்கபடி பல பெயரிட்டு அழைப்பது வழக்கம். இவ்விதம் வெகுகாலமான பிறகு பாஷைக்கு எழுத்து † கண்டுபிடித்து ஷை உபசேசிகள் தங்கள் உயர்கருத்துகளை ஏட்டில் வரைந்து வைத்தார்கள். அவைகளைத்தான் **"முதல்நூல்"**, **"வேதம்"** அல்லது **"தத்துவநூல்"** என்று பலபெயரிட்டு நம்மவர்கள் வழங்கிவருகின்றார்கள்.

---

† எழுத்து:—பலர் விஷயவிருத்தி வழியில் தாங்கள் அனுபவமாய்த் தெரிந்தவைகளைப் பிறர் எளிதில் படித்து அறியுமாறு எழுத்து கண்டுபிடித்து தமது கருத்துகளை எழுதிவைத்ததாகத் தோன்றுகிறது; உதாரணமாக, அங்கிலம் முதலியன. சிலர் தங்கள் தெய்வழிபாட்டில் சுவானுபவமாய்க் கிடைத்த அரிய கருத்துகளை (அதாவது, உற்பத்தி, விர்த்தி, லயம் முதலான தத்துவங்களை) பிறர் இலகுவாய் அறியும் பொருட்டு ஷை தத்துவங்களுக் கிணங்க, எழுத்து கண்டுபிடித்து அவைகளை எழுதிவைத்ததாகத் தோற்றுகிறது; உதாரணமாக, தமிழ் பாஷை; எப்படியெனில், ஆதிமூலப் பொருளிலிருந்து சகல வஸ்துக்களும் தோன்றினதற்கிணங்க, "அகர" உயிரெழுத்திலிருந்து தமிழ் பாஷையிலுள்ள மற்ற எல்லா எழுத்துக்களையும் வெகு அருமையாய் அமைத்துள்ளார்கள்.

**74.** மேற்படி குடியானவர்கள் அறப்புத் தீர்ந்து சாவகாசமான காலத்தில் தாங்களே தங்களுள் வசித்த விவேகிகளைக்கொண்டு வீடு கட்டினார்கள். அது கால அளவில் அவ்விவேகிகளுக்குச் சதா வீடுகட்டுந்தொழில் ஏற்பட்டதினால் அவர்கள் விவசாயத் தொழிலை விட்டு தச்சுவேலை, கொத்துவேலை முதலிய பல தொழில்கள் செய்ய ஆரம்பித்தபிறகு பல கைத்தொழில்கள் ஒன்றன்பின் ஒன்றாய் பிறந்தன.

**75.** ஒரே கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் தனது சக்தியுக்திக்குத் தக்கபடி ஒவ்வொரு தொழிலை, ஆதியில செய்யத்தொடங்கி, பின்னால் ஷ்ஷ யாரின் சந்ததியார அவ்விதம் சக்தி யுக்தி கவனியாது தத்தம் சிறுவயது முதல் தன் தகப்பனுடன் ஷ யாரின் தொழிலைச் செய்து பழகியபின் தானும் தன் சந்ததிகளும் ஷ தொழிலையே பரம்பரையாகப்புரிந்தார்கள். அப்பால் நடை, உடை, பாவனை முதலிய சில இலௌகிக சௌகரியங்களை உத்தேசித்து ஷ பரம்பரைத் தொழிலாளர்கள் தங்களைப்போன்ற தொழிலாளர்களிடத்தில் விவாக சம்பந்தஞ் செய்தார்கள். அஃதெப்படியெனில், ஒரு விவசாயஞ் செய்பவரின் பெண், களை கொத்துதல், பாத்திக்கு நீர் பாய்ச்சுதல் முதலிய சிறு தொழில்களையும், நெசவுத்தொழில் செய்பவரின் பெண், பருத்திக்கொட்டையையும் பஞ்சையும் வெவ்வேறாய்ப் பிரித்தல், பிரித்தெடுத்த பஞ்சை நூலாய் நூற்றல் முதலிய பல சில்லரை வேலைகளையும் ஷ யார்கள் ஒவ்வொருவரும் தம் சிறுவயது முதல் செய்து பழகியிருப்பதால், தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலுக்குரிய பெண்ணின் விவாக சம்பந்தம் தமக்கு மிகுசாதகமாய் இருக்கக்கண்டு அவர்களுடன் சம்பந்தஞ்செய்து அதையும் தாங்களே பரம்பரையாக அனுஷ்டித்து அதன் மூலமாய்ப்

பரம்பரை ஜாதிகள் †, கிராமம் ஆனபிறகு சிலதும், பட்டினம் ஆனபிறகு சிலதும் பிறந்து, நாளதுவரையில் விருத்தி யாகிக்கொண்டே வருகின்றன.

---

† (1). வெகுகால அளவில் ஷை பரம்பரை ஜாதிகள் ஆயிரக்கணக்காகப் பெருகி அதனால் ஜனங்கள் பல இம்சைகள் அடைந்து மனங்கசந்து இருப்பதைக் கண்டு, ஷை யார்களின் சம்மதத்தின்பேரில், ஆதிமநு இதன் 73-வது பத்தியில் கண்டபடி ஷை யார்களுள் உதிக்கும் மகரிஷிகளையும் பிரம்ம ஞானிகளையும் அந்தணர் அல்லது பிராமணர் என்றும், வீரதீரத்தோடு தேசத்தைக் காப்பவரை க்ஷத்திரியர் என்றும், விவசாயம், வியாபாரம் முதலிய தொழில் புரிபவரை வைசியர் என்றும், ஷை மூவகைகளில் ஒன்றிலுஞ் சேராது ஷை யோர்களின் ஏவலைக்கேட்பவரை சூத்திரர் என்றும் பரம்பரையைக் கருதாது, ஒவ்வொருவரின் குணந் தொழில் மூலமாக ஷை பல பரம்பரை ஜாதிகளை நான்காகத் திரட்டி சீர்திருத்தஞ் செய்யப்பட்டதாகத் தோற்றுகிறது. ஆனால் ஷை நான்கு வகையில் பரம்பரைப் பிராமணர்கள் ஒரு தொழிலும் புரியாது யாசகம் வாங்கி சீவனம்செய்து வருவதால், தொழில் பெயரற்று பிராமணஜாதி யென்ற பெயரையே பரம்பரையாகத் தரித்தார்கள். மற்றவர்களில் பெரும்பான்மையோர் க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்ற பெயர்களை பரம்பரையாகப் பூணவில்லை; ஏனெனில், இவர்கள் ஏற்கனவே தொழிலாளர்களா யிருந்திருக்கிறதால் தங்கள் பூர்வீகத்தொழில் பெயரையே பரம்பரையாக நாளதுவரையில் வழங்கிவருகிறார்கள். இது நிற்க, ஆதி மநு ஷை பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரச் சாதிகளைப் பரம்பரையாக எல்லோரும் கொள்ள வேண்டுமென்று பலவந்தப்படுத்தி யிருப்பாரானால், (பல பரம்பரைச் சாதிகளற்று) ஷை நான்கு சாதிகள்

**76.** இதுநிற்க, ஷை பலபரம்பரை ஜாதிகள் ஒருவரால் ஏற்படுத்தப்பட்ட தென்பது அயுக்தம். ஆனால், ஷை பல பரம்பரை ஜாதிகள் ஒவ்வொன்றும், தத்தம் இனத்துக்குள்ளே, ஷை இலௌகிக சௌகரியத்தை உத்தேசித்து சம்பந்தம் மாத்திரம் (அதாவது கொள்வினை கொடுப்பினை) செய்துவருகிறார்களே தவிர, மற்ற வித்தியாசங்கள் (அதாவது

---

மாத்திரம் பரம்பரையா யிருந்திருக்கவேண்டும்; இதனால், மநு ஷை நான்கு பிரிவினைகளைப் பரம்பரையாக உண்டுபண்ணவில்லை யென்று தெளிவாகிறது. மேலும் இதன் தொடர்ச்சி 232 முதல் 236-வது இலக்கம் ஈறாகவுள்ள பத்திகளில் காண்க.

(2). பரம்பரைப் பிராமணர்கள் மேற்கூறியபடி உற்பத்தியானபிறகு, அவர்கள் தொழிலற்று யாசகமெடுத்து உண்டுடுத்தித் திரிவதனால் மற்ற தொழிலாளர்களின் தேகங்களைவிட அவர்களின் தேகம் மிகு பளபளப்பாகவும், சுத்தமாகவும் இருப்பதைப் பார்த்து, நம் குடியானவர்களுள் சிற்சிலர் அவர்களைப் போல் சிலவிஷயங்களில் நடிக்க ஆரம்பித்து, அதனால் சில அற்பவித்தியாசங்கள் சென்ற சில நூற்றாண்டுகளாக நம்மவர்களுள் ஏற்பட்டு வருகின்றன.

(3). இது நிற்க, மேற்கூறியபடி பலவகை ஜாதிகள் பரம்பரையான பிறகு,

(க). பரம்பரைப் பிராமண வகுப்பிலிருந்து இயற்கையாய் உதிக்கும் (கோடியி லொருவராகிய) உண்மை ஞானிதவிர மற்றவர்கள் ஷை ஞானிபோல் நடிக்கவும்,

(உ). மற்ற வகுப்புகளிலிருந்து அவ்விதம் உதிக்கும் உண்மை ஞானிகள் (அவரவர் பரம்பரைச் சாதியைச்சுட்டி) மதிக்கப்படாமலும்,

தொடப்படாது, உண்ணப்படாது என்பன) தங்களுள் ஒருவர்க்கொருவர் பாராட்டுவதில்லை.

**77.** அப்பால் நிலங்களை அநேகர் உழுது பயிரிடவும் வீடுகளை நெருக்கமாகக்கட்டவும் ஆரம்பித்தபின் நில அளவு, கால அளவு ஏற்பட்டது.

---

(௩).

"கல்லெறியப் பாசிகலைந்து நன்னீர்காணு
நல்லோர் சொல்லுணரின் ஞானம் வந்துதோன்றும்
பராபரமே,"

என்று தாயுமானவர் கூறியபடி குடியான மெய்ஞ்ஞானிகளின் மெய்யுரையை நம் ஜனங்கள்கேட்டு ஞானம் அடையாமலும், நாளுக்குநாள் நம்நாடு அந்தகாரத்தில் ஆழ்ந்து சீரழிகிறது;

(௪). இப்படியே ஒவ்வொரு பரம்பரைச்சாதியில் இயற்கையாய் உதிக்கும் போர்வீரர்களின் (உண்மை க்ஷத்திரியர்களின்) வீரம் மங்கி, அவரவர் பரம்பரைத் தொழிலைப் புரியும்படி நேரிட்டதனால், க்ஷத்திரிய ஜனத் தொகை குறைந்து அரசிழந்து அடிமைகளானோம்;

(௫). இஃதன்றியும் கோவில், குளம், சத்திரம் முதலிய இடங்களில் ஷை உத்தமஞானிகளின் சௌகரியத்தை உத்தேசித்து ஏற்பட்ட பல தர்மகைங்கரியங்களை (அதாவது, அன்னதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம் முதலிய பல தானங்களை) வேஷதாரிகள் வாங்கி யுண்டுடுத்தி, விருத்தியடைந்து, ஷை யார்களின் பொய்யுரையால் நம் நாட்டில் பொய்மிகுந்து அஞ்ஞானம் வரவரத்தடித்துக்கொண்டே வருகின்றது. ஷை குறைகளைப் பரிசரிக்க பௌத்த மதம், பிரம்ம சமாஜம், ஆரியசமாஜம் முதலியவைகளை ஆதியில் முறையே ஏற்படுத்தின ஸ்ரீகௌதமசாக்கியமுனி அவர்கள், ஸ்ரீராஜாராம் மோகனராய் அவர்கள், சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் முதலிய பல பெரியோர்களும்

**78.** பாடுபட்டுப் பொருள் சம்பாதித்து அதைச் சேர்த்துவைத்து சிலர் அனுபவிக்குங் காலத்தில் துஷ்டர்களால் இடையூறு நேரிட்டபொழுது, பலர்கூடி அதற்குப்பரிகாரம் தேடினார்கள். பின்னர் ஷை

---

வைணவச் சிரேஷ்டராகிய ஸ்ரீ ராமானுசாசாரியாரவர்களும் ஷை சாதிச் சீர்திருத்தம் செய்தார்கள். ஆனால் ஷை பரம்பரைச் சாதிகள் மேற் கூறியபடி தொழில் மூலமாகப் பிறந்ததாகையால், நம் ஜனங்களில் பெரும்பாலார் ஷை சீர்திருத்தங்களை அங்கீகரிக்கவில்லை.

(4) ஆனால், இனிமேல் ஷை பரம்பரை ஜாதிகள் ஒழிந்து, நம் குடியானவர்கள் அனைவரும் திரும்பியும் ஒன்றாகக்கூடுவார்களாவெனின், கூடுவார்களென்றே கருதப்படுகிறது. எவ்விதமெனின் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக மேல்நாட்டுக் கைத்தொழிலாலும், யந்திரத்தாலும் செய்யப்பட்ட வஸ்திரம் முதலிய நானாவிதமான சாமான்கள், கப்பல், ரயில்பண்டி மூலமாகக் கொண்டுவரப்பட்டு சொற்ப விலைக்கு நம் நாடெங்கும் விற்கப்படுவதால், பல கைத்தொழிலாளர்களுக்குத் தங்கள் பரம்பரைத் தொழிலற்று ஒவ்வொருவரும் பழையபடி தத்தம் சக்தி, யுக்திக்குத் தக்கபடி வெவ்வேறு தொழில் புரிய நேரிட்டிருக்கிறது. எக்காரணத்தினால் எந்த லௌகிக சௌகரியத்தை உத்தேசித்து இப்பரம்பரை வழக்கம் ஆதியில் ஏற்பட்டதோ, அக்காரணத்தினாலேயே அதே சௌகரியத்தை முன்னிட்டு இக்கொடிய வழக்கம் நம் நாட்டைவிட்டு அகலுங் காலங் குறுகின.

(5) இது நிற்க, ஷை பரம்பரைச் சாதியிலுள்ள ஒருவர் தற்காலத்தில் பிறச்சாதியில் திருமணஞ்செய்தால், அது இந்து சட்டப்படி (The Hindu Law) அங்கீகாரமற்று, ஷையார் தன் பிதுரார்ச்சிதச் சொத்தில்

காரியத்தை நிறைவேற்றுவதற்கு ஐந்து பேர்கள் இருந்தால் போதுமென்று அனுபவமாக அறிந்து, ஷை ஐவர்களடங்கிய சங்கத்துக்கு "பஞ்சாயத்து†" என்று நாமமிடப்பட்டது.

**79.** கிராமம்: சொற்ப ஜனங்களுடன்கூடி வாழ்ந்து பஞ்சாயத்து மூலமாகக் கிரமம் தப்பாது நிர்வாகிக்கப்பட்ட இடத்திற்குக் கிராமம் என்று பெயரிடப்பட்டதாகத் தோற்றுகிறது.

---

தனக்குண்டான பாகத்தை இழக்க நேரிடுகிறதினால், ஷை சட்டம் சீர்திருத்தப்படும் வரையில், மேற்கூறியபடி நம்மவர்கள் ஒன்றாகக்கூடுவது அசாத்தியமென்று சிலர் கூறுகிறார்கள்.

(6) ஜனங்கள் தங்களுக்கு எது சாதகமோ அதைக் காலத்துக்கேற்றபடி வழக்கமாய் அனுசரிக்க வனுசரிக்க, அதன் மூலமாய் சட்டம் சாதகமானது பிறப்பதுவும் பாதகமானது இறப்பதுவும் இயற்கை.

(7) ஆதலால் ஜனங்களுக்குச் சாதகமான காரியத்தை உத்தமர்கள் (ஐவர்கூடி ஒரு சங்க மூலமாக) முதலில் துணிந்து செய்தால்தான், அதன் நன்மைகள் நாளுக்குநாள் வெளிப்பட வெளிப்பட, பலரும் அதைப் பின் தொடர்ந்து கால அளவில் அவ்வழக்கத்துக்கேற்ற சட்டம் பிறந்துவிடும்.

(8) ஷை காரியத்திற்கு இணங்கும் உடன்பிறந்தோர்களுடைய பிதுரார்ச்சிதமுள்ளவரும், பிதுரார்ச்சிதமற்ற பெரும்பாலாரும் மனமிருந்தால் ஷை காரியத்தைச்செய்ய தடையொன்றுமில்லை.

†பஞ்சாயத்து:--தற்காலம் ஏற்பட்டுள்ள பல சட்டஞான பட்டங்களின்றிச் (அதாவது பி. எ., பி. எல்., எம். எ., பி. எல்., B.A., B.L., M.A., B.L.,) சத்தியம்

**80.** அரசர் சக்கரவர்த்தி: பலகிராமங்கள் சேர்ந்து சத்துருக்களோடு சண்டை செய்ய நேரிட்டு, வெகுசமர்த்துடன் தங்களில் ஒருவர் ஷை சத்துருக்களைவென்று ஜனங்களைக் காத்தபோது, அவருக்குக் காவலன் (அரசன்) என்ற பட்டப்‡ பெயரிட்டு அவருக்குத் தங்களைக் காக்குந் தொழிலையே ஏற்படுத்தி, அதற்குப் பதிலாக ஷையாருக்கு வரி கொடுத்து ஆதரித்துவந்தார்களெனத் தோற்றுகிறது.

**81.** பிறகு பல அரசர்களுக்கு சில ஆபத்து நேர்ந்தபோது, எந்த அரசன் மகா வீரதீரத்தோடு தன்னால் இயன்றமட்டும் ஷையார்களுக்குவேண்டிய உதவி செய்கிறரோ அவரை, ஷை உதவி பெற்றவர்கள் தங்கள் தலைவராகக்கொண்டு சக்கரவர்த்தி என அழைத்து சில சமயம் அவருக்குக் கப்பங் கட்டுவதுமுண்டு.

**82.** பின்னர் ஷை அரசன் அல்லது சக்கரவர்த்தியின் தலைப்பிள்ளைக்கும் அதே மாதிரி பட்டங்கொடுத்து ஆதரித்து, அதைப் பரம்பரையாக்கி நாளது வரையில் ஷை வழக்கம் நடந்துவருகிறது.

**83.** ஷை அரசன் அல்லது சக்கரவர்த்தியின் கீர்த்தி, பிரதாபம் முதலிய உன்னத பதவியைப் பார்த்து

---

அருள்நீதிகொண்டு வெகு யுகங்களாக பஞ்சாயத்தார்களும், அரசர்களும், சக்கரவர்த்திகளும், துஷ்டநிக்கிரகஞ் சிஷ்டபரிபாலனஞ்செய்து சுகமாகக் காலங்கழித்துவந்தார்கள். ஷை சத்தியம் அருள்நீதியைக் கைவிட்டு சென்ற சுமார் 1000 வருடங்களாக நாம் கடைப்பட்டோம். ஆதலால், இனியாகிலும் ஷை நன்னெறியைக் கடைப்பிடிப்போமானல், மறுபடியும் இவ்வுலகில் மகா உன்னத நிலையையடைந்து நாம் தலைப்படுவோம் என்பதற்கு ஐயமே இல்லை.

‡ பட்டம் என்றால் பதவி என்று பொருள்.

மற்றொருவன் பேராசைகொண்டு ஷெயாருடன் அக்கிரமமாகச்சண்டையிட்டு ஒருசமயம் தான் ஜெயித்து அப்பெயர்பூண்டு வரி வசூலித்து அரசுபுரிவதுமுண்டு.

**84.** பட்டினம்: பட்டம் பெற்றவரும் (அதாவது அரசரும்) அவரது இனம் ஆன மந்திரி, சேனை முதலிய பாளையப்பட்டும் எந்த இடத்தில் வசித்தார்களோ, அந்த இடத்தில் ஜனங்கள் கூடிப் பயமற்று வாழத்தலைப்பட்ட போது ஷெ இடத்திற்குப் பட்டினம் என்று பெயர் வந்ததாகத் தோற்றுகிறது.

**85.** இப்படி கிராமங்கள் பட்டினங்களான பிறகு, நாளுக்குநாள் ஜனங்கள் விருத்தியடைந்து கல்வி, நாகரிகம் முதலியவைகளில் மிகத்தேர்ச்சியடைந்தார்கள்.

**86.** இது நிற்க, ஜாதியைப் பாரம்பரையாகக்கொண்டு வெகு நாளான பிறகு, ஒவ்வொரு ஊரிலுள்ள சில ஜாதியர்கள் பிற ஊரிலுள்ள தத்தம் இனங்களில் சம்பந்தம் பண்ணிப் போக்குவரவு முதலானவைகளால் ஏற்படுஞ் சங்கடத்தை முன்னிட்டு, உள்ளூரிலேயே சம்பந்தஞ் செய்யஆரம்பித்து தூரசம்பந்தம்நின்றுபோய்விட்டது.

**87.** இவ்விதம் வெகு காலமான பிறகு ஒருவர் மற்ற ஊரிலுள்ள தன் ஜாதியாரிடத்தில் சம்பந்தம்பண்ணின போது, அவர்களை இகழ்ந்து தங்கள் கூட்டத்தினின்று விலக்கிவிடுகிறார்கள். இப்படி ஒரே தொழில்செய்து வந்த ஒரே ஜாதியில் அனந்தவகை ஏற்பட்டது.

**88.** மேற்கூறியபடி ஏற்பட்ட அனந்தவகைகளுக்குள் ஐதர், டிப்பு முதலியவர்களுடைய கலகத்தால் ஜனங்கள் அடிக்கடி இடம்பெயர்ந்து வசிக்குங்காலத்தில், ஒன்றாக்கொன்று பதிவிரதாபங்கம் உண்டோவென்று சந்தேகித்து ஒவ்வொருவரும் தம்முடன் சேர்ந்து வசித்த தம்கிட்டின உறவினர்களையே சிறப்பித்து ஷெ உறவினர்களுக்குள்ளேயே சம்பந்தஞ்செய்யும்படி நேரிட்டது.

**89.** இதனால் சில கூட்டங்களுள் சம்பந்த உறவு அதிகக் குறைவாகி அதாவது நாலைந்து குடும்பங்களுக்குள்ளாகவே சம்பந்தஞ் செய்யும்படி நேர்ந்து, அவைகள் மிகவும் க்ஷீணிக்கிறது.

**90.** இப்படித் தொழில் மூலமாகப் பரம்பரை ஜாதிகள் பிறந்த பிற்பாடு ஒரு ஜாதியிலுள்ளவர் மற்றொரு ஜாதியில் கலியாணஞ் செய்து சந்ததி யுண்டானால், அவர்களை வேறுஜாதியாகப் பாவிக்கப்பட்டு அப்படிச் சில வகைகள் உண்டாயின. இவர்களைத் தாழ்வாகச் சொல்லுவதுமுண்டு. இது நீதியல்ல. (ஆனால் பதி விரதா பங்கம் நேரிட்டு அதன் வழியாகவந்த சந்ததியை இழித்துரைப்பது ஜனங்களின் க்ஷேமத்தை உத்தேசித்துச் சொல்லப்படுதலால், அது குற்றமில்லை. அச்சந்ததிகளும் சன்மார்க்கத்தை மறுபடியும் ஐந்தாறு தலைமுறைவரையில் கடைப் பிடிப்பார்களானால், அத் தோஷம் மறைந்து மதிப்பு ஏற்படும்; அப்பொழுதும் அவர்களைத் தூஷிப்பது உசிதமல்ல). பதி விரதம் பத்தினி விரதம்† என்றதின் நோக்கமே குடும்பத்திலுள்ளவர்கள் பிரமேக வியாதியால் பீடிக்கப் படாமலிருக்கும் பொருட்டு ஏற்பட்டதேயன்றி வேறன்று.

---

† ஷை இரு விரதங்களும் இல்லறத்தில் மிக அவசியமாயினும் பதிவிரதம்போல் பத்தினி விரதம் ஆடவர்களால் நன்கு மதித்து காக்கப்படுவதில்லை; ஏனெனில்,

1. ஒரு கன்னிகை அல்லது ஒரு கைம்பெண் பதிவிரதா பங்கம் செய்தால், தனது கர்ப்பமே (வேறு எவ்வித சாக்ஷியன்னியில்) தனது மானத்தைச்சிதைத்து, பல துன்பங்களுக்குத் தன்னை ஆளாக்குகிறது; ஆடவருக்கோ அவ்வித சங்கடமில்லை யாதலால், பதிவிரதம் போல், பத்தினி விரதம் அவ்வளவு பயபக்தியுடன் காக்கப்படுவதில்லை; மேலும்,

**91.** இதையறியாமல் சிலர், இவ்விபசார சம்பந்தத்தால் பிறக்கிற பிள்ளைகளுள் இயற்கையாய் உதிக்கும் யோகி ஞானிகள் தங்களுக்குள்ள மதிப்பை நம்தேசத்தில் பெறுகிறார்களாகையால், சிலபேர்கள் அவர்களுக்கு ஏற்படும் மதிப்பு அவர்களின் யோக ஞான நிலைக்கென்றும் அவர்களுடன் சம்பந்தம் பண்ணவல்லவென்றும் உணராமால், அதையே (ஸ்டியார்கள்

---

2. (க). "தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற் கொண்டிருப்பன முதற்
றேகங்களத்தனையு மோகங் கொள்பெளதிகஞ்
சென்மித்தவாங் கிறக்கும்,"

என்று தாயுமானவர் கூறியபடி (மோகத்தை ஜெயித்த மகாயோகிகள், ஞானிகள் தவிர) பஞ்சபூத சரீரமுடைய சகல ஜீவராசிகளுக்கும் மோகமுண்டு. நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய நற்குணங்கள் வாய்ந்த ஒரு பெண் ஸ்டி இச்சையை வெளியிட அஞ்சி தன் மனமுழண்டு, தன் மனதின் பிரதான அவயவங்கள் கெட்டு, தன் தேகம் படிப்படியாய் நசித்து துக்கமடையு மாதலால், ருதுவான பிறகு பெண்ணுக்குக் கூடிய சீக்கிரத்தில் மணம்புரியத் தவறிடில், அது பாபம் என்று கருதப்படுகிறது; ஆனால் ஆடவர்களில் அநேகர் தக்க வயதடைந்தும் வெகுகாலம் பொறுத்து பொருள் தேடிய பிறகு மணம் புரிகிறார்களாகையால், ஸ்டி இச்சையைத் தடுக்க இயலாமல் சிலர் வேசி சகவாஞ் செய்ய நேரிடுகிறது. ஸ்டியார்களின் கஷ்ட நிலையை உத்தேசித்து; அதை ஒரு பெருங் குற்றமாக ஜனங்கள் கொள்ளுவதில்லை. இது வயதான பிரமசாரிகளுக்கே பொருத்தம்.

(உ). இதுநிற்க, ஆடவர் சந்ததியற்றாலும் அல்லது தாரமிழந்தாலும் மறு கலியாணம் செய்கிறது வழக்கம்; ஆனால், ஆடவளுக்கோ அப்படிக்கில்லை. ஏனெனில், சிலர் பிறர் உடுத்தின ஆடையை தான் உடுத்துவதில்லை.

பெறும் மரியாதையையே) ஒரு ஆதாரமாகச் சொல்லி தங்களது கெட்டுப்போன நிலையைச் சிலாகித்துப் பேசி, உயர் குலங்களில் சம்பந்தஞ் செய்ய முயலுகிறார்கள். இது ஒழுங்கன்று. எவ்வளவு ஞானியாயிருப்பினும் விபசார தோஷமேற்படுமாயின் நற்குலத்தவர் அவருடன் அல்லது அவர் சந்ததியுடன் சம்பந்தம் பண்ணக் கூடாது. ஏனெனில், பதிவிரதா பங்கம் விருத்தியாகி ஜனங்கள் நசிக்கும். ஆனால் அவரவரின் யோகஞானத்துக்குரிய மரியாதையை அவரவருக்கு அவசியம் கொடுக்கவேண்டும். அப்பெரியோரும் உலகத்தவர் நெறிக்கு விரோதமாய் நடவார்.

---

அதுபோல, சத்திய நெறி தவறாத சிலர் மறு கலியாணம் புரிய இசைவது இல்லை. இயற்கைக்கு விரோதமாய் ஷெயார் தம் மோகத்தை சத்திய பலத்தால் ஜெயித்ததினால், ஷெயாரை ஜனங்கள் விசேஷமாக மதித்து சிறப்பிப்பது வழக்கம். ஷெ சிறப்பை உத்தேசித்து ஜனங்களுள் பெரும்பாலர் வெகுகால அளவில் படிப்படியாய் அதை அனுசரித்து வழக்கமாக்கிக் கொண்டதாகத் தோற்றுகிறது.

(ங). ஷெ ஜனங்கள் சத்தியநெறி தவறாமல் இருக்கும் வரையில், தங்கள் மனதை அடக்கி மோகத்தைச் ஜெயிக்க சாத்தியமாயிற்று; ஆனால், தற்காலத்தில், சத்தியநெறி மிகக்குறைவுற்றிருக்கிறதால், மனதை நன்னெறியில் நிறுத்த இயலாமல் சிலர் மோசம்போய், அகௌரவத்திற்கு ஆளாகிறார்கள்.

(ச). மேற்கூறிய காரணங்களினால் ஒரு விதவை (தான் பிரியமுற்றால்) மறுகலியாணஞ் செய்வித்துக் கொள்வதே சீர். இவ்வழக்கம் சத்திய நெறி தவறிய கள்ளர் முதலியோர் இன்றளவும் அனுஷ்டித்து வருகிறதை நன்கறிக.

**92.** இதுநிற்க, தொழில்களில் மிக்க லாபந் தருவன வற்றைச் சிறப்பித்தும், சொற்ப லாபந் தருவனவற்றை இழிவுபடுத்தியும் கூறப்படுகிறதினால், தொழில் புரிபவர் களுள் மேல் ஜாதி, கீழ் ஜாதி யேன வித்தியாசம் பிறந்தது. உதாரணமாக, ஒரு தச்சன் எவ்வளவு கெட்டிக்காரனாய் இருப்பினும் அவனுக்குத் தினக் கூலியே அன்றி வேறன்று. அவனின் நுட்ப அறிவிற் காக சாதாரண தச்சனது கூலியைவிட சற்று அதிகக் கூலி கொடுப்பார்களே யன்றி, வேறு பெருந்தொகைக்கு இடமில்லை; ஆனால், வியாபாரமோ அப்படிக்கல்ல. முதலில் சொற்பமாக ஆரம்பித்தாலும் பின்னர் யோக பலத்தால் மிக்க தனவானாகி உலகில் சிறப்படைய ஏது வாகும். மேலேகண்ட காரணங்களினால் ஜாதியில் மேல், கீழ் ஏற்பட்டதேயன்றி வேறன்று.

**93.** ஆதியில் ஒவ்வொருவரும் தனது சக்தி யுக்திக் குத் தகுந்தபடித் தொழில் செய்ததுபோல, ஒவ்வொரு பிள்ளைகளும் தத்தம் சக்தி யுக்திக்கேற்ற தொழில் புரிவதே முறை. ஏனெனில், ஒவ்வொருவரும் தனது ஜாதகரீதிப் பிரகாரம், அதாவது, தான் ஜனிக்குங் காலத்தில் தனக்கேற்பட்ட நவக்கிரக சக்திக்குத் தகுந் தபடி தான் இப்புவியில் விளையாடுவதே பாங்கு.

**94.** அப்படிக்கில்லாமல் தகப்பனுடன் வசித்த பழக் கத்தால் வழக்கம் வழக்கம் எனும் கொடும்பேய்க்கு ஆளாகி, பிள்ளைகள் தங்களது இயற்கையறிவு விர்த்தி யடையாமல் மங்குகின்றன. இதனால் இயற்கை யாக நம் நாட்டில் உதிக்கும் அதி தீவிரவான் களின் அறிவுபயன்படாமல் தேசம் அந்தகாரத் தில் நாளுக்குநாள் ஆழ்கின்றது.

**95.** பலதொழில்களும் அவைகள் மூலமாகப் பல ஜாதிகளும் ஒரே கூட்டத்தினின்று (அதாவது குடியான வர்களான பிறகு) ஏற்பட்டதனால், தொழிலாளர்கள்

அனைவரையும் குறிக்கும்படி இப்புஸ்தகத்தில் "இந்து குடியானவர்" என்ற ஆதிப்பெயரையே பிரயோகிக்கப்பட்டது.

**96.** இதுநிற்க, சிலஜாதிகளைப் (அவைகளது உள்ள நிலையை உள்ளபடி உணராமல்) பலவாறாக இகழ்ந்தும், பஞ்சமர்களோடு தாறுமாறாக ஒப்பிட்டும் சிலர் பேசுகிறார்கள். இது விவரம் வேளாளர், படையாட்சி, கோகுலம், கம்மாளர், கொல்லாவிரதர், பஞ்சமர், பரம்பரைப் பிராமணர் என்ற தலைப்புகளின் கீழ் காண்க.

**97.** வேளாளர்: "வேளாளர்" என்றால் "வேளாண்மைத்தொழில் செய்பவர்" என்று பொருள்; அதாவது, உழுது பயிரிடுபவர். இத்தொழிலானது பொய், வஞ்சகம், சூது முதலிய துர்குணங்களுக்கு ஒரு அரிய அவிழ்தமாயிருக்கிறது. இத்தொழில் புரிபவர்களது மேன்மையைத் திருவள்ளுவ நாயனார் அவர்கள்,

1. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்."

2. 'இரவாரிரப்பார்க் கொன்றீவர்
கரவாதுகை செய்தூண் மாலையவர்,"

என்று கூறியிருப்பதை நன்குணர்க. அதாவது விவசாயத் தொழில் செய்பவர்கள் மிகுந்த சுவாதீனர்களாயும் தர்ம சீலர்களாயும், தாங்கள் யாசக மெடுக்காதவர்களாயும் இருப்பார்களென்பது ஆன்றோர் கருத்து. கம்பரும்,

"செட்டிமக்கள் வாசல்வழி செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழி போகோமே—முட்டிபுகும்
பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர்காண்,"

என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**98.** இதுநிற்க, "கள்ளர் மறவர் கனத்ததோரகம்படியர்
மெள்ள மெள்ள வந்து வெள்ளாளராஞர்"

என்ற வசனத்தின் உட்கருத்தை யறியாது இத்தொழில் புரிபவர்களைச் சிலர் இது பலஜாதி கலந்துள்ளதென்று இகழ்கின்றார்கள். ஐயோ இதென்ன அபிப்ராயம்! உழைத்துச்சாப்பிட அஞ்சி மிருகத்தன்மையுடன் பிறர் சொத்தைத் திருடித் தின்னும் ஒருவனைக் **கள்வன்** என்றும், கால அளவில் அத்தொழிலை விட்டு வேடத்தொழிலைச்செய்து சீவிக்கும்பொழுது அவனையே **மறவன்** என்றும், ஷியான் ஷி தொழிலை விட்டு, தோட்டம் வயல் முதலியவைகளுக்குக் காவல்காக்குந்தொழிலில் அமர்ந்தபொழுது அவரையே **அகம்படியர்** † என்றும், அதற்கப்பால் இத்தொழிலையும்விட்டுத் தானே உழுது பயிரிட்டு, (அதாவது, **வேளாண்மைத் தொழில்** செய்து) அதனால் தானும் புசித்துக் கூடியமட்டும் பிறருக்குங் கொடுத்துதவும்பொழுது, அவரையே **வேளாளர்** என்றும் அழைப்பதேமுறை. இது ஒரு பையனைப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி படிக்குங்காலத்தில் **மாணாக்கன்** என்றும், பின்பு இராமாயணம், பாரதம் முதலிய பெருஞ்சாஸ்திரம் படிக்கும் பொழுது **சாஸ்திரி** என்றும், அப்பால் அரியதத்துவ ஞான நூலை ஆராய்ந்து அறிந்துணரும்பொழுது **ஞானி** யென்றும், முறையே பையனது விருத்தியான நிலைக்குத்தக்கபடி மதித்து அழைப்பதே சீர்.

**99.** அப்படிக்கில்லாது தத்துவநூல் ஆராய்ந்தறிந்துணரும் ஒருவரை (ஷி யார் முன்னிருந்த நிலையைச் சுட்டி) அரிச்சுவடி படித்த மாணவனிவன் என்று சொல்லி அவமதிப்பது, சொல்பவனது மடமையே யன்றி வேறன்று.

**100.** இவ்விதம் உயர்ந்தோரைத் தாழ்ந்தோரென்றும், தாழ்ந்தோரை உயர்ந்தோரென்றுங்

---

† அகம்படியர் = மனம்படிந்தவர்

கூறி, பாழும் பரம்பரைப் பைத்தியங்கொண்டு ஒற்றுமையற்று உயர்நிலை கெட்டோம்.

**101.** ஷ வேளாண்மைத் தொழிலால் ஒருவரது பொய், வஞ்சகம், சூதுமுதலிய துர்க்குணங்கள் புடைப் பட்டுப்போய்க் குழந்தைப் பிள்ளையினது குணம் போல் ஷ யாரின் மனம் பரிசுத்தமா யிருப்பதுகண்டு, நம் ஜனங்கள் ஷ யாருக்கு "பிள்ளை" என்று பட்டஞ் சூட்டி முற்காலத்தில் வழங்கியபிறகு, ஷ யாரின் சந் ததிகள் அதைப் பரம்பரையாகத் தரித்ததாகத் தோற்று கிறது. ஷ குணமுடையவர் எவராயினும் அவரே இப்பட்டத்திற்கு உரியவராவர்.

**102.** ஷ குலத்தவர்களில் சிலர் பெரும் "முதல்" (மூலதனம்) வைத்து வியாபாரம் செய்வதனால் "முதலியார்" என்றும், ரூபாய்க்கு நாலுபடி தானியம் வாங்கி மூன்றேமுக்கால் வீதம் விற்பவருக்கு, சேட்டு (ஆதாயம்) கால்படியானதால், ஷ சேட்டுசெய்த வரைச் "செட்டியார்" என்றும், ஜனங்கள் அவரவருக் குரிய பட்டப்பெயரிட்டழைத்து, அதன் மூலமாய் ஷ யாரின் சந்ததிகளும் ஷ பட்டங்களைப் †பரம்பரையா கத் தரிப்பதுண்டு.

**103.** காலத்தில் நிலத்துக்குத் தக்க தானியங்களை தானே விதைத்து, முளையும் பயிர்களுக்கு வேண்டிய எருப்போட்டு, விளைந்தபின் தருணத்தில் அறுத்து, கிடைத்ததில் ஒரு பாகத்தை விற்பனை செய்யவேண்டி யிருப்பதால், மேற்படி தொழிலாளர்களுக்கு வைசியத் தன்மை இயற்கையாகவே பொருந்தும். இவ்விதம் பிறர்ஏவலற்று தாங்களே சுயமாக உழைத்துசீவிக்கும்

---

† பரம்பரையாக ஷ பட்டங்களைப் பூண்டவர்கள், அவை களைத்தரிக்கும் மற்றவர்களைக்கண்டு பாயபுபோல் சீறுவதில்லை; ஏனெனில் ஷ பட்டங்கள் அந்தந்தத் தொழிலாளர் அனைவருக் கும் உரியதென்பது அவர்கள் கருத்துபோலும்.

"சுவாதீனர்களைச்," சூத்திரர்கள் என்று கூப்பிடுஞ் சில மந்த மதியீனர்களுக்கு எந்த விதம் உரைத்து நல்லறிவு புகட்டுவதோ யாம் அறியோம்.

**104**. படையாட்சி: படை=சேனை, ஆட்சி=ஆளுகை, படையாட்சி=சேனாதிபதித்துவம்; இது தொழிலாகு பெயராய் போர்வீரரை உணர்த்திற்று.

**105**. நமது பூர்வீக அரசர்களில் சிலர் சீர்கேடுற்றபொழுது ஷை யார்களின் சேனையிலமர்ந்துள்ள போர் வீரர்கள் (பிரத்தியேகமான கைத்தொழி லற்றவர்களாகையால்) பற்பல இடங்களில் சென்று நானாவித தொழில் புரிந்து, அந்தந்தத்தொழிலுக்குரிய பட்டப் பெயர் (அதாவது பூபதி, பிள்ளை முதலியன) பூண்டு வசித்துவருகிறதாகக் காணப்படுகிறது.

**106**. "அறியாத தேயத்தா னுதலன் மூத்தா
னிளையா னுயிரிழந்தா னஞ்சின னுண்பா
னரசர் தொழிறலை வைத்தான் மனையாளென்
றொன்பதின்மர் கண்டீ ருரைக்குங்கால்
மெய்யான வாசாரம் வீடு பெற்றார்,"

என்று ஆசாரக்கோவையில் கூறியபடி அரசனது தொழிலைப்புரிபவர்களுக்கு ஆசாரம் அனுஷ்டிக்க முடியாது. அரசனது தொழிலானது "துஷ்ட நிக்ரகம் சிஷ்டபரிபாலனம்" என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயமே. உழுதிட்டபயிர்களைக் காட்டுமிருகங்கள் அழித்தாலும், அன்னியர் படை எடுத்தாலும், அல்லது உள்நாட்டில் கலகம் ஏற்பட்டாலும் போர்வீரர் தம் பெண்டு பிள்ளை, தாய் தகப்பன், முதலியவர்களைத் துறந்து காடுசென்று மிருகங்களைக்கொன்றும், படையெடுத்தவர்களோடு எதிர்த்துப் போர்புரிந்தும் அல்லது உள்நாட்டுக்கலகத்தை யடக்கியும், உலகத்திலுள்ள மற்ற எல்லா தொழில் செய்பவர்களையும் இரட்சிக்கிறார்களாகையால், திருவேங்கட சதகத்தில், ஸ்ரீமான் நாராயண பாரதியா ரவர்கள், "......ரணசங்க்ராம வீரனென்று"

என்று இதன் 260-வது பத்தியின் கீழ்கண்ட எட்டு வகை முக்கியமனிதர்களில் ஒருவராக மேற்படிதொழில் புரிபவரைச் சிறப்பித்துக் கூறியிருப்பதை நன்குணர்க.

**107.** தற்காலம் இராணுவத்திலமர்ந்துப் போர்வீரர்களாக வேலை செய்பவர்களையும் பட்டினங்களிலுள்ள நாகரிகமான உத்தியோகம், வியாபாரம் முதலிய தொழில் புரிபவர்களையும், நடை, யுடை, பாவனைகளில் ஒப்பிட்டுப் பார்த்தோமானால், போர்வீரர்கள் நாகரிகக்குறைவாகவேயிருக்கிறதாகக் காணப்படுகிறது; ஏனெனில், அவர்களுக்குத் தினங்கற்பிக்கும் வித்தை துஷ்டர்களையும், மிருகங்களையும் நாசப்படுத்து மியல்புடையதாயிருக்கிறதனால், அவர்களின் பெரும்பான்மை யோருக்கு கோரத் தன்மை பொருந்துமேயன்றி சாத்துவிகத் தன்மை பொருந்தாது; உதாரணமாக,பரம்பரையாய்க் கொல்லா விரதம்பூண்டு, கைத்தொழிலற்றுச் சீவிக்கும் சுத்த சுசீகரமுள்ளவர்களில் சிலர் சமீபத்திலேற்பட்ட இந்தியக் காப்புப்படையில் (The Indian Defence Force) போர்வீரர்களாக அமர்ந்து, மூன்று மாதம் கை பழகுங்காலத்திற்குள் தங்களது தேசு, நாகரிகம் முதலானவைகளைப் பெரும்பான்மை இழந்தார்களென்பதை எவராலும் மறுக்கமுடியாது.

**108.** மூன்று மாதத்திற்குள் இராணுவப்படையில் கைபழகுங்காலையிலேயே நாகரிகக்குறைவு ஏற்படுமானால், தலைமுறை தலைமுறையாக இராணுவப்படையிலமர்ந்து சொற்ப சம்பளத்தில் குடும்பங்களைக் காப்பாற்றிக்கொண்டுவருகிறவர்கள் எங்ஙனம் அதீதசுத்த சுசீகர நாகரிக வாழ்வைப்பெற ஏதுவாகும்?

**109.** மேலும், ஷை க்ஷத்திரியத்தொழில் புரிவோர் ஷை தொழிலுக்குரிய ஆசாரத்தைக் கடைப்பிடிப்பதே வருணாச்சிரமதர்மம். அப்படிக்கில்லாமல் தொழிலற்று கொல்லாவிரதம் பூண்டொழுகினவரின் ஆசாரத்தை க்ஷத்திரியத் தொழில்புரியும் ஷையாரின் மகன் அனுசரித்தால் ஒன்றுக்கொன்று

முரண்பட்டு இரண்டுங்கெடும். மூடமதியால் பாழும் பரம்பரைப் பைத்தியங்கொண்டு வருணாச்சிரம தர்மம் இன்னதென்று உள்ளபடியுணராது அதற்கு முற்றும் மாறாக ஒவ்வொருவரும் தன் குணந்தொழிலுக் கொவ்வாத ஆசாரம்புரிந்து, உள்ளொன்றும் புறம்பொன்றுமாய் பொய்வேடம்பூண்டு நிலை தடுமாறினதினால்தான் சொல்லுறுதியற்று, மதிப்பிழந்து, ஒருவர்க்கொருவர் நம்பிக்கையின்றி ஐக்கிய பலம் (United Strength) அழிந்து அடிமைகளாயிருக்கிறோம்.

**110.** இது நிற்க, நமது பூர்வீக அரசர்களில் பலர், சீர்கேடுற்றதால் ஷை குலத்தவர்கள் போர்வீரத்தொழிலற்றும், களவு, யாசகம் முதலிய பொல்லாவழியில் பெரும்பான்மையோர்புகாமல் மகா வீரத்தன்மையாய் ஆணும், பெண்ணும் எத்தொழிலும்செய்து சாப்பிடுவதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் அவர்களைப் புகழ வேண்டியதிருக்க, இழிவுபடுத்துவது மதியீனமன்றோ?

**111.** இப்படிப் போர்வீரர்களை இகழ்வதனால், ஜனங்கள் உலகத்துக்கு மகா அத்தியாவசியமாயும், மிகு சிறப்புற்றதாயும் உள்ள தொழிலை இகழ்ந்து குடியானவர்களிலுதிக்கும் வீரியகுண சிலர்கள் ஷை போர்வீரத்தொழிலைக் கையாடாது ஒதுங்கி, நம் நாட்டில் வீரதீரசூரத்தனம் மங்கிப்போகின்றது.

**112.** தற்காலம் மேற்கண்ட காரணத்தினால் தென்னிந்தியாவில் பெரும்பாலார் வீரத்தன்மையற்றிருப்பதை உத்தேசித்து, மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களும் (His Majesty the King Emperor of India) "சண்டைபோடும் திறமை உங்களுக்கு இல்லையே," என்று ஷை பாகத்திலிருந்து இங்கிலாந்து சென்ற ஒரு பிரதிநிதியிடத்தில் சொன்னதாக 20—1—1919-ல் வெளியான "நியு இந்தியா" (New India) என்னும் ஆங்கிலப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**113.** இது நிற்க, சமீபத்தில் ஐரோப்பாவிலேற்பட்ட பெருஞ்சண்டையில் இராஜ சிரேஷ்டரான வேல்ஸ் இளவரசர் (H. R. H. The Prince of Wales) போர்க்களத்திலிருந்து மோட்டார்கார் என்னும் ஒரு நூதனரதத்தில் போகும்பொழுது, வழியில் தங்கள் படையைச் சேர்ந்த ஒரு இராணுவ வீரன் (Soldier) நடந்துகொண்டிருந்ததைப் பார்த்து, தான் ஏறிச் செல்லும் பண்டியில் இடமிருக்க, தன் போர்வீரன் நடப்பானேனென்று கருதி, பண்டியை நிறுத்தி, அப்போர் வீரனைக் கூப்பிட்டு, தன் பண்டியிலேற்றிக்கொண்டு அப்போர் வீரனோடு சாதரணமாய் சம்பாஷித்துச் சென்றனராம். இதுவல்லவோ அன்பைப் பெருக்கி எவராலும் பிரிக்கவொண்ணு ஒற்றுமையை உண்டு பண்ணும்? இதனல் மேல் நாட்டில் சாதாரண போர் வீரருக்குரிய சிறப்பு இன்னதென்று நாம் ஒவ்வொருவரும் இனியாவது நன்ருய் அறியவேண்டும்.

**114.** நம் நாட்டிலும் முற்காலத்தில் ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணன், பீமன், அருச்சுனன் முதலியவர்களுக்கு ஏற்பட்ட மதிப்புக்கு அவர்களுடைய போர் வீரத்தன்மையே ஒரு பெருங் காரண மன்ருே?

**115.** ஆகையால் குடியான பிரபுக்களே! ஷை விஷயத்தை நன்ருயுணர்ந்து போர் வீரர்களுக்குரிய சிறப்பை அவர்களுக்குத் தந்து நமது நாட்டில் வீரத்தன்மை விருத்தியாகி ஒவ்வொரு வீரரும் மற்றவர்களைத் தன்னினமாகக் கருதி அவர்களைக் காத்து இரட்சிக்க முன் வரும்படிச் செய்வதே நமது கடமை யென்று, நாம் ஒவ்வொருவரும் நன்ருய் மனதில் கொள்ளல் வேண்டும்.

**116.** கோகுலம்: பசுவை வளர்த்தாதரிக்கும் ஒரு கூட்டத்திற்கு கோகுலம் என்று பெயர். இது ஆயர் குலமெனவும், இடையர் குலமெனவும் யாதவ குலமெனவும் வழங்கப்படுகிறது. இதன் 70-வது பத்தியில் சனங்கள் மாடாடு வைத்துப் பரிபாலித்து, கூட்டமாக வசித்து விருத்தியான வகைக் கூறப்பட்டிருக்கிறது,

அதுமுதல் நாளதுவரையில் ஷ தொழிலைப் பரம்பரையாகக்கொண்டதோர் கூட்டம்.

**117.** கோன்: "செங்கோல்" என்றால் செம்மையான கோல் என்பது பொருள்; அதாவது ஒழுங்கான கோலைப்போல, உலகத்தில் நீதி கோணாமல் நடத்தும் "அரசர்" அல்லது "தலைவர்" எனப் பொருள்படும். ஷ அரசனை ஜனங்கள் "கோன்" என்று அழைப்பது வழக்கம். இவ் வழக்கத்தை அனுசரித்து ஷ குலத்திலுதித்த சில அரசர்களுக்கு ஷ பட்டம் சூட்டப்பட்ட பிறகு, அவர் சந்ததிகளும் அவரது சேனையிலுள்ளவர்களும் படிப்படியாய் ஷ குலத்தினர்கள் முழுமையும் இப்பட்டத்தை பரம்பரையாகத் தரித்துக்கொண்டதாகத் தோற்றுகிறது.

**118.** மேற்படி பட்டம், செங்கோல் நடத்தும் அரசர்களுக்கும், சுவாதீனமாய் வாழும் பற்பல தலைவர்களுக்கும் பொருந்துமே யொழிய மற்றெவருக்கும் உரியதல்ல. ஷ "கோன்" என்னும் பட்டத்துடன் "ஆர்" அல்லது "ஆன்" விகுதிசேர்த்து "கோனார்" அல்லது "கோனன்" என்று வழங்கப்படுகிறது.

**119.** சிலர், குறிஞ்சி நிலத்திற்கும் மருதநிலத்திற்கும் இடையிலுள்ள முல்லை நிலத்தில் வசிப்பவர்களுக்கு "இடையர்" எனப்பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள்; சிலர், தற்காலம் இடையரெனப்படுவோர் அந்த இடையர்களன்றென்று கூறுகிறார்கள்.

**120.** இது எங்ஙனமாயினும் ஆகுக. சாதிப்பெயரையே ஒரு ஆதாரமாகக்கொண்டு உழைக்காமல் சீவிக்கும் ஒரு கூட்டமன்று; ஆகையால் இது விஷயத்தில் இங்கு இதுதான் சரி அல்லது அதுதான் சரி யென்று நிலைநிறுத்தத் தேவையில்லை. ஒவ்வொரு தொழிலாளருக்குள்ள மதிப்பைக் கூட்டவும் குறைக்கவும் ஒருவருக்கு எளிதல்ல.

**121.** பின்பு இத்தொழிலுக்குரிய தன்மை இன்னதென்று பார்க்குமிடத்தில், ஷ தொழிலாளர்கள்

மந்தை மந்தையாய் மாடாடு வைத்துப் பரிபாலிப்பதனுல் அதாவது,

(1). இவர்கள் பகலில், அவைகளுக்கு ஆகாரமளித்து பசியாற்றுதலினுலும், இரவில் நாய் நரிமுதலிய துஷ்ட மிருகங்களாலும் திருடர்களாலும் அவைகள் இம்சையடையாமலும், நோய்முதலியவைகளால் வருந்தும்போது வைத்தியம் செய்தும், வெயில் மழை முதலிய பலகாலங்களிலும் அவைகளுடன் வசித்து அவைகளைக் காப்பதினுலும், இவர்களுக்கு க்ஷத்திரியத் தன்மையும், சதாசிவராசிகளின்மேல் அன்புபாராட்டுவதால் சீவகாருண்யம், சமரசஞானம் முதலானநற்குணங்களும் இயற்கையாய்ப் பொருந்தும்.

(2). மேலும் மாடு, ஆடு, பால், தயிர், மோர், வெண்ணெய், உருக்குநெய் முதலானவைகளை விற்கும் வகையில் வைசியத்தன்மையும் பொருந்தும். இஃதன்றியும் நுண்ணறிவிலாதவர் (சூத்திரர்) எக்கூட்டத்திலும் சிலருளராகையால், அத்தகையோர் ஷெ கூட்டத்தில்லையென் றுரைப்பது பொருத்தமல்ல.

**122**. மேற்கூறிய காரணங்களினுல் குணந்தொழிலை நோக்குமிடத்து, இக்கூட்டத்தைப் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்கு வருணமுமடங்கிய ஒரு பெருந்தொகுதியென்றே உரைக்கவேண்டும்.

**123**. பட்டினங்களில் நாலு அல்லது ஐந்து கறவை மாடுகள் வைத்துப் பரிபாலிப்பதில், அதிக வருமானத்திற்கு இடமில்லை. அவர்கள் மிகப்பெரு வீடுகட்டிக் குடியிருக்க முடியாததால், சிறிய வீடுகளில் தாங்களும் தங்கள் மாடுகளும் வசிப்பதனுல் அதிகச் சுத்தமாயும், மிகு நாகரிகமாயும் இருக்கமுடியாது.

**124**. ஆனுல் மற்ற தொழில் செய்பவர்களும் வருமானங்குறைந்து சொற்ப சீவனஞ் செய்யுங்காலையில் சுத்தத்திலும் நாகரிகத்திலும் உயர்ந்தவர்களாக இருக்கக்காணேம்.

**125.** இவ்விதம் குடியானவர்கள் அனைவரும் களவு யாசகம், இவ்விரண்டையும் கடிந்து எத்தொழிலும் செய்து கஷ்டப்படுவது ஏனென்றால், தங்களது சுவாதீனம் எனும் பெருஞ்செல்வத்தைக் காப்பாற்றுவதற்கேயாம்.

**126.** சில இடங்களில் ஷை குலத்தோர் மிகு இழிவான தொழிலைச் செய்கிறார்களென்றும், அது ஷை குலத்துக்கு அகௌரவ மென்றும், சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

**127.** நம் நாட்டில் அரிச்சந்திரன், நளன் முதலானோர்கள், தங்கள் கொடிய திசையில் மயானங்காக்குந் தோட்டிக்குத் தோட்டியாகவும் ருதுபர்ணனுக்குத் தேர்ப்பாகனாகவும் முறையே உழைத்துச் சாப்பிட்டார்களென்று நமது தெருக்களில் பண்டித பாமரர்கள் அனைவரும் இலவசமாக எளிதில் தெரிந்து கொள்ளும்படி நம்மவர்களில் சிலர் நாடகம் நடித்துக் காட்டுவது சகலருக்கும் தெரிந்த விஷயம்.

**128.** மகாசக்கரவர்த்திகளே † ஷை தொழிலைச்செய்தார்களென்றால், கேவல நிலைமையிலுள்ள குடியானவர் எதுதான் செய்யப்படாது?

**129.** தனது சக்திக்கும், யுக்திக்கும், சமயத்துக்கும் தக்கபடி வெகு பிரயாசையுடன் எத்தொழிலுஞ் செய்து சீவனஞ்செய்யும் மகாவீரர்களைத் "தாழ்வாகக் கூறுவது தப்பு" என்று அறிவது எக்காலமோ தெரிய

---

† சிலர் ஷை சக்கரவர்த்திகள் இவ்வுலகில் உயிரோடிருந்து அரசாட்சி புரியவே யில்லை யென்றும் அவர்கள் சரித்திரங்கள் முழுமையும் கட்டுக்கதைகளென்றும் கூறுகிறார்கள். அப்படியே அவைகள் முற்றிலும் கற்பனைக் கதைகளாகக்கொள்ளினும் அவைகளின் சாராம்சத்தை பண்டிதர்களும் பாமரர்களும் கைப்பற்ற வேண்டுமென்று பல பெரியோர்கள் ஷை சாராம்சத்தை முத்தமிழிலும் இயற்றி, அவைகளை நம் ஜனங்களில் பெரும்பாலார் படித்து, அல்லது கேட்டு நாளது வரைக்கும் அங்கீகரித்து வருகிறார்கள் ஆதலால் அவைகளை இங்கெடுத்து உதகரிக்கலாயிற்று.

வில்லை. பிள்ளைகளுக்கு இன்னின்ன தொழில் செய்வது இழிவென்று கற்றுக் கொடுப்போமாகில், அது பின்னொரு காலத்தில் சிற்சில இடங்களில் தாங்கள் செய்து வந்த தொழில்களுக்கு அபாயம் நேரிடும்போது, தொழிலற்று செய்யத்தகாத காரியஞ் செய்ய ஏதுவாகும். இது பற்றியே நம்முன்னோர்கள் "ஒருவர் செருப்புத் தூக்கியாகிலும் உழைத்துச் சாப்பிட வேண்டும்" என்று அறிவுறுத்தி யுள்ளார்கள். இதை ஷெ குலத்தலைவர்கள் சற்று கவனிக்கவும்.

**130**. ஆனால் ஷெ குலத்திலுதித்த அனைவரையும் இதன் 268 முதல் 289-வது இலக்கம் ஈறாகவுள்ள பத்திகளில் கூறியபடி கல்விச்சாலைகள் அமைத்து ஒவ்வொருவரும் தத்தம் சக்தி யுக்திக்குத் தகுந்த நிலையைத் தான் இவ்வுலகில் அடையும்படி செய்விப்பது மிக்க அவசியம்.

**131**. சிலர் ஷெ கோகுலத்தவர்கள் முன்னாளில் பூநூல் தரித்து காயத்திரி முதலான மந்திரங்கள் செபித்து வந்தார்களென்றும், அது பின்னால் தவறிப் போய்விட்டதென்றும், திரும்பவும் நாம் அதைத் தரிக்க வேண்டுமென்றும் ஷெ பூநூல் தரித்தவர்களில் சிலர் கூறுகிறார்கள்.

**132**. ஒரு காரியத்தை தனது யுக்தியால் தானே செய்யக்கூடிய ஏழு வயதுள்ள ஒரு ஆண் பிள்ளைக்கு, அப்பிள்ளை விவேகியென பிறர் அறியும் பொருட்டு முன்னோர் ஒரு காலத்தில் "பூநூல் தரிப்பதை" ஒரு அடையாளமாகச் செய்தனரென்று தோற்றுகிறது. அவ்விதம் சூக்ஷ்ம விவேகத்தை யறியாது, மேலே சொன்னபடி பூநூல் தரித்த ஒரு தகப்பன் தனது ஆண்பிள்ளைகள் எத்தனை யிருந்தாலும் அத்தனைக்கும், (பிள்ளைகளுள் ஓரபக்ஷம் செய்யக் கூடாதென்று கருதி) அபிமானத்தால் பூநூல் சாற்றி, அதைப் பரம்பரையாகக் கொண்டார்கள் போலும்.

**133.** தற்காலத்தில் விவேகிகளுக்கு அரசாங்கத்தாரால் பட்டம் அளிக்கப்படுவதுபோல், அக்காலத்தில் அளிக்கப்படாததினல், வேஷதாரிகள் மேற் கூறியபடி சதா விருத்தியாகிவர நேரிட்டிருக்கிறது.

**134.** இன்னும் இவ் வழக்கத்தைப் பல கைத்தொழிலாளர்களும் மற்றவர்களும் அநுசரித்து வருகிறுர்கள். ஆனல் பற்பலர் விவேகி, அவிவிவேகியாகி இருவகையார்க்கும் பூநூல் தரிப்பதனல் பயனில்லையென்றும் ஒருவர் தன் விவேகச் செய்கைகளினலேயே தனது நிலையை வெளிப்படுத்தி தனக்குரிய மதிப்பைப் பெறுவாரென்றுங் கருதி, இவ்வழக்கத்தை விட்டு விட்டார்கள் போலும்.

**135.** இது நிற்க, ஆதியில் மனிதர் யாதொரு ஆடையின்றி சஞ்சரித்து, வெகுகால அளவில் மரவுரிதரித்து, பின் மான்தோலைத் தரித்தாரென்றும், அது பின்னல் கம்பளம், நூலாடை முதலியவைகள் தரித்த காலத்தில், ஒரு நூலில் மான்தோல் துண்டு ஒன்றை முடிந்து அதை வருஷத்திற்கு ஒருமுறை (பழய வழக்க ஞாபகக் குறியாக) தரிக்கும்படி முன்னேர் உண்டுபண்ணினதாகச் சிலர் கூறுகிறுர்கள். இது எங்ஙனமாயினும் ஆகுக.

**136.** முன்னேர்களாலேயே இது பயனில்லையென்றும், இதனல் வேஷதாரிகள் விருத்தியாகிறர்களென்றும், விடப்பட்ட ஒரு விஷயத்தைத் திரும்பவும் உற்பத்தி பண்ணுவானேன்? ஏற்கனவே அநேகவித பேதத்தால் சதா ஒருவர்க் கொருவர் ஒற்றுமை கெட்டு மெலிந்துக்கொண்டிருக்கிறதைக் கண்ணுறுங்கால், இத்தகைய வித்தியாச விருத்தி அனுவசியமென்றே தோற்றுகிறது; வீண் சுமையேயன்றி வேறன்று. மேலும், மகா ஞானிகளாகிய திருமூலர், திருவள்ளுவர், பட்டினத்தார், தாயுமானவர் முதலானவர்கள் ஒவ்வொருவரும் ஷை பூநூல் தரிக்காமலே தத்தமக்குரியச் சிறப்பை இவ்வுலகில் அடைந்தனரோ, இல்லையோ?

"உள்ளது போகாது இல்லது வாராது," என்பது உறுதியாகையால், ஷை பூநூல் தரியாதிருப்பதே மேன்மை.

**137.** கம்மாளர்: இவர்கள் தச்சுவேலை, கொல்லுவேலை, தட்டாரவேலை, கன்னாரவேலை, நகாசுவேலை முதலிய பல தொழில்கள் செய்துவருகிற ஒரு பெருங் கூட்டம். தொழில் முறையாக ஜாதியை நோக்குமிடத்து இவ்வகையார்கள் பல ஜாதிகள் சேர்ந்த ஒரு கூட்டமென்று சொல்லின் ஒக்கும். அப்படிக்கில்லாது நம்முன்னோர்கள் ஷை தொழில் மூலமாக ஏற்பட்ட ஜாதிகளைப் பரம்பரையாகக் கொண்ட காலத்திற்குப் பிறகு ஷை ஜாதியார்களுள் சிலர் ஷை வரம்பு கடந்து துர்ச்சம்பந்தத்தால் (விபசாரத்தால்) உண்டான ஒரு பெருங் கூட்டமென்று புராணம் † கூறுவதாக சிலர் சொல்லி ஷையார்களைச் சங்கரஜாதியென்று இழித்துரைப்பார்களானால் அது பொருத்தமல்ல; ஏனெனில், பலதொழில்கள் புரியும் ஒரு பெருங்கூட்டத்தார் அனைவரும் ஒரே காலத்தில் ஷை விபசார தோஷத்திற்கு ஆளாவதெப்படி? ஆனால் ஒவ்வொரு பெருங் கூட்டத்திலும் ஒவ்வொரு காலத்திலும் ஷை விபசார தோஷங்களால் உண்டான குடும்பங்கள் சில உள. அது போல் ஷை கூட்டத்திலும் சில உண்டெனின் அது ஒக்கும்.

**138.** அஃதின்றேல், எந்தக் கூட்டம் எந்தக் கோட்டையில் முற்றிலும் பிறர் கலப்பின்றி தனியாய் சீவித்து வருகின்றதோ யாமறிகிலோம். அன்றியும் எக் கூட்டமாயினும் அக்கூட்டத்தார்களனைவருக்கும் திரிகாலத்திலும் விபசார தோஷங் கூறுவது பெரும் பாதகமே; ஏனெனில், ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு காலத்திலும் அநேக பதிவிரதா குடும்பங்கள் இருப்பது இயற்கை.

---

† புராணத்தின் இலட்சணம் இன்னதென்று இதன் 292 வது பத்தியில் கூறப்பட்டிருப்பதைக் காண்க; புராணங்களில் கூறியவைகள் பெரும்பான்மை கற்பனைகளாகையால் அவைகள் அனைத்தும் ஆதாரமாகாது.

**139.** மேற்படி தோஷாரோபணம் ஒருவர்க்கொருவர் செய்கிறதனால் நாளுக்கு நாள் பகை விருத்தியாகி மிக்க ஒற்றுமை கெட்டு கொடிய துன்பங்களுக்கு ஆளாகி வருகிறோம்.

**140.** இது நிற்க, பரம்பரைப் பிராமணர்கள் நம் குடியானவர்களனைவரையும் சூத்திரர்களென அகந்தை கொண்டு அழைப்பதைச் சிலர் பொருளாகி, தத்தம் குலத்தைச் சிறப்பிக்கிறார்கள்; ஷை காரணத்தினால் ஷை கம்மாளர்கள் தங்களை **விஸ்வகரும பிராமணாள்** என்றும், (மற்றொரு வகையார்கள் தங்களைச் **சௌராஷ்டிர பிராமணாள்** என்றும்) கூப்பிட்டுக்கொள்ளுகிறார்கள். இதைச் சிலர் ஆக்ஷேபனை செய்கிறார்கள்.

"தேரைத் திருநாளைச் சேவிப்பார் தம்மைவிட்டங்
காரைத் தொழப்போருரையகோ—தேரிடையே
பார்க்கின்ற தெய்வம் பரிபூரணமலவோ
யார்க்குந் தெரியாததோ,"

என்று சொரூபஞான தேசிகரும்,

"நாமவனிவனுவன வளிவளுவளெவள்
தாமவரிவருவ ரதுவிது வுதுவெது
வீமவை × யிவை யுவை யவை நலந்தீங்கவை
ஆமவை † யாயவை ‡ யாய் நின்றவாவரே,"

என்று ஸ்ரீசடகோபாள்வாரும்,

"யாவருமாய்யாவையுமா யெழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய் மூர்த்தியா யமர்ந்துறையுமிடம்
மாவரும் திண்படை மண்ணைவெற்றி கொள்வார்மன்றுசங்கை
தேவருஞ் சென்றிறைஞ்சுபொழில்திருத்தேவனார் தொகை
[யே"

என்று திருமங்கை யாள்வாரும்,

---

× வீமவை = அழியும் பொருள்கள்.
† ஆமவை = எதிர்காலப் பொருள்கள்.
‡ ஆயவை = இறந்தகாலப் பொருள்கள்.

"இன்றாக நாளையேயாக இனிச்சிறிதும்
நின்றாக நின்னருளென்பாலதே—நன்றாக
நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே
நீ யென்னை யன்றி யிலை,"

என்று திருமழிசை யாள்வாரும்,

"—நானென்று நீயென்றி ரண்டில்லை—"

என்று தாயுமானவர் முதலான பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

**141.** இவ்விதம் நமது மதத்தில் ஒவ்வொருவரும் கடவுளே தானென்று சொல்லும் பாத்தியம் அடைந்திருக்கையில், ஒருவர் தான் பிராமணரெனக் கூப்பிட்டுக் கொள்வது குற்றமல்லவே. இவர்கள் எக்காரணத்தை யுத்தேசித்து எதாதாரங்கொண்டு இதைமறுக்க முன் வந்தார்களோ தெரியவில்லை. ஒருக்கால் பிராமண வேடம் பூண்டு அவர்களும் யாசகமெடுத்து அதனால் யாசகர்கள் விருத்தியாகி தங்களுக்கு இடையூறு வருமென்று கருதியோ பின் எக்காரணத்தினாலேயோ யாம் அறிகிலம். ஷை யார்கள் ஒருக்காலும் யாசகமே ஒரு தொழிலாகவும் அதைப் பரம்பரையாகவும் கொள்ளார்களென்பது நிச்சயம்.

**142.** மேலும் பீஷ்மர், க்ஷத்திரிய ஜாதியாராயினும் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் முதலியோர்களுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்து உபாத்திமைத்தொழில் புரிந்ததனால் "ஆசாரி" எனப்பட்டந்தரித்து, அதாவது பீஷ்மாசாரியர் என வழங்கப்படுவதை நோக்குங்கால் முற்காலத்தில் குணம் அல்லது தொழில் மூலமாக ஷை பட்டங்கள் ஏற்பட்டதென்று நன்றாய் விளங்கும்.

**143.** இதுநிற்க, ஷை கம்மாளர்கள் தங்களுக்குரிய "ஆசாரி" என்னும் பட்டமொழியின் தமிழ் உச்சரிப்புக்குத்தக்கபடி அங்கிலத்தில் "**Achari**" என்றெழுதி வழங்கப்படவேண்டுமென்பதைச் சிலர் ஆக்ஷேபித்து, "**Asari**" என்றுதான் எழுதப்படவேண்டுமென்று

வன்மஞ்சாதிக்கிருர்கள். ஷெ மொழியின் "சா" என்னும் வார்த்தைக்குப் பதிலாக "ஸா" என்னும் வடமொழி வார்த்தையைப் பிரயோகித்தால்தான் அதற்கு அங்கிலத்தில் "Asari" என்று எழுதுவது பொருத்தமாகும். ஆனல் ஷெ யார்கள் தாய் பாஷையாகிய தமிழில் ஷெ பட்டமொழியை வழங்கி வருகிருர்களாகையால், தமிழ் மொழி யோசைக்குத் தக்கபடி அங்கிலத்திலும் உச்சரித்து எழுத்துக் கூட்டுவதே சீர். இத்துரும்பொத்த விஷயங்களைத் தூணுக்கி வீண்குதர்க்கம் செய்கிறவர்களின் விசால அறிவு வியக்கத் தக்கதே!

**144.** கோல்லாவிரதர்: இதன் 87 முதல் 92-வது இலக்கம் ஈருகவுள்ள பத்திகளில் கண்டபடி மனிதர்களில் உயர்வானவரென்றும் தாழ்வானவரென்றும் அநேக வகை ஏற்பட்டு குடியானவர்கள் வெவ்வேருய்ப் பிரிந்து நிலை தடுமாறி ஒற்றுமையற்று பரதவிப்பது போதாதென்று, நம் ஒவ்வொரு கூட்டத்திலுள்ள சிலர் (நல்வழி, தீவழி யென்று அஃதொன்றுங் கருதாது) காலமெல்லாங் காசு பணஞ் சம்பாதித்த பின்பு, அன்பர் வேடம் பூண்டு மாமிசம் சாப்பிடுவதை மாத்திரம் தாங்கள் நிறுத்தினதுமல்லாமல் தங்களது மனைவி மக்களையும் பலாத்காரமாய் தங்களைப்போல் வேஷம் பூணும்படி, இதன் 11-2வது பத்தியில் கண்ட விதிக்கு விரோதமாய் இம்சித்து, தங்களைச் சேர்ந்த உறவு முறையோரையும் தங்கள் கருத்துக்குப்பிரதிகூலமாகும் போது தூஷித்து தங்களில் சிலருக்குக் கொடும் வியாதிவந்து தேகம் மெலிந்தபோது மறுபடியும் பழய வழக்கத்தை அநுசரித்து மாமிசம்புசித்து, பின்பு தேகம் ஆரோக்கியமான பொழுது மாமிசம் அருந்துவதில்லை யென்று பிதற்றிக் குடும்பங்களும் உறவினர்களும் கல்லோலஞ் சில்லோலமாகின்றன.

**145.** ஒருவர் பொல்லாங்கென்பதெல்லாந் தவிர்த்து சகல சீவராசிகளையும் எவ்வித பேதமின்றி தானுகக் கருதுஞ் சமரசநிலை யுற்ற பொழுது, ஒரு சீவனைக் கொன்று அதன் மாமிசத்தைத் தான் புசிப்பதனுல் ஷெ

ஊனின் உருசியால் தன்மனம் பந்தப்படுவதன்றிச் சீவ இம்சைக்கும் தான் ஆளாகிறதைக் கருதி தானே மாமிசம் புசியாதிருப்பது ஒழுங்கு; ஆனால் ஷெ நிலேக்கும் ஒரு எல்லே யுளது; அதாவது, ஒருவரது மனம் நசித்து இரண்டற யேகமான போது, ஷெ யார் ஷெ விரதத்தை அனுஷ்டிக்க இயலாது; இதற்கிணங்க,

> "தானென்ற ஆதியிலே கலந்து நின்றால்
> சாதியில்லே, சமயமில்லே, சைவமில்லே,"

என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

**146**. இது நிற்க, ஒரு அபக்குவி வேஷதாரிகளின் போதனையைக்கேட்டு, அதற்கிசைந்து எந்நாளில் எப்படி நடக்கத் தலேப்பட்டனரோ, அப்படியே அவரின் மனேவி மக்கள் ஒவ்வொருவரும் அப் போதனையை அவரவர் கருத்துக் கிசைந்தபோது அவரவர் நடந்து கொள்ளும்படி விடாமல், ஷெ போதனையைத் திடீரென அனுசரிக்கும்படி பலவந்தப்படுத்தி நீதிக்கு விரோதமாய் அவர்களே இம்சிக்கிறார்கள். பிறசீவன்களே இம்சிக்கக்கூடாதென்று பெருங்கொள்கை கொண்டவர் அதற்கடுத்த நிமிஷமே தன் குடும்பத்தை இம்சிக்க ஆரம்பிக்கிறார். மேலும், ஷெ வேடம் பூண்ட உறவினர்கள் தம் வீட்டுக்கு விருந்தினர்களாக வந்தபோது, அவர்களுக்கு ஒரு ஒதுக்கிடத்தில் சாதம் படைத்து, ஷெயார்கள் உண்டபின், எச்சியிலேயை (தங்கள் பழைய வழக்கம் போல் தாங்களே எடுத்து வெளியே எறியாமல்)ஷெ விருந்தினர்களேயே எடுக்கும்படிச் செய்கிறார்கள். இவ்வேஷதாரிகளின் பேரன்பு பெரும் வம்பாய் வளர்ந்தது; மனமும் மேத்தத்தடித்து மிக சிக்குண்டது. தாங்கள் தினந்தினம் கால் கழுவும் வழக்கத்தை மறந்தே போயினர்கள்; மலங்கழுவுங்கையால் எச்சியிலேயை எடுக்கலாகாதா? அம்மம்ம! இவர்கள் பேரறிவும், பேரன்பும், இன்னதென்று எடுத்துரைக்க ஆராலாகும்! "கொல்லா விரதவேஷங் குலநாசம்" என்று நாம் ஒவ்வொருவரும் நன்றாய் அறிய வேண்டும்.

**147.** ஆனால் உள்ளபடியே அன்படர்ந்த பெரியோர்கள் அபக்குவிகளுக்கு இப்போதனை செய்து அநேகருக்கு இம்சை யுண்டுபண்ணுவார்களா? இல்லை! இல்லை!! இது சொல்லளவாக வேடம் பூண்டவர்களாலேயே இவ்விபரீதம் விளைகிறது.

**148.** இயற்கையாய்ப் பேரறிவு கொண்டு ஊண் உண்ணாத பெரியோர்களின் உயர்ந்த சமரச நிலையை, ஜனங்கள் கண்டு மிகவும் புகழ்ந்து அவர்களை வணங்குவது சகசம். அந்நிலையை யதார்த்தமாய் உள்ளும் புறம்பும் அடைந்த ஒருவர் தாமே பெரியோரென்றும், மற்றவர் சிறியோரென்றும், பிறர் தொட்ட பதார்த்தங்களைச் சாப்பிடப்படாதென்றும் அனந்த பேதா பேதங்கள் உண்டு பண்ணி அகந்தைக்கு அடிமையாகார்.

> "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
> வானாளத் தருவரேனும்,
> மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோம் மாதேவர்க்
> கேகாந்த ரல்லராகில்,
> அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயரா
> யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
> கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர்
> நாம்வணங்குங் கடவுளாரே,"

என்று அப்பர் கூறியதை நோக்குங்கால் அவர்களது உயர் நன்னிலை இனிது விளங்கும்.

**149.** இது நிற்க,

> "ஞானனு சந்தான ஞானிக்கு கீராட
> ருனுசந்த கோலாகலஞ் சதாசாரம்,"

என்று சொரூப ஞான தேசிகர் கூறியபடி சிலர் சடைமுடியோடவும், சிலர் சர்வ மொட்டையாயும், சிலர் சிரமொட்டையாயும், சிலர் முன் குடுமியாயும் நம் தேசத்திலுதித்த மகரிஷிகளும் ஞானிகளும் தங்கள் இஷ்டம்போல் தாங்கள் கோலம் பூணுவது வழக்கம். அவர்களைப்போல் வெளி வேடம்பூண்டு அதைப் பரம் பரையாக்கிக் கொண்ட துர்வழக்கங்கள் அனந்தம்,

ஷி துர்வழக்கங்களில் மீசை மொட்டை அடித்துக் கொள்வது ஒன்று. "நான், தான்" எனும் பான்மையற்று எவ்வித உலக இச்சையையும் துறந்தபோது பெரியோர்களில் சிலர் மீசையை எடுத்துவிடுவது வழக்கம். ஷி சிறந்தகுணமற்று ஷி வேடம் மாத்திரம் பூணுவது துர்வழக்கம்; ஏனெனில், உலக இச்சையுடைய ஆண்மக்களுக்கு ஆண்மைக்கு அறிகுறியாகிய மீசை அத்தியாவசியம். அஃதின்றேல் வீரமிழந்து அநீதியால் அழியும் உலகம். ஷி வெறும் வேடத்தை ஒருவரது சந்ததிகள் பரம்பரையாகக் கொள்வது கொடிதினுங் கொடிது. ஒருவருக்குச் சமரச ஞானத்தால் ஏற்படும் மதிப்பு வெறும்வேடத்தால் மாத்திரம் பேதவாதிக்கு எங்ஙனம் பொருந்தும்?

**150.** மேற்படி விரதம் பூண்டவர்கள் தாங்கள் சகல சீவராசிகள்பேரிலும், சமரச அன்பு பாராட்டா விட்டாலும்,

(1). தாங்கள் சீவபிராணிகளைக் கொல்லுவதில்லையென்றும், அதனால் தாங்கள் மற்றவர்களைவிட மிக உயர்ந்தவர்களென்றும்,

(2). தாங்கள் மாமிசம் புசிப்பதில்லையென்றும், அதனால் தங்கள் தேகம் மற்றவர்களின் தேகத்தைவிட சிறந்ததென்றும் பிரலாபித்து ஜனங்களைப் பேதிக்கிறதினால் ஒற்றுமைச் சிதைக்கப்படுகிறது.

**151.** பால், தயிர், மோர், வெண்ணெய், உருக்கு நெய் முதலியவைகள் சாப்பிடலாமா? அவைகள் மாமிசத்தின் ஊனல்லவா? பசுவின் பால் அதன் கன்றுக்கா, நமக்கா? இது மோசமன்றோ? இல்லையெனின், அதன் கன்று பசியாரக் குடித்த பின்னோ பால்கறக்கப்படுகிறது?

**152.** தேன் சாப்பிடலாமா? தேனீ தனது இளம் ஈக்களுக்குச் சேர்த்துவைத்த தேனை நாம் ஷி கூட்டைப் பிழிந்தெடுப்பதினால் அநேகம் புழுக்

களைக் கருவில் கொல்லுவது மல்லாமல், அப்புழுக் களின் ஊனையும் தேனுடன் உண்ணுவது இழிவல்லவா? ஆனால் ஷை இளம் ஈக்கள் மிக சிறிதாயும் தேன். அதி ருசியாயும் தேகத்திற்கு ஆரோக்கியமாயும் வடிகட்டி தெளிந்தபிறகு மிக சுத்தமாயும் துர்நாற்றமற்று இருக் கிறதனால் தோஷமில்லை போலும்.

**153.** பதனீர், பனைவெல்லம் உண்ணலாமா? பத னீரை எடுக்கும்போது அநேக ஈக்களும் எறும்புகளும் இறக்க நேரிடுகிறதே?

**154.** சீனிச்சர்க்கரை உண்ணலாமா? அவைகள் பல சீவராசிகளின் எலும்புகளால் சுத்தப் படுத்தப் பட் டவைகளல்லவா?

**155.** கோரோசனையைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாமா? தோலாசன மிடலாமா? மான் தோலைப் பூநூலில் தரிக்கலாமா? இவை யனைத்தும் ஷை பிராணிகளைக் கொல்லாமல் எப்படிக் கிடைக்கும்?

**156.** மேலும் தோலிட்ட பாதரட்சை போடலாமா? குமிழிட்ட பாதரட்சையல்லவோ போடவேண்டும். தற் காலம் தோல்பட்டிகையையும் (Belt) நரம்பினால் நெய் யப்படும் பந்தாடும் பட்டையையும் (Bat) கையாட லாமா?

**157.** வீடுகள் கட்டுவதற்காக சாமான்களைக்கொண்டு வந்து இறக்கும் பொழுதும், எடுக்கும் பொழுதும், அநேக சீவராசிகள் துர்மரண மடைகின்றதாகையால் வீடுகட்டிக் குடி இருக்கலாமா? வீட்டை வெள்ளை யடிக்குஞ் சமயத்திலும், புத்தகம் முதலிய சாமான்களை தட்டி சுத்திகரிக்கும் பொழுதும் அநேக பூச்சிகள் சாகின்றதே?

**158.** வீட்டில்தேள்முதலியவிஷ செந்துக்களைக்கண்ட பொழுது அடித்துக் கொன்றுவிடலாமா? படுக்கையி லுள்ள மூட்டைப் பூச்சிகளை நசுக்கலாமா? தலைப்பேனை சீவி எடுத்துக் கொல்லலாமா?

**159.** பேதிக்கு மருந்துசாப்பிட்டு தேகத்தின் உள்ளிருக்கும் அநேகபூச்சிகளை வெளியே தள்ளுவதனால் அவைகள் இறக்க நேரிடுகின்றதே?

**160.** பயிரிடும் நிலங்களில் முதலில் நீர்விடுங்காலத்தில் அநேக செந்துக்கள் சாக நேரிடுகிறதே? ஐயோ! இம்மாபாதகம் செய்யலாமா?

**161.** சில காய்கறிகளில் புழுக்களுளதே? அவைகள் தென்படாவிடில் காய்கறிகளுடன் சமைத்து புசிக்க நேரிடுகிறதே? இது குற்றமல்லவா?

**162.** சிலசமயம் கோதுமை ரவையிலுள்ள அநேகம் புழுக்கள் கண்ணுக்குத் தென்படாமலே சமைக்கப்பட்டு உண்ணப்படுகின்றதே?

**163.** நடக்கும்பொழுது எறும்பு, புழுக்கள் முதலானவைகள் மிதியுண்டு சாகின்றதே?

**164.** அருந்தும் சலத்தில் (பூதக்கண்ணாடியின்றி கண்ணுக்குப் புலப்படாத) அநேக மிகச்சிறிய புழுக்கள் இருக்கின்றதே? அதை உண்ணலாமா?

**165.** பட்டாடை தரிக்கலாமா? பட்டுப்பூச்சிகளைக் கொன்றல்லவோ பட்டுநூல் எடுக்கப்படுகிறது.

**166.** பட்டினங்களில் வசிக்கிறவர்களுக்கு இம்சை நேரிடாமல் இருக்கும்படி தெருக்களிலுள்ள நாய்களைத் தற்காலம் கொல்லுகிறார்களாகையால் பட்டினங்களில் வசிக்கலாமா?

**167.** கொல்லாவிரத மாத்திரம் பூண்ட ஒருவர் தன் ஆயுள் காலத்தில் தன் மனசாட்சிக்கு விரோதமாய் தான் கொல்லநேரிடுஞ் சமயங்களை எண்ணிக்கொண்டு போவாரானால், தான் எவ்வளவு உயிர்களைக் கொன்று வசிக்க நேரிட்டிருக்கிறதென்று தானே உணர்ந்துகொள்வார்.

**168.** மாமிசம் சாப்பிடுகிறதில்லை யென்று சொல்லுகிறவர்கள் யாகம் செய்து மிருகங்களைக் கொன்று அவைகளின் மாமிசத்தை உண்ணலாமா? மந்திரத்தால் எவ்விதம் பரிகாரம் ஏற்படும்? மிருகம் அறபடாமல் மந்திரத்தால் இம்சையின்றி உயிர் துறக்கின்றதா?

அவ்விதம் உயிர் துறந்தாலும் அது குற்ற மன்ரே? அது குற்றமில்லை என்ருல், தனது மக்களையும் மந்திரத்தால் கொன்று சாப்பிடலாமே?

**169.** பின்பு கொல்லப்பட்ட மிருகத்தின் மாமிசத்தை யுண்ணலாமா? சாதாரணமாய் மாமிசம் உண்டதனுல் தேகத்தில் இரத்தம் எவ்விதமாறுதல் அடைகிறதோ அவ்விதம் இதில் அடையாவோ?

**170.** இதன்றியும் கடிவாளமிட்டுக் குதிரை ஏறலாமா? அச்சிவனுக்கு இம்சையன்ரே?

**171.** தெரியாமையாலும், தெரிந்து நீக்கமுடியாமையாலும் கொல்லாவிரத வேஷதாரிகள் செய்புங் கொலை நூருனல் (100), அவ்வேடம் பூணுதவர் அவருக்குமேல் அதிகமாக (உணவுக்காக) ஒரு கொலை அதாவது, நூற்றொரு (101) கொலைதான் செய்கிருர். அவர் இந்நூறு கொலைக்குப் பரிகாரம் தேடுவதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அதில் நூற்றில் ஒரு பங்கு காலந்தான் மற்றவருக்குக்கூட ஆகுமேயன்றி வேறன்று.

**172.** இதைப் பிரமாதமாய்ப் பேசுவதென்ன? இறைச்சி உண்ணுதபோதிலும் பால், தயிர், மோர், நெய், தேன் முதலியவைகள் உண்ணுகிருர்கள். இவர்கள் தேகம் ஷ௸ வஸ்துக்களை உண்டு எத்தனை மடங்கு கெடுமோ அதைவிட இறைச்சி சாப்பிடுகிறவர்களுக்குக் கூட ஒரு மடங்கேயன்றி வேறன்று.

**173.** ஆடி மாதத்தில் காவேரியாற்றுப் பெருக்கில் ஒரு குடநீர் கொண்டுவந்து சற்றுநேரம் வைத்தால் ஷ௸ நீர் மேலே சிறிது தெளிந்தும் கீழே போகப்போக வண்டலாயும் இருக்கும். ஷ௸ தெளிந்த நீர் ஷ௸ வண்டலிலிருந்தே தெளிந்ததல்லவா? அதுபோல நம் கோடானகோடி ஜனங்களிலிருந்து மனம் தெளிந்து அகண்ட அறிவாகி ஜீவகாருண்யத்தோடு வாழ்பவர் வெகுசொற்பம். ஒரே சமயத்தில் உலகத்திலுள்ள யாவரும் அந்நிலையை அடைவது ஒரு காலத்திலும் முடியாது; அல்லது அப்படி அடைந்தவர்களின் வம்சத்தார்கள் எல்லோரும் அதே அகண்ட அறிவோடு

சீவகாருண்யம் படைத்து தீவினையற்று வாழுகிறார்களென்பது சுத்தப் படுபோய்.

**174.** மேற்படி விரதம் பூண்டவர்கள் மாமிசதாரிகள் கூட்டத்தைவிட்டு தனியாக காட்டுக்குச்சென்று தங்களுக்கென்று வேறு பட்டினம் உண்டுபண்ணி துஷ்ட மனிதர்களாலும், மிருகங்களாலும் தங்களுக்கு இம்சை நேரிட்டபொழுதும் கொல்லா விரதத்துக்குப் பங்கம் வராமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்களானால், அது ஒருவாறு உசிதமென்று சொல்லலாம்.

**175.** அப்படிக்கில்லாது, மற்ற மாமிசதாரிகளால் சகல சௌகரியங்களும் பெற்றுக்கொண்டு அவர்களை இழித்துரைப்பது, நன்றி மறத்தல் என்னுங்குற்றத்திற்கு பாத்திரர்களாவதுமன்றி, அளவிறந்த துன்பங்களை விளைவிக்கிறார்கள்.

**176.** மேலும் உள்ளபடியே உயர்நிலையடைந்த பெரியோர்களின் நடக்கையைச் சற்று யோசித்து பார்ப்போமாகில், அது இவ்வேஷதாரிகளின் நடக்கைக்கு முற்றும் விரோதமாயிருக்கும்; உதாரணமாக, கபீர்தாஸ் வெண்ணெயுடன் ரொட்டி சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு நாய் ஒரு ரொட்டித்துண்டை எடுத்துக்கொண்டு ஓடினதாம். அப்பொழுது அவர் ஷை நாய் சேஷப்படுத்திவிட்டதே என்று தடிஎடுத்து ஓட்டாமல், வெண்ணெய் எடுத்துக்கொண்டு அதன் பிறகே ஓடினராம். இதுவல்லவோ ஜீவகாருண்யம்?

"அன்பர்தம் வேடம்பூண்பா ரகரசம்போ வென்பா
ரின்பமீவதற்கு மாறுயெவற்குமே துன்பமீவார்
வன்மொழிபுகன்ற பக்குவத்தினை யாய்ந்தோ மென்பார்
ஜன்மத்தை வீணதாக்குஞ் சண்டிகட் கஞ்சுமாறே.

மலநாறு முடல்வியக்கு மட்டிசட்டு வகுத்தபல
குலகோத்ர வளராழ்ந்த குருடரின்பின் விழுவேனைப்
புலையாணவப் பகையைப்போக்கி யறிவாக்கி முக்தி
நிலமேற்றி வாழ்வருளு நிமலனடி நினைவறமே,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகர் அவர்களும்,

"நீர்க்குமிழி பூணமைத்து நின்றுலு நில்லாமெய்
பார்க்குமிடத்தி தன்மேற் பற்றறுவ தெங்நாளோ,"

என்று தாயுமானவர் முதலான பல பெரியோர்கள் தங்கள் அற்ப புலால் கூட்டை இழித் துரையாதில்லை.

**177.** ஆதலால் ஷை கொல்லாவிரத வேடத்தை பூணும்படி பிறருக்குப் போதித்து சனங்களைப்பே தித்து அதைப் பரம்பரையாகக் கொள்ளுவதனுல் நாளுநக்கு நாள் நாம் பாழாகிறேமேயன்றி பயிராகக் காணோம். இதனுல் நம் பிள்ளைகள் ஷை துர்ப்போத னைக்கு ஆளாகாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று நம் அறிஞர்கள் ஒவ்வொருவரும் நன் ருய் மனதில் கவனம் செய்யவேண்டும்.

**178.** 1. பஞ்சமர்: இதன் 304-வது பத்தியில் திராவிட—ஆரியர்கள் என்ற தலைப்பின் கீழ் கூறியபடி, பஞ்சமர்கள் இந்தியாவில் பூர்வீகமாய் வசித்துவருகிற பழைய கூட்டங்களில் ஒன்று. இவர்களில் சிலர் உழுது பயிரிட்டும், சிலர் செருப்புமுதலியவை தைத்தும், சிலர் மற்ற தொழில்களைச் செய்தும் காலங்கழித்து வரு கிறுர்கள்.

2. நம் நாட்டில் கொலை, களவு, பொய், கள்ளருந்தல், குருநிந்தை ஆகிய இவ்வைந்தும் (அஞ்சாது செய்யப்படுமாகுல்) பஞ்ச மாபாதகம் என்று கருதப்படுகிறது.

3. மேற்படி ஐந்தில் ஒன்றை அதாவது கள்ளை ஷை யார்கள் அஞ்சாது அளவிற்கு மிஞ்சி அருந்தி, அதில் சங்கையற்று, மதிப்பிழந்து, தங்கள் கூட்டத் தில் இக்கொடிய வழக்கத்தைத் தடுக்க எவ்விதக்கட்டுப் பாடின்றி சன்மார்க்க நெறிதவறி இருக்கிறதனுல், ஷையார்களைப் "பஞ்சமர்கள்" என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டிருக்குமென்று தோற்றுகிறது.

**179.** இவர்கள் வெகுகால அளவில் இந்துமதத்தை அனுசரித்து வந்தார்களே யொழிய, இந்து குடியான வரின் நடை, உடை, பாவனை முதலியவைகளை பூராவும் அனுசரிக்கவில்லை.

**180.** இந்து குடியானவர்கள் விவசாயத்தில் பாடு பட்டுச் சம்பாதித்த பொருளில் அரசருக்கு ஆறிலொரு பாகமும், கோவில், குளம், சத்திரம் முதலிய தரும விஷயங்களுக்காக மற்றொரு பாகமும் கொடுத்துவிட்டு மீந்தபொருளைக்கொண்டு தாங்கள் வசிப்பதற்காக சற்று உயரமுள்ள (அதாவது பூமி மட்டத்திற்குமேல் 3 அல்லது 4 காலடிக்குக் குறைவில்லாத) ஒரு சிறிய வீடு, புழங்கப் (அத்தியாவசியமான) பித்தளைப்பாத்திரங்கள் முதலானவைகளைச் சேகரித்தும், மேற்படி வீட்டை வருஷத்திற் கொருமுறை (அதாவது, சங்கராந்தி காலத்தில்) பழுது பார்த்து வெள்ளையடித்து சுத்தி செய்து நல்லுணவருந்தியும், தீபாவளியென ஒரு திருநாள் அமைத்து அன்றைபதினம் ஆணும் பெண்ணும் கோடி ஆடையுடுத்தி, பலகாரத்துடன் உணவருந்தியும், மாத மொருமுறை, (அதாவது. அமாவாசை யன்றைய தினம்) பாய் முதலானவைகளைத் துவைத்து நீராடி விரதமிருந்து சுகபோஜன மருந்தியும், பிரதி வாரமும் (செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இம்மூன்று கிழமைகளில் ஒன்றில் அல்லது இரண்டு கிழமைகளிலேனும்) வீட்டை மெழுகியும், நீராடியும், மதுபானஞ் செய்பவர்களைக் கண்டித்துத் தாழ்மைப் படுத்தியும் சாவகாச காலங்களில் சத்காலக்ஷேபஞ் செய்து மனதைச் சன்மார்க்கத்தில் இயன்றளவு செலுத்தியும், தங்களது நன்மை தீமை முதலானவைகளை இப்புத்தகத்தின் 27 முதல் 50-வது இலக்கம் சுறுகவுள்ள பத்திகளில் கூறியபடி ஒருவாறு கிரமமாய் நடத்திவருகிறார்கள்; பஞ்சமர்களோ இவ்விதம் நடக்கவில்லை.

**181.** இத்தகைய குடும்ப நிர்வாகத்தைப் பஞ்சமர்கள் தாங்களே அனுஷ்டிக்கும் வரையில், இந்து குடியானவர்களோடுச் சமநிலையடைவது அசாத்தியம்.

**182.** பஞ்சமர்கள் தங்களது தாழ்மையான நிலையை மேலே சொன்ன ஆசாரப்படி மேன்மைப்படுத்த

தாங்களே இச்சைகொண்டு முயன்று படிப்படியாய் சித்தி பெறவேண்டுமே தவிர, நம்மவர்கள் இவர்களை மேற்படி விஷயத்தில் திடீரென மேன்பாடு அடையும் படி செய்வது அசாத்தியமான காரியம். அவ்விதம் முயற்சிப்பது அவர்களுக்கு இம்சை யென்று கருதி, நம்முன்னோர்களாலேயே இதன் 11-2வது பத்தியில் கண்ட ஜீவாதார சட்டத்தை அனுசரித்து விட்டுவிடப் பட்டது.

**183**. இதுநிற்க, சிலர் இவர்களை மேன்மைப்படுத்த வேண்டுமென்று சட்டசபையில் திடீரென இவர்களுக்குக் கோவில்† குளங்களில் வேண்டிய சுதந்தரங்கள் உண்டுபடுத்த வேண்டுமென்றும், குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் முயற்சி செய்கிறார்கள். இது வெகு போராட்டமாய் முடியும். இவர்கள் தங்களுடைய குடும்பங்களைக் குடியானவர்களது குடும்பங்களைப்போல தாங்கள் நடத்த இச்சைகொண்டு, தங்களுக்குள் ஒரு சங்கம் ஏற்படுத்தி, அதன்மூலமாக மதுபானம் முதலிய துர் வாடிக்கைகளைக் கண்டித்து, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி அதன் நிர்வாகத்திற்குவேண்டிய செலவிற்காகத் தங்கள் தலைக்கட்டொன்றிற்கு வரி இவ்வளவென்று விதித்து, இராசாங்க உதவியும் பெற்று, பள்ளிக்கூடத்தைத் தாங்களே நடத்த வேண்டும்.

**184**. ஆனால் அவர்களுள் பெரும்பாலார் சொற்ப சம்பளமுடையவர்களென்றால், அவர்களின் சம்பளத்தை உயர்த்தி அதில் வீடுகட்டுவதற்கென்றும், அவர்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கென்றும் மாதம் கொஞ்சமாகப்பிடித்து, அந்தப்பணத்திலிருந்து மேற்படியார்களின் குறையை நிவர்த்திக்கவேண்டும்; ஏனெனில், இதனால் யாசகர் என்ற பெயர் பொருந்தாமல் அவர்கள் சுவாதீனர்களாய் பின்னால் நம்மைப்போல குடித்தனப் பொறுப்பு (The Family Responsibility) வாய்ந்து வாழ ஏதுவாகும்.

† பெரிய கோவில்களில் கம்பத்தடி வரையில் போகும் பாத்தியத்தை இவர்கள் ஏற்கனவே அடைந்திருக்கிறார்கள்.

**185**. அப்படி நடத்துங்காலையில் மேற்கொண்டு பண உதவியாவது, உபாத்தியாயர்களாவது அல்லது நடத்துவதற்குக் காரியதரிசி முதலானவர்களாவது வேண்டுமானால், இந்து குடியானவர்களும் தங்களால் இயன்றமட்டும் உதவவேண்டுமே தவிர, பஞ்சமர்கள் தாங்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற நோக்கமற்று வழக்கம்போல் மதுபானத்தில் மட்டுக்குமிஞ்சிச்செலவு செய்து யாதொரு கவலையற்று மதிப்பு அவமதிப்பின்றி அவர்கள் முன்னிருந்தபடியே யிருக்க நாம் சிரத்தை யெடுத்து நாமே சகல செலவுஞ்செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பது அசம்பாவிதம்.

**186**. ஆனால் தகப்பனிடத்தில் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தம்குறைகளைத் தெரிவித்துப் பரிகாரந் தேடுவதுபோல், இராஜ சட்டசபையில் இவர்களின் ஜனத்தொகை வீதாச்சாரப்படி இவர்களுள் உதிக்கும் விவேகிகள் பிரதிநிதியாக அமரும்படியும் சகல இராஜிக உத்தியோகங்களை ஷெயார்கள் பெறும்படியும், ஷெ சபையில் சட்டஞ்செய்து அவர்களது இராஜ சுதந்தரத்தை அவர்கள் படிப்படியாய் அடைவதற்கு வேண்டிய உதவிகள் புரிவது நமது குடியானவர்களின் முக்கிய கடமையாகும்.

**187**. சிலர் இவர்களோடு சமபந்தி போஜனம்செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்தால்தான் ஒற்றுமை உண்டாகுமென்றும், வெகுபாடு படுகிறார்கள். பெரும் இந்து க்ஷேத்திரங்களில் (அதாவது, ஸ்ரீரங்கம் முதலான இடங்களில்) நடக்கும் திருவிழாக்காலங்களில் குடியானவர்களுள் பலர் கோயிலுக் கருகேயுள்ள பல தோட்டங்களில் சாதம் அநேகருக்கு எவ்விதபேதமின்றிப் படைக்கிறார்கள். அப்பொழுது பஞ்சமர்களுக்கும் ஓரிடத்தில் (ஏககாலத்தில் ஒருவர்க் கொருவர் எதிரிலேயே) சாப்பாடு போடுவது வெகுநாள் வழக்கமாயிருக்கிறது. அதனால் ஒற்றுமை வரவில்லையே? இவர்கள் இதில்

 ண்ட குடியானவர்களின் ஆசாரம், நடை, உடை

பாவனையை அனுசரித்து மேன்மை அடைந்தபோது தான், சமபந்தி போஜனத்துக்குரிய அன்பு உதயமாகி, அதன் பயனை இருவகையாரும் அடைய ஏதுவாகும்.

**188.** சிலர், பஞ்சமர்கள் வெகு பாடுபட்டு, அதன் பயனை அவர்கள் தாங்களே பூரணமாய் அடையாமல் குடியானவர்கள் அடையவும், தாங்கள் ஷெடியார்கள் கொடுத்த சொற்ப கூலியைத்தான் அனுபவிக்கிறார்களென்றும், இது அக்கிரமமென்றும் கூறுகிறார்கள். இது சுத்தப் பிசகு; ஏனெனில், அவர்கள் தங்களது சம்மதத்தின் பேரில் கூலிக்கு வேலை செய்கிறார்களேயன்றி, அவர்களைச் சொற்ப கூலிக்குத்தான் வேலை செய்ய வேண்டுமென்று பலாத்காரம் பண்ணுவாருமில்லை, அல்லது ஷெடியார்கள் தங்களது சொந்த நிலத்தில் தாங்கள் பயிரிட்டு அதில் விளையும் பயனை அபகரிப்பாருமில்லை.

**189.** சிலர், பஞ்சமர்களுக்குப் பணங்கொடுத்து இத்தனை வருஷத்திற்கு வேலை செய்யவேண்டுமென்று நிபந்தனையுடன் ஒரு முறி எழுதி அடிமைகளாக்கி பஞ்சமர்களைச் சாராயப் பிழிகிறார்களென்று கூறுகிறார்கள்;

**190.** இவ்விதம் கூறுவது முற்றிலும் பிசகு; ஏனெனில், குடியானவர் களுள்ளும் இத்தகைய வழக்கம் வெகு நாளாயிருந்து வருகிறது. இன்னமும் சிற்சில இடங்களில் நடந்து வருகிறது. முற்காலத்தில் அரிச்சந்திரன் தன் பெண்ஜாதி பிள்ளைகளை விற்றதையும் தான் தோட்டிக் கடிமையானதையும் யோசித்துப் பார்க்குங்கால், இது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

**191.** சில வருஷங்களுக்கு முன் ஒரு குடியானவர் தான் வாங்கின கடனைக்கொடுக்கமுடியாமல் தனது இரண்டு குமாரர்களைக் கடன் கொடுத்தவரிடத்தில் அடிமையாக விட்டு, இத்தனை வருஷத்திற்கு வேலை செய்யவேண்டுமென்று ஒரு முறி எழுதி அந்தப்படி

அந்தப் பிள்ளைகள் வேலை செய்து ஷை கெடுவு தீர்ந்த பிறகு, வேறொரு ஊருக்குப் போய், ஒரு வியாபாரியிடம் சேவகத்திலமர்ந்து சீவித்ததாக கூறுகிறார்கள். இதன் 11-4 வது பக்தியில் கண்ட முக்கிய ஜீவாதாரப்படி சஞ்சித கருமத்தால் தான் மறுமையில் இம்சையடையாமலிருக்க வேண்டுமென்று இவ்வித நிபந்தனைக்குத் தாங்களே உடன்பட்டார்களேயன்றி வேறன்று. இதன் 11-2 வது பத்தியில் கண்ட முக்கிய ஜீவாதாரப்படி, குறவர் முதலிய பல அநாகரிகக் கூட்டங்கள் அவரவர் இஷ்டம் போல் யாதொரு விதமான பலவந்தமின்றி நாளது வரையில் சீவித்து வருகிறதே குடியானவர்களுக்குப் பிறரைச் சாராய்ப் பிழிந்து தாங்கள் சுகப்பட வேண்டு மென்ற எண்ணம் கிடையாதென்பது நன்கு விளங்கும்.

**192**. சிலர், பஞ்சமர்கள் நல்லாடை யுடுத்தினாலும் வண்டி முதலிய வாகன மேறினாலும் குடியானவர்கள் வெகு பொறாமை கொண்டு கண்டிக்கிறார்களென்று கூறுகிறார்கள். எவ்வளவு தனவந்தராயினும் அடக்க வொடுக்கத்துடன் "ஒரு பணம் முடிந்த கௌபீனம் போல் இருக்க வேண்டும்" என்றும், அகலக்கால் போட்டால் தனது செல்வம் அழிந்து விடு மென்றும் கருத்துக் கொண்டு முழங்காலுக்குக் கீழ் வேட்டியைத் தளர கட்டாமல் வசிக்கும் குடியானவர்கள் இன்றளவும் சிலர் உளர். இவ்விதம் வெகு நாள் பழக்கம் கொண்டவர்களாகையால், இவ்வழக்கத்திற்கு விரோதமாய் செய்பவர்கள் எவராயினும் அவரைச் சில குடியானவர்கள் கண்டிப்பது சகசம்.

**193**. குடியானவர்களுள் ஐந்தாறு ரூபாய் மாத சம்பளத்திற்குக் கடையில் அமர்ந்திருந்து, பின்பு யோக பலத்தால் மிக்க பூஸ்திதி படைத்து, தனது நஞ்சை நிலங்கள் முதலானவைகளைப் பார்வையிட தூரக்கிராமங்களுக்குப் போக நேரிட்டு, அதற்காக வண்டி வைத்திருந்தும், அவர்கள் வீட்டண்டையிலேயே ஷை வண்டியிலேறிச் செல்லாமல் சற்று தூரஞ் (அதாவது,

கால் அல்லது அரை மைல்) சென்ற பிறகு ஷை வண்டியிலேறிச் செல்லும் வழக்கத்தையுடைய சிலரும், வெயிலில் நடந்து செல்லுங்காலத்தில் குடை பிடிக்காமல் போகும் சிலரும் இன்றளவு மிருக்கின்றார்கள்.

**194.** இது நிற்க, பஞ்சமர்கள் வெகு காலமாக முன்னுக்கு வர பிரயத்தனஞ் செய்யாது அவர்கள் கூட்டம் அனைத்தும் மிகத் தாழ்மையான நிலைமையிலிருக்க ஏக தேசம் இரண்டொருவர் சற்று நாகரிகமாய் வெளியில் புறப்பட்டால், அவர்கள் மேல் தோஷாரோபணஞ் செய்து கண்டிப்பது உவர்கள் இனத்தாருள்ளேயே சகசம்; பின்னர், அவர்களைக் குடியானவர்கள் கண்டிப்பது ஆச்சரியமன்று.

**195.** இவ்வழக்கம் தவறாயினும் இது வெகு நாள் பழக்கமாதலால் திடீரென விட்டு விடுவது அசாத்தியம். ஒருவரது பொருட்செல்வம் நாளுக்கு நாள் விருத்தியாகும் பொழுது அதற்குத் தகுந்த கோலம் பூணுவதே பாங்கு; ஏனெனில், ஒருவர் பொருள் சம்பாதிப்பது அவரது நடை, உடை, பாவனையை மேன்மைப் படுத்துவதற்கேயாம். பொருள்சம்பாதித்தும் அதற்குத் தகுந்த கோலம் பூணு விட்டால், சம்பாதித்த பொருள் பயனற்றதாகுமல்லவா? அரிச்சந்திரன் தோட்டியான பொழுது சக்கரவர்த்தி கோலத்தையும், திரும்பவும் சக்கரவர்த்தியான பொழுது தோட்டி கோலத்தையும் முன் **வழக்கம்** என்னும் ஆதாரங்கொண்டு பூண்டு ஒழுகுவது இயற்கைக்கு விரோதம்.

**196.** குடியானவர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் தற்காலம் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதோ, அவ்வளவு வித்தியாசம் அரிச்சந்திரன் காலத்தில் இல்லையென்று தோற்றுகிறது; எப்படி யென்றால், ஷை வித்தியாசம் அப்பொழுது இருந்திருக்கும் பட்சத்தில் அரிச்சந்திரன் தோட்டியினிடத்தில் சேவகா விருத்தியில் அமர்ந்திரார். இதனால் அக்காலத்தில் இருவகையாரும் நடை, உடை, பாவனையில் ஏறக்குறைய

சமநிலையிலிருந்தார்கள் என்று தோற்றுகிறது. பின்னர், வெகு கால அளவில் குடியானவர்கள் குடும்ப நிர்வாகத்தில் படிப்படியாய் அபிவிருத்திசெய்து மேன்மையடையவும், பஞ்சமர்கள் அவ்விதம் அபிவிருத்தியடையாது முன்னிருந்த நிலையிலே இருந்து தாங்கள் தாழ்ந்ததாகத் தோற்றுகிறது.

**197.** நாளது வரையில் கிராமங்களில் வசிக்கும் குடியானவர்களைவிட பட்டினங்களில் வசிக்கும் சில குடியானவர்கள் நாகரிகத்தில் சற்று உயர்ந்திருக்கிறார்களென்பதை எவராலும் மறுக்கவொண்ணாது. இது அவரவர்களின் நன் முயற்சியாலானதே யன்றி வேறன்று.

**198.** குடியானவர்கள், பரம்பரைப் பிராமணர்கள் போல், பஞ்சமர்களை நடத்துவதில்லை; எப்படியெனில்,

1. பஞ்சமர்களுக்குத் தாகசாந்திக்குத் தண்ணீர் கொடுக்க குடியானவர்கள் பின் வாங்குவது மில்லை, அதைச் சேஷம் † என்று கருதுவது மில்லை.

2. கிராமங்களிலிருந்து வந்த பஞ்சம பண்ணையாளர்களுக்குச் சாப்பாடு போடுவது வழக்கம். சில சமயம் அவர்கள் சாயந்தரத்தில் வந்து விட்டால், அவர்கள் வெகு தூரம் திரும்பிப் போகிறவர்களென்று கருதி தாங்கள் சாப்பிடுவதற்கு முன் சில பட்டின வாசிகள் அவர்களுக்கு அன்னமளிக்கிறார்கள்.

† குடியானவர்களுள் சிலர் தாங்கள் சாதம் சாப்பிடுமுன் "ஐயமிட்டுண்" என்ற அருமொழிப்படி, வறியவர்களுக்குப் பிடிசாத மளித்தும், கேவலம் காக்கைக்கும், சில சமயம் வீடுகளில் வளர்க்கும் பூனை, நாய் முதலியவைகட்கும், அன்னமளிப்பது வெகு சகசம்; மேற்படி செய்கையை சேஷம் என்பதற்கு மாறாக குடியானவர்கள் சிரேஷ்டமாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஒருவர் சாப்பிடும் பதார்த்தம் எளியதாயும் அல்லது சொற்பமாயுமிருந்து பிறருக்குப்பகுந்து கொடுக்கமுடியாத போது அதை மறைத்து சாப்பிடுவதே உசிதம்; ஏனெனில், பிறர் மனம் அப்படி பதார்த்தத்தின் மேல் பற்றுயலிருப்பதற்கே யன்றி வேறன்று. இது பற்றியே சில கோவில்களில் நைவேத்தியம் செய்யும் போது திரை போடுவதுண்டு.

இதனால் மீதி சாதம், குழம்பு முதலியவைகள் சேஷமென்று அவர்கள் கருதுவதில்லை.

3. இராக் காலங்களில் பட்டினங்களிலுள்ள குடியானவர்கள் வீட்டிற்கு பஞ்சமபண்ணையாளர் வந்தபொழுது மழை பெய்தால், அவர்களுக்கு அன்னமளித்து தங்கள் வீட்டுத்திண்ணையிலும் உறங்க சிலர் இடங் கொடுக்கிறார்கள். அதைத் தோஷமென்று அவர்கள் கருதுவதில்லை.

மு-க:—மேல்கண்ட காரணங்களினால் குடியானவர்கள் அன்படர்ந்த ஒரு பெருங்கூட்டமென்பது இங்கு சொல்லாமலே விளங்கும்.

**199.** நன்செய் புன்செய் நிலங்களில் பஞ்சமர்களோடு குடியானவர்கள் பக்கம் பக்கமாய் உழுது பயிரிடுவதையும் நீர் பாய்ச்சுவதையும் யாவரும் காணலாம்.

**200.** சக்கிலியர்கள் செய்த தோல்பரியில் தண்ணீர் இறைக்கும்போது குடியானவர்கள் அந்தத் தண்ணீரை அருந்துவது வெகுசகசம். இதைத் தோஷமென்று அவர்கள் கருதுவதில்லை.

**201.** தற்காலம் இராணுவத்தில் அமர்ந்த குடியானவர்களும் பஞ்சமர்களும் படைபயிலுங் காலத்தில் ஒருவர்க்கொருவர் எவ்வித பேதமின்றி அன்னியோன்னியமாய் நடமாடுகிறார்கள். மேலும், போர்க்களத்தில் சண்டைசெய்யுங் காலத்தில் சிற்சிலர் பஞ்சமரிடமிருந்து தண்ணீர் அருந்துவதாகவும் கூறப்படுகிறது. மேலே கண்ட விஷயங்களுக்கு விரோதமாய் எவர் எதைபோதித்தாலும் அதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இதனால் இவர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு அன்னியோன்னியமாய் யிருக்கிறார்களென்பது இனிது விளங்கும்.

**202.** பாம்பரைப் பிராமணர்கள் குடியானவர்களைத் தொடப்படாதென்றும், படப்படாதென்றும் பலவித மான பேதங்கற்பித்து எல்லையிலா துன்பங்களை விளைவிக்கிறார்கள் என்று சிலர் கூறும்பொழுது, இதற்கு

மாருக குடியானவர்களும் அப்படியே பஞ்சமர்களை இம்சிக்கிருர்கள் என்று சிலர் விடையளிக்கிருர்கள். இது முற்றிலும் பிசகு. ஷை பிராமணர்கள் குடியானவர்கள் வீடுசென்று புரோகிதம், யாசகம் முதலிய தொழில் செய்து அரிசிமுதலிய உணவு பொருள்கள், வஸ்திரங்கள், தக்ஷிணைகள் பெற்று, தங்களுக்குப் பிரத்தியேகமாய்ப் பயன்படும் ஒரு தொழிலற்று யாசகத்தினலேயே சீவனம் செய்கிருர்கள். ஆகையால்தான் குடியானவர்கள் தங்களிடத்தில் யாசகம்வாங்கிப் பிழைக்கும் ஒரு கூட்டம் தங்களைத் தாழ்மைப்படுத்துவது நீதிக்கு விரோதமென்று அவர்களைக் கண்டிக்க நேரிடுகிறது; ஆனல் குடியானவர்கள் பஞ்சமர்களிடத்தில் மேலே சொன்னபடி யாசகம் எடுத்துப் பிழைப்பதில்லையே? குடியானவர்களுக்கும் பரம்பரைப் பிராமணர்களுக்கும் என்ன சம்பந்தமோ, அதே சம்பந்தம் ஷை குடியானவர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் சற்றேனும் இல்லாதிருக்கையில், ஷ் ஒப்பனை யெங்ஙனம் பொருந்தும்?

**203**. மேற்படி விஷயங்களை உள்ளதையுள்ளபடி யுணராது வீண் விதண்டாவாதஞ் செய்து ஒருவர்க்கொருவர் பகை உண்டுபண்ணிக்கொள்வது துன்பமேயன்றி இன்பமன்று.

**204**. பரம்பரைப் பிராமணர்: இதன் 75-வது பக்தியின் பாதக்குறிப்பில் (The Foot-Note) கூறியபடி, பிராமண ரென்ருல் பிரம்மஞான முடையவர்; அதாவது, அகண்ட அறிவுபெற்று அறிவாய் விளங்குபவர் என்பது கருத்தாம்.

"—பூத்தமலர்த்
தண்டாமறைத் திருவேதா தா கோடிக் கொருவர்,"

என்று ஔவையார் கூறியபடி உண்மை ஞானிகள் உலகத்தில் உதிப்பது வெகுசொற்பம். இப்பெரியோர்கள் பேதமற்று சகல சீவபிராணிகளையும் தானுகப் பாவிக்கும் தன்மையால், சனங்கள் அவர்களைத் தெய்வமாகப் பூசித்து கொண்டாடுவது இயற்கை.

இத்தகையோர் நம் கூட்டங்களிலிருந்து உற்ற சமயத்தில் உதித்துக்கொண்டே இருக்கின்றனர்.

**205.** சனங்கள் இத்தகையோர்களைத்தான் அந்தணர், பிராமணர் அல்லது பார்ப்பார் முதலான பெயரிட்டு அழைப்பது வழக்கம்.

"அந்தணரென் போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்,"

என்று திருவள்ளுவரும்,

"பொய்யர்யாவ ருடலினைசை பூட்டியாட்டிப் போக்குவார்
மெய்யர்யாவர் மலைவுதீர வேதமுடிவைக் காட்டுவா
ரையர்யாவ ரையநீங்க வாதியந்த மூட்டுவார்
வெய்யர்வேட மிட்டுவிபவ வெறிகொடெங்குந் திரிவரே,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகரவர்களும்,

"ஐயமற்ற வதிவநுணர்க் கெலாங்
கையிலா மலகக் கனியாகிய
மெய்யனை யிந்தமேதினி மீதுழல்
பொய்யனேற்குப் புகலிட மெங்ஙனே,"

என்று தாயுமானவர்முதலானவரும் கூறியபடி, பிரபஞ்ச உற்பத்தி, விருத்தி, லயம் என்கிற விஷயங்களைச் சனங்களுக்கு ஐயந்திரிபற போதிப்பவர்களுக்கு ஐயர், ஐயங்கார் என்றும், சாஸ்திரத்தை ஆராய்ந்தறிந்தவர்களுக்குச் சாஸ்திரிகளென்றும், உலகத்தவர் கூப்பிட்டதாக காணப்படுகிறதேயன்றி, அப்பெரியோர்கள் இப்பட்டங்களைத் தாங்களே வைத்துக்கொண்டதாகத் தோற்றவில்லை. பெரியோர்களின் பெயர்களெல்லாம் ஆதியில் யாதொரு பட்டமற்றே இருக்கின்றன. தற்காலம் துரைத்தனத்தார் பட்டங் கொடுப்பதுபோல், நம் ஜனங்கள் சில நூற்றாண்டுகளுக்குமுன் சிற்சிலருக்கு குணம் அல்லது தொழில் மூலமாக சில பட்டப் பெயர்களிட்டழைக்க அவைகள் பின்னால் பரம்பரையாகிவிட்டது.

**206.** சிலர், இதை யறியாமல் இப்பட்டத்திற்காக வெகுபாடு படுகிறார்கள். வெறும் பட்டத்தால் மாத்திரம் ஒருவருக்கு ஏற்படும் மதிப்பு மயக்கமே யன்றி

யதார்த்தமன்று. பட்டமில்லாத மகாஞானிகளாகிய ஸ்ரீ ஜனகன், ஸ்ரீ கிருஷ்ணன் முதலானவர்களுக்கு இவ்வுலகத்தில் மதிப்புளதோ, இலேயோ? இதை அறிஞர்கள் நன்றாய் ஊகிக்கவும்.

**207**. பின்னர் பரம ஞானிகளின் சில பிள்ளைகள் மனோ நிலையில் தகப்பன் போலில்லா விடினும், சகவாசத்தால் தகப்பன்போல வேடம்பூண, சனங்கள் ஷ பிள்ளைகளின் மனோ நிலையைக் கவனியாது, தகப்பன் பேரில் ஏற்பட்ட அபிமானத்தால், பிள்ளைகளையும் தகப்பனைப்போல நன்குமதித்து ஆதரித்தார்கள். இது தப்பிதம். ஷ பிள்ளைகளும் தகப்பனது உயர் நிலையை அடையாதிருக்கையில், தாங்கள் இலவசமாக உணவு பொருள், வஸ்திரம் முதலியவைகளைச் சனங்களிடமிருந்து வாங்குவது பிசகென்றும், அதனால் வரும் துர்ப்பலன்கள் இன்னதென்றும் அறியாது, சனங்கள் கொடுப்பதைப் பெற்றுக் காலங் கழிக்க ஆரம்பித்தார்கள். சனங்கள் இப்படிப்பட்டவர்கள் ஆதியில் வெகு சொற்ப மானபடியால் இவர்களுக்குத் தானங் கொடுத்து ஆதரித்தார்கள்.

**208**. இப்படி இவர்கள் பூண்ட வேடம் வெகு காலமான பிறகு, இவர்களுக்கே விலங்காய் முடிந்தது; எப்படியெனில், இவர்கள் இவ்வேடத்தை விட்டு மற்ற தொழிலாளர்களின் நடையுடை பாவனையைப் பூண்டு வசிக்க ஆரம்பித்தால், மற்ற உலகத்தவர் நிந்தனைக்கும் அரசாது ஆக்கினைக்கும் ஆளாகிவிடுவோ மென்றஞ்சி வெகு காலம் தாங்கள் உள்ளபடியே தங்கள் மனோ நிலைக்குத் தகுந்த தொழில்களை யேற்று அவை மூலமாய்க் கிடைக்கும் அனுபவ அறிவை இழந்து போகும்படி நேரிட்டிருக்கிறது.

**209**. மேலும், இவர்கள் தங்களுக்கென பயனுள்ள கைத்தொழில்களற்று சதா சீவனத்திற்காக அயலே ஜாதி என்று சார்ந்தும், தாங்களே முத்திக்குரிய சகல சாதனங்களிலும் சிறந்தவர்களென்றும், அதனல் தங்கள் சாதியே மற்றவைகளைவிட மகா

உயர்ந்ததென்றும் புலம்பி சாதாரண சனங்களை ஏமாற்றி, சித்தப் பிரமைகொண்டு,

"ஆங்கார மான துலவேடம் வெம்பேய் பாழ்த்த
வாணவத்தினும் வலிதுகா
ணறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி
யாதொன்று தொடினு மதுவாய்த்
தாங்காது மொழிபேசு மரிகரப் பிரமாதி
தம்மொடு சமான மென்னுந்
தடையற்ற தேரிலஞ் சருவாணி போலவே
தன்னி லசையாது நிற்கு
மீங்காரெ னக்கு நிகரென்னப் பிரதாபித்
திராவணா காரமாகி
யிதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்குமிதனெ டெந்நேரமும்
வாங்காவிலாவடிமை போராட முடியுமோ,"

என்று தாயுமானவர் கூறியபடி, உலகத்திலுள்ள விஷயங்களை அகமமதையால் உள்ளபடி அறியத்தரமற்றும் அடக்கம், ஒடுக்கம், அன்பு, ஆண்மை, ஈகை, நன்றியறிதல் முதலிய புருஷார்த்தங்களை இழந்தும், உயர் ஞான நிலையுங் கெட்டு, தன் இயற்கை நிலையுங்கெட்டு வெளி வேடம் பூண்டு வசிக்கலாயிற்று.

**210.** இப்படி வேஷப் பிராமணர்கள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகித் தொழில் செய்ய அஞ்சி வெறும் எட்டறிவு கொண்டு சாஸ்திரம் பேசிக் காலங் கழிக்க ஆரம்பித்தார்கள்.

**211.** கால அளவில் அன்பு இழந்து அஞ்ஞானம் வளர இவர்கள் அனைவருக்கும் வேண்டிய உணவு பொருள், வஸ்திரம் முதலியவைகளைச் சனங்கள் அன்பு கொண்டு தாங்களே வலிய கொடுப்பது அசாத்திய மாயிற்று. பிறகு இவர்களில் சிலர் உழைத்துச்சாப்பிட அஞ்சி யாசகமெடுக்க புறப்பட்டார்கள். சனங்கள் யாசக மென்று வந்தவர்களைத் தூஷிக்கலாகாதென்று யாசகமளித்து ஆதரித்தார்கள்.

**212.** சிலர் பள்ளிக்கூடம் வைத்து உபாத்தியாயர்களாயும் சிலர் இராமாயனம், பாரதம், பாகவதம் முதலிய திவ்ய சரித்திரங்களைப்படித்து க்ஷத்திரிய குணதிசயங்களை எடுத்து சொல்லுவதற்கு க்ஷத்திரிய வீர தீர அனுபவ அறிவின்றியும், அல்லது திரிகால ஞான அறிவின்றியும்,

"சற்றவறி வாலுனைநான் கண்டவன்போற் கூத்தாடிற்
சூற்றமென் றென்னெஞ்சே கொதிக்கும் பராபரமே,"

என்று தாயுமானவர் உணர்ந்தபடி உணராது, பொருள் சம்பாதிக்கும் ஓர் நோக்கமாக ஸ்ரீமதி சீதாகலியாணம், ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் முதலிய விஷயங்களை விரிவாயெடுத் துரைத்து ஷை ஸ்ரீராமர் முதலானோர்களைத் தெய்வம் உலகத்தவர்களுக்காக அனுப்பினதென்றும், அதனால் அவர்களுக்குத்தான் பெருஞ்சக்தி யுண்டென்றும், அவர்கள் தெய்வப்பிறப்பென்றும், நாம் கேவலம் நரர்களென்றும், நமக்கு அவ்வித சக்தி கிடையாதென்றும், தாங்கள் ஷை விஷயங்களை நேரில் கண்டவர்கள்போல் அஞ்சாது பிதற்றி, மேற்படி இராமாயனம் முதலிய பெருங்காவியங்களை நம்மவர்கள் படித்து அல்லது கேட்டு அப்பெரியோர்கள்போலத் தாங்களும் படிப்படியாய் நடக்கமுயன்று, அதனால் அடையும்பயனை இழக்கும்படி செய்து சனங்களின் மடமையை விருத்திபண்ணி, அவர்களின் வீரத்தன்மை நாளுக்குநாள் மங்கவும், தாங்கள் வஸ்திரம், மொய், தட்சிணை முதலியவைகள் பெற்று உண்டுடுத்தி சீவனம்பண்ணிச் சுகமாக காலங்கழிக்கவும் தலைப்பட்டார்கள்; மற்றும் சிலர் புரோகிதம், அர்ச்சகம் முதலிய தொழில்களைப்புரிந்து சீவித்துவருகிறார்கள்.

**213.** இதுநிற்க, சிலர் தாங்கள் போர்வீரத்தன்மையிலுஞ் சிறந்தவர்களென்று கூறுகிறார்கள்; விசுவாமித்திரர் தான் வில்வித்தையில் எவ்வளவோ தேர்ச்சியடைந்தவராயிருந்தும் தனது வேள்வியை முடிப்பதற்கு இடையூறாயிருந்த தாடகையென்னும் ஒரு பெண்ணைத் தண்டிக்கத் தன்னால் இயலாமல் ஸ்ரீராமபிரான்மூலமாக

அக்காரியத்தை நிறைவேற்றினதே இரிஷிகளுக்கு அப் பேர்க்கொத்த இராஜவீரியம் உரித்தானதல்லவென்று காட்டுகிறது.

**214.** இராஜலக்ஷணங்களை அநித்தியமென்று அலக்ஷியஞ்செய்து, உலகாபிமானமற்ற மகா பெரியவர்களுக்கு இராஜ குணநிசயங்கள் எங்ஙனம் பொருந்தும்? அப்படி பெரியோரே மேற்படியாரின் உதவியைத் தேடினாரென்றால், பிரம்மஞானி வேடம்பூண்ட பாம்பரைப்பிராமணர்கள் தங்களது சக்தி, யுத்தி, அனுபவ அறிவு முதலான விஷயங்களைப்பற்றித் தாங்களே யோசித்துக்கொள்ளவேண்டும்.

**215.** சிலர் தற்காலம் அங்கிலம் படித்து அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்துகொண்டு, தாங்கள் மற்றவர்களைவிட வெகு சமர்த்தர்களென்று பிரலாபிக்கிறார்கள். இவர்களுடைய சமர்த்தானது எப்பேர்ப்பட்டதென்றால் இவர்களைச் சென்ற சுமார் 2000, 3000 வருஷங்களாக அன்னவஸ்திரம் முதலானவைகளைக் கருணையோடு கொடுத்தாதரித்ததோர் பெருங்கூட்டம், இவர்கள் மேல் கடுங்கோபங்கொண்டு நாளுக்குநாள் இவர்களைத் தங்கள் சகவாசத்திலிருந்து முற்றிலும் விலக்கி விட வேண்டுமென்று செய்யும் அபார முயற்சியே இவர்களின் அதிதீவிரத் திறமை இன்னதென்று காட்டுகிறது.

**216.** உழைத்துச் சம்பாதித்தவரே தம்பொருளைக் காப்பாற்றுஞ்சக்தி பூரணமா யுடையவர். மேற்படியாரின் பிள்ளைகளுக்கே தங்களது தகப்பன்போல் ஷை பொருள்களைக் காப்பாற்றுவது வெகு துர்லபமாயிருக்க, உழைத்துச் சம்பாதிக்காத பாம்பரைப் பிராமணர்களுக்கு இந்நாட்டைக் காக்குஞ்சக்தி எப்படிப்பொருந்தும்? இவர்கள் உத்தியோகத்தில் அதிகமாகச் செல்லச்செல்ல குடியானவர்களுக்கு இம்சை அதிகரித்து பகை விருத்தியாகி, நம்நாட்டில் அளவற்ற துன்பம் விளையும்; ஏனெனில், நடையுடை பாவனையில்

இவர்களுக்கும் குடியானவர்களுக்கும் ஒன்றுக்கொன்று முற்றும் மாருகவிருக்கிறது.

**217**. இவ்விதம் பரம்பரைப் பிராமணர்கள் பெருகப்பெருக **வாசகஞானம், யாசகசுகம், சுத்தம்** முதலியவற்ருல் விருத்தியான நடையுடை பாவனைகளைக் கண்டு சனங்கள் மயங்கித் தங்களில் எப்பொழுதும் உதிக்கும் கோடியிலொருவராகிய உண்மைப் பிராமணர்களை உள்ளபடி அறியத்தரமற்று அவர்கள் அருள்வாக்கை அலக்ஷியம்செய்து, தாங்கள் பாழாகிப் பாதவிக்க நேரிட்டிருக்கிறது. இதற்கிணங்க, சுவாமி விவேகாநந்தர் அவர்கள் "தற்கால இந்தியா" (Modern India) என்னும் புத்தகத்தில் 22-ம் பக்கத்தில்,

"Before the arrogance of the casteless, who pretend to be and glorify themselves in being Brahmans, the true nobility of the old, heroic, high class Brahman melts into nothingness," என்று கூறியிருப்பதை நன்குணர்க.

**218**. தீதுக்கு உதவி செய்யலாகாதென்ற கருத்தமைத்து பட்டினத்தடிகளும்,

'வாதுக்குச் சண்டைக்குப் போவா வருவர் வழக்குரைப்பார்
தீதுக்குதவியுஞ் செய்திடுவார் தினந்தேடி யொன்று
மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக்கிவர் பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே,"

என்று கூறியுள்ளாராகையால், இவர்களைப் பிராமண வேடம் பூண்டவர்களென்று புறக்கணித்து, உண்மை ஞானிகள் தவிர மற்ற வேஷதாரிகளுக்குக் கொடுக்கும் தர்மத்தை நிறுத்திவைத்தாலொழிய நம்நாட்டை வெகு நாளாய்ப் பிடித்த க்ஷாமம் நீங்காது. தர்மத்திற்குரிய உண்மை ஞானிகள் யாரென்ருல்,

"குலமிலான் குணங்குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக்கென்ன வோர்பற்றிலான் பொருந்து
மலமிலான் மைந்தர் மனைவியில்லா னெவனவன்சஞ்
சலமிலான் முத்திதரும் பாசிவனெனத் தகுமே,"

என்று தாயுமானவர் கூறியபடி ஷெ நன்னிலையிலுள்ளவரே தக்கோராவர்.

**219.** பொய்ஞ்ஞானிகளை உபசரித்தால் பயன் கிடைக்குமா? கிடைக்காது. அது விழலுக்கிறைத்த நீராகும். ஆதலால், இவர்களைக் குடும்பத்தில் நடக்கும் சகல நன்மை தீமைகளினின்றும் விலக்குவது அவசியத்திலும் அவசியம்.

**220.** இவர்கள் உண்மைப் பிராமணர்களல்லாதவர்களாயினும் முன்னொரு காலத்தில் உண்மை ஞானிகளாயிருந்தவர்களின் வம்சமென்றும், அதனால் அவர்கள் சிரேஷ்டர்களென்றும், அவர்களுக்குக்கொடுப்பது மறுமையில் நம் முன்னோர்களுக்கு நற்பயனைத் தருமென்றும் கூறுவாருமுளர். இது முற்றிலும் பிசகு. கருமவிதிப்பிரகாரம் அவரவர்செய்த நன்மைதீமையின் பயனை அவரவர் அநுபவிக்கவேண்டுமே தவிர பிள்ளையின் கருமபலன் மறுமையில் தகப்பனைச் சாருமென்பது, நீதிக்கும், யுக்திக்கும், அநுபவத்திற்கும் முற்றும் மாறாகவிருக்கிறது. உதாரணமாக, பசித்துக்களைத்து வந்த ஒருவரைப் பார்த்து மனமிரங்கி அவருக்கு அன்னமளித்து பசியாற்றினால், அதன்பயனாக ஷை அன்னமளித்தவரின் மனங்கனிந்து விரியுமா? அல்லது அவர் தகப்பனாருடையதா? அல்லது ஒருவாலிபன் மற்றொருவரைக்கொன்று விட்டால், வன்னெஞ்சமுடையவன் ஷை வாலிபனா? அல்லது அவனது தகப்பனாரா? இஃதன்றியும் பலசாதிகளிலும் ஞானிகள் உதித்திருக்கின்றார்களாகையால், ஷை யார்களின் வம்சங்களும் சிறந்தவையென்று கருதலாமே? ஆனால், அது வெறுஞ் சொல்லளவேயாமென்று ஷை யார்கள் அவ்விதம் கருதாதொழிந்தனர்போலும்.

**221.** உலகத்தில் சனனமெடுத்த ஒருவர், யாசகம் வாங்காமல் உழைத்துத் தனது உலக இச்சையை அநேக சன்மங்களில் பூர்த்திசெய்த பிறகு, ஷை விருத்தியில் மனம் உழன்று, கசந்து, துறந்த பின்னரே, உண்மை ஞானத்திற்கு உரியவராவர்.

**222.** நமது சன்மார்க்கர்களின் உரையையும், உண்மைஞானிகளின் மனோநிலையை அநுபவமாக உள்ளபடி கண்டபோது அவர்களின் வாக்கையும் அங்கீகரித்தாலொழிய நம்நாடு சேமம் அடைய ஏதுவில்லை. இதுநிற்க, பொய்யர்களை ஆதரிப்பதனால் பொய்யே மிகுந்து நாளுக்குநாள் நம் சனங்கள் பாழாகி நசித்தேபோம். இதற்குச் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக நம்மவர்களின் நிலைமையை யோசித்து பார்க்குங்கால் படிப்படியாய் அது கீழாகப்போய்க்கொண்டிருக்கிறதேயன்றி, நன்னிலையை அடைகிறதாகக் காணோம்.

**223.** மேலேகண்ட காரணங்களினால் இவர்களுக்கு நாம் தர்மங்கொடுப்பதை நிறுத்தி, நல்லறிவாளர்களுக்கு உதவிசெய்ய எவ்வளவுக் கெவ்வளவு உற்சாகமாய் ஒத்து உழைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு விரைவாய் முன்வருவோமென்பதற்கு ஐயமேயில்லை.

**224.** இதுநிற்க, ஒரு தேசத்தில் சிலர் தெய்வவழியில் ஈடுபட்டும், சிலர் சனங்களைக்காத்து இரக்ஷித்தும், சிலர் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளில் பிரவேசித்தும்,சிலர் (மேற்சொன்னமூவகைத் தொழிலில் ஒன்றேனும் செய்யச் சக்தியற்று) ஷடியோர்களின் ஏவலைச்செய்தும் காலங்கழிப்பது வழக்கம். மேற்படி யோர்களைத் தொழில் மூலமாக மநு பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரரென்று பெயரிட்டு வழங்கினனெனமுன் 75-வது பத்தியின் பாதக்குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

**225.** மேற்படி தொழில்களும் ஷடி தொழிலாளர்களும் தனித்தனிப் பெயருடன் எத்தேசத்திலும் எக்காலத்திலும் இருக்கும்; உதாரணமாக, அங்கிலேய தேசத்தில், பிராமணரை, கிளர்ஜிமன் (Clergyman) என்றும், க்ஷத்திரியரை, வாரியர் (Warrior) என்றும், வைசியரை, மர்ச்சண்ட் (Merchant) என்றும், சூத்திரரை, மீனியல் (Menial) என்றும் வழங்கப்படுகிறது சகலருக்கும் தெரிந்தவிஷயம்.

**226.** கைத்தொழில் புரியாமல் பிரம்மஞானிவேஷம் தரித்து சுமார் 3 அல்லது 4 ஆயிரம் வருஷங்களாக யாசகமெடுத்து உண்டுடுத்தி வந்த பரம்பரைப் பிராமணர்களும் தற்காலம் நடைபெறும் அங்கில அரசாட்சியில் நகத்தில் அழுக்குப்படாமல் உத்தியோகம் செய்து நல்ல சம்பளம் பெறச்சமயம் கிடைத்ததால், மேற்படி தொழில்களில் நன்றாக அநேகர் சிக்குண்டு அதன்மூலமாக தொழிலாளர்களுக்குரிய சிறப்பு, சுகம், சுவாதீனம் முதலியவைகள் இன்னதென்று ஒருவாறுசற்று தெரிந்துகொண்டபிறகு, மற்ற தொழில்களிலும் படிப்படியாய் பிரவேசிக்க நேரிட்டிருக்கிறது. நம் நாட்டுக்கு இது ஒரு நல்ல காலந்தான். ஆனால் மேற்படி பிராமணர்கள் பல தொழில்களில் புகுந்தும் தாங்கள் பிரம்மோ—பிராமணர், பிரம்மோ-க்ஷத்திரியர், பிரம்மோ-வைசியர், பிரம்மோ-சூத்திரரென்றும் அதனால் தாங்கள் பிறர்களைவிட மகா சிறந்தவர்களென்றும் மற்றவர்கள் க்ஷத்திரியோ-பிராமணர், க்ஷத்திரியோ--க்ஷத்திரியர், க்ஷத்திரியோ-வைசியர், க்ஷத்திரியோ-சூத்திரரென்றும், இந்தப்படி முறையே பதினாறு வகையாக சமயோசிதமாய் சாமானிய குடியானவர்களின் முன்னும் நம் நாட்டுப் பூர்வீக நிலைபறியாத அன்னியர்களின் முன்னும் வாய்சமர்த்தாய்ப் பேசி பட்டிமிரட்டு மிரட்டிப் பலவாறாகப் பிதற்றி திண்டாடுகிறார்கள்.

**227.** இத்திண்டாட்டத்தையே மநு ஆதியில் ஏற்படுத்தினரென்றும், இதுவே இந்துமத மென்றும், எள்ளளவும் இதற்கு விரோதமாய் நடக்கப்படாதென்றும், சனங்கள் இத்துறையினின்று அணுவளவும் பிசகக்கூடாதபடி காப்பாற்றவேண்டுமென்றும், வெகுதேசாபிமானத்துடன் ௸ பிராமணர்களில் பலரும் நம்மவர்களில் சிலரும் தங்களைத் தலைவர்களாகத் தாங்களே பாவித்து, அரசியல் முறைகளில் வெகு பாடுபடுகின்றார்கள். ஐயோ! இதுவென்ன கூத்து! சர்வமும் பிரம மயமென்றும், சர்வமும் விஷ்ணு மயமேன்றும், சர்வமும் சிவமயமேன்றும்

சாஸ்திரங்கள் ஓலமிடச் சாஸ்திரிகள் பேதமிடுங் காலமாச்சே!

**228.** மநு தானே சுயமாக நீதிச்சட்டங்களை திடீரென உற்பத்திபண்ணவில்லை என்று முன் 70-வது பத்தியின் பாதக்குறிப்பில் (The Foot-note) கூறப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர், கபிலர் முதலானவர்கள் முறையே மூன்று, ஏழு பிராயங்களிலேயே அற்புதமாய்ப் பாடினார்களே அது தெய்வசக்தி யல்லவா? அதுபோல் மநு ஏன் தெய்வசக்தி படைத்து தானே எழுதியிருக்கக் கூடாதென்று சிலர் கருதலாம்; பல சன்மங்களில் ஐம்புலன்கள் மூலமாக அளவிறந்த இன்பதுன்பங்கள் அநுபவித்தபின்பு மேற்படி ஐம்புலன்கள் இடரேன்றும், அவைமூலமாகவந்த அறிவுக்குக் காலபயமுண்டேன்றும், அறிந்து அகண்டநிலைபற்றி உயர்நிலையடைந்தும் பூர்த்தியாகாமல் சொச்சவினையோடு மறு சனனமெடுத்த பெரியோர்கள் இளவயதிலேயே அவ்வண்ணம் பாடுவதும் மற்ற அற்புதச்செயல்கள் செய்வதும் இயற்கை. அவர்களைத்தான் சனங்கள் தெய்வசக்தி படைத்தவர்களென்றும் அல்லது தெய்வத்தால் அநுப்பப் பட்டவர்களென்றும் (மூலகாரணந் தெரியாது) கூப்பிடுவது வழக்கம்.

**229.** அப்படிக்கில்லாது தெய்வம் ஒரு மனிதனைத் திடீரென அநுப்பி உலகவிருத்திவழியில் அநுபவமில்லாமலேயே ஷீயோர்களுக்குச் சகல சட்டங்களைச்செய்விப்பதென்பது சுத்தப் படுபோய்; இதற்கிணங்க,

1. "உறவுடலை யெடுத்தவரில் பிரமாதியேனு மூனை † கறவுமரிதன்றே" என்றும், [யொழிந்துதள்ளற்
2. "ஆராயும்வேளையிற் பிரமாதியானுலு மையவொரு செயலுமில்லை" என்றும்,

தாயுமானவர் கூறியுள்ளார்; அதாவது, பிரமன், விஷ்ணு முதலானவர்களாயினும் உலகத்தில் மானிடதேகம் எடுத்த பிறகு அவர்கள் தங்கள்மனத்தை பஞ்சேந்திரிய வழியில் செல்லாமல் அடக்கி அதைக்கரைப்பது

† ஊனை — மனதை

எளிதல்லவென்றும், மேற்படியார்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு தனிச்செயலில்லையென்றும், கூறியதை நன்கறிக. மேலும், இது விஷயத்தைப்பற்றிப் இனி ஒரு நூலில் சமயம் நேரிடில் விரித்துரைக்கப்படும்.

**230.** சாதியைத் தொழில்மூலமாய் சனங்கள் பரம்பரையாகக்கொண்ட வழக்கத்திற்குப் பின்னும் இதன் 75-ம் பத்தியின் பாதக்குறிப்பில் கூறியபடி, பரம்பரைப் பிராமணர்கள் உற்பத்தியானதிற்கு முன்னும் உண்மைப் பிராமணர்களை (அதாவது அந்தணர்களை) ஆதரித்தும், மேற்படி தொழில் பெயர் வழங்குமுன் இத்தகைய வகுப்பேயில்லாமல் வெகுகாலம் நமது முன்னோர்கள், பரம்பரைப் பிராமணர்களும் இவர்களால் தன் சுயநலங் கருதி உற்பத்திபண்ணப்பட்ட எக்கிய செபதப மந்திரம் முதலானவைகளில்லாமலே நன்மைதீமைகள் நடத்தி வந்தார்களென்பதை, மநு முதலில் மேற்படி நான்கு பிரிவினைகளை வகுத்தனரென்று (உள்ளதறியாது) நம் சனங்கள் சொல்லும் சொல்லாலேயே, இது ஒரு காலத்தில் உண்டானதேயன்றி அதற்குமுன் இவ்வகைப் பிரிவுகளும் அதனால் ஏற்பட்ட கொடிய வழக்கங்களும் இல்லையென்று நன்றாய் விளங்கும்.

**231.** மேலும் மேற்படி நான்கு பிரிவினைகளையும் அவைகளுக்குரிய சட்டங்களையும் மநு ஆதியில் உற்பத்திபண்ணி அக்காலத்துக்கேற்ற சீர்திருத்தஞ் செய்தனரென்றால், அவர் எந்த ஆதாரங்கொண்டு எத்தேசத்திலுதித்து எச்சீர்திருத்தஞ் செய்தனரோ, அதே ஆதாரங்கொண்டு அத்தேசத்திலேயே உதித்த நாம் தற்காலத்துக்கு வேண்டிய சீர்திருத்தம் நீதிவழியாய்ச் செய்யத் தடையேன்? ஆனால் முற்காலத்தவர்களுக்கு விசேஷமான சக்தியுண்டென்று சிலர் உரைக்கிறார்கள். நவக்கிரகங்கள் அப்பொழுது இருந்தவையே இப்பொழுதும் இருக்கிறதனால் மனிதருடைய தூலபூதசக்தி வேறுபாடாவதற்கு இடமில்லை; சூட்சமபூத சக்தியிலும் அப்படியே வித்தியாசத்திற்கு இடமில்லை. ஆனால் முற்காலத்தவர்கள் தெய்வத்தால் அனுப்பப்பட்ட தெய்வ

மனிதர்களென்றால், இக்காலத்தவர்களும் ஏன் ஷை தெய்வத்தால் அனுப்பப்பட்ட ஷை தெய்வமனிதர்களாயிருக்கப்படாது? அதுவுண்டு இது இல்லை என்பதற்கு ஆதாரமென்ன? அல்லது தெய்வம் முன் கருணையோடிருந்து பின் கருணையற்றதா? அல்லது பரம்பரைஜாதிப் பயித்தியத்தாலும் மற்ற துர்க்குணங்களாலும் அகமமதைகொண்டு உள்ளதை உள்ளபடி அறியாது அழிகிறேமா? மெய்ந்நடு நிலைமையோடு சற்று ஆழ்ந்து ஆலோசித்தால் உண்மை விளங்கும்.

**232**. சிலர்தம் சுயநலங்கருதி பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் முறையே பிரம்மாவின் வாய், தோள், தொடை, பாதம் முதலியவைகளினின்று உற்பத்தியானார்களென்று தாங்களே நேரில் கண்டவர்கள்போல், பாமரர்களின்முன் அஞ்சாது பட்டிமிரட்டு மிரட்டி, பாடுபட்டுச்சாப்பிட அஞ்சி சொன்னார்களேயன்றி யதார்த்தமல்ல. இது சத்தியம். இதன் விருத்தாந்தம் **கபிலரகவல்** பார்த்தால் இனிது விளங்கும்.

**233**. மேலும், "**தேகங்களை**" நான்காக பிரிக்கலாமென்றாலோ சகல மனிதர்களின் தேகங்களெல்லாம் பஞ்சபூதத்தின் தன்மாத்திரைகளேயன்றி வேறன்று. "**மனம்**" நாம் உட்கொள்ளும் வாயுபோல், சமஷ்டியாகையால் மனத்தை பிரிக்கவும் முடியாது; அல்லது **ஆத்மாவை** நான்கு வருணமாக பிரிக்கலாமென்றாலோ அதுவும் எல்லையற்று எங்கும் நிரம்பியுள்ளதாதலால் அதையும் பிரிக்கமுடியாது;

**234**. ஆகையால், தேகம், மனம், ஆத்மா ஆகிய இம் மூன்றில் ஒருவர்க்கொருவர் எவ்வித வித்தியாசமும் கிடையாது. பின்னர், மனிதர்க்கு மனிதர் எவ்விதத்தில் வித்தியாசமுண்டென்றாலோ, **ஐம்புலன்களில் அகப்பட்டு** எவ்வளவுக்கெவ்வளவு ஒருவர் கட்டுப்படுகிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு மேற்படியார் **அறிவு குன்றி**, அவரது மனம் ஒடுங்கியும், மற்றொருவர் எவ்வளவுக்கெவ்வளவு **ஐம்புலன்களை அடக்கி** ஷை ஐம்புலக்கட்டறுத்து **சுவாதீனரா**கிறாரோ அவ்வளவுக்

கவ்வளவு அறிவுவளர்ந்து அவரது மனம் விசாலிக்கும். மேற்படி மனோநிலையில்தான் ஒருவர்க்கொருவர் வித்தியாசமுளது. இப்படி ஒருவரின் மனோநிலையறிந்து அவர், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு நிலைகளில் இந்நிலையென்று ஆதியில் கூப்பிடப்பட்டதேயன்றி இயற்கைக்கு விரோதமாய் பரம்பரையாகக் கொண்டதன்று.

**235.** சனங்கள் முற்கூறியபடி தாங்களே பரம்பரையாகக்கொண்ட பிசகினால் வந்த துன்பங்களுக்குக் காரணம் மநுவென்றுசொல்லி அவரைத் தூஷிக்கிறார்கள். இது பிசகு; ஏனெனில், வசிட்டர், சத்தியர், பராசரர், வியாசர் முதலானவர்கள் பரம்பரைப் பிராமண வம்சத்தவர்களல்ல. அப்படிக்கிருந்தும் அவர்கள் வேதத்தைக் கற்பிக்கும் மகரிஷிகளாக முற்காலத்தில் நன்கு மதிக்கப்பெற்றார்கள். இதனால் ஆதியில் பரம்பரையாக சாதிகளை ஒருவரும் வகுக்கவில்லையென்று நன்றாய் விளங்கும்.

**236.** இதுபோலவே ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணன் முதலானோர்களின் உன்னத மனோநிலையைச் சனங்கள் கண்டபோது, அப்பெரியோர்களைத் தெய்வமாக சிறப்பித்து வணங்கினார்கள். பரம்பரைப் பிராமணர்களும் அவர்களைத் தாழ்ந்த க்ஷத்திரிய குலத்தி லுதித்தவர்களென்று வணங்காமலில்லை. ஆனால் ஷை பிராமணர்கள் மேற்படி பெரியோர்கள் ஒவ்வொருவரையும் பிறப்பில் சுவாமியின் அவதாரம் என்றுகூறி, சனங்களை ஏமாற்றுகிறார்கள். அதன் உண்மை இனி ஒரு நூலில் சமயம் நேரிடில் விரித்துரைக்கப்படும்.

**237.** இது நிற்க, பரம்பரை வழக்கம் உண்மை ஞானிகளுக்கும் பக்த சிரேஷ்டர்களுக்கும் இடையூறாய் அளவிறந்த துன்பத்தை விளைவிக்கின்றது; உதாரணமாக, திருப்பாணாழ்வார், நந்தனார் முதலியவர்கள் முதலில் சொல்லமுடியாத இம்சைகளைப் பரம்பரைப் பிராமணர்களால் அடைந்த பின்னரே, தங்கள் அதிதீவிர மனோபலத்தால் ஷை இம்சைகள் நீங்கித்

தாங்கள் சுகமுற்றதுமன்றி தங்களை ஷை பிராமணர்களும் வணங்கலாயிற்று; இதுவோ இந்து மதம்?

**238.** 1. "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்ற பழமொழிப்படி, நம் ஞான பூமியில் துறந்த ஞானிகளுக்கு, முடிமன்னர்களும் கீழ்ப்படிந்து அவர்களை வணங்குவது நமது நெடுநாள் வழக்கம். சனக மகாராஜன், தன்னிடத்தில், உபதேசம் பெறவந்த சுகப் பிரம்மரிஷியையும், பத்திரகிரியார், விஜயரெகுநாத சொக்கலிங்க நாயகர் முதலிய அரசர்கள் முறையே பட்டினத்தடிகளையும், தாயுமானவர்களையும், அவரவர்களின் உயர்நிலையைக் கண்டபோது அவர்களை நன்கு மதித்து சிறப்பித்து வணங்கினதாகக் கூறப்படுகிறது.

2. சமீபகாலத்தில் இராமநாதபுரம் இராஜ பெருமான் அவர்களும் (His Highness the Raja of Ramanad) சுவாமி விவேகாநந்தர் அவர்கள் அங்குற்ற போது, அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவரை இரட்டைக் குதிரைகள் பூட்டின ஒரு சிறந்த வாகனத்திமேலேற்றி, ஷை குதிரைகளை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டு அவ்வண்டியில் பூட்டப்பட்டிருந்தத் தோல் ஒன்றை எடுத்து தன் தோளில்வைத்து வீதிநெடுக இழுத்து ஷை சுவாமிகளைச் சிறப்பித்துக் கொண்டாடினதாகக் கூறப்படுகிறது. (இதன் விவரம் 1915-ம் வருஷத்தில் சுவாமி வீரஜானந்தர் என்பவர்களால் வெளியிடப்பட்ட சுவாமி விவேகாநந்தர் 50-ம் வருடப்பிறப்பு ஞாபகப்பதிப்பு, மூன்றும் பாகத்திலும் மற்ற புஸ்தகங்களிலும் காணலாம்-The 3rd Volume of Swami Vivekananda's Semi century Birth-day, Memorial edition published by Swami Virajanandar, in the year 1915).

3. இவ்விதம் துறந்த ஒரு ஞானி எச்சாதியராயினும் எவ்வளவு அசுத்தமாகக் காணப்படினும் அஃதொன்றையும் கவனியாது மேற்படியாரை ஈசுவராராக் மதித்து, முடிமன்னர்களும் அவரைப் போற்றிக் கொண்டாடுவதே நமது இந்து மதத்தின் சிறப்பாகும்

இந்துகுடியானவரின் **சுவாதீன சுதந்தரம்** (The Right of Freedom) இந்நாட்டில் இத்தன்மையதெண இதனால் இனிது விளங்கும்.

4. பரம்பரைப் பிராமணர்கள் தாங்கள் யாசகர்களாக யிருக்கையிலேயே குடியானவர்களைச் சூத்திரர்களென்று அவமதிப்பவர்கள், இராஜ அதிகாரம் பெற்றபின் எங்ஙனம் நமது பூர்வீக வழக்கத்தை அனுசரித்து, நம்மவர்களிலுதிக்கும் பெரியோர்களை மேலே சொன்னவிதம் போற்றி, நம் நாட்டில் ஞானிகள் தழைத்தோங்கும்படிச் செய்வார்கள்?

**239.** பரம்பரைப் பிராமணர்கள் வேதமோதி எக்கிய செபதபங்களால் மழை (வேண்டும்போது) பெய்யும்படிச் செய்தாரென்றும் அதனால் அவர்கள் சிரேஷ்டர்களென்றும் சிலர் சொல்லுகிறார்கள். வியாதிக்கு வைத்தியர் மருந்து கொடுத்தும் அல்லது மாந்தரீகர் சிலசமயம் மந்திரித்தும் சொஸ்தம் பண்ணுவதுபோல, நம்மவர்களிலுள்ள யோகி, முனிவர் முதலிய **மனவலிமை** பெற்ற பெரியவர்களாலும் அல்லது பலர்கூடி ஒத்து ஓரேமனதாய் உருக்கமுடன் மழைபெய்ய வேண்டுமென்று பிரார்த்திப்பதாலும் அநேகமாய் மழைபெய்வதுண்டு. மிகுந்த **மனவலிமை**யுடையவரெவராலும் அக்குறையை நிவர்த்திக்கக் கூடுமேயன்றி அச்சக்தி பரம்பரைப் பிராமணர்களுக்குத்தான் மற்றவர்களுக்கில்லையென்பது சுத்தப்பிசகு.

**240.** மேற்படியார்கள் ஆதியில் மந்திர சக்தியால் சகல சனங்களையும் அரசர்களையும் வசியம் செய்து தங்களைக்கண்டு பயப்படும்படி பண்ணினார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். அது அப்படியல்ல. மந்திரபலத்தால் ஒரு மாந்தரீகர் தன்மனோசக்திக்குக் கீழ்ப்பட்டவரையே வசியப்படுத்தலாமே யன்றி, தன் மனோசக்திக்கு மேம்பட்டவர்களை வசியப்படுத்தி பயமுறுத்த முடியாது; உதாரணமாக, ஞான சிரேஷ்டர்களான ஆதிஜனகன், ஸ்ரீகிருஷ்ணன், பட்டினத்தடிகள் முதலானவர்களை எப்பேர்ப்பட்ட மந்திரதந்திரிகளும்

வசியப்படுத்தி பயமுறுத்த முடியவே முடியாது; ஏனெனில், யோகத்திலும் ஞானத்திலும் சிறந்தவர்களாலேயே ஆதியில் மந்திர தந்திரசக்திகள் (சாமானியர்கள் சொற்ப சித்தியடையும்படி) கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் ஷ மந்திரசக்தியால் மகாமனவலிமைபெற்ற யோகிகளையும் ஞானிகளையும் எங்ஙனம் வசப்படுத்தி பயமுறுத்தமுடியும்?

**241.** பரம்பரைப் பிராமணர்கள் ஏற்பட்டதற்கு முன்னும் பின்னும் நாளதுவரையிலும், நம் நாட்டில் குடியான சனங்களுள்ளும் அரசர்களுள்ளும் யோகிகள் ஞானிகள் தோன்றி வசித்துவருகிறார்கள்; ஆகையால் இவர்கள் எல்லோரையும் வசியப்படுத்தி மிரட்டினார்களென்பது ஒப்பத்தக்கதல்ல. பாமர சனங்களையும், பாமர அரசர்களையும் ஷ பிராமணர்கள் வசியப்படுத்தி மிரட்டினார்களேயன்றி மற்ற விவேகிகளையல்ல.

**242.** சிலர், பரம்பரைப் பிராமணர்களுள் அநேகர் இராஜாங்கத்தில் சமஸ்தான குருவாயமர்ந்து தங்களது சாமர்த்தியத்தை பலகாலும் நிரூபித்துள்ளார்களென்றும், அதனால் அக்குலத்தி லுதித்தவர்களுக்கு இராஜஞானம் (The Political Wisdom) புதிதன்றென்றும், அதில் தாங்களே சிரேஷ்டர்களென்றும் பிரஸ்தாபிக்கிறார்கள்; இது முற்றிலும் பிசகு. சமஸ்தானகுருவாயிருந்த வியாசர் முதலானவர்கள் பரம்பரைப்பிராமண வகுப்பினர்களன்று. அவர்கள் இந்து கூட்டத்திலிருந்து உலகஇச்சை யுள்ளவரையில் இதன் 11-வது பத்தியின் கீழ்கண்ட முக்கிய ஜீவாதார விதிப்படி உழைத்துச்சாப்பிட்டு சகல கஷ்ட நிஷ்டூரங்களுக்கு ஈடுபட்டபின் அநுபவ அறிவுகொண்டு மனம்தெளிந்து, ஷ இச்சை துறந்து வினை யற்று விளங்கியபோது, ஷ யார்களின் அறிவை அரசரறிந்து அவர்களைத் தனது சமஸ்தானத்திலிருக்கச்செய்து, தங்களுக்கு (அரசர்களுக்கு) இராஜநிர்வாகத்தில் ஏகதேசம் ஏற்படும் சிற்சில இடையூறுகளைத் தாங்கள் பற்றுடையவர்களாகையால் தங்களால் நிவர்த்திக்கக்கூடாத சமயங்களில்

பற்றற்று மெய்ந்நடுநிலைமையிலுள்ள சமஸ்தான குருவின் மூலமாக ஷை இடையூறுகளை நிவர்த்திசெய்து வருகிறது வழக்கம். சகல தொழிலற்று பிராமணவேடம் பூண்டு உலகத்தவர் ஈடுபாட்டில் எள்ளளவும் அநுபவமில்லாதவரும் மிக்க உலக பற்றுடையவருமாகிய பாரம்பரைப் பிராமணர்களுக்கு அப்பேரறிவு எங்ஙனம் பொருந்தும் ?

**243.** இவர்கள் எந்நாள் தங்களைத் தாங்களே பிராமணர்களென்றும், மற்றத் தொழிலாளர்களைவிட உயர்ந்தவர்களென்றும், பிறர் தொடப்படாதென்றும், † குடியானவர்கள் முதலிய மற்றவர்கள் தாகத்தைத் தணித்தால் அல்லது பசியையாற்றினால், அது சேஷமென்றும் கூறினார்களோ, அந்நாள்முதல் உலக அநுபவ அறிவிழந்து அன்பற்ற ஞானசூனியர்களானார்கள். இது சத்தியம்.

**244.** சிலர், ஸ்ரீராமாநுசாசாரியார், ஸ்ரீராஜாராம் மோகனராய், சுவாமிதயாநந்தசரஸ்வதி முதலான பெரிய ஆசாரிகள் (The great Reformers) பாரம்பரைப் பிராமணக்கூட்டத்திலிருந்தே புறப்பட்டார்களென்றும், இதனால் இக்கூட்டம் மற்றக்கூட்டங்களைவிட சிறந்ததென்றும் கூறுகிறார்கள். இது அயுக்தம்; ஏனெனில், உலகத்தவருக்குரிய நடையுடைபாவனையை உள்ளபடி உணராது அவைகளை இழித்துரைத்து, உலகத்தைத் துறந்தவர்களின் வேஷம்பூண்டு, வேதம் ஓதி, கணக்கு வழக்கில்லா பேதம்போதித்து வெகுகாலம் உழன்றபின்

---

† நம்நாட்டில் உத்தம பக்தர்கள், யோகிகள், ஞானிகள் முதலியோர்கள் எச்சாதியர்களாயினும் அவர்களை நம் சனங்களும் அரசர்களும் கண்டபோது தாங்களே சற்று விலகி மரியாதை செய்வது வழக்கம். ஷை மரியாதையை ஷை சில பெரியோர்களின் புத்திரபௌத்திரர் முதலானோர்களுக்கு நம்மவர்கள் மூடமதியால் பரம்பரையாகக்கொடுக்க, அதை ஆதாரமாகக்கொண்டு ஷை பிராமணர்கள் நம்மவர்களைத் தூரவிலகும்படி முதலில் நயமாய்ச்சொல்லி, பிறகு மெள்ள அதிகாரஞ்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

தங்கள் கூட்டம் மிகவும் கெட்டதுமன்றி, பிறகூட்டங்களையும் கெடுக்கிறதைக்கண்டு ஷை குறையை நிவர்த்தி செய்ய முன்வந்தார்களேயன்றி வேறன்று.

**245.** ஆனால், இதன் 11-2வது பத்தியில்கண்டபடி, அவரவர் கருமவிதிப்பிரகாரம் அவரவர் இஷ்டம்போல் நடந்துகொள்ளுவதே ஒழுக்கமென்றுகருதி குடியானவர்கள் பிறர் விஷயத்தில் பிரவேசிக்கிறதில்லை. வேதம் ஓதி பேதம் போதித்து தீவினை யுண்டுபண்ணியிருந்தால், அவர்கள் முன் னுக்குவந்து மேற்படி தீவினையை நிவர்த்திசெய்திருப்பார்கள். குற்றம் செய்வதும் அதை நிவர்த்திப்பதும் ஒரு கீர்த்தியென்று அவர்கள் கருதார்கள்.

**246.** மேலும், பரம்பரைப்பிராமணர்களால் விளைந்த தீங்கைப் பொருளாகி புத்தசமய ஆதிஸ்தாபனராகிய ஸ்ரீகௌதமசாக்கியமுனியெனும் ஓர் அரசன் வெகு நாளைக்கு முன்னேயே சனப்பொதுக்குறையை நிவர்த்திக்க முன்வந்து சமரசநிலையைத் தாபித்தாரென்பதே குடியானவர்களுக்குக் குறைகள் நேரிட்டபோது அவைகளை நிவர்த்திசெய்வதற்கு அவர்களிடத்திலேயே சக்தி இருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

**247.** இதுநிற்க, ஷை பரம்பரைப்பிராமண ஆசாரியர்களுக்கேற்பட்ட புத்தி சாமர்த்தியங்களும், குடியானவர்களுடைய சத்திரஞ் சாவடி முதலான தர்மதலங்களில் வேண்டிய உதவிபெற்று, அதனாலுண்டானதேயன்றி, அவர்கள் யாசகம் வாங்காமல் உழைத்துச்சாப்பிட்டு தங்கள் அறிவை விருத்திபண்ணினவர்களன்று.

**248.** ஒரே குற்றத்தைச்செய்த பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நால்வருக்கும், ஒரே தண்டனை விதிக்காமல், சூத்திரரைவிட வைசியருக்கு சற்றுகுறைத்தும், அதைவிட க்ஷத்திரியருக்குக் குறைத்தும், அதைக்காட்டிலும் பிராமணர்களுக்கு மிகக்குறைத்தும் மநு விதித்திருக்கிறதாகவும் அது அக்கிரமமென்றும் சிலர் கூறுகிறார்கள். இது உசிதமன்று; ஏனெனில்,

அவர் அவ்விதம் எழுதியது பரம்பரை வகுப்பினர்களுக்கன்று. தற்காலம் நடந்துவரும் நீதித்தலங்களில் அனுசரிக்கும் நீதிமுறைகளைச் சற்று கவனித்து பார்த்தால் மனிதர் தாரதரத்திற்குத் தக்கபடியே அவர்களும் தண்டிக்கிறதாகக் காணப்படுகிறது.

**249**. மேலும், பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறு பிள்ளைகளுள் சிலரை நயத்தாலும், சிலரை அதட்டியும், சிலரைக் கடுஞ்சொல்லால் வைதும், சிலரை அடித்தும் உபாத்தியாயர்கள் படிப்பிப்பது சகசம். இது தவறன்று. இப்படிச்செய்தால்தான் பிள்ளைகள் படித்து மேன்மை யடையும். மரியாதையாய் வளர்க்கப்படும் பிள்ளையை, "நீ ஏண்டா இந்த பாடம் படிக்கவில்லை" என்று உபாத்தியாயர் கேட்பதே, மரியாதையின்றி வளர்த்தபிள்ளையை உபாத்தியாயர் அடித்து பயமுறுத்துவதற் கொப்பாகும். ஆகையால் உண்மைப் பிராமணர் ஏகதேசம் ஓர் அற்ப குற்றம் செய்வாராகில் அப்பொழுது அவரைநோக்கி "இத்தகைய குற்றம் நீர் செய்யலாமா" என்று ஒரு அதிகாரி கேட்பதே அவரை அடித்ததற் கொப்பாகும். ஷை உண்மைப் பிராமணர்களுக்குச்சொன்ன ஒரு நீதியைத் தற்காலம் இயற்கைக்கும், இந்து மத தத்துவ சாஸ்திரத்துக்கும், முற்றும் மாறான பரம்பரைப் பிராமணர்களுக்கென்று சொல்லுவது சரியன்று. ஒரு பிராமணன் கொலை செய்வானாகில் அப்பொழுது அவன் பிராமணனன்று. அவனது அகண்ட அறிவுபோய் இச்சையால் கட்டுண்ட கொடிய சூத்திரனாவான் ; அப்பொழுது சூத்திரனுக்குள்ள தண்டனை அவனுக்கு விதிக்கப்படுவதே சீர். இப்படியே தப்பிதமாய் பரம்பரையாகக்கொண்ட இதர வருணத்தாருக்கு ஷை மநு நீதியைத் தாறுமாறாகச் சுட்டிப்பேசுவது சரியன்று.

**250**. ஒரு போர்வீரர் உலகத்தைக் காக்கும்பொருட்டு தன்பெண்சாதி பிள்ளையைக் கருதாது தன் உயிரைக் கொடுக்கிறவராகையால், ஒரு அற்ப குற்றத்திற்காக அவரைச் சாதாரண மனிதன்போல் தண்டிக்கிறது

உசிதமன்று. தற்காலம் மேல்நாட்டில் மிகுநாகரிகம் பெற்ற அங்கிலேய இராணுவ இலாகாவிலும் இவ்வித மான வழக்கம் அனுசரிக்கப்படுகிறதைக் காணலாம். ஆனால் அவனும் கொலைமுதலிய கொடிய காரியங்களைச் செய்யும் பக்ஷத்தில், மற்ற சாதாரண கொலையாளியை விட மிகக்கடுமையாக அவனை தண்டிப்பதே முறை; ஏனெனில், சனங்களைக் காக்கும் பொருட்டு ஏற்பட்ட ஒருவனாலேயே மேற்படி தீங்கு விளையுமாயின், அவன் உண்டவீட்டுக் கிரண்டகம் பண்ணின மகா பாதக னாகிறன்.

**251**. முன் 65 முதல் 94-வது இலக்கம் ஈறாகவுள்ள பத்திகளில் சாதிப்பிரிவினைகளைப்பற்றி கூறப்பட்டிருக் கிறது. அதன் மூலக் கருத்துகளை உள்ளபடி யுணராது நமது பெருங்கூட்டமாகிய குடியானவர்களைச் சூத்திரர் களென்று பரம்பரைப் பிராமணர்கள் அகந்தைகொண்டு அறிவிழந்து கூப்பிடுகிறார்கள். நம் கூட்டத்திலுள்ள ஒவ்வொரு தொழில் செய்வோருக்கும் தொழில்மூல மாகத் தனித்தனியே ஒவ்வொரு பெயர் ஏற்பட்டு வழங் கிவருகிறது; உதாரணமாக, வேளாளர், படையர்ச்சி, கோகுலம் முதலியன. இவர்கள் தங்கள் பத்திரங்கள் எழுதுங்காலத்திலும் இன்னும் மற்ற எந்த சந்தர்ப்பத் திலும் ஷை தொழில் பெயர்களைச் சொல்லுகிறார் களேயன்றி, சூத்திரர்களென்று சொல்லிக்கொள் ளுகிறதில்லை. இப்படி இவ்வழக்க விரோதமும் நிந்தைக் கிடமுமானசொல்லை நம்மவர்கள் அங்கீகரிக்கவேயில்லை. ஆனால் இது இழிவான வார்த்தை யென்று கவனித்து சமீபகாலம் வரையில் மறுக்கவுமில்லை. நம்மைச் சில அன்னிய மதஸ்தர்கள் தங்களது விவேகசூனியத்தால் "அஞ்ஞானி" யெனக் கூப்பிடுகிறார்கள். நம்மவர் களிலும் சிலர் இதன்பொருளை யறியாது, தாங்கள் "அஞ்ஞானிப் பிள்ளை" யெனச் சிலசமயம் விடையளிக் கிறார்கள். இது சொல்லளவேயாகும். அஞ்ஞானி யென் றதனால் ஷை அன்னிய மதஸ்தர்கள் எல்லோரும் மெய்ஞ் ஞானிகளோ? அல்லது நம்மவர்கள் அனைவரும்

அஞ்ஞானிகளோ? அல்லல்ல. போல்லாங்கேன்ப தேல்லாந் தவிர்த்த பூரண அறிவுடையோர் தவிர மற்றெல்லோரும் அஞ்ஞானிகளென்று சில அன்னிய மதப்பேதைகள் அறியார்கள்போலும். நாம் இவ்விதம் உரைக்கும் அறியாக் குழந்தைகளின் வார்த்தையை எவ்விதம் அலக்ஷியஞ்செய்து வருகிறோமோ அவ்விதமே "சூத்திரர்கள்" என்னும் இடக்கான வார்த்தையை அலக்ஷியஞ்செய்து வருகிறோம். இது பத்தரை மாற்றுப் பசும்பொன்னைப் பித்தளை யென்றும், பித்தளையைப் பசும்பொன் னென்றும் பேதையர்கள் கூறினதனால், அது அவ்வண்ணமாகுமா? முடிவில் பொன் பொன்னேயாம், பித்தளை பித்தளையே. இதன் உண்மை கூடிய சீக்கிரத்தில், நம் சனங்கள் அறிந்து கொள்வார்கள். உள்ளதையுள்ளபடி அறியும் காலம் குறுகின.

**252.** சில பரம்பரைப் பிராமணர்கள், வேதத்தைச் சூத்திரர்கள் படிக்கக்கூடாதென்றும், கேழ்க்கக்கூடாதென்றும் கூறுவார்கள். இவர்கள் வேதம் இன்னதென்றும், எவர்களால் எவ்விதமாய் உற்பத்தியாகிறதென்றும் அறியாது சுயநலங் கருதிச்சொன்ன சொல்லாகும். வடமொழியிலுள்ள சிறந்த நூல்கள் தவிர, மற்றெவையும் வேதம் அன்றென்று இவர்கள் கருத்து போலும்.

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்,"

என்று பவணந்தி முனிவர் கூறியபடி, ஒருவர் வினையற்றால், ஆதிமூலப் பொருளையடைந்து, இப்பிரபஞ்ச உற்பத்தி, விருத்தி, இலயம் என்ற விஷயங்களின் மூலக் கருத்துகளைத் தனது நுண்ணறிவால் இலகுவாய் அறிந்து கொள்ளக்கூடுமேயன்றி, அது ஒரு வகுப்பாருக்கு மாத்திரம் சொந்தமானதன்று. அப்படி நன்னிலையடைந்த ஆ தி ஜ ன க ன், ஸ்ரீ கிருஷ்ணன், ஆழ்வார்களில் பலர், அறுபத்து மூவர்களிற் பலர், சித்தர்களிற் பலர், பட்டினத்தார், கபீர்தாஸ், அப்பர், தாயுமானவர், குணங்குடி மஸ்தான் முதலானவர்களெல்

லாம் பரம்பரைப் பிராமணர்களின் சொல்லுக்கும் எண்ணத்திற்கும் மாறுபாடாகவே தாங்கள் வேதக் கருத்துகளை அறிந்து அனுபவித்ததுமன்றி, இவ்வுல கத்தவர்கள் அவ்வண்ணம் உய்யும்படி ஒவ்வோர் அரு மையான **வேதம்** உற்பத்தி பண்ணியுள்ளார்கள். ஷை பரம்பரைப் பிராமணர்களின் சொல்லால் அவர்கள் தடைப்பட்டார்களோ ? இல்லை ! இல்லை !!

**253.** இஃதன்றியும் தூக்கணாங் குருவி, தேனீ, குளவி முதலானவைகள் பருவத்தில் தத்தம் கூடுகளை வெகு விசித்திரமாய் கட்டுகிறது, பலரும் அறிந்த விஷயம் ; அவ்வறிவும் அவைகளைக் (கூடுகளைக்) கட் டும் சக்தியும் ஷை செந்துக்களுக்கு இயற்கையாயிருக் கிறது ; அது போல, **"மனிதவர்க்கத்திற்கே பிரம்ம ஞானம் இயற்கை;"** இதற்கிணங்க,

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே."
"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிதுகா
ணப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேது வருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்து நானுள்ள பொழுதே யருட்
ககன வட்டத்தினின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்து மதியவச முறவே
பண்ணுவது நன்மை,"
"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரிபூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே,"
"கைவிடாதே யென்றவன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்து குருவே,"
"நியமமாதி நிலைநின்று ஞான நெறி
நிஷ்டை கூடவு மெந்நாளுமே
யறிவினின்று குருவா யுணர்த்தியது
மன்றி மோன குருவாகியே
யகிலமீது வரவந்த சீரருளை
யையவைய வினியென் சொல்கேன்,"

என்று பல இடங்களிலும் தாயுமானவர் கூறியதை நன்குணர்க. **வேதங்களை ஷை பிர்ாமணர்கள் மூலமாய் வடமொழியிலிருந்தே** ஒருவர் அறிந்து கொள்ள வேண்டுமென்பது **பெரும் பேதமையே.**

**254**. மேலும் பட்சிகளும், மிருகங்களும், மனிதர்களும் (இயற்கைக்கு விரோதமாயும்) சில அபூர்வச் செய்கைகளைப் **பழக்கத்தால்** செய்கிறதை விநோத சாலைகளில் (Circus) பலரும் பார்க்கலாம்.

**255**. இது நிற்க, சூத்திரர்களுக்கு வேதம் படிப்பிக்கப் படாதென்று சொல்லும் வாக்கியத்திற்கு அறிய ஞான விஷயத்தை பக்குவப் படாதவர்களுக்குச் (நுண்ணறிவிலிகளுக்குச்) சொல்லப்படா தென்று பொதுவாக சொல்லப்பட்டால், அது ஒக்கும்; ஏனெனில், அபக்குவிகளுக்குச் சொன்னால் துன்பந்தருமென்ற கருத்தமைத்து,

"பொருளு ணர்வார் இல்வழி பாட்டுரைத்த வின்னு,"

என்று கபிலதேவரும்,

"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்று மெனலாற்
சக மீதிருந்தாலும் மாணமுண் டென்பது
சதா நிஷ்டர் நினைவதில்லை
சிந்தை யறியார்க்கீது போதிப் பதல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்,"

என்று தாயுமானவரும் கூறியுள்ளார்.

**256**. சிலர், பரம்பரைப் பிராமணருக்கே முக்தியென்றும் அல்லது இதர சாதியார் பரம்பரைப் பிராமணராகப் பிறந்த பிறகே முக்தியடைய வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்; இது சுத்தப்படுபொய். ஆனால் ஒருவர் எச்சாதியராயினும் அருட்சுரந்த பிரம்மஞானியானபிறகே முக்தியென்று பொதுவாகக் கூறப்படின், அது ஒக்கும். தாயுமானவரும் இக்கருத்துக்கிணங்க,

"என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா
யிவை யல்லவாய நின்னை

யருளாகி நின்றவர்க ளறிவதல்லா லொருவ
ரறிவதற் கெளிதாகுமோ,"

என்று கூறியதை நன்குணர்க.

**257.** மேற்படி பிராமணர்களுள் சிலர் தம்தேகம் பிறச்சாதித் தேகத்தைவிட மிகச்சிறந்த திருமேனி யெனக்கூறுகிறார்கள். இதற்கு மாறாக,

"செற்றசவ அந்தணரே செப்பக் கேளீர்
செகத்திலே யுங்கள்நெறி பெரிதா மென்பீர்
கற்றவர்போல் மிகப்படித்துக் கல்விபேசி
காசினியி லாறுதனில் ஸ்நானம் செய்வீர்
சித்தந்தமை யறியாமற் பூசை செய்வீர்
திருடர்களே உங்களுக்கு ஜெபங்களேது
பித்தர்களே சாதியினிற் பெரியோ ரென்பீர்
பீற்றஉடல் பெரிதாமோ பேசக் கேளே,"

என்று சுப்பிரமண்யரும்,

"இடத்தைக் காத்திட்ட சுவானெனப் புன்புலா லிறைச்சிச்
சடத்தைக் காத்திட்ட நாயினே னுன்னன்பர் தயங்கு
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய் நின்னருள் வேண்டும்.
சுக்கிலமு நீருஞ் சொரிமலமு நாறுமுடற்
புக்குழலும் வாஞ்சையினிப் போதுமென்ப தென்னாளோ,"

என்று தாயுமானவரும்,

"தோலென் புதிரா ரம்புமயிர்—இதின்
மால்கொண் டேதும டிப்பை செயிர்,
ஊத்தை சளி குறும்பி மலஜலமே—நிறை
பீத்தவு டலைமதிப் பதாலமே,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகர் முதலிய பல பெரியோர்கள் கூறியிருப்பதை நன்குணர்க.

**258.** பாம்பரைப் பிராமணர்கள் தொடப்படாதென் றும், படப்படாதென்றும், தங்கள் இனமல்லாதாருக் குத் தாகந்தணியத் தண்ணீர் கொடுத்தால் அது சேஷ மென்றும், பிராமணருக்கு அடிமைத்தனம் (அதாவது சேவகாவிருத்தி) இல்லையென்றும், அன்னிய பாஷை யையமிலேச்ச . பாஷையென்றும், அதைக் கற்கப்படா

தென்றும், கப்பலேறி பிறதேசங்களுக்குப் போகப்படா தென்றும், குடியானவர் தொட்ட பதார்த்தத்தைச் சாப்பிடப்படாதென்றும், வெகுவிமரிசையாய் கூறும் இவர்கள், நாளுக்குநாள் ஷெ சம்பிரதாயங்களை மெள்ளமெள்ளக் கைவிடுகிறதை யுத்தேசித்து, ஷெ யார்கள் கெட்டுவிடுகிறார்களென்று சிலர் கூறுவதற்குத் தக்கபதில் கொடுக்கமுடியாமல், சில பரம்பரைப் பிராமணர்கள் குடியானவர்களுங் கெட்டுவிட்டார்கள் பிராமணர்களுங் கெட்டுவிட்டார்களென்று சொல்லி, ஷெ கேள்விக்குச் சமர்த்தாய் சமாதானம் செய்துவிட்டதாகப் பாவித்து, சந்தோஷமடைகிறார்கள்; அந்தோ பரிதாபம்! குடியானவர்கள் முன்னிருந்த நிலை இன்னதென்றும் இப்பொழுது அவர்கள் கெட்டுவிட்ட நிலை இன்னதென்றும் எடுத்துரைப்பாரைக் காணோம்.

**259.** குடியானவர்களை அறிவிலிகளென்றும், சூத்திரர்களென்றும் கூறியபின், அவர்கள் **"கெட்டுவிட்டார்கள்"** என்பது எங்ஙனம் பொருந்தும்? இவர்கள் கருத்துப்பிரகாரம் ஷெயார்கள் முக்காலத்திலும் மூடர்களாதலால், புதிதாய்க் கெடுவதெப்படி? ஷெயார்களுள் பெரும்பாலார் சமீபகாலம் வரையில் **"வழக்கம், வழக்கம்"** எனும் கொடும்பேய்க் கிரையாகி சாதி, மதம் முதலியவைகளின் மூலக்கருத்துகளை பூராயமாய் அறிய முயற்சியற்றிருந்ததை **"நன்னிலை"** என்றும், ஷெ அறியாமையினால் தங்களுக்கு நேர்ந்திருக்கிற இம்சைகளை உணர்ந்து அதை நிவர்த்திக்க வேண்டி, தங்கள் பூர்வீக நிலையைத் தற்காலத்தில் ஆராய்ந்தறிய சிலர் தலைப்பட்டிருப்பதை, **"கெட்ட நிலை"** யென்றும் கருதுகிறார்கள்போலும்.

**260.** பிறர் குறை ஆராய்வதற்குமுன், பரம்பரையாகத் தங்களை பிராமணர்களென்று தாங்களே கூப்பிட்டுக்கொண்டு எந்நாள் தலைமுறை தலைமுறையாக யாசகமெடுத்துச் சீவிக்கத் தலைப்பட்டார்களோ அந்நாள்முதல், இனி எந்நாள் ஷெ யாசகத்தை அறவிட்டு, **"பயன்படும்"** எத்தொழிலும் புரிந்து உழைத்துச்

சாப்பிடுகிருர்களோ அந்நாள் வரையில், தங்கள் அந்தஸ்து இன்னதென்றும், தங்களால் இத்தேசத்தில் விளைகிற பலாபலன்கள் இன்னதென்றும், மெய்ந்நடு நிலைமையோடு ஆராய்ந்தறிந்து அடங்கி இருப்பது நலம்.

மு-க:—(1) மானிடருக் கேற்பட்ட இருகைகளும் ஒரே அங்கத்திலிருக்கையில் இடதுகை தாழ்மையென்றும் வலதுகை மேன்மையென்றும் கூறி இடதுகையைத் துண்டித்துவிடுவாரில்லை; அவ்விதம் துண்டித்துவிட்டாலோ, வலது கையால்தான் இடது கையின் வேலையைச்செய்து வலதுகையும் தாழ்வடைந்து, பிறகு துண்டிக்கப்பட்டு வெறும் முண்டமாயிருக்கும்படி நேரிடும்; ஆகையால் இவ்வுலகில் ஒவ்வொரு தொழிலும் அவசியம், ஒவ்வொரு தொழிலாளரும் அவசியம். இதை அறியாமல் ஒருவர் மற்றொருவரை இகழ்வதினால், மனத்தாபம் விளைந்து, அநேகந் தீங்குகளுக்காளாகி வருகிறோம்;

திருவேங்கிடசதகத்தில்,

"புருஷராய்ச் சனன மெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியொடு மிக்கதன வானுவ தொன்றலது
பூவலஞ் செய்வதொன்று
தருமவா னென்று மிருகீர்த்திமா னென்றுநற்
சற்குண விவேகியொன்று
சகலரும் புகழ்கின்ற வித்துவா னென்றுரண
சங்க்ராம வீரனென்று
கருணையா விந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியி லேன்படைத்தாய்
கருதுதா யுதாரும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
மருவுலா வியதுளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வாதவேங் கடாராயனே,"

என்று கூறியிருக்கிறதை நோக்குங்கால், இவ்வுலகின்கண் யார் உயர்ந்த சாதியினரென்று இனிது விளங்கும்.

மேலும் ஷை சிரேஷ்டர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித சக்தியுண்டு. அதனால் அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தங்களை மதியாதவரிடத்துச் செல்லாது ஒதுங்கிவிடுகிறார்கள். சுமார் 2000-ம் வருடங்களாக நம் நாட்டில் ஒற்றுமைகெட்டு நாளுக்கு நாள் நம்மவர்கள் நசித்துக்கொண்டே வருகின்றதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

(2) இது நிற்க, சகடக்கால்போல உலகில் உயர்ந்தது தாழும், தாழ்ந்தது உயரும்; ஏனெனில், தாழ்ந்த ஒருவருக்குத்தான் உயரவேண்டுமெனும் ஒரு நோக்கத்தால் நாளுக்குநாள் விருத்தியடைய ஏதுவுண்டு; ஆனால், தான் மிக உயர்ந்திருக்கிறதாகக் கருதும் ஒருவர் மேல்நோக்கமற்று படிப்படியாய் தாழ்ந்துவிடுவார். அஃதன்றியும், ஒருவர் தான் உயர்ந்தவராக எந்தச் சமயம் நினைத்தாரோ அந்தச் சமயமே ஷை கினைவால் அவர் மனம் கட்டுண்டு தனதுவிசால அறிவு குன்றிச் சிறியவராவர். இக்காரணத்தினால்தான் மகா ஞானிகள் ஒவ்வொருவரும் தன்னையும் சில சமயம் தன் குலத்தையும் தாழ்வாகக் கூறுகிறார்கள்; உதாரணமாக,

"உன்மணிக்கு ளொளிர் பரஞ் சோதியாஞ்
சின்மயப்பொருளே பழஞ் செல்வமே
புன் மலத்துப் புழுவன பாவியேன்
கன்மனத்தைக் கரைக்கக் கடவதே.
வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென்
றேய்க்குஞ் சொற் கொண்டிராப் பகலற்றிடா
நாய்க்கு மின்ப முண்டோ நல்லடியரைத்
தோய்க்கு மானந்தத் தூவெளி வெள்ளமே,"

என்று தாயுமானவரும்,

"குலம் பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம் பொல்லேனான் பொல்லேன் ஞானியல்லே
னல்லாரோ டிசைந்திலே னடுவேநின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேசவல்லேன்,
இலம் பொல்லே னிரப்பதே யீயமாட்டே
னென்செய்வான் றோன்றினே னேழையேனே,"

என்று அப்பர் முதலிய பலரும் கூறியிருப்பது நம் அறிஞர்கள் அனைவரும் அறிந்த விஷயம்.

(3) ஆகையால் ஒருவர் தன்னையும் தன் இனத்தையும் உயர்த்தி, பிறரையும் பிற இனத்தையும் தாழ்த்துவது தனக்கும் தன் இனத்திற்கும் கேடென்று அறிந்து, நீதிவழியாக தத்தம் கூட்டங்கள் விருத்தியடையுமாறு உள்ளதை யுள்ளபடி யுரைத்து ஷெயார்களை உயர்த்துவதே ஒழுங்கு.

**261. யாசகம்:** தற்காலத்தில் யாசகர்களுள் அநேக விதமுண்டு; அதாவது:—

1. அநாத பிள்ளைகள், கொடிய பிணியாளர்கள், கூன், குருடு, நொண்டி முதலியவர்கள்.
2. தொழில் பயனிழந்தவர்கள்.
3. மாரியாய் முத்து எடுக்கிறவர்கள்.
4. மனத்தாபத்தினால் வீட்டை விட்டகன்று பிச்சை எடுக்கிறவர்கள்.
5. பண்டாரம்.
6. வைராகி.
7. கம்பளத்தார்கள் (அதாவது, குடுகுடுப்பைக் காரர்கள்).
8. சாமியார் வேடம்பூண்ட சில தந்திரிகள்.
9. பிடிவாத பிச்சைக்காரர்கள்.
10. பரம்பரைப் பிராமணர்கள்.

### 1. அநாத பிள்ளைகள்.

(1) தாய் தகப்பனற்ற நமது பிள்ளைகளை சனங்கள் ஆதரிக்க வேண்டுமென்பது அத்தியாவசியம். அவர்களை நாம் சரிவரக் கவனிக்காமல் நாமே அப்பிள்ளைகளைப் பிற மதஸ்தர்களிடத்து ஒப்புவித்து விடுகிறோம். பிள்ளைகள் அநியாயமாய் இந்நாட்டுச் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி தாங்கள் இல்வாழ்வில் அனுபவிக்கவேண்டிய சகல சுகங்களையும் இழப்பதுமன்றி,

பரம் பொருளுக்கும் தங்களுக்கும் யாதொரு பேத மன்னியில் ஏகமாய் அனுபவிக்கும்படி ஏற்பட்ட பல மெய்ஞ்ஞான சாதனங்களை இழந்துவிடுகிறார்கள்; அந்தோ பரிதாபம்!

(2) பிறமத ஆதித்தாபனர்கள் நன்னோக்கத்தோடு அவரவர் மதக்கோட்பாடுகளை அவரவர் நாட்டில் தாபித்தாராயினும், அது அந்தந்த நாட்டுச் சீதோஷ்ண நிலைமைக்கும் அவரவர் காலத்திலுள்ள சனங்களின் மனோ பக்குவத்திற்குத் தகுந்தபடி கூறியிருப்பதால், சீதோஷ்ண நிலைமையிலும், நடையுடை பாவனை முதலியவைகளிலும் முற்றும் மாறுபாடாயும் சாத்துவிக சிரேஷ்டர்களாயுமுள்ள நமது இந்து குடியானவர்களுக்கு அவைகள் பொருத்தமல்ல.

(3) ஆகையால் சத்திரம்கட்டிச் சாப்பாடு போடும் தர்ம சீலர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி ஷெ அநாத பிள்ளைகளை வளர்த்து, படிப்பித்து ஏதாகிலும் ஒரு தொழிலுக்கு அனுப்புவதைவிட சிறந்த தர்மம் தற்காலத்தில் வேறொன்றுமில்லை யென்றே சொல்ல வேண்டும்.

(4) ஏற்கனவே கோவில், குளம், மடம், சத்திரம் முதலியவைகள் நம் நாடெங்கும் பலவுள. அவைகளில் சில, காலத்தில் பழுதுபார்க்கப்படாமல் நாசமாகுகின்றன. மூலதனமும் தர்மகர்த்தர்களும் ஏற்பட்டுள்ள சில பொதுக்கட்டடங்கள் பழுதில்லாமலிருந்தாலும் வழக்கேற்பட்டு பயனற்று பூட்டப்படுகிறது. இஃதன்றியும் தற்காலம் பரம்பரைப் பிராமணர்களின் ஆதீனத்திலுள்ள பல பொதுத் தலங்களில் நம்மவர்களின் குறைையைத் தக்கபடி கவனிப்பாரில்லை. ஷெ இடங்கள் ஷெ பிராமணவகுப்பாருக்கு ஒரு நல்ல மாளிகையாயிற்று.

(5) இவ்விதம் நம்மவர்களால் ஏற்பட்ட தர்மத் தாபனங்கள் தாறுமாறாயிருப்பதைக் கண்டும், தற்காலம் வெகு பாடுபட்டுத் தேடின பணத்தை மறுபடி

யும் ஷை வழிகளிலேயே செலவழித்து பாழாக்குவது விவேகமன்று. ஆகையால் தர்மவான்கள் அனைவரும் நம் நாட்டில் சன்மார்க்கம் தழைத் தோங்குவதற்கு அத்தியாவசியமான தர்ம கலாசாலைகள் ஏற்படுத்தி நம் பிள்ளைகளுக்கு வேண்டிய சௌகரியம் தேடுவதே சிறந்த தர்மமென்று நன்றாய் அறிய வேண்டும்.

(6) ஆனால் உழைத்துச் சாப்பிட சக்தியற்ற கொடிய பிணியாளர்கள், கூன், குருடு, நொண்டி, விருத்தாப்பியர் முதலியவர்கள் எச்சாதியாராயினும் (பரம்பரைப் பிராமணராயினும்), எம்மதத்தாராயினும், எவ் வயதினராயினும், அவர்களுக்கு ஷை தர்மசத்திரங்களிலும் மற்ற இடங்களிலும் நம் தர்மசீலர்கள் அன்ன வஸ்திரங் கொடுத்தாதரிப்பது மிக்க அவசியமே.

## 2. தொழில் பயனிழந்தவர்கள்.

தற்காலம் மேல் நாட்டிலிருந்து வரும் வஸ்திரம் முதலானவைகள் நேர்த்தியாய் (யந்திரத்தால்) செய்யப்பட்டு சொற்ப விலைக்கு விற்கப்படுதலால், நம் நாட்டில் கைத்தொழிலாளர்கள் தொழிலற்று யாசக மெடுக்க நேரிட்டிருக்கிறது. ஆகையால் ஷை யார்களுக்கு இப்பொழுது தர்மம் கொடுப்பதுமன்றி, ஷை தொழிலாளர்களால் செய்யப்படும் வஸ்திரம் முதலானவைகளை வாங்கி உபயோகித்தால் தான் நம் நாடு க்ஷேமம் அடையும்.

## 3. மாரியாய்முத்து.

(1) பிள்ளைகள் கொடிய அம்மையால் வருந்துங்காலத்தில் தாய்மார்கள் இரண்டொரு நாள் சில வீட்டில் இரந்து சாப்பிடுவது வழக்கம். இது குற்றமல்ல.

(2) மாரியம்மன் கோவில், குளம் முதலானவைகள் கட்டுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்காக ஊரில் இரண்டொருவர் வந்து தெருக்களில் முத்தெடுத்து தங்களுக்குக் கூலிவீதாயம் போக மீதியை கோவில் அதிகாரிகளிடஞ் செலுத்துகிறார்கள். இது

ஷ கோவில் குளங்கள் அசீர்ணமாயும் அல்லது புதி தாக கட்டுங்காலத்திலும் அவசியம். சிலர் தங்களுக்கு வேலையில்லாத போது இதே ஒரு பிழைப்பாக ஆரம் பித்து விடுகிறார்கள். இதைக் கவனித்து விசாரித்து கோவிலுக்கு அவசியமான பொழுது தர்மம் செய்தும் அவசியமற்றபொழுது நிறுத்திவிடவும் வேண்டும்.

## 4. மனத்தாபத்தினால் வீட்டை விட்டகன்று பிச்சை யெடுக்கிறவர்கள்.

சிற்சில சமயங்களில் சிறு பிள்ளைகளும், வாலிபர் களும், வயது முதிர்ந்தவர்களும் மனத்தாபத்தினால் தத்தம் வீட்டை விட்டு வெளியாகி யாசகமெடுக்கிறார் கள். ஷ யார்களைச் சமயத்தில் ஆதரித்து, பிறகு ஒரு தொழிலைப் புரியும்படி அவர்களுக்கு நயமா யுரைத்து நலமேற்றுவதே சீர்.

## 5. பண்டாரம்.

(1) பாரம்பரைப் பிராமணப் புரோகிதர்களை நீக்கி, யோக ஞானமார்க்கத்தில் சென்று சந்நியாசிகளாயிருப் பவர்களுக்குச் சைவவேளாளர்கள் தங்கள் குடும்பங் களில் நடக்கும் நன்மை தீமைகளில் தர்மங்கொடுக்கும் படி யேற்படுத்தினர்கள் போலும். இது காலஅளவில் அடிக்கடி நல்ல சாப்பாடு, வஸ்திரம் முதலியவைகள் கிடைப்பதால், சில சோம்பேரிகள் ஷ யோர்களின் வேடம் பூண்டு உண்டுடுத்த ஆரம்பித்து, அதைப் பரம் பரையாக்கி இல்லற வாழ்வோடிருந்து யாசகமெடுக்கப் போகும்பொழுது காஷாயம் பூண்டும் மற்ற சமயத்தில் சாதாரணமாக வெள்ளையுடுத்தியும் **பண்டாரச்சாதி** என்னும் ஒரு சாதி பிறந்து விட்டது.

(2) இது வேஷமாகையால் இவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்திவிடவே வேண்டும். இக்கொடிய வழக்கத்தை முதலில் நிறுத்துவது எப்படியெனில், தற்காலம் '30 வயதுக்கு மேற்பட்ட பண்டாரங்களுக் குத்தான் தர்மம் அளிக்கப்படுமென்றும், ஷ வயதுக் குட்பட்டவர்கள்ஒருதொழில்செய்துசாப்பிடவேண்டும்'

என்றும் ஒரு சிறிய அறிக்கைப்பத்திரம் (Notice) தயாரித்து, அதை அச்சிட்டு ஒவ்வொரு மடங்களிலும் சத்திரங்களிலும் அந்தந்தத் தல அதிகாரிகள் முதலில் ஒட்டி விளம்பரப்படுத்த வேண்டும். பின்பு தர்மசிலர்களனைவரும் இது விஷயத்தில் சற்று கவனஞ் செலுத்துவார்களானால், படிப்படியாய் ஷெ பண்டாரக்கூட்டம் மேன்மையாய் விடும்.

## 6. வைராகி.

வடதேசத்திலுள்ள வைராகியென்னுங் கூட்டம் காசியிலிருந்து இராமேசுவரத்திற்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும் திரும்பித் திரும்பி போவதே ஓர் தொழிலாய் ஏற்படுத்திக்கொண்டு ஆங்காங்கு தர்மவான்களின் ஆதரவு பெற்று மிகவும் சோம்பேரிகளாய் வாழுகிறார்கள். அவரவர்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு யாத்திரை செய்து தங்களுடைய விரதங்களை முடிக்கவேண்டுமே தவிர, யாத்திரையே ஒரு சாக்காக தொழிலற்று இவ்விதம் காலம் கழிப்பவர்களுக்கு உதவி புரிவது தருமமன்று.

மு-கு:—(1) ஏகதேசம் தத்தம் தேவதைக்கு முடியெடுத்தல் முதலிய பல விரதத்தோடு யாத்திரை செய்யும் மிகஎளியவர்களாயுள்ள எச்சாதியார்க்கும், அல்லது தன் பணங்கொண்டு யாத்திரைக்குப் புறப்பட்டு வழியில் அபாயம் நேரிட்டவர்களுக்கும் வேண்டிய உதவி புரிவது அவசியம்;

(2) பஞ்சேந்திரியமற்ற யோகி, ஞானிகளாயுள்ள வைராகிகள் (தென்பட்டால்) ஆதரிக்கப்படவேண்டும்.

## 7. கம்பளத்தார்கள் (அதாவது, குடுகுடுப்பைக்காரர்கள்).

(1) தற்காலம் மேற்படி கம்பளத்தார்களில் அநேகர் விவசாயத்தொழில் புரிவதாகக் கூறப்படுகிறது. ஆறு மாதத்திற்கு ஒருதரம் மேற்படிவகைப் பெண்டுகள் நல்ல தங்காள் பாட்டுப்பாடி யாசகம் எடுத்து உண்ணப்

புறப்படுகிருர்கள். இவர்கள் நல்ல சரீரமுடையவர்களாகவும் நல்ல நிலைமையிலும் இருந்து ஏதோ முன்னொரு காலத்தில் யாசகமெடுத்துண்டதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு சொத்திருந்தும் தாங்கள் வருஷத்துக் கொருமுறை யாசகம் எடுக்கிறது வழக்கமென்றும் அவ்வழக்கத்தை விடப்படாதென்றும் கூறுகிருர்கள். பட்டினங்களில் பிற மதஸ்தர்களிடத்து மேற்படி பாட்டுப்பாடி யாசகம் எடுக்கிறதினுல் இவர்களுக்கு விளைகிற தீமைகளை நாவால் சொல்லத்தறமன்று. இக்கொடிய வழக்கத்தை விட்டுவிடும்படி இவர்களுக்குப் போதிப்பதுமன்னியில் கொடுக்கும் தர்மத்தையும் நிறுத்திவிடவேண்டும்.

(2) இது நிற்க, ஆடவர்கள் மாந்தரீகர்களாய் இரவிலும் பகலிலும் குடுகுடுப்பையைக் கையில்வைத்துக்கொண்டு பலவாறுகப் பிதற்றி யாசக மெடுத்துப் பிழைக்கிருர்கள். இத்தொழிலாளர்களில் சிலர் சனங்களைப் பழய ஆடைகள் தங்களுக்குக் கொடுக்கும்படி பிடிவாதமாய்க்கேட்டு சில சமயம் மிரட்டி தூஷித்து இம்சிக்கிருர்கள். இவர்களுக்கு வேலைசெய்து சாப்பிட சக்தியிருந்தும் பாரம்பரையாக "சாதி வழக்கம்" எனும்பேய்க்கு இரையாகி நம் நாடெங்கும் திரிகிருர்கள். இவர்களுக்குத் தர்மம் செய்வது அதர்மமே; ஆதலால் ஷே இருபாலர்களாலும் விளையும் குறைகளைப் பரிகரிக்க ஒரு தக்க சட்டம் உண்டுபண்ணுவது அத்தியாவசியம்.

## 8. சாமியார் வேடம்பூண்ட சில தந்திரிகள்.

சிலபேர் சந்நியாசிபோல் காஷாயந்தரித்து மடம் கட்டுவதாகவும் அல்லது தாய்தகப்பனற்ற பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் வைப்பதாகவும் பலவித சூழ்ச்சிகள் செய்து தேசாபிமானிகள்போல் பகட்டி இரண்டொரு தனவான்களுக்கு மிக அடக்க ஒடுக்கத்துடன் வணக்கமாய் இதம் சொல்லி அவர்களைப் புகழ்ந்து வசியஞ் செய்தபின், அவர்கள் மூலமாய் சாதாரண சனங்கள் தங்களை (மேற்படி வேஷதாரிகளை) மதிக்கும்படிச்செய்

வித்து காசு பணம் பறித்து குடும்பிபோல் நன்ருய் உண்டுடுத்தித் திரிகிருர்கள். சிற்சிலர் தங்கள் பெயரை யும்மாற்றி வேறு பெயர்பூண்டு அதனேடு "ஆனந்த சுவாமிகள்" யென்னும் பட்டங்கரித்து பட்டாடை யுடுத்தி ஆஷாடபூபதியாய் இங்குமங்கும் அலேகிருர் கள். பஞ்சேந்திரியம் துறந்து காஷாயம் தரித்த துறவி களுக்கு நாமச்சிறப்பு முதலிய பாசாங்கேன்? இவர் களே ஆதரிப்பது முற்றிலும் பிசகு. ஏனெனில், இவர் கள் அநேகர்களே ஏமாற்றிப் பிழைப்பதால் நம் சனங் கள் மேற்படியார்கள் கூறும் கற்பனே வார்த்தைகளே நம்பி நாளுக்குநாள் அந்தகாரத்தில் ஆழ்கிருர்கள்.

## 9. பிடிவாத பிச்சைக்காரர்கள்.

கடைத்தெருவுகளில், நாக்கில், உதட்டில் பெரு ஊசிகளேக் குத்திக்கொண்டு அல்லது சில்லரை வாத்தி யத்துடன் பாடிக்கொண்டு சிலரும், மோகரம் பண் டிகையில் (அல்லாப் பண்டிகையில்) தாறுமாருன வேஷம் தரித்து கொச்சைப் பாட்டுப்பாடி இங்குமங் கும் திரியும் சில இந்துக்களும், கடைக்குக் காலணு வீதம் தங்களுக்குக் கொடுக்கும்படி இம்சிக்கிருர்கள்; அவ்விதம் கொடாவிடில் வியாபாரிகளே வைது மான பங்கம்பண்ணி ஏழைக்குறும்பு செய்கிருர்கள். தத்தம் பிள்ளேகளுக்கே காலணுகொடுக்க முடியாது ஒருசல்லி கொடுக்கும் அநேக எளிய வியாபாரிகளுக்கு இது மெத்த கஷ்டமல்லவா? இஃதன்றியும் பிச்சைக்குப் புறப்பட்டும் அதிகாரமென்ன? ஷை பண்டிகை சமயங் களில் பலர் தங்கள் கடைகளேமூடும்படியும் நேரிடுகிறது; இதனுல் ஷை திருவிழாவிற்கும் ஒரு கெட்டபெயர் ஏற் படுகிறது. ஆகையால், மேற்படி பிடிவாத பிச்சை நம்நாட்டில் நடவாவண்ணம் சட்டசபையில் தக்க சட் டம் உண்டுபண்ணும்படி நாம் ஒவ்வொருவரும் முயற் சிக்கவேண்டும்.

## 10. பரம்பரைப் பிராமணர்கள்.

(1) உண்மைப் பிராமணர்கள் பிச்சையெடுத்ததா கவும், அந்த வழக்கத்தைத்தாங்கள் அனுஷ்டிக்கிறதனுல்

அது குற்றமில்லையென்றும் (மிகவும் சிரேஷ்டமென்றும்) வெகுவிமரிசையாய் மேற்படியார்கள் பிரஸ்தாபிக்கிறார்கள்.

(2) பெரியோரொருவர் உலக இச்சையைத் துறந்து பரம்பொருள் இச்சைகொண்டு பிச்சையெடுத்தவிதமும், அதனால் அவரடைந்த துன்பமும் அது பற்றி அவர் பின்னால் அப்பிச்சையின்மேல் வெறுப்புற்றதையும் சற்று கவனிப்போம்; அதாவது, பட்டினத்தார்,

"பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந் திட்டபிச்சையெல்
நாய்போலருந்தி நரிபோலுழன்று நன் மங்கையரைத் [லாம்
தாய்போற்கருதி தமர்போலனைவருக்குந் தாழ்மை சொல்லி
சேய்போலிருப்பர் கண்டீ ருண்மைஞானந் தெளிந்தவரே.
நச்சரவம் பூண்டானை நன்றாகத் தொழுவதுவு
மிச்சையிலே தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதுவு முண்பதுவும் வந்து திருவாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.
இல்லந் துறந்து பசிவந்தபோ தங்கிரந்து தின்று
பல்லுங் கறையற்று வெள்வாயுமா யொன்றிற்பற்று மின்றி
சொல்லும் பொருளுமிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென்றோ கைலாயத்தனே,"

என்றார்.

(3) இதனால் பரமஞானிகளாகிய உண்மைப் பிராமணர்கள், மேல், கீழ், சுத்தம், அசுத்தம், காமக்குரோதம் முதலிய துர்க்குணமின்றியும், தனக்கென ஓர் பற்றின்றியும், ஈசுவர இச்சைகொண்டு எவ்விடத்திலும் யாரிடத்திலும் எதையும் வாங்கிப்புசித்து பசியாற்றினார்களேயன்றி, தற்காலம் பரம்பரைப் பிராமணர்கள் பிறர் சமைத்த பதார்த்தங்களைச் சாப்பிடப்படாதென்றும், தாங்கள் சாப்பிடும்போது பிறர் பார்த்தால் சேஷமென்றும், சாப்பிடும் பதார்த்தங்களைப் பிறர் தொடப்படாதென்றும். நெய்யின்றிச் சாதம் உண்ணப்படாதென்றும், உண்மைப் பிராமணர்களாக நம்பி தங்களுக் (குடியானவர்களுக்) கில்லாதிருந்தும் பெரியோர்களை

உபசரிக்கவேண்டுமென்று கருதி, நெய், பால், தயிர், பழம், காய்கறி முதலிய ஆகாரமும் நல்லாடையும் பெருங்கருணையோடு கொடுத்து உதவுகிற தர்மசீலர்களைச் சூத்திரர்களென்றும், அவர்கள் அற்ப உணவுகளையே சாப்பிடுகிற கேவலக்கூலிகளென்று இழித்துரைத்தும், அவர்களது உயர்நிலைமை யுள்ளபடி யுணராது தாங்கள் பரம்பரையாக நல்லுணவுகளையும் நல்லாடைகளையும் கையாடுகிற உயர்ந்த சாதியிற் பிறந்த பிரபுக்களென்றும் தாட்டோட்டமாய்ச் சங்கையின்றி பிரஸ்தாபிக்கிறார்கள். இதனால் உண்மைப் பிராமணர்கள் பிச்சையெடுக்கிறவிதம் இன்னதென்றும் பரம்பரைப் பிராமணர்கள் பிச்சையெடுத் துண்ணுகிறவிதம் இன்னதென்றும் நன்குவிளங்கும்.

(4) இனி அடியில்கண்ட செய்யுட்களால் ஷை பெரியோர் யாசகத்தால் அனுபவித்த கஷ்டங்கள் இவையென்று தெற்றெனெ வெளியாகும்;

"செல்வரைப் பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்கிட வேகாந்தமா யெனக்காமிடத்தே
யல்லலற்றென் றிருப்பே னத்தனே கைலாயத்தனே.

விடப்படுமோ விப்பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோ நின்னருளின்றியே தினமே யலையக்
கடப்படுமோ வம்பர் வாயிலிற்சென்று கண்ணீர் ததும்பிப்
படப்படுமோ சொக்கநாதா சௌந்தர பாண்டியனே.

பூணும்படிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்ல வென்சிந்தை கெட்டுச்
சாணும்வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.

வாசற்படி கடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்
பட்டிறந்த காலமெல்லாம் போதும் பரமேட்டிச்
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்."

(5) பின்னும் ஷை பட்டினத்தடிகளே அடியில் வரும் வெண்பாவினால், பிச்சையெடுக்காதொழிந்தனரென்று தெளிவாகும்;

"இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்தேக
மிளைத்தாலும் போகேனினி."

(6) "ஏற்பதிகழ்ச்சி" என்னும் அருமொழியைக் கையாடாதார் மிகவும் சொற்பம். சிலர், "பிச்சை புகினும் கற்கைநன்றே," என்ற ஆன்றோர் வாக்கியப்படி பிச்சையெடுத்துப் படிக்கலாமென்றும், அது குற்றமில்லை யென்றும் பிரஸ்தாபிக்கிறார்கள். பின்னர் அந்த பழக்கத்தையே ஒரு ஆதாரமாகக்கொண்டு வீரமிழந்து இலச்சையின்றிப் பிச்சையெடுத்துண்ண ஆரம்பிக்கிறார்கள். மேற்படி வாசகத்தால் கல்வி அவசியமென்று கூறினார்களேயன்றி "பிச்சை புகினும்" என்றபோதே பிச்சை யெடுப்பது மிகவும் இழிவானதென்றே தெரிகிறது. எத்தேயத்திலும் மனிதர்கள் ஆண்மையொழிந்து மனமோடுங்கி யாதொருவிதமான கர்வமற்று மிகவுந் தாழ்மையுடனே பிச்சையெடுக்கப்புறப்படுகிறார்கள். இதுவேமுறை. ஆனால் பாம்பனைப் பிராமணர்களோ நம்சனங்களது பேதமையையே ஆதாரமாகக்கொண்டு அவர்களது முன்னிலையில் தாங்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள்போல் வாசகஞானத்தால் பகட்டி வெறும் ஆண்மைகொண்டு மிகக் கர்வமுற்று மனம் ஒடுங்காது "போடாவாடா, போடிவாடி" என்று துடுக்காகப் பேசி, சன்மார்க்கத்துக்குரிய அடக்கம், ஒடுக்கம், மிருது பாஷியம், அன்பு முதலிய நல்லறிவிழந்து புல்லறிவுகொண்டு தன்னிலை ஆராயாமலும், உள்ளதுணராமலும் நல்வாழ்விழந்திருக்கிறார்கள்; இதையறியாது, "குடியானவர்கள் பொறாமை ஒழித்து மேற்படி பிராமணர்கள்போல முன்னேற்றம் அடையவேண்டும்," என்று சிலர் கூறுவது விந்தையினும் விந்தையே!

(7) இது நிற்க, ஞானிகள் அநேகமாய் கோடியிலொருவராகையால் இப்பேர்ப்பட்டவர்களை ஆதரிப்பது ஆதியில் எளிதாயிருந்தது. பின்னர் மேற்படியார்களின்

"சில" சந்ததிகள் பரம்பரையாகப் பிராமணர்களென்று சொல்லிக்கொண்ட நாள் முதல் நாளது வரையில் இரண்டு கோடியாய் பெருகிவிட்டார்கள். அந்நாளில் இவர்களை ஆதரித்த சனங்களின் தொகையோ நாளுக்குநாள் குறைந்துவருகிறது; அதாவது, புத்தர்களென்றும், சீக்கியர்களென்றும், பிரம்மசமாஜத்தரென்றும், ஆரியசமாஜத்தரென்றும், விஸ்வகர்ம பிராமணர்களென்றும், சௌராஷ்டிர பிராமணர்களென்றும் கிறிஸ்தவர்களென்றும், (பெருந் தொகையாகிய சுமார் ஏழு கோடி) மகம்மதியர்களென்றும் பலகூட்டங்கள் இவர்களை ஆதரிப்பதினின்று ஒதுங்கிக்கொண்டு வருகிறார்கள். இனி இவர்களை ஆதரிப்பதனால் நாளுக்குநாள் துன்பம் அதிகரிக்குமேயன்றி குறையாது.

(8) மேலும், பரம்பரைப் பிராமணர்கள் முன்போலவே யாசகமெடுத்து உண்டுடுத்தி வசிப்பார்களானல் சனங்கள் அவர்கள்பேரில், "பிச்சைக்காரர் மேல் கச்சைகட்டக்கூடாது," என்று தோஷாரோபணஞ்செய்யார்கள். மேற்படி யாசகத்தோடுகூட அவர்கள் அங்கில பாஷை கற்று அரசாங்க உத்தியோகத்திலமர்ந்து, வருணாச்சிரம தருமப் பிரகாரம் க்ஷத்திரியருக்குரிய ஆசாரத்தையும் அனுசரியாது பிரம்மஞான வேடத்தால் விளைவான ஆசாரத்தையுங் கைவிட்டு நம் குடியானவர்களுடைய நடை, யுடை, பாவனை, குலாசாரம் முதலியவைகளுக்கு முற்றும் மாறாக நடந்து வருகிறதால் இவர்களின் மேல் சனங்களுக்கேற்பட்ட அதிருப்தி நாளுக்குநாள் விருத்தியாகி வருகிறது; இத்துடன் பஞ்சம், தொத்துநோய் முதலிய பல காரணங்களினால் தரித்திரம் வரவர அதிகரித்து வருகிறதால், சனங்கள் அவர்களை முன்போலவே ஆதரிப்பது வெகு சங்கடமாயிருக்கிறது.

(9) ஒரு கறுப்பலகையில் ஒருகோடு வரைந்தால், அதற்கு ஆதியுண்டானபின் அந்தமும் ஏற்படுகிறது. அதுபோல, இவர்கள் இயற்கைக்கு விரோதமாய்

பரம்பரையாக ஏற்படுத்திக்கொண்ட துர்வழக்கத்திற்கு ஓர் அந்தம் உண்டு. இது நிச்சயம்.

(10) ஆகையால் கூடிய சீக்கிரத்தில் குடியானவர்களுடைய முயற்சியாலேயோ அல்லது. காலபேத இயல்பாலேயோ இவர்களை ஆதரிக்குந்தன்மை நின்று போய் விடுமென்பதற்கு ஐயமே யில்லை. இவர்கள் பிறரைப்போல எத்தொழிலும் புரிந்து வாழ முயலுவதே கிரமம். இதற்கிணங்க, சுவாமி விவேகாநந்தர் அவர்கள் "தற்கால இந்தியா" (Modern India) என்னும் புஸ்தகத்தில் 10-வது பக்கத்தில் அடியில் வருமாறு கூறியிருப்பதை நன்குணர்க; "That renunciation, self-control and asceticism of the priest, which during the period of his ascendency, were devoted to the persuance of earnest researches of truth, are, on the eve of his decline, employed a new and spent solely in the accumulation of objects of self-gratification and in the extension of privileged superiority over others. That power, the centralisation of which in himself gave him all honour and worship, has now been dragged down from its high heavenly position to the lowest abyss of hell. Having lost sight of the goal, drifting aimless the priestly power is entangled like the spider, in the web spun by itself. The chain that has been forged from generation to generation, with the greatest care, to be put on others' feet, is now tightened round its own in a thousand coils and is thwarting its own movement in hundreds of ways. *Caught in the endless thread of the net of infinite rites, ceremonies and customs,* which it spread on all sides, as external means for purification of the body and the mind, with a view to keep society in the iron grasp of these innumerable bonds—the priestly power, thus hopelessly entangled from head to foot, is now

asleep in despair! There is no escaping out of it now. *Tear the net and the priesthood of the priest is shaken to its foundation.* There is implanted in every man, naturally, a strong desire for progress, and those, who, finding that the fulfilment of this desire is an impossibility so long as one is trammelled in the shackles of priesthood, *rend this net and take to the profession of other castes* in order to earn money thereby—then the society immediately dispossess of their priestly rights. *Society has no faith in the Brahman-ness of the so-called Brahmans,* who instead of keeping the shikha † part their hair, who giving up their ancient habits and ancestral customs clothe themselves in Semi-European dress, and adopt the newly-introduced usages from the West, in a hybrid fashion. Again, in those parts of India, wherever this new-comer, the English-Government, is introducing new modes of education and opening up new channels for the coming in of wealth, there, hosts of Brahman youths are giving up their hereditary priestly profession, and trying to earn their livelihood and become rich by adopting the callings of other castes, with the result, that the habits and customs of the priestly class, handed down from their distant forefathers, are scattered to the winds and are fast disappearing from the land."

**262.** பொய்க் குருக்கள் :

"பொன்னைப் பொருளைப் புகழைக் குறியா
தன்னை யளித்தவனே சற்குருவாம்—இன்னமின்னம்
பொன்னீ பொருளீ யென்றோதுங் குருவெல்லாம்
அன்னியனே சற்குரு வன்றாம்;"

---

† The sacred tuft or lock of hair left on the crown of the head at tonsure.

என்று பிரபுலிங்கலீலையில் கூறியபடி எந்தப் பக்குவிக்கு எந்த மகாபுருஷன் உபதேசம்செய்து ஆதிமூலப்பொருளை அறிவதற்குக் காரணமானவரோ அவரே அப் பக்குவிக்குக் குரு.

**263.** அல்லாது ஷை பக்குவியின் குமாரன், பேரன், கொட்பேரன் முதலிய சந்ததிகள் அம்மகா புருஷனின் குமாரன், பேரன், கொட்பேரன் முதலியவர்களைக் "குரு, குரு" வென்றழைத்து பொன்னையும் பொருளையும் வாரிக்கொடுத்து அவர் காலில் விழுந்து மடமை தடித்து மடிகிறது முற்றிலும் தவறு. ஐயோ இதன் கொடுமையை என்னென்று எடுத்துரைப்பது! பாவம்! பாவம்!! பாவம்!!!

1. "மண்டலத்தில் குருக்களென்று பேரும்பெற்று மகத்தான தாளிதமுமணிந்துகொண்டு,
குண்டலங்கள் செவியிலிட்டுக் கல்லாசாத்தி கோசரணங் கசகரண மிரண்டுங் கற்று,
தென்டிசையிற் பலவிதமாய் பொய்கள் சொல்லி சிஷருபதேசந் தெளியச் சொல்வார், [க்கு
ஒன்றுமில்லை யவர்கள் கையில் வித்தையாச்சு வுள்ளவர்த்தமானமிதை யுரை செய்வேனே.
2. உற்றுநின்ற சாஸ்திரத்தைப் பார்த்துப் பார்த்து ஊணுயாமலுர்தான் புரட்டிப்பேசி, [கிடை
பத்தரென்றுங் குருக்களென்றும் வகுத்துச் சொல்வார் பரகதியுந் தருவமென்று பணம் பறிப்பார்,
வித்து நின்ற விடங்காணர் வேருங்காணர் விளங்குபரந்துலங்குகின்ற வீடுங்காணர்,
எத்தவமுந் தருவமென் றுலகஞ்சுற்றி யெளியோர்கள்பாவமெல்லா மினிக் கொள்வாரே,"

என்று ஞானவெட்டியில் கூறியுள்ளது. இதனால் பெரியோர் கருத்து இன்னதென்று இனிது விளங்கும்.

**264.** தற்காலத்தில் வேஷக் குருக்கள் சனங்களைத் தங்கள் காலில் விழ வேண்டுமென்றும், அப்படி விழாவிட்டால் அது அகௌரவமென்றும் கருதி தங்கள் முன் வந்தவர்களை தங்கள் காலில் விழும்படித் தூண்டுகிறார்கள். மேலும் பாரம்பரைக் குருக்களின் பாதங்களைக்

கழுவின அசுத்த நீரைத் திருவடி தீர்த்தம் என்று சிலர் உட்கொள்ளுகிறார்கள்; இம்மா பாதகத்தைத் தகுந்த படி எடுத்துரைக்க ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனும் முடியாதென்றே சொல்லலாம். இக்கொடிய வழக்கம் மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டதென்று சிலர் கூறுகிறார்கள். இதுஎங்ஙனம் பொருந்தும்?

"பிறிந்தேன் பெற்ற மக்கள் பெண்டி ரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன் நீபணித்த வருளென்னு மொள் வாளுருவி
எறிந்தேன் ஐம்புலன்கள் இடர்தீர வெறிந்துவந்து
செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே,"

என்று திருமங்கை யாழ்வார் கூறியுள்ளார்.

இவ்விதம் ஐம்புலன்களிடர்தீர்ந்த பெரியோர்களா ஷை இடரை யேற்படுத்துவார்கள்? இல்லை இல்லை; வேஷதாரிகளாலேயே இவ்விபரீதம் விளைந்து வருகிறது.

**265.** ஒருவர் அடிமை நீங்கி பூரண சுதந்தரராய், சுகாசுகம், உயர்வுதாழ்வு எனும் பேதா பேதமற்று நித்தியானந்தமடையும் பொருட்டு சற்குருவைத் தேடி யடைந்து அவர் பாதத்தில் விழுந்து அவர் கடாட்சம் பெறுவது முறை. அப்படிக்கில்லாமல், குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல வேஷ தாரிகளை யடைந்து அடிமை தடித்து மதிமயங்கி பரிதவிப்பது அழகல்ல.

**266.** உலகம் கசந்து பரம்பொருளிச்சைகொண்ட ஒருவர் ஞானோபதேசம் பெற சற்குருவைத் தேடி யடைந்து (அகமமதை யற்றதற்கு அறிகுறியாக) தானே அவர் பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது வழக்கம். ஷை நமஸ்காரத்தால் குருவுக்கு மதிப்பு ஏற்படுமென்பது சுத்தப் பிசகு; ஏனெனில், ஒருவன் ஷை இச்சைகொண்டபோது தனது அகண்ட அறிவு போய் கிஞ்சிங்கஞகி குடும்பிபோலுழ லுவான்; அப்பொழுது அவனுக்குக் குரு என்றபதவி பொருத்தமன்று.

**267.** ஆகையால் சற்குருவைத் தேடிச் செல்லும் சற்சீடர்களுக்கே ஷெ நமஸ்காரம் பொருத்தம். ஷெ "உபதேச விருப்பமற்ற" சாதாரண சனங்கள் எப்பேர்ப்பட்ட மகா புருஷர்களுக்கும் "திரியங்க நமஸ்காரம்" செய்தால் போதுமானது. மகா ஞானிகளுக்குச் செய்வதனால் குற்றமில்லை யென்றாலும், ஷெயோர்களுக்குச் செய்த பழக்கத்தால், வித்தை கற்று அல்லது மந்திர தந்திரம் கற்று சனங்களை வசியஞ் செய்யும் சில வேஷதாரிகளுக்கும் மேற்படி சாஸ்டாங்க நமஸ்காரம் செய்து ஷெ யோர்களின் புலம்பலை நம்பி சனங்களின் மடமை நாளுக்குநாள் தடித்து அடிமைத்தனம் விருத்தியாகிக்கொண்டே வருகிறது. மேலேகண்ட விஷயங்களை நம் பிள்ளைகளுக்கு நன்றாய் போதித்து ஷெ கொடிய வழக்கங்களுக்கு ஆளாகாமல் பாதுகாப்பது நம்மறிஞர்களின் முக்கிய கடமையாகும்.

**268.** கல்விச்சாலை: "கல்விச்சாலை" யென்றால் "கல்வி பயிலுமிடம்" என்பது பொருள். கல்வி இருவகைப்படும்; அதாவது, (1) பாஷாஞானம், (2) முதியோர்களின் முதறிவு என்பன. சிலர் பாஷா ஞானத்தையே சிறப்பித்து மதிமயங்குகிறார்கள்; மூதறிவு அடைவதற்கு பாஷாஞானம் ஒரு துணைக்கருவியேயன்றி வேறன்று. ஆகையால் மூதறிவுடையோரே கற்றோராவர். ஷெ முதறிவு நோக்கங்கொண்டு ஏற்பட்ட கல்விச்சாலையே கல்விச்சாலை. ஷெ கல்வி இருபாலர்களுக்கும் அவசியமாதலால், ஷெ சாலைகள் ஷெயார்களுக்குத் தனித்தனியே ஏற்படுத்தவேண்டும்:—

முதலாவது, ஆண்பிள்ளைகள் படிப்பதற்கும் தூரத்திலுள்ளவர்கள் படிக்கிற பரியந்தம் பள்ளிக்கூடத்தருகிலேயே வசிப்பதற்கும், சாப்பிடுவதற்கும், வேண்டிய கட்டடங்கள் முதலான சௌகரியங்கள் அமைத்து ஏழாவது (III Form) வரைக்கும் பொதுக்கல்வி கொடுத்து, அதில் தேர்ந்த சுமார் 100-க்கு இருபது பிள்ளைகளை மாத்திரம் உயர்தர உத்தியோகப் பரீக்ஷைகளுக்கு (அதாவது, வைத்தியம்—Medicine,

சட்டம்—Law, சிற்பம்—Engineering, நீதி, நிர்வாகம் —Judicial & Executive முதலியவைகளுக்கு) நாம் அனுப்பவேண்டும்.

**269.** மற்றவர்களுக்கு மறு மூன்று வருஷத்திற்கு நம் மதத்தின் விசேஷக்கருத்து, தேசாபிமானம், சுகாதாரம், நகர சுதந்தரங்கள் (Civic rights), குறைந்த பக்ஷம் ஒரு கைத்தொழில் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கும்படி ஷை பள்ளிக்கூடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

**270.** மேலும் ஷை பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களாக குடியானவர்களை அல்லது (பரம்பரை) யாசகமின்றிச் சீவிப்பவர்களை நியமிக்கவேண்டும்; ஏனெனில், பிள்ளைகளின் ஆண்மை, வீரியம், தன்மதிப்பு முதலிய நற்குணங்கள் குன்றாமல் வளர்ந்தோங்குவதற்கு இது அத்தியாவசியம்.

**271.** கூடுமானல் பிள்ளைகளுள் அதிதீவிர பக்குவமுடையவர்களை இங்கிலாந்து, அமெரிக்கா முதலான பிறதேசங்களுக்கு அனுப்பி மிகப்பிரபலமான கைத்தொழில் முதலிய வித்தைகள் கற்று வரும்படி செய்விப்பது நம் நாட்டிற்கு மிகவும் சுகிர்தம்.

**272.** நம் நாட்டில் நாளுக்குநாள் விருத்தியாகிவரும் தரித்திரக் கொடுமைக்கு இத்தகைய கல்விச்சாலையே ஒரு பெரிய அவிழ்தமென்று ஒவ்வொருவரும் நன்றாயறிந்து சமயம் நேரிடும்பொழுது சனங்களுக்குச் சொல்லி அவர்கள் ஆதரவின்பேரில் ஒவ்வொரு ஊரிலும் குறைந்த பக்ஷம் ஒரு பள்ளிக்கூடம் வைத்து நடத்த வேண்டும்.

**273.** நமது குடியானவர்கள் அனைவருக்கும் ஷை பள்ளிக்கூடம் பொதுவாய் இருக்கவேண்டுமேயன்றி ஒவ்வொரு கூட்டத்தாரும் தனித்தனியாய் ஏற்படுத்துவது உசிதமல்ல; ஏனெனில், அநேகமாய் ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொரு சாதி அதிகரித்திருப்பது சகசம்.

அப்பொழுது ஆங்காங்கு ஏற்படும் பள்ளிக்கூடங்களில் சிறு பான்மையாகிய இதரர்களைத் தள்ளிவிடும்படி நேரிடும். பட்டினங்களில் ஒவ்வொரு தெருவிலும் பல சாதியார்களிருப்பதால் ஷை ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடம்வைத்து நடத்துவது அசாத்தியம். மேலும் பூர்வீகத்தில் நமது முன்னோர்கள் கோவில், குளம், சத்திரம் முதலான தர்ம கைங்கரியங்கள் சகலருக்கும் பொதுவாகவே ஏற்படுத்தியுள்ளார்கள். நம் அரசர்களும் தங்கள் மக்களுக்கென்று பிரத்தியேகமான பாடசாலை, கோவில், குளம், சத்திரம் முதலியவைகள் ஏற்படுத்தவில்லை. ஆகையால் இது விஷயத்தில் மிக்கோர்கள் சற்று நிதானித்து ஷை வித்தியாசாலை ஏற்படுத்துவது நலம்.

**274.** **பெண்கல்வி:** இரண்டாவது, பெண் குழந்தைகளுக்குப் பிரத்தியேகமான பாடசாலை ஏற்படுத்தி நான்காவது வகுப்பு வரைக்கும் பொதுக் கல்வி கொடுத்து, அப்பால் ஷை கல்வியோடு குடித்தனகாரியங்களில் (அதாவது, சமையல் முதலிய தொழில்களில்) படிப்படியாய் அவர்களைப் பழக்குவது அவசியம். குடித்தன வேலையில் பயிர்ச்சியற்று வெறுங்கல்வி நாகரிகமுள்ள பெண்களைக் கொண்டால் குடும்பம் பிளவுபட்டுப் போமென்று அஞ்சி படியாதவர்கள் ஒதுங்கவும், படித்த பெண்களும் படித்தவர்களை மணம் புரிந்து வேலை செய்வதை இகழ்ந்து, மாமனார், மாமியார், மைத்துனர் முதலானோர்களுடன் வசிக்காமல் தன் புருஷனோடு தனியே † வசிக்கவும் நேரிடுகிறது.

---

† மேற்படியார்கள் தனியே வசிப்பதனால் தங்களுள் ஒருவருக்கு திடீரென ஒரு ஆபத்து நேரிடில், வேறு துணையற்று திகைத்து மறுபடியும் மாமனார் முதலியவர்களிடத்தில் உதவி பெற நேரிடுகிறது. சிலர் தனித்துவசித்து தங்கள் ஆயுளை ஒரு வியாபார சாலையில் (Life Insurance Co.) ஈடுபடுத்தி அதற்காக மாதம் இவ்வளவென்று ஒருதொகை செலுத்தி, ஆபத்து நேர்ந்தபோது ஷை சாலையினின்று பெற்ற பணத்தை காப்பாற்ற மனுஷாளற்று சிலசமயம் தவிக்கிறார்கள். ஆதலால்,

**275.** இப்படி நிலையில் ஒருவர்க்கொருவர் மாறுபடுதலால், பெருங்குடும்பங்களில் ஒற்றுமை கெடுமென்று பிள்ளைகளைப் படிப்பிக்க அஞ்சுகிறார்கள். ஆகையால் குடித்தனகாரியத்தில் பெண்கள் தேர்ச்சியடையாமல் கல்வி கற்பது பயனற்றதாகும்.

**276.** தற்காலத்தில் உயர்தரக் கல்வி (அதாவது, பி.ஏ.-B.A., எம்.ஏ.-M.A., பட்டங்கள்) பெறுவதற்குப் பெண் பிள்ளைகளைப் படிக்கவைக்கும் கனவான்கள் பெண் உபாத்தியாயர்களாலேயே அவர்களுக்கென்று பிரத்தியேகமா யேற்படுத்திய கல்விச்சாலையில் படிப்பிக்கவேண்டுமே தவிர, ஏழு வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளையைப் பையன்களுடன் சேர்த்து தற்காலத்திலுள்ள பெருங்கல்விச் சாலையில் படிப்பிப்பது முற்றிலும் பிசகு.

**277.** இவ்விதம் பட்டதாரிகளானபிறகு பெண்டுகள் தங்களுக்கென்று ஏற்பட்ட கல்விச்சாலை, வைத்திய சாலை முதலிய யிடங்களில் உத்தியோகம் பெறலாமேயன்றி, மேல் நாட்டார்கள்போல் சகலஉத்தியோகங்களிலும் (ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி) அமரலாகாதென்றும், கலகம் நேரிடக்கூடிய எந்த சபைகளுக்கும் செல்லக்கூடாதென்றும், அறிமுகமான ஆடவர்களைக்கண்டால் நமஸ்காரம் அல்லது சலாம் செய்யலாமேயன்றி "கைகுலுக்குவது" (Shaking hands) கூடாதென்றும், இராஜ சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரத்தைத்(The right of vote) தாங்கள் தற்காலத்தில் அபேட்சித்து அதில்பிரவேசிக்கலாகாதென்றும் அவர்களுக்கு நன்றாய்போதிக்கவேண்டும்; ஏனெனில், சிலசமயம் பதிவிரதா பங்கம்

---

மாமனார், மாமியார், மைத்துனர், நாத்திநங்கை முதலியவர்களுக்கு முறையே மருமகள் செய்யவேண்டிய கடமைகளை தான் அன்புடன் செய்தால், அவர்கள் ஒவ்வொருவரும் அதற்குப்பதிலாய் தாம்செய்யவேண்டிய கடமைகளை செய்துமுடித்து குடும்பம் தளராது ஓங்குமென்பதை ஸ்திரீயார்கள் நன்றாய் மனதில் கொள்ளல் வேண்டும்.

ஏற்பட்டு அவர்கள் எண்ணிறந்த துன்பங்களுக்கு ஆளாக நேரிடும்.

**278.** ஆனல் முற்காலத்தில் நமதுபெண்டுகள் புருஷர்களோடு சமசுதந்தரம் சகலவிஷயங்களிலும் பெற்றிருந்தார்களாகையால், தற்காலம் அவர்கள் அச்சுதந்தரம் அடையத் தடையேன் என்று சிலர் கருதலாம். பதிவிரதா பங்கத்தால் ஒரு பெண் தன் குடும்பத்திலுள்ள சகல சுதந்தரத்தையுமிழந்து, உறவினர்களின் நிந்தைக்கும் ஆளாகி ஆதரவற்று தன்சனனம் வீணுகி பாதவிக்கும்படி நேரிடுகிறதனுல், அத்தகைய தீச்செயலுக்குக் காரணமான ஒருவனை சுண்ணும்புக் காளவாயில் வைத்து அவன் சனனத்தை வீணுக்கி நமது பெண்டுகளின் சுதந்தரத்தை முற்காலத்தில் காப்பாற்றினதாகக் கூறப்படுகிறது. மேற்படி சட்டம் திரும்பவும் நம் நாட்டில் ஏற்பட்டாலன்றி பெண்டுகளுக்கு மேற்படி சுதந்தரம் கொடுப்பது அவர்களைக் கெடுப்பதாகும்.

**279.** பதிவிரதா பங்கத்தை முன்னிட்டு மிகு துன்பங்களுக்கு ஆளாகி நாளதுவரையில் இந்நாட்டில் உயிர் துறப்பவர் பலர். முன்னாளில் சண்டைசெய்த க்ஷத்திரியர்களில் பலர் தாங்கள் சண்டைக்குப்போகுமுன் பதிவிரதா பங்கத்துக்கஞ்சி தங்கள் பெண்டுகளை நெருப்பில் எரித்துவிட்டதாக இந்துதேசச் சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேல் நாட்டாருக்கும் நம் நாட்டாருக்கும் பெண்டுகளின் நடையுடைபாவனையில்வெகு வித்தியாசமுள; ஆகையால், அவர்கள்போல் இவ்விஷயத்தில் நம்பெண்டுகள் நடப்பின் இழுக்கந்தரும்.

**280.** பின் எதற்காக உயர்தரக்கல்வி படிப்பதென்றுலோ தங்களது மக்களை சிறு வயதிலிருந்தே நல்வழியில் பழக்கி அவர்கள் தேசாபிமானங்கொண்டு செய்யும் நற் காரியங்களுக்குத் தாங்களே ஒரு இடையூருகாதபடிக்கும், தங்களது புருஷர்களின் நிலையையறிந்து அதற்குத் தகுந்தபடி தான் நடந்து கொண்டு

இல்லறத்தை ஒழுங்காக நடத்துவதற்குமே யன்றி வேறன்று.

**281**. சமீபத்தில் மேல் நாட்டில் நடந்த பெருஞ் சண்டையில் பெண்டுகள் சகல வேலைகளையும் புருஷர்கள் போல் செய்தார்களென்றும், ஷை யார்களின் ஆசாரத்தை அநுஷ்டித்தாலன்றி நம் பெண்டுகள் அவ்விதம் நம் நாட்டுக்கு உதவிசெய்ப இயலா தென்றும் கூறுவாறுமுளர். நாம் அவர்கள் போல் ஒரு சிறிய கூட்டமன்று. ஆகையால் நம் நாட்டில் ஷை யார்களின் உதவி அவ்விதம் வேண்டிரா;

**282**. ஆனால் முற்காலத்தில் தசரத மகாராஜாவின் சமுசாரமாகிய கைகேசியும், 1857-ம் வருஷத்தில் சான்ஸிநகர் (Jansi) இராணியும் திடீரென யுத்தம் புரிந்ததை நோக்குங்கால், நமது பதிவிரதைகளுக்கு அது ஒரு பெருங்காரியமல்ல. அவர்களுக்குப் பதிவிரதமே ஒரு பெரும் பலமாகையால் வேளைக்குகந்த வீரதீரம் அவர்களிடத்திலிருந்து வெளியாகுமென்பதற்கு ஐயமேயில்லை.

**283**. நம் பெண்டுகளுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சுவாதீனத்தை இன்னதென்று அறியாத சிலர், ஆண்பாலர்களுக்கு ஷை யார்கள் மிகவும் அடிமையாயிருக்கிறதாகவும், மேல்நாட்டுப் பெண்டுகள் மிகவும் சுவாதீனமாயிருக்கிறதாகவும், அவர்கள் போல் நம் நாட்டுப் பெண்டுகளும் இருக்கவேண்டு மென்றும், வீண் முயற்சி செய்கிறார்கள்.

**284**. பெண்டுகளுக்குப் பிரசவ காலத்திற்கு முன்னும் பின்னும் சுமார் ஏழெட்டு மாதகாலம் தேகம் தளர்ந்து பலக்குறைவு படுகிறதாலும், தம் குழந்தைக்கு சுமார் மூன்று வயது வரையில் தாம் பத்தியத்துடனிருந்து அடிக்கடி தாய்ப்பால் கொடுக்க வேண்டியதாலும், வெளியிற்சென்று முரட்டு வேலைகள் (அதாவது ஏர் பிடித்துழுதல், ஏத்துமரம் அல்லது கவலேத்து மூலமாய் நீரிறைத்தல், மரம் ஏறி மரம் வெட்டுதல்

(முதலியன) செய்யச் சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். மேற்படி காரணங்களினால்தான் இவர்கள் முக்கியமாக சமையல் தொழிலையே † கையாட நேரிட்டு குடித்தன காரியங்களைப் பார்த்து வருகிறார்கள்.

**285.** இவ்விதம் பெண்டுகள் உள்வேலையையும், புருஷர்கள் வெளிவேலையையும் பார்ப்பதுவே உத்தமம். தற்காலம் புருஷர்களுக்கு வெளியில் சென்று பெரும் உத்தியோகங்களில் அமரவும் அல்லது புகை வண்டியின் உதவிபெற்று வியாபார மூலமாக மிகுதனம் சம்பாதிக்கவும் சமயங்கிடைத்திருக்கிறதால், பலர் பெண்டுகளைவிட புருஷர்கள் சிரேஷ்டர்களென்று கருதுகிறார்கள். சில பெண்டுகளும் இதை நம்பி ‡ மோசம்போய், தாங்களும் ஷை வெளிவேலைகளில் அமர்ந்து சிறப்படைய விரும்புகிறார்கள். இது தப்பாகும்: ஆடவர் வெளி வேலையையும் ஆடவள் உள் வேலையையும் செய்துமுடித்த பிறகு, சாவகாசமான வேளையில் அவரவர் மனோ நிலைக்குத் தக்கபடி சத்கால க்ஷேபம் செய்வதே இல்லறமுறை யென்று முன்

---

† பெண்டுகள் அனைவரும் குடித்தனத் தொழிலையே செய்து வருகிறதினால், தத்தம் வருணத்திற்குரிய பட்டமற்று "அம்மாள்" என்ற ஒரே பட்டப்பெயரையே பொதுவாக சகலரும் தரித்து வருகிறார்கள். பட்டங்களெல்லாம் தொழில் மூலமாக ஏற்பட்ட தென்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமா யிருக்கிறது; ஷை காரணத்தினால் ஷையார்களுள் எச்சாதியாரும் பூநூல் தரிப்பதில்லை.

‡ மேலே கூறியபடி நம்பி மோசம் போன சில பெண்டுகள் மேல் நாட்டு வழக்கத்தை அனுசரித்து மிஸ்ஸஸ். இராமசுவாமி (Mrs. Ramaswamy) என்று தம் புருஷனுடைய நாமத்தை தரித்து, தனது நாமதேயத்தை அறவிட்டு, "பெண் சாதி புருஷனில் பாதி" என்ற மநுநீதியையும் மறந்து, தங்கள் சுதந்தரத்தைத் தாங்களே இழந்து விடுகிறார்கள். அந்தோ பரிதாபம்!

ஒவ்வொருவரும் தமது குணம் நடை, யுடை, பாவனையால் சிறந்து தமது நாமதேயத்தைப் பிரபலப் படுத்துவதே சீர். நம் நாட்டில் ஸ்ரீமதி தமயந்தி, ஸ்ரீமதி சீதை, ஸ்ரீமதி

33 முதல் 35-வது இலக்க மீராகவுள்ள பத்திகளில் கூறப்பட்டிருக்கிறது. ஆடவர் தனது சத்காலக்ஷேபத் தைப் பெரும்பாலும் இழந்து, வேண்டியஅளவுக் கதிகமாகச் சம்பாதித்த பொருளேயும் அதனுல் ஷை யாருக்கு ஏற்படும் மதிப்பையும் பார்த்து ஆடவள், தானும் அவ்வண்ணமிருக்க விரும்பினுல், தன் தேக இயற்கை நிலைக்கு விரோதமாய் தான் செல்ல நேரிட்டு பலதுன்பங்களுக்கு ஆளாகநேரிடும். மேலும் ஆடவள் தனது ஆடவர் அளவுக்கு மிஞ்சி சம்பாதித்த பொருள், கீர்த்தி முதலியவைகளுக்குத் தான் ஆசைப்படுவதினுல், தனது "சமநிலையால்" (அதாவது ஆளுக்கொரு வேலை செய்து சீவிப்பதினுல்) ஏற்படும் "சுவாதீனம்" இழந்து, அதிகம் உழைத்து சம்பாதித்தவர் பெரியவரென்று கருதி ஆடவருக்கு ஆடவள் "அடிமையாக" நேரிடுகிறது. மிகு தனத்தால் ஒருவர் அடையும் பயன்யாது? வீண் மனேராச்சிய மேயன்றி வேறன்று. இதற்கிணங்க,

"ஆசைக் கடிமைசெய் மடையர்கள் சொல்—அரைக்
காசுக்கு மதியேற் சுகவழி செல்,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகரவர்களும்,

"ஆசைக் கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெலவே நினைவ ரளகேச னிகராக
வம்பொன் மிகவைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலேந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாகவே யினங்காய கற்பந் தேடி

---

வாசுகி முதலானவர்கள் ஒவ்வொருவரும் தமதுநாமதேயத்தைக் (தத்தம் ஆடவர் எவ்வளவு சிறப்புற்றிருந்தும்) கைவிடவில்லை என்பதை நம் பெண்டுகள் ஒவ்வொருவரும் நன்ருய் மனதில் கொள்ளல்வேண்டும். சுவாமி அபேதாநந்தர் (Swami Abhedananda) அவர்களால் இயற்றப்பட்ட "இந்து மதத்தில் பெண்ணின்நிலை" (Women's place in Hinduism) என்னும் புஸ்தகத்தைப் படித்து பார்த்தால், இது விஷயம் நன்குவிளங்கும்.

நெஞ்சு புண்ணுவ ரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பது
முறங்குவது மாகமுடியும்,''

என்று தாயுமானவரும் கூறியதை நன்குணர்க.

**286**. வித்தைக்கு சரஸ்வதியையும், தனத்திற்கு இலக்ஷிமியையும், சக்திக்கு காளியையும் (அதாவது, பெண்டுகளை) அதிஷ்டான தேவதைகளாக நம்முன்னோர்கள் வெகு அருமையாய் ஏற்படுத்தினதினுலேயே ஷை யார்களின் சிறப்பு இன்னுட்டில் இன்னதென்று இனிது விளங்கும்.

**287**. மேலும் ஒருவீட்டில் சுமார் பத்து வயதுள்ள ஒரு பையன் இறந்தால் "அவனுக்கு என்னவியாதி" என்றும், இறந்தது பெண்குழந்தையாயின் "அதற்கு என்னவியாதி" என்றும் மிக்க மரியாதையாய் இளவுக்கு வந்தவர்கள் ஒருவர்க்கொருவர் கேட்பது சகசம். இஃதன்றியும் தனது சேவகனை "அடா" என்றழைக்கும் அரசனும் ஷை யானின் மனைவியை (சமயமுற்றபோது) "அம்மாள்" என்று மரியாதையாய் அழைப்பது நமது நெடுநாள்வழக்கம்.

**288**. கோவில் குளம் முதலிய புண்ணியக்ஷேத்திரங்களுக்கு மனையாளின்றி ஒருவர் தனித்துப்போனுல் புண்ணியமன்றென்று கருதப்படுகிறது. ஷை தலங்களுக்குப் போகும்போது வண்டிவாகனம் ஏற்படில் முதலில் குழந்தைகளையும் மனையாளையும் ஷை வாகனத்திலேற்றிவிட்டபின், ஆடவர் தனக்கு இடமில்லாவிடில் நடந்துசெல்வது நம்மெல்லோருக்கும் தெரிந்தவிஷயம்.

**289**. மேலேகண்ட காரணங்களினுல், நம்பெண்டுகள், இவ்வுலகின்கண் புருஷர்கள்போல், பூரணசுவாதீனம் பெற்றதுமன்றி, மேற்படியார்களால் தாங்கள் மிக்க மரியாதையுடன் நடத்தப்படுவதை அனுபவமாய் அறிந்துணர்ந்து, அதற்குப் பதிலாகப் புருஷர்களைக் கண்டபொழுது அடக்க ஒடுக்கமாக யெழுந்திருந்து மரியாதை செய்வது வழக்கம். இவ்வழக்கத்தை அடிமைத்தனமென்று கூறுவது அறியாமை.

மூ-க:—(1). நமது ஏழைப் பிள்ளைகளுக்குச் சம்பளம், சாப்பாடு, புஸ்தகம், இருக்கவிடம் முதலியவைகள் இலவசமாகக் கொடுத்து, அவர்களது "சுவாதீனத்திற்கு" இடையூறு நேரிடாமலும் பழிப்புக்கிடமில்லாமலும், ஒவ்வொருவரும் ஷெடி யார்களைத் தன் பிள்ளைகளைப்போல் பாவித்து நடத்தவேண்டும்.

(2). எவ்விதகாரணத்தினலாவது பரம்பரைப் பிராமணப்பிள்ளைகளை மேற்படி பள்ளிக்கூடங்களில் தற்காலம்சேர்க்கக்கூடாது; ஆனால் மேற்படி பிராமணர்கள் யாசகத்தொழில் (பரம்பரையாக) புரிவதை மகாவீரத்துடன் கைவிட்டு எவ்வளவு ஏழையானாலும், நம்மவர்கள்போல, தங்களால் இயன்றமட்டும் எத்தொழிலையும், ஆணும் பெண்ணும்செய்து சீவித்து, இரண்டு மூன்று தலைமுறைகளான பிறகுதான், ஷெயார்களின் பிள்ளைகள், நம்பிள்ளைகளுடன் சமநிலையடைந்து, மேற்படி பள்ளிக்கூடங்களில் சேர்ந்துபடிக்க அருகராவார்கள்; அப்பொழுதும், சனத்தொகை வீதாயப்படி மேற்படியார்களின் பிள்ளைகளை நம் பள்ளிக்கூடங்களில் சேர்க்க வேண்டும்; ஆனால் பரம்பரையாகப் "பிராமணர்" என்று கூறும் வழக்கத்தை விட்டு, நம்மைப்போல் "தொழில் பெயர்" பூண்டு அவர்களுள் எவர் வசிக்கிறாரோ, அவரது பிள்ளைகளை சனத்தொகை வீதாயமன்னியில் ஷெ சாலையில் சேர்க்கவேண்டும்.

(3). நம்மவர்களிலும் சிலபேர் நம் பிள்ளைகளின் நிலையறியாது அவர்களோடு ஒப்பிட்டு, அவர்கள் கல்வியிலும் உத்தியோகத்திலும் மேம்பாடடைந்திருப்பதை யுத்தேசித்து அவர்களுக்குப் பிரத்தியேகமாகப் புத்தி சாமர்த்தியமுண்டென்று சொல்லி குடியானவர்களை இகழ்கிறார்கள். இது உழுதமாட்டை முகத்திலடித்ததற்கொப்பாகும்; எவ்விதமெனில், நம் சனங்கள் யாசகம், திருட்டு இவ்விரண்டையும் நீக்கி, இதன் 1ட-வது பத்தியின் கீழ்கண்ட முக்கிய ஜீவாதாரங்களைத் தங்களாலியன்றமட்டும் கடைப்பிடித்து வருகிறதினால் தான்,

க. சென்ற சுமார் 2,000 வருஷங்களாக நம் நாட்டிலிருந்து, அன்னியர்களாகிய சீத்தியர், பாரசீகர், கிரீக்கர், போர்ச்சுகீசுக்காரர், அங்கிலேயர் (முதலில் கொள்ளையிலும்) முதலானவர்கள் நாளதுவரையில் வியாபாரத்திலும் உாசியலிலும், மகம்மதுகஜனி, தாமர்லேன், நாதர்ஷா முதலியவர்கள் கொள்ளையிலும், வெகு திரவியங் கொண்டுபோகவும்,

உ. இவ்விடத்தில் அடைக்கலம் புகுந்த சுமார் ஒரு இலட்சம் பாரசீகர்களை ஆதரித்தும்,

ந. நேட்டால், சிங்கப்பூர், பிநாங்கு, கீழ் ஆப்ரிக்கா, பிஜி, (Fiji) சிலோன் முதலான பிறதேசங்களுக்கு மேற்கித்திய முதலாளிகள் (Capitalists) சொற்ப சீவனம்செய்யும் நம்மவர்களை இங்கிருந்து கூலியாட்களாகக் கொண்டுபோய் அவ்விடத்தில் தாங்கள் (ஷை முதலாளிகள்) அதிவிருத்தி யடையவும், அவர்களுக்குவேண்டிய உணவுபொருள் முதலியவைகளை, நாம் (பஞ்சத்தால் நாளுக்குநாள் அதிக தரித்திரமடைந்திருந்தும் அதைக் கவனியாது) அவர்களுக்கு அனுப்பியும் ஷை யார்களுள் சிலர் அங்கே போனவிடத்தில் ஊர்ப்பிடியாமல் தேகம் வியாதியாகி வேலைசெய்ய முடியாதபோது மிகு இலாபம் அடைகிற முதலாளிகள் அவர்களை வைத்து ஆதரிக்காமல், திரும்பி இங்குவர, அவர்களை நாம் ஆதரித்தும்,

ச. தற்காலம் ரூபாய்க்கு 2½ அல்லது 3 படி அரிசி விற்கிற நித்திய பஞ்சத்திலும் ஐரோப்பாவில் நேர்ந்த பெருஞ்சண்டையை முன்னிட்டு அங்கிலேய சக்கரவர்த்தியின் சாதகமாக வெகுபொருள் கொடுத்தும்,

ரு. நமது மக்களின் ஒரு பெருந்தொகையைப் போர்வீரர்களாக ஷை சண்டைக்கு அனுப்பியும்,

சா நம் கோவில் குளங்கள் முதலிய பொதுத் தலங்களுக்கு வேண்டிய பணஉதவிசெய்தும்,

எ. சுமார் 2 கோடி (பயன்படும் தொழிலற்ற) பரம்பரைப் பிராமணர்களை ஆதரித்தும்,

அ. நம் நாட்டில் சுமார் நூற்றுக்கு இருபத்தைந்து பேர் யாசகர்களாயிருப்பவர்களுக்கு அன்னவஸ்திரமளித்தும், (மிகமெலிந்து பலங்குறைந்து சீரழிந்திருந்தபோதிலும்) சீவிக்க நேரிட்டிருக்கிறது. இவைகளை அறியாமல், நாளதுவரையில் ஷை காரியங்களுக்கு ஈடுபட்டு வருகிற நம் சனங்களை பலவிதமாகக் கேவலப்படுத்துவதுமன்றி, இனி அவ்விதம் ஈடுபடும் நம் பள்ளிப் பிள்ளைகளையும் தாழ்த்துவது பாவம்! பாவம்!! பாவம்!!! ஷை பாவந்தான் நம்மவர்களைச் சூழ்ந்து மிகச்சிதைக்கிறது. ஐயோ! இதன்கொடுமையை யார்பால் எடுத்துரைப்பது?

(4). நம்மவர்களுள் பெரும்பாலார் உழைக்க அஞ்சி தொழிலற்று யாசகமெடுத்து சீவித்திருப்பார்களாகில், அன்னியர்களும் இங்கு வந்து பொருள் கவர முடியாது, பரம்பரைப் பிராமணர்களின் புத்தி, சாமர்த்தியம், சுத்தம், சுகம் முதலானவைகளும் எங்கிருக்குமோஎவ்விடத்தேகுமோ,யாமறிகிலம். பெரியோர்களே! குடியான பிரபுக்களே! உழைப்பவர்களை இகழ்வதும் உழைப்பற்றவர்களைப் புகழ்வதும் பயனுகாதாதலால், மேற்படி கொடிய வழக்கத்தை விடுங்கள்! விடுங்கள்!! விடுங்கள்!!!

**290.** சத்தியம்: சத்தியம் என்றால் நித்தியம், நிசம், உண்மை அல்லது மெய் என்பது பொருள்; ஒருவர் உண்மை பேசுவாராகில், அவரது ஆசை, அச்சம் முதலியவைகள் அகன்று, மனந்தெளிந்து நுண்ணறிவு கொண்டு நித்தியப்பொருளை அடைவார். "சத்தியத்திற்" கெதிர்மொழி "பொய்." பொய்யுரைப்பதனல் ஆசை தடித்து அச்சமுண்டாகி நுண்ணறிவிழந்து அஞ்ஞானமிகும்; எப்படியெனில், ஒரு பொருளை ஒருவன் திருடினதாக வைத்துக்கொள்வோம்; அவன் ஏன் திருடினனென்றால், அப்பொருளின்மேல் அவனுக்கு அதிக இச்சையேற்பட்டு அப்பொருளை நீதிவழியாக அடையும் மார்க்கம் தனக்குத் தோன்றாது அப்பொருளைத்திருடி, உடையவருக்கு (தனக்கு ஒன்றும்

தெரியாததுபோல) "நான் அதைப் பார்க்கவில்லை" யென்று பொய்யுரைக்கிறான். அப்பொழுது அவனுடைய மனம் அப்பொருளின்மேல் ஏற்பட்ட அதிக இச்சையால் கட்டுண்டு போனதுமன்றி, அப்பொருள்காரர் அதைப்பற்றி அவனைக் கேட்டபோது தனக்குத் தீங்கு நேரிடுமென்ற அச்சத்தாலும் பந்தப்படுகின்றது. இவ்விதம் ஒவ்வொரு பொய்யும் இரண்டு திரைகளால் மனதைக் கட்டுப்படுத்துகிறது. ஆதலால்தான் பொய் சொல்லலாகாதென்று கூறப்படுகிறது.

இது கருதியே தாயுமானவரும்,

"பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரிபூரண வகண்டிதா காரமாய்
போக்கு வரவற்ற பொருளே,"

என்று கூறியுள்ளார். இவ்வுலகில் அனுபவமாய் பூரணசத்தியம் சாதித்தவர்களுக்கே நித்தியப்பொருள் கைவல்லியமாகும்.

மு-க:—மேலும், "உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்," என்றபடி "சத்தியமே சக்தி;" இவ்வாயுதங்கொண்டே நம் நாட்டினது காட்டைத் திருத்தி நன்செய்யாக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும்; (அப்படிக்கில்லாது தற்காலம் பெருங்கலாசாலையில் கல்வி பயின்று பெரும் பட்டம்பெற்று "சத்தியத்தைக் கைவிட்டு" மிக்க தனம் சம்பாதித்து பெருவீடுகட்டி நூதன ரதம் (Motar Car) முதலிய வாகனங்கள் ஏறி, உண்டுடுத்திப் பூண்டு சமயம் நேரிடும்போது பாமர சனங்களின் முன் தாம் மிக்க அன்பார்ந்த தேசாபிமானிபோல், தன் காரியம் சித்தியாகும் வரையில் வாய்ச் சமர்த்தாய்ப் பேசி ஷெ யார்களை ஏமாற்றி தானே தலைவராக நடிப்பவரின் உதவியால் நம் நாடு நாளுக்கு நாள் நசிக்குமேயன்றி ஒருநாளும் நலம் அடையவேயடையாது).

**291**. அருள்நீதி: அருள்நீதியென்றால் மெய்ந்நடு நிலைமையான நீதி; அதாவது, ஆதிமூலப்பொருளின்

அருட்சக்தி யெங்கும் அபேதமாய் வியாபித்திருப்பது போல, உலகத்தில் யாவருக்கும் எவ்வித பேதமின்றி சமநீதி பரிபாலிக்கப்படுமானால், அது "அருள்நீதி" யென்று கூறப்படும்; உதாரணமாக, திரடவரதன் என்னும் ஒரு அரசன் தன் ஏகபுத்திரன் ஏறி வந்த தேர்க்காலில் ஒரு பசுங்கன்று அகப்பட்டு உயிர் நீங்கின தற்காக, ஷெ இளவரசனை அதே தேர்க்காலினாலேயே அரைத்[illegible] கட்டளை இட்டதே அருள்நீதி. மேலும் இராம நாடகம் யுத்தகாண்டத்தில்,

"அடைவான தாய்தலையைப் பிழையால் பரசுராமன்
அரிந்தானே
பரிகாரம்
திடம் ஆம்பிதாவைக்கூட பிழைகண்டு சிவன்பண்டு
சிரம் கொய்த
நல்லோ வீரம்
நடவாநடை நடந்தால் அண்ணன்தம்பியைக்கூட
நலுக்கவேணும்
அந்நேரம்
உடலிற்புரைகழலை அறுத்தெரிவரைப்போல
ஒழிக்கவேணு மல்லாமல் உயிர்கொடுத்தென்ன சாரம்,"

என்று அருணாசலக் கவிராயர் கூறியிருப்பதைக்காண்க; இதனால் அருள்நீதி இத்தன்மையதென இனிது விளங்கும்.

**292.** முதநூல்: நூல்கள் ஐந்து வகைப்படும்; அதாவது, முதநூல், வழிநூல், சார்புநூல், புராணம், இதிகாசம் என்பன.

1. முதநூல் என்பது, வினையற்று விளங்கிய அறிவினர்கள் செய்த நூல்.

2. வழிநூல் என்பது, பெரும்பான்மை முதநூலை ஒத்துச் சிறிது வேறுபட்டு வித்துவான்களால் எழுதப்பட்ட நூல்.

3. சார்புநூல் என்பது, முதநூல், வழிநூல்களுக்குச் சிறுபான்மை ஒத்து பெரும்பான்மை வேறுபட்டிருக்கும் நூல்.

4. புராணம் என்பது, உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள்

சரித்திரங்கள், மநுவந்தரம் என்னும் ஐந்து விஷயங்களை விரவிக்கூறும் நூல்.

5. இதிகாசம் என்பது, பழையவரலாறு; உபதேச பாரம்பரையில்வந்த பழைய சரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்து பல கிளைக்கதைகளோடு புணர்த்து விரித்துக்கூறும் நூல்.

இவைகளுள் முதநூல் மெய்ப்[illegible]ணாடு பண்ணப்படுகிறதால் அது எக்காலத்திற்கும் பழுதில்லாமல் நிற்கும்; வழிநூல், புராணம் முதலியவைகளில் கற்பனை கலந்துள்ளதால், அவைகளில்கண்ட விஷயங்கள் அனைத்தையும் சாமானிய சனங்கள் மெய்† யென்றுரைப்பது அறியாமை. ஆதலால் விவேகிகள் முதநூல் ஆதாரமில்லாமல் ஒரு விஷயத்தைப் பற்றி தர்க்கித்து, நிச்சயிக்கலாகாது.

**293.** புரோகிதர்: சிலர் புரோகிதரை நீக்கிவிட்டால் ஷியாருக்குப்பதிலாக யாரைநியமித்து, சுபாசுபகாரியங்களை நடத்துவதென்று கேட்கிறார்கள். இதுஒரு நல்ல கேள்விதான்; ஐந்தாறு வயதுள்ள ஒரு சிறு பையன், தான்செய்த குற்றத்திற்காக தன்னுடைய 18-வதுவயதுவரையில் சிறைச்சாலையிலிருக்க நேரிட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டால், அவன் உலகத்தில் தனக்கேற்பட்ட "சுவாதீனம்" இன்னதென்று அறியாமையால், தான் இனி எச்சிறைச்சாலைக்குச் சென்றால் சௌகரியம்

---

†"வியாசர் சொல்லும் பாரதத்தில் வெகுபொய் வீணும்மேதினி
 மாய்கையினில் விருப்பஞ்சொன்னார், [யோர்
ஆய்ந்து கவி பாடிவிட்டான் கம்பன்வம்பன் அதீதராமா
 யனத்தி லனேகம் பொய்தான்,
சாயாமலதி வீரபாண்டியன் சொல்லுக் தமையந்தி
 சரித்திர னைடதமுஞ் சொன்னார்,
சுயமாகா துதிகவிகள் சுத்தப்பொய்தான் தொடுகவி
 மாணிக்கவாசகர் சொன்னார்தானே,"
என்று ஞானவெட்டியில் கூறப்பட்டிருப்பதை நன்குணாக.

அடையலாமென்று வினவுவதற்கொப்பாகும். சென்ற சுமார் 3,000 வருடங்களாக நம் பாமர சனங்கள் உள்ளதை உள்ளபடி அறியாது வேஷதாரிகளை ஞானிகளாக மதித்து, அவர்களுக்கு அன்னவஸ்திரம், தட்சிணை முதலியவைகள் கொடுத்து, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தங்கள்மடமை இரட்டித்து, அடிமைத்தனம் விருத்தியாகி, "சுவாதீனம்" இன்னதென்று அறியாததனால் ஏற்பட்ட ஒரு கேள்வியேயன்றி வேறன்று. நம் முன்னோர்கள் ஆதியில் முத்தி (பூரண சுவாதீனம்) அடையவிரும்பி, அதற்குப்பிரதிகூலமாயுள்ள (பஞ்சேந்திரியப்பேயால் விளையும் அடிமைத் தன்மைக்குக் காரணமான) "நான்" என்னும் ஓர் அகந்தை நசிக்கும்படி, ஷ "நான்" அற்ற பெரியோர்களின் பாதத்தில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது, நமது பூர்விக வழக்கமென்பதை நம்மவர்கள் தற்காலம் மறந்தே போயினர்கள். ஞானியல்லாத மூடர்காலில் விழுவது பிசகென்றால், பின்னர் யார்காலில் விழுவதென்று கேட்கிறது அறியாமையேயாம். இது இந்து மதத்தினர்களின் காலபலனோ, அல்லது அவர்களின் அதர்ம பலனோ யாம் அறிகிலம்.

**294.** மந்திரம்: சில அட்சரங்களை ஒருவர் குறித்த வேளையில் கிரமமாகச் சிலகாலம் செபிப்பதனால், ஷ யாரின் மனம் ஒருமைப்பட்டு அதனால் மனிதருக்கு உண்டாகும் சில அற்ப வியாதிகளைப் பரிகரிக்கும் சத்தி ஷ யாருக்கு ஏற்படுகிறது; ஷ மனத்தின் ஒருமைப்பாட்டிற்கு காரணமான சேபமே, "மந்திரம்" ஆகும். வியாதி முதலிய குறையுடையோருக்கே மந்திரமும், மந்திரகாரரும் தேவை. ஆனால் கலியாணம் முதலிய சுபாசுப காரியங்களில் தெய்வ வணக்கமே சிறப்புறறது.

**295.** இது நிற்க, ஷ காரியங்களில் புரோகிதர் "மந்திரம்" என்று கூறும் "வார்த்தைகளின்" பொருள் என்னவென்றால், ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், பூமி

ஆகிய இப்பஞ்ச மகா பூதங்களை † முறையே ஆகாச வாணி, வாயுபகவான், அக்கினிபகவான், வருணபக வான், பூமாதேவி என தேவதைகளாகப் பாவிப்பதுடன், தத்தம் இஷ்ட தேவதைகளையுங் (அதாவது ஸ்ரீ கிருஷ்ண சுவாமி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி முதலானவர்களையுங்) கோரி, அவர்களது நிறம், குணம் முதலியவைகளைச் சிறப்பித்து, துதித்து, தேங்காய் வைக்கிறேன், பழம் வைக்கிறேன், அது வைக்கிறேன், இது வைக்கிறே னென்று சொல்லி தூபதீப ஆராதனையுடன் ஷை காரி யங்களை முடிக்கிறதே யன்றி வேறன்று.

**296**. இது நிற்க, பரம்பரைப் பிராமணர்கள் புலம் பும்பாவனை மந்திரம், செபதபம், எக்கியம் முதலியவை களால், முற்காலத்தில் நம் சனங்கள் இம்மையிலேயே மிகு சித்திபெற்றார்களென்றும், அப்படியே நாம் தற் காலம் இம்மையிலேயே ஷை சித்தி அடையாவிடினும், மறுமையில் (அதாவது அடுத்த சனனத்தில்) மிகு

† ஷை பஞ்சமகா பூதங்களைத்தான் ஆதியில் நம்முன் னோர்கள் வணங்கினார்களென்று, ஏற்கனவே இதன் 73—ம் பத்தியில் கூறப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்ரீ கிருஷ்ணசுவாமி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி முதலிய "பல விக்கிரக ஆராதனை கள்" நம் நாட்டில் எப்படி யேற்பட்டிருக்கின்றனவென்றால், நம்மவர்களுள் ஒருவர் சத்திய நெறி தவறாதொழுகி உயர் நிலை யடைந்து, ஆதிமூலப்பொருளை அனுபவமாய் அறிந்துணர்ந்த பின், சனங்களில் அநேகர் அவ்வண்ணம் உய்யும்படி பேரன்பு கொண்டு, தம் அறிய கருத்துகளை பகிரங்கமாய் வெளியிட்டு பலர் (தத்தம் குறைகள் நீங்கி) சுக முறும்படிச் செய்வாரா னால், ஷையாரை நம் சனங்கள் "ஈசுவர அவதாரம்" என்ற ழைத்து, வணங்கி, பிற்காலத்தில் ஷையாரின் ஞாபகக் குறி யாக ஒரு விக்கிரகத்தை ஏற்படுத்தி, அதைத் தரிசித்தபோது ஷை யாரின் ரூபத்தையும், நற்குண நற்செய்கைகளையும் (கண்ட,படித்த அல்லது கேட்டபடி) மனதில் பாவனைபண்ணி ஷை பெரியோர்களுக்கு முதலில் வணக்கம் செய்வதுண்டு; பிறகு இதன் உட்கருத்தை அறியாத நம் சனங்களில் பெரும் பாலார் ஷைகுறியாகிய அந்த விக்கிரகத்தையே தெய்வமாகப் பாவித்திறைஞ்ச, இதன் மூலமாக ஷை "பல விக்கிரக ஆரா தனைகள்" தோன்றி வருகிறதென்று அறிக.

சித்தி அடைவோமென்றும், நம்மவர்களில் பலர் கூறுகிறார்கள். இது முற்றிலும் பிசகென்று இதன் 50--36 வது பத்தியிலும், 50--43வது பத்தியிலும், சீர்திருத்தத் தலைப்புகளின் கீழ் முன்னமே கூறப்பட்டிருக்கிறது.

**297.** மேலும் பொய்யாமொழிப்புலவர் மதுரையில் வணங்காமுடிமாறன் அரசாட்சி செய்கையில், அவருடைய ஆதரவின் பேரில் அவ்விடத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தக்கருதி, அவர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்யுங்காலத்தில் அவர் அருகில் சென்று தமது விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவர் தனக்கெதிரிலிருந்த (மூன்று சங்கத்தலைவர்களின் ஞாபகார்த்தமாகச் செய்து வைக்கப்பட்ட) கற்சிலைகளைக் குறிப்பிட்டு, அவைகள் சிரக்கம்பம் கரக்கம்பம் பண்ணும்படி செய்வீரேல், நீர் ஷை சங்கத்தைத் தாபிக்கத் தகுதியானவரென்று கூறினார். உடனே புலவர் பெருமான்,

"உங்களிலே யானொருவ னொவ்வுவனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள் - சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழுக் கென்பைந்தமிழு மொக்குமோ
வேடெழுதாரே யெழுவீரின்று,"

என்று பாடிய உடனே அக்கற்சிலைகள் சிரக்கம்பம் கரக்கம்பம் பண்ணினதாம்.

**298.** பட்டினத்தடிகளும் தன் தாயார் தகனகிரியைக்கு (அவரது உறவினர் விறகு முதலியவைகள் கொடேனென்றபொழுது) வாழை மரங்களைக் கொண்டு வந்து விறகாக உபயோகப்படுத்தி,

"முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே,"

என்ற விருத்தத்தைப் பாடவே தீப்பற்றினதாம்.

**299.** ஷை. பெரியோர்களின் புத்திர பௌத்திரர்கள் அல்லது சாதியார் மறுபடியும் ஷை பாடல்களைப் பாடினால், அப்பெருஞ் செயல்கள் விளையுமா? அல்லது

பரம்பரைப் பிராமணர்கள் ஷ பாடல்களைப் பாடினால் ஷ புதுமைகள் விளையுமா? விளையாது. விளையுமாயின், இவர்கள் படிக்கும் பாவனை மந்திரம் சரிதான். அவைகள், அவரவர் தூய்ய மனோசத்தியால் விளைந்ததேயன்றி வெறும் பாட்டினால் ஆனதன்று. சில சமயங்களில் திருநீறுகொடுத்து மனிதருக்கு உண்டாகும் பல வியாதிகளைச் சிலர் சொஸ்தம் பண்ணுவதுண்டு; ஆனால் என் சனங்களெல்லோரும் ஷ வியாதிகளுக்குத் திருநீறினாலேயே பரிகாரம் தேடுவதில்லையென்றாலோ அது மனோசத்தி யற்றவர்களுக்குப் பலிக்காதென்று அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள்.

**300.** சிலர் இவைகளெல்லாம் கட்டுக்கதைகள் என்பர். பொய்யாமொழிப்புலவர் என்ற காரணப்பெயரே, அவரது நிலையை நன்றாய் உணர்த்தும். மேலும் இதன் விவரம் அவரது சரித்திரம் படித்தால் இனிது விளங்கும்.

**301.** ஆனால் பட்டினத்தடிகளோ, தனது பெருஞ் செல்வத்தை வாரிச்சூறையிட்டு கௌபீனமுமின்றி இல்லந்துறந்த சிங்கம்;

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ
லாருந் துறக்கை யரிதரிது—நேரே [போ
மனத்துறவு மப்படியே மாணுவிவற்றி
லுனக் கிசைந்த வாறென்றே யோர்.
ஓட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்தசெல்வம்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ,"

என்று தாயுமானவரும் சிறப்பித்து கூறியுள்ளார். இவ்விதம் முற்றுந்துறந்த மகான் ஏன் கற்பனைக் கவிகள் கட்டவேண்டும்?

**302.** மேலும் மேற்படி பட்டினத்தடிகளே,

"நேமங்கள் நிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
யோமங்க டர்ப்பணஞ் சந்திசெப மந்திரயோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சற்பனையே†"

† சற்பனையே=மோசமே.

என்று கூறியதை ஆழ்ந்து ஆலோசிக்குங்கால், ஒருவர் இறந்தபின், மேற்படியார் மோட்சத்தைக் கருதி, ஷை யாரின் சந்ததியார் செய்யும் தர்ப்பணம் முதலிய கிரியைகள், இறந்தவருக்கு எள்ளளவும் பயன்படாதெ ன்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

**303.** நித்தியா நித்தியவஸ்து விவேகம்: நித்தியா நித்தியவஸ்து விவேகமென்றால், இது திரிகாலத்தி லுள்ள பொருளென்றும், அல்லது இது ஒருகாலத்தில் தோன்றி பின்மறையும் பொருளென்றும் இயற்கையாய் மானிடர்க்குள்ள பகுத்தறியும் அறிவு.

**304.** திராவிட—ஆரியர்கள்: இந்தியாவில் அநேக கூட்டங்கள் பற்பல இடங்களில் வெகுகாலமாக வசித்து வருகின்றன. அவையாவன:—

காண்ட்ஸ் (konds) என்பவர்கள் இந்தியாவின் மத்திய மாகாணத்திலும், பில்ஸ் (Bills) இராஜபுதனத் திலும், சன்தால்ஸ் (Santals) வங்காளத்திலும், தோத வர்கள் (Todas) தென்னிந்தியாவிலும், காக்கர்ஸ் (Gakkars) பஞ்சாப்பிலும், குறும்பர்கள் (Kurumbars) நீலகிரியிலும், குறவர்கள் (Kuravars) பழனிமலையி லும், திராவிடர்கள் (Dravidians) தெற்கிலும் மற்றும் சில கூட்டங்கள் பல பாகங்களிலும் வசித்து வருகிறதா கக் காணப்படுகிறது.

**305.** சுமார் 3,000 வருஷங்களுக்கு முன்பு ஆரியர் கள் மத்திய ஆசியா கண்டத்திலுள்ள ஆக்ஸஸ் (The Oxus) நதி அடிவாரத்திற்கருகே ஒரு பீட பூமியில் வசித்தார்கள்.

**306.** ஷை யார்களில் ஒரு பகுதி மேற்கு முகமாக சென்று ஐரோப்பாவில் (Europe) குடியேறி, ருஷியர், துருக்கியர், அங்கிலேயர் முதலிய பலபெயர்கள் தரித்து பல இடங்களில் வசித்து வருகிறார்கள்.

**307.** மற்றொரு பகுதி ஷை காலத்தில் † தென்பால்

---

† ஸ்ரீ கிருஷ்ணவதாரமாகி சுமார் 5,000 வருடங்களுக்கு மேலாகிறதென்று மகாபாரத மூலமாக வெளியாகிறது; ஷை

சென்று பஞ்சாப்பின் இந்து நதிக் (The Indus) கரை ஓரமாய் குடியிருந்த பின்பு, ஷை நதியிலிருந்து வங்காளம் முழுவதும் சென்று படிப்படியாய் சுதேசிகளுடன் சண்டையிட்டு ஜெயித்து, அங்கே வசித்தார்கள். அப்பால் இந்தியாவின் தென்திசை நோக்கி திராவிடத்திலும் புகுந்து வாசம் பண்ணினதாக நமது தேச சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**308**. கால அளவில் திராவிடர்கள், ஆரியர்கள் ஆகிய இவ்விருவகையார்களின் கல்வி, நாகரிகம் முதலியவைகள் அக்காலத்தில் ஏறக்குறைய ஒத்திருந்ததால் தான் ஷை யார்கள் மாத்திரம் பேதமற்று ஏகோபித்து வாழ்ந்தும், நாகரிகக் குறைவான குறவர் முதலியவர்களோடு சேராமலும், (இதன் 11-2வது பத்தியின் கீழ் கண்ட முக்கிய ஜீவாதாரப்படி) தங்களைப்போல் வசிக்கும்படி அவர்களை இம்சிக்காமல் அவரவர்கள் இஷ்டப்பிரகாரம் ஜீவிக்கும்படி விட்டுவிட்டதாகவும், இன்றையவரையில் ஷை நாகரிகக் குறைவான ஒவ்வொரு கூட்டமும் தனித்தனியாய் எவ்வித இம்சையின்றி நம் புண்ணிய பூமியில் வசிப்பதினாலேயே தெரியவருகிறது.

**309**. ஆனால், தென்னிந்தியாவில் ஷை நாகரிகக் குறைவான இரண்டொரு கூட்டத்தார்களுள் சிலர் திராவிட---ஆரியர்கள் போல தாங்களே நடக்க ஆரம்பித்து, அத்துடன் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அது விஷயம் ஷை யார்கள் தத்தம் பூர்வீக நாமத்தை நாளது வரையில் தரித்திருப்பதினாலேயே தெரியவருகிறது; உதாரணமாக, குறும்பர்களுள் சிலர்; (குறவர்களுள் சிலர் கூடிய சீக்கிரத்தில் நம் நிலையை அடைந்து விடுவார்களென தோற்றுகிறது).

**310**. திராவிட—ஆரியர்களது மதம், நடை, யுடை, பாவனையை எந்தக்கூட்டம் அங்கீகரித்து

---

அவதாரத்திற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்ரீராமாவதாரமென்று கூறப்படுகிறது. இவர் ஆரியராகையால், ஷை ஆரியர்கள் இந்தியாவில் முதல் முதல் குடியேறின காலம் இது வென்று நிச்சயிப்பது எளிதல்ல.

அனுஷ்டிக்கிறதோ, அது கால அளவில் ஷெ பெருங் கூட்டத்தோடு சேர்ந்து விடும்.

**311**. மேற்படி திராவிடரும், ஆரியரும் ஒன்றாய்ச் சேர்ந்தபின் சிலர் தென்மொழி வடமொழிகளில் தேர்ந்து பல சாஸ்திரங்களை எழுதியும், ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மொழிபெயர்த்தும் இருக்கிறார்கள். இவ்விதம் பொதுப்பட வெளியாய் வருகிற சாஸ்திரங்கள் ஷெ வகையார்களுக்குப் பொதுவாம்.

**312**. இதன் 11-வது பத்தியின் கீழ்கண்ட முக்கிய ஜீவாதாரங்கள் முதலான பல கருத்துகளை எவ்வித வித்தியாசமன்னியில் ஒரே தன்மையாய் நாளதுவரையில் அனுஷ்டிக்கும் இந்துக்கள் அனைவரும் ஓர் இனமேயன்றி வேறன்று.

**313**. இது நிற்க, ஷெ யார்களுள் ஒருவரைத் திராவிடரென்றும் மற்றொருவரை ஆரியரென்றும் தற்காலம் பிரித்துக் கூறுவது உசிதமன்று; அவ்விதம் பிரித்து நிகழ்வது அசாத்தியமே.

**314**. நற்குலம்: சத்தியம், அருள்நீதி தவராது நெஞ்சகத்தில் வஞ்சகமற்று, சூது, மதுபானம் முதலிய துர்வாடிக்கைகளை அறக்கண்டித்து, எத்தொழிலுஞ் செய்து பொருள் சம்பாதித்து வரவுக்குமிஞ்சி செலவு செய்யாமலும், குடும்பத்தின் கற்பு நிலைக்கும் பங்கம் வாராமலும் பாதுகாத்து வருங்குடும்பங்கள் ஒவ்வொன்றும் இவ்வுலகில் பூரணபொலிவுற்று விளங்கும்;

**315**. ஆதலால், ஏழைக் குடும்பமாயினும், எத்தொழிலாளராயினும், அக்குடும்பத்தாரே "உயர் குலத்தார்;" ஷெ உயர் குலத்தின ரொருவருக்குக் கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் அமையுமானல் அவர் வாசனை பொருந்திய பொன்மலர் போலாம்.

**316**. இதற்குமாறாக ஷெ நன்னெறி தவறி, வரவுக்கு மிஞ்சி செலவு செய்து, அல்லது கற்புநிலைக்குப் பங்கமேற்பட்ட குடும்பம் எதுவோ, அது இராஜ குடும்பமாயினும் மதிப்பிழந்து துக்கித்துத் தாழ்வடையும்.

**317.** சில்லறைக் கிரியைகள் :

1. மங்கிலியப் பெண்டுகள் முளைப்பாரியை மணவறைக் கருகே திருப்பூட்டுவதற்கு முன் எடுத்து வைத்தல்.

2. ஒரு பானையில் மஞ்சநீர் கரைத்து வைத்தல்.

3. ஆயிரப்பெருந்தாளி கூட்டிவைத்தல்; அதாவது, ஒரு மரஉரலின்மேல் ஒரு பழைய பானையில் நிறைய நீர் பெய்துவைத்து, அதை ஒரு சாணக்கினல் மூடி, ஷை சாணக்கில் ஆமணக்கெண்ணெய் வார்த்து சுமார் ஒரு அங்குல கனமுள்ள பெரிய திரியோட்டு எரியவிடுதல்.

4. மாப்பிள்ளையை மணவறைக்கு அழைத்து உட்காரவைத்தல்.

5. ஏற்கனவே சுண்ணும்பு, செம்மண்பட்டை சாற்றப்பட்ட முகூர்த்தக்காலின் (7, 9, அல்லது 11 கணுவுள்ளதும் காயப்படாமல் மிலாறு கழிக்கப்பட்டதுமான ஒரு பச்சை மூங்கிலின்) தலையில் ஒரு குடலை சாத்தி, மாவிலை, அரசிலை, மஞ்சநீரில் நனைத்த ஒரு சிறிய துண்டு முதலியவைகளைக்கட்டி மணவறையின் வடகிழக்கு மூலைக்குச் சமீபமாக ஒரு குழி தோண்டி அதில் கொஞ்சம் முத்து, பவளம், பசும்பால் முதலியவைகளை மாப்பிள்ளை போட்டவுடன் மூன்று அல்லது ஐந்து மங்கிலியப் பெண்டுகள் ஷை காலை ஊன்றும்படி ஆசாரியர் செய்வித்தல்.

6. பிறகு ஷை கால், அல்லி அரசாணி, ஆயிரப்பெருந்தாளி, குழ்வி, மஞ்சநீர்ப்பானை முதலியவைகள் ஒவ்வொன்றிற்கும் ஆசாரியர் கங்கணம் கட்டுதல்.

7. சீயக்காய் கழித்தல்; அதாவது, ஒரு மங்கிலிய மங்கையர் பெண்—மாப்பிள்ளையின் தலையில் எண்ணெ—சீயக்காயை தொட்டுவைத்தல்; (இவை பிரதானமன்று).

8. மாப்பிள்ளை நீராடி வேஷ்டி (கூறை), பூமாலை, கைக்கடயம் முதலியவைகள் தரித்துக்கொண்டு மணவறைக்கு வரும்படிச் செய்வித்தல்.

9. மாப்பிள்ளைக்கு கங்கணங் கட்டுதல்; எப்படியெனில், ஒரு தாம்பாளத்தில் அரிசி, தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு முதலியவைகள் வைத்து மாப்பிள்ளையை தன் இருகரங்களால் கொண்டமட்டும் அரிசி, தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்குடன் அள்ளி இரண்டு தரம் தூக்கித் தூக்கி வைக்கச் சொல்லி, மூன்றாந்தரம் தூக்கியிருக்கும் பொழுது (ஏற்கனவே தயாரித்துவைத்த) ஒரு மஞ்சள் கட்டின மஞ்சநூல் கயிற்றை மாப்பிள்ளையின் வலதுகையில் இதன் 49—9ன் இரண்டாவது பத்தியின் சீர்திருத்தத் தலைப்பின் கீழ் கண்டபடி கூறி, ஆசாரியர் கட்டுதல்.

10. சுவாமி தரிசனத்திற்கு மாப்பிள்ளையை அனுப்புதல்.

11. பெண்ணுக்கு 2 சேலைகள் (கூறை), ஷெயார் தாயாருக்கு ஒரு சேலை, பூமாலை, தாண்டா, மஞ்சள், குங்குமம், வெற்றிலைப்பாக்கு முதலியவைகளை ஒரு மங்கிலிய மங்கையர் மூலமாகக் கொடுத்தனுப்பி பெண்ணை மணக்கோலத்துடன் வரும்படிச் செய்வித்தல்.

12. பெண்ணை மணக்கோலத்துடன் அழைத்து, ஆசாரியர் முன் மாப்பிள்ளைக்கு செய்த மாதிரி செய்து, பெண்ணின் இடது கையில் கங்கணங் கட்டுதல்.

13. மாப்பிள்ளை சுவாமி தரிசனத்துக்குப் போய் வந்ததும் ஆலாத்தியெடுத்தல், மைத்துனர் மிஞ்சி போடுதல்.

14. ஓமம் வளர்த்தல்; அதாவது ஆசாரியர் மணவறையில் பச்சரிசி உமிபோட்டு, சமத்துக் குச்சி அடுக்கி, அதில் சூடத்தை † வைத்துக் கொளுத்தி தீ

† "உன்னுமனங் கர்ப்பூர வுண்டை போலேகரைய
மின்னு மானந்த விளக்கே பராபரமே,"

வளர்த்து, மாவிலையால் நெய் தொட்டு அடிக்கடி ஊற்றி "ஓம், ஓம் ‡," என்று அடிக்கடி சொல்லுதல்.

15. மாப்பிள்ளை மணவறைக்கு வந்ததும் தம்பதிகளின் சுண்டுவிரல்களை பெண்ணின் தாய்மாமன் கோர்த்து, மாப்பிள்ளையின் வலது சுண்டுவிரலை தான் கோர்த்துக்கொண்டு, மணவறையை ஷை மூன்று தரம் தம்பதிகளை சுற்றுவித்தபிறகு ஷை யார்களை ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்தல்.

16. தாரைவார்த்தல்; தம்பதிகளின் தாய் தகப்பன்மார்களை முக முகமாய் உட்காரும்படிச் செய்வித்து, ஒருவர்க்கொருவர் சந்தனம் அளித்து, தாம்பூலம், புஸ்பமாலை முதலியவைகளை மாற்றி "உங்கள் குமாரத்தி எங்களுடையது, உங்கள் குமாரன் எங்களுடையது," என்று ஒருவர்க்கொருவர் சொல்லச் சொல்லி பெண்ணின் தகப்பன் கையில் வெற்றிலைப் பாக்குக் கொடுத்து பெண்ணின் தாயானா மாவிலையால் தண்ணீர்தொட்டு ஷை வெற்றிலைப்பாக்கின் மேல் வைத்து "தங்கள் குமாரனுக்கு எங்கள் குமாரத்தியைத் தாரைவார்த்துக் கொடுத்தோம்," என்று கூறும்படிச் சொல்லி, அதை மாப்பிள்ளையின் தகப்பன் கையில் கொடுக்கும்படி செய்வித்தல்.

---

என்று தாயுமானவர் கூறியபடி, சூட்சம பொருளாகிய மனமும் அனல் பற்றிய கர்ப்பூர வுண்டை போல, காலாந்தரத்தில் கரைந்து விடுமென்று நினைத்து, பாகபாவனையற்று ஏகபாவனையுறும்படி நம் முன்னோர் சுபாசுப காரியங்களில் ஷை சூடந்தைக் கொளுத்தும் வழக்கத்தை உண்டு பண்ணினர் போலும்.

‡ "ஒரு பொருளே சரவசர பூதடா காளம்
ஓமெனலின் உரையுண ரென்றூதடா காளம்," என்று ஸ்ரீமான் நாராயண சுவாமி நாயகரவர்கள் கூறியபடி, சகல பொருள்களும் (அதாவது, அசைவனவும் அசையாவனவும்) ஒரே பொருளின் திரிபென்று ஷை பிரணவச் சொல்லால் அறிந்து, ஏகபாவனையுறும்படி ஏற்பட்ட ஒரு சாதனமே யன்றி வேறன்று.

17. பாத பூசை; பிறகு தம்பதிகள் தத்தம் பெற்றோர்களின் பாதங்களில் சந்தனந்தடவி, பூ போட்டு, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய, ஷை பெற்றோர்கள் மஞ்சளிட்ட அரிசியையும், பூவையும் தத்தம் பிள்ளையின் தலைமேல் வருஷித்து ஆசீர்வதித்தல்.

18. அடைவைத்தெடுத்தல்; ஒரு முறத்தில் ஏழு அடைவைத்து அவைகளை ஒரு மங்கிலிய மங்கையர் மாப்பிள்ளையின் தலை, தோள்கள், மடியின்பேரில் இருக்கும் கைகள், பாதங்கள் ஆகிய இவைகளின்மேல் வைத்தபிறகு, ஒவ்வொன்றையும் எடுத்து தலையைச்சுற்றி முறத்தில்வைத்து அம்பட்டனுக்கு கொடுத்துவிடும்படி செய்வித்தல்; அவ்வண்ணமே பெண்ணுக்கும் செய்வித்தல்.

19. அல்லி அரசாணி முதலியவைகளுக்கு பொங்கல் நைவேத்தியம் செய்தல்; அதாவது ஐந்து இலைபோட்டு பொங்கச்சாதம், தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு, அரைத்தமஞ்சள், குங்குமம், பால், வெல்லம் முதலியவைகள் வைத்து தேங்காயுடைத்து தூபதீபத்துடன் தம்பதிகள் ஆராதனை செய்த பிறகு, மாப்பிள்ளையின் வலதுபுறத்தில் பெண் உட்காரும்படி செய்வித்தல்.

20. இலட்சுமி விளக்கேற்றிவைத்தல்; அதாவது, ஒரு படியில் நெல்போட்டு அதன்பேரில் ஒரு அகச்சிப்பு வைத்து அதில் நெய் ஊற்றி, திரி கொளுத்தி ஆலாத்தி யெடுத்த பிறகு, அந்த படிநெல்லில் ஒரு எழுத்தாணியை ஊன்றி ஆலாத்தி எடுத்தல்; (திருஷ்டி பரிகாரம்).

21. திருப்பூட்டல்; இதன் 49--13 வது பத்தியின் சீர்திருத்தத் தலைப்பின்கீழ் கூறியபடி ஆசாரியர் செய்து முடித்தல்.

22. பெரியோர்கள் தேங்காய் உடைத்து

தம்பதிகளின்பேரில் அர்ச்சதை (மஞ்சலிட்ட அரிசியும்†
அறுகம்புல்லும்) போட்டு ஆசிர்வதித்தல்.

23. உப்பின்மேலுள்ள பெண்ணின் வலது
காலை மாப்பிள்ளை அம்மியின்மேல் மூன்றுதரம் எடுத்
தெடுத்து வைத்தல்.

24. பிறகு, மேற்கூரையை நீக்கி தம்பதிகள்
ஆகாசத்தை நோக்கி அருந்ததி பார்த்தல்.

25. பெண் மாப்பிள்ளையின் சுண்டுவிரல்களை
பெண்ணின் தாய்மாமன் கோத்து மணவரையை மூன்று
தரம் சுற்றி அந்தப்புரம் கூட்டிக்கொண்டுபோய் உட்கார
வைத்து பாலும் பழமும் தரும்படி செய்வித்தல்.

26. பெண்ணின் மாமன் தம்பதிகளை மறு
படியும் ஒருதரம் மணவரையைச் சுற்றிவைத்த பிறகு
பெண்ணை பெண்ணின் நாத்திமார் அந்தப்புரத்திற்கு
அழைத்து செல்லல்.

மு-க :—ஓமம் வளர்த்தலை இத்துடன் நிறுத்தவும்.

27. வந்த சனங்களுக்கு தாம்பூலம் பகிர்ந்த
பிறகு, தம்பதிகள் ஊர்க்கோலம் போகுதல்.

28. வீட்டிற்கு வந்ததும் ஆலாத்தி யெடுத்
தல்.

29. கங்கண விசர்ச்சனம்; மணவரைக்குச்
சென்றதும் முன்போல் தூபதீப ஆராதனையுடன்
பச்சரிசி முதலியவைகளை மூன்றுந்தரம் கையில் அள்ளி
தூக்கினபொழுது தம்பதிகள் ஒவ்வொருவரின் கங்
கணத்தை ஆசாரியர் அவிழ்த்தல்.

---

† நம் நாட்டில் விவசாயம் முக்கிய தொழிலாயும், அதில்
நெற்பயிரிடல் மிகச்சிறந்ததாயு மிருக்கிறதாகையால், அரிசி
மலிந்தால் அனைத்தும் மலிந்து யாவரும் ஆனந்தம் அடைவது
இயல்பு; இதனால் ௸ அரிசியை ஆனந்தக்குறியாகக்
கொண்டனர்போலும்.

30. தம்பதிகள் ஒருவர்க்கொருவர் மூன்தானையை மஞ்சநீரில் நனைத்தல்.

31. ஆசாரியர் மஞ்சநீர்ப் பானையில் (மூன்றுதரம்) சங்கு நெளிபோட்டு, அவைகளைத் தம்பதிகள் ஏககாலத்தில் எடுக்கும்படிச் செய்வித்தல்.

மூ-கு:—ஆசாரியர் வேலை முடிவுபெற்றது.

32. அன்று மாலையில், மங்கிலியப் பெண்டுகள் ஷெ மணவறையிலுள்ள முளைப்பாரி, முகூர்த்தக்காலிலுள்ள குடலை முதலியவைகளை ஆற்றிற்குக்கொண்டு போய் தேங்காய் உடைத்து, சூடம் கொளுத்தி, ஆராதித்து, நீரில் விட்டுவிட்டு, அல்லி அரசாணியின் உச்சியிலுள்ள தோண்டியில் நிறையத் தண்ணீர் கொண்டு வந்து, வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு கோவிலில் இறக்கி, பெண்ணும் மாப்பிள்ளையும் அவ்விடம் சென்று சுவாமி தரிசனம்செய்து மேளதாளத்துடன் ஷெ தோண்டியை பெண் தூக்கிக்கொண்டு வீடுபோய் சேர்தல்.

33. ஆயிரப் பெருந்தாளி நிறுத்தல்.

மூ-க:—(1). தற்காலத்தில் நடக்கும் சுபாசுப காரியங்களில் ஒவ்வொருவரும் தலைமைபூண்டு சபையில் ரசாபாசம்செய்து, மனுஷத்தன்மை சிதைக்கப்படுகிறது; ஆகையால் காரியங்களை கிரமமாக கூச்சலின்றி மரியாதையாய் நடப்பிப்பதற்கு (சற்குணமுள்ள) ஒருவரை சபைத்தலைவராகவும், மனிதரின் தராதரத்திற்குத் தக்கபடி வரவேற்று உபசரிப்பதற்கு ஒருவரையும், மேற்படியார்களின் விருப்பப்படி காரியங்களைச் செவ்வையாய் செய்து முடிக்க சிலரையும், ஆரம்பத்தில் அமர்த்திக் கொள்வது அத்தியாவசியம்.

(2). கலியாணம், ருது முதலிய சுப காரியங்களில் (மாமிசமின்றி) மரக்கறி, வடை, பாயாசம், அதிரசம், பழம் முதலியவைகளுடன் விருந்தளிப்பதே நமது பூர்வீக சிறந்த வழக்கம்.

**318.** கொள்ளிவைக்கிறவர்: சகோதரர்களுள் பாகவிஸ்தியான பிறகு ஆண்சந்ததியற்ற ஒருவர் இறந்தால், அவரது சொத்து பெண்சாதிக்கென்றும்; அல்லது பெண்பிள்ளை இருந்தால் பெண்சாதிக்கு சீவனும்சம் கொடுத்துவிட்டு மேஷ சொத்தை ஷ பெண்தானே அனுபவிக்கவேண்டுமென்றும், ஷ பெண்பிள்ளையும் சந்ததியற்ருல்தான் ஷயாருக்கு அனுபவ பாத்தியமென்றும், நம்மவர்களுள் சகோதரர்களுக்குரிய சம்பந்தாசம்பந்தங்கள் இன்னதென்று உய்த்துணராது, "ஆண்பிள்ளைகள் 18-வயதானவுடன் குடும்பப்பொறுப்பற்று (The Family Responsibility) தங்கள் குடும்பத்தைவிட்டு விலகி, பட்சி சாதியை ஒத்து பெற்ருேர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் தாங்கள் செய்யவேண்டிய கடமைகள் யாவுமற்ற மேல்நாட்டார்களைப்போல" சில அதிகாரவர்க்கத்தினர் ஷதீய சட்டத்தை உண்டுபண்ணிஞர்களேயன்றி, விபக்த சகோதரர்கள் முதலிய பங்காளிகள் சேர்த்து இல்லாவிடினும் தங்கள் சொந்தச் செலவில் இறந்தவரின் துக்கக்காரியத்தைச் செய்துமுடிக்கும் பாத்தியத்தையும், அவரது குடும்பத்தில் அப்பால் நடக்கும் சுபாசுப காரியங்களின்மேல் ஷயார்களுக்கேற்பட்ட பொறுப்பையும், ரத்து செய்யவுமில்லை, அவைகளைப்பற்றி ஷ அதிகாரிகள் கவனிக்கவுமில்லை; அவர்கள் ஷ விஷயங்களைக் கவனித்து, ஷயார்களுக்குள்ள பாத்தியத்தை ரத்து செய்திருந்தாலும், அது பயனற்றதாம்.

**319.** ஒரு இந்து குடும்பத்தில் பல குழந்தைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்; ஷ குடும்பத்திற்கு ஆண்பிள்ளையாலும் பெண்பிள்ளையாலும் விளையும் பலாபலன்கள் இவையென்று அடியில் வருமாறு ஆராய்வோம்:—

| ஆண் : பலாபலன்கள். | பெண் : பலாபலன்கள். |
| --- | --- |
| 1. ஆண்பிள்ளை (வயது வந்தபோது) சம்பாதித்து பெற்றோர்களிடம் கொடுத்து பெற்றோர்களுடைய சுகதுக்கத்தைப் பாகிக்கிறார். | பெண் பக்குவமானபோது, நகை, வஸ்திரம் முதலியவைகளுடன் தனது பெற்றோர்களால் கலியாணம் முடிவிக்கப்பெற்று சீர்வரிசைகளுடன் புருஷன் வீட்டிற்குச்சென்று தன் புருஷன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். |
| 2. தாய் தகப்பன் சம்பாதிக்கச் சக்தியற்றால் குடும்பத்தின் பாரத்தை மகன் தானே சுமக்கிறார்; அதாவது, பெற்றோர்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் அன்னவஸ்திரமளித்தும் தகப்பன்போல் சகோதரரைப் படிப்பித்தும், தனக்கும், மற்றவர்களுக்கும், காலத்தில் கலியாணம் முதலியவைகள் செய்தும் அத்துடன் தன் பெண்டு பிள்ளைகளையும் காப்பாற்றுகிறார். | பெற்றோர்களுக்குப் பெண் யாதொரு விதமான பொருள் கொடுக்கமுடியாது. ஒருவேளை கொடுத்தாலும் சண்டை சச்சரவு முதலிய பொல்லாங்கு நேரிட்டு, பழிப்புக்கிடமாகுமென்று அவர்களும் (பெற்றோர்களும்) இலகுவில் அதை வாங்கார்கள். மேலும் தான் சமையல் முதலிய உள்வேலை செய்பவராதலால், தன் புருஷன் அல்லது மாமியார் முதலியவர்களின் உத்திரவு பெற்றே தன் வசமுள்ள பொருளை பிறருக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. |
| 3. தாய், தகப்பன், சகோதரர், சகோதரி முதலியவர்கள் வியாதியாயிருந்தால் மகன் | பெண் தன் பெற்றோர்கள் அல்லது சகோதரர்கள் வியாதியாயிருந்தால், புருஷன் அனுமதியின்பேரில் |

| ஆண் : பலாபலன்கள். | பெண் : பலாபலன்கள். |
| --- | --- |
| தன்ருலியன்றமட்டும் அதற்குப் பரிகாரம் தேடுகிருர். | ஷியார்களே வந்து பார்த்து உபசாரஞ் செய்தபிறகு தன் வீடு செல்வாரேயன்றி, அருகேயிருந்து இரவும் பகலும் பையன் பாதுகாப்பதுபோல் பாதுகாப்பது வெகு துர்லபம்; அவ்விதமிருக்க மனமிருந்தாலும் தன் குடித்தனம் கெட்டுப்போகுமென்றும் அல்லது மாமியார் முதலியவர்கள் கோபித்துக் கொள்வார்களென்றும் தன் வீடு செல்ல நேரிடுகிறது. |
| 4. கட்டிக்கொடுத்த சகோதரி தன் வீட்டில் சண்டை சச்சரவேற்பட்டாலும் அல்லது வியாதியால் பீடிக்கப்பட்டு புருஷன் வகையரா பேர்வழிகள் தன்னைச் சரிவர கவனிக்காவிட்டாலும், தாய் வீடு சென்று பெற்ருேர்களிடத்திலும் சகோதரரிடத்திலும் வேண்டிய உதவி பெறுகிருர். | பெண்ணின் பெற்ருேர்கள் அல்லது உடன் பிறந்தார்களில் ஒருவர் எவ்வித காரணத்திலாவது தன் வீட்டிற்கு (மைத்துனர் வீட்டிற்கு) வந்தால் இரண்டு மூன்று தினம் அவ்விடம் தங்கலாமேயன்றி பெண் தன் தாய்வீட்டில் எந்த சௌகரியம் அனுபவிக்கிருரோ அதை தன் வீட்டில் தான் அவர்களுக்குத் திருப்பிச் செய்யமுடியாது. தன் தாய், தகப்பன், உடன்பிறந்தார் முதலியவர்கள் தங்களுக்கு எவ்வளவு அசௌக்கியம் ஏற்பட்டாலும் தங்கள் வீட்டிலிருப்பார்களேயன்றி ஷை குறையை நிவர்த்திக்கும்பொருட்டு பெண் புகுந்த வீட்டிற்குப் போகார்கள். |

கட்டிக்கொடுத்த பெண்ணுக்காவது மருமகனுக்காவது அல்லது அவர்கள் சந்ததிக்காவது, அப்படிப்பட்ட பந்தமும், பொறுப்பும் உண்டா? இல்லவே இல்லை.

5. அண்ணன் தம்பிகளுக்குள் வெகு இளமையிலேயே ஏற்பட்ட ஓர் அன்பினால் ஒருவர்க்கொருவர் செய்யுங்கடமைகளைச் சற்று யோசித்து பார்க்குமளவில், அது நாவால் சொல்லத் தரமன்று; எப்படியெனில், சகோதரர்களுள் ஒருவர் கொடும் வியாதியாயிருந்தாலும், கூன் குருடாயிருந்தாலும் அவர்களுள் இதுதான் செய்யவேண்டுமென்றும் இது செய்யக்கூடாதென்றும் யாதொரு விதமான ஓர் எல்லையில்லை. மேல் நாட்டில் ஏழை மடம் (The Poor House) இருப்பது போல இவர்களை ஆதரிக்க இங்கு மடமுமில்லை; மடம் ஏற்படுத்தினாலும் அதில் அவர்கள் புகும்படி சகோதரர்கள் எளிதில் விடார்கள்.

6. சகோதரர் ஒருவர்க்கொருவர் குடும்பத்திலுள்ள சகல நன்மை தீமைகளிலும் "பொறுப் பேற்று" (The Responsibility) ஈடுபடுகிறார்கள். அவர்களுக்குள் கொஞ்சம் சம்பாதித்தவருக்குக் கொஞ்ச பங்கென்றும், அதிகம் சம்பாதித்தவருக்கு அதிக பங்கென்று முண்டா? கிடையாது.

7. சகோதரர்களுக்குள் ஒருவர் பல பிள்ளைகளுடனிருந்து இறந்தால், மற்றொருவர் அக்குழந்தைகளை தன் பிள்ளைகளைப்போல் பாவித்து தன்னால் கூடிய உதவிசெய்து கலியாணம் முதலிய சுபாசுப காரியங்களுக்கும் இயன்றளவு ஈடுபடுகிறார்கள். சிலசமயம் இஷ்டமில்லா விட்டாலும் "உலகம் நிந்திக்குமே" யென்று அஞ்சி அக்கடமைகளை சரிவரமுடிக்கும்படி நேரிடுகிறது. பாகம் பிரிந்து விஸ்தியானாலும் சகோதரர்களுக்கு இப்பாத்தியம் முற்றிலும் இல்லாமலில்லை.

மூ-க:—இவ்விதப் பொறுப்பும், பந்தமும் பெண்களுக்குக் கிடையாது.

**320.** இது நிற்க, பாகம் பிரிந்தான பிறகும் சகோதரர்களுக்கு ஏற்படும் இன்பதுன்பங்களை ஒருவர்க்கொருவர் பாகிக்கிறார்கள். பெரும்பான்மை சகோதரர்களுக்குக் கலியாணமான பிறகு அவரவர் மனைவி ஒருவர்க்கொருவர் ஒற்றுமையற்று சில்லரை சச்சரவுகள் செய்கிறதாலும், அல்லது சகோதரர்களில் ஒருவர் குடிகாரராய், அல்லது ஊதாரியாயிருந்து மிகக் கடனை ஏற்படுத்தினாலும், இன்னும் இவ்வித பல துர்க்காரணங்களினால் ஒருவனால் குடும்பத்தார் அனைவரும் கெட்டுப்போகிறதை யுத்தேசித்து பாகம்பிரித்து வேறாகிறார்களேயன்றி, அப்பாகத்தினால் தங்களுக்குள் வெகுநாளாய் ஏற்பட்ட சகோதர ஆசாபாசம் (ஏகதேசம் ஆயிரத்துக்கொருவன் பொல்லாத கொடும்பாவியாயிருப்பவன் தவிர) நம்மவர்களைவிட்டு நீங்குவது வெகு துர்லபம்.

**321.** சொத்தில்லாவிட்டால் இன்பதுன்பங்களுக்கு பங்காளிகள் பாத்தியப்பட்டும், சொத்திருந்தால் அச்சொத்தை கொள்ளைகொள்ள ஒருவரும், கொள்ளிகுடத்துக்கு ஒருவருமா? இது வெகு நீதி. இதன் பயன் என்னாகும் என்றால், நம் நாட்டில் இவ்விஷயம் நாளுக்குநாள் பரவப்பரவ கொள்ளிவைக்கும் பாத்தியத்தை பங்காளிகள் விட்டுவிட ஏதுவாகும். அப்போது பிணம் எடுக்க நாதியற்று தெருவில் நாறிக்கிடந்து சுகாதாரத்துக்கு விரோதமாகவும், பழிப்புக்கு இடமாகவும் வந்து நேரிடும்; ஏனெனில், தக்க பொருளில்லாத ஏழைகள் நம் நாட்டில் சுமார் நூற்றுக்குத் தொண்ணூறுபேராகையால், அவர்களில் ஒருவர் சந்ததியற்றிறந்தபோது ஷெயார் பிணம் நாறி அதையெடுக்க நாதியற்றுப்போம்.

**322.** மேலும், ஆண் சந்ததியுடைய ஒருவர் இறந்தால் ஷெயாரின் சொத்து ஷெ சந்ததிக்குத்தான் பாத்தியமென்றும், ஷெயாரின் மனைவிக்கு (அதாவது தாய்க்கு தன் பிள்ளைகளுடன் வசிக்க இஷ்டமில்லாவிட்

டால்) ஜீவனும்சம் † என்றும், நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்; ஏனெனில், பெண்பாலருக்கு வேண்டியது அன்னவஸ்திரமும், இருக்க ஒரு இடமுமேயன்றி வேறன்று. இதன் விவரம் 285-வது பத்தியில் காண்க.

**323**. இஃதன்றியும், ஒருவருக்குப் புத்திரிகளிருந்தும் ஆண் சந்ததியற்றால் தனது கிட்டின பங்காளியின் ஒரு ஆண்பிள்ளையைச் சுவீகாரமாக எடுத்து சகலசொத்துஞ் சுதந்தரமும் அப்பையனே அனுபவிக்கும்படி செய்கிறது நமது பூர்வீக வழக்கம். இதனால் நம் முன்னோர்கள் கருத்து இன்னதென இனி இங்கு வரையத் தேவையில்லை.

**324**. ஆண் சந்ததியின்றி இறந்தவரின் மனைவிக்கு ஷெயாரின் குடும்ப நிலைமைக்குத் தகுந்த ஜீவனும்சம் அடுத்தவாரிசுகள் (Heirs) ஷெயாரின் சொத்திலிருந்து கொடுக்க கட்டமை ஏற்படுத்தி, அந்தப்பிரகாரம் நம்மவர்கள் சுகமாக இல்லறம் வெகுகாலம் நடத்தி அனுபவித்து வந்த ஒரு நல்ல வழக்கத்தை நாம் தற்காலம் கைவிடுவது அறிவீனமன்றோ?

**325**. ஓ குடியான தேசாபிமானிகளே! இதை கவனித்து இதைப்போல் இன்னும் அநேக விஷயங்கள். நமது வழக்கத்துக்கு விரோதமாய்ச் சட்டசபையில் சில சமயங்களில் நடக்கிறபடியால் நமது மதம், ஆசாரம் முதலியவைகளை நமது வழக்கத்துக்குத் தக்கபடி ஷெ சபையில் நம்மவர்களே பிரதிநிதியாகவிருந்து நமது

---

† தற்காலத்தில் மதிப்பு வாய்ந்த ஒரு பெண்மணி தன் நிலைமைக்குத்தக்க ஜீவனும்சம் ஒரு மாதத்திற்கு எவ்வளவு வேண்டுமென்று விரும்புகிறாரோ, அத்தொகைவீதம் 10வருடத்திற்கு அது எவ்வளவாகுமோ அவ்வளவுக்கு இடாம்பு (Court-fee Stamp), வக்கீல் சம்பளம் (Lawyer's fee) முதலிய பெருஞ்செலவுகளையும், வியாச்சிய முடிவாகும் வரையில் (அதாவது சுமார் 2 அல்லது மூன்று வருடம் வரையில்) தனக்கு

அரிய வழக்கங்கள் தாழ்வடையாமல் காப்பாற்ற முன் வந்தால்தான் நமக்கு க்ஷேமம் ஏற்படும்; நம் வழக்கத்தை அனுசரியாத பிறர் பிரதிநிதியாக வருவாரானால் நமக்குத்துன்பமே; கவனம்! கவனம்!! கவனம்!!!

**326.** 'உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா
முடனபிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கு
மம்மருந்து போல்வாரு முண்டு,"

என்று ஔவையார் கூறியபடி, சகோதரர்களுள் 100க்கு இரண்டொருவர் கொடும் பாவியாயிருக்கலாம். ஷை துர்ச்சகோதரரை அல்லது மற்றொரு தாயாதியை உடையவர்கள் ஆண் சந்ததி யற்றிருப்பார்களானால், தங்கள் இஷ்டம்போல் மரண சாசனப்பத்திரம் (Will) மூலமாய் தங்கள் இஷ்டர் எவராயினும் அவர்பேருக்கு தங்கள் சொத்துகளை எழுதிவிடுவதே உத்தமம். இப்படிச் செய்யாமல் 100-க்கு ஆண் சந்ததியில்லா ஒரு பணக்காரர் நிமித்தம் சுமார் 100-க்கு XXX **90** பேர்களாகிய ஏழைகளின் சுதந்தரங்களைப் பாழாக்கி குடியான குடும்பங்கள் அனைத்தையும் நாசப்படுத்துவது ஒழுங்கல்ல. குடியானவர்களும் சட்டசபை அங்கத்தினர்களும் ஷை தீய சட்டத்தைத் தீயிலிட தீரத்துடன் கிளம்பவேண்டும்.

**327.** **முத்திரைதானம்:** முத்திரைதானம் என்றால், தெய்வ சின்னங்களை பரம்பரைக் குருக்களால், தானமாகக் கொடுக்கப்படுவது; அதாவது, வைணவத்தில், விஷ்ணு சின்னங்களாகிய சங்கு சக்கரத்தை புஜங்களில் அணிவது. அஃதெப்படியெனில், ஷை சங்கு சக்கர

---

வேண்டிய மற்ற செலவுகளையும் தன் கையிலிருந்துபோட்டு நீதிஸ்தலத்தில் நீதிபெறுவதினாலேற்படும் கஷ்டநஷ்டங்கள் எண்ணிறந்தன. ஆதலால் இடாம்புச்செலவை சுமார் ரூபாய் 10-க்குமேற்படாமல் மிகக்குறைத்து. வியாச்சியத்தை குறைந்த பக்ஷம் 3 மாதத்திற்குள் நீதிபதிகள் முடித்துவிடும்படி சட்டம் செய்தாலொழிய பெண்டுகள் தத்தமக்குரிய சுதந்தரத்தோடு, தற்காலத்தில் வாழ்வது மெத்த அசாத்தியமாயிருக்கிறது.

ரூபந்தாங்கிய செப்பு அச்சுகளை பழுக்கக் காய்ச்சி சீடரின் ஒரு புஜத்தில் சங்கையும், மற்றொன்றில் சக்கரத்தையும் பரம்பரை வைணவ குருக்களால் முத்திரையிடப்படுவது.

**328**. முற்காலத்தில் வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் வாக்குவாதமுண்டாகி, வைணவத்தலைவர்கள் தங்கள் கட்சியைச்சேர்ந்தவர்களின் தொகை குறையாமல், நீடூழிகாலம் நிலைபெற இவ்வித சூழ்ச்சி ஏற்படுத்தினார்கள் போலும்.

**329**. பரிபக்குவர்களைப் பார்த்து உபதேசம் பண்ணாது, சனங்களுள் சிலரை முத்தி தருவோமென்று சொல்லி வசியஞ்செய்து "ஓம் நமோ நாராயண" என்னும் அஷ்டாக்ஷரத்தை உபதேசித்து, பொய் சொல்லப்படாதென்றும், நீராடியபின் சாப்பிடவேண்டுமென்றும், மாமிசம் புசிக்கப்படாதென்றும் கூறி தான்பெற்ற மக்களாயினும், தன்னைப்போல் முத்திரை தானம் பெரு விடில், அவர்களுடன் சமபந்திபோஜனம் செய்யப்படாதென்று பேதம் போதித்து ஷை தலைவர்கள் தங்கள் கட்சியை பலப்படுத்துகிறதாக காணப்படுகிறது.

**330**. சீடர்களைச் சோதித்து பக்குவிகளானால் உபதேசித்தும், அல்லராகில், அவர்களை நீக்கிவிடுவதே முறை; ஏனெனில், அபக்குவிகளுக்கு சொல்வதினால், அவர்கள் சத்தியம் சாதிக்கமுடியாமல் முத்திபெற யோக்கிதையற்று உண்மை அடியவர்கள்போல் வெறும் வேஷம் பூண்டு, தாங்கள் கெட்டதுமன்றி பலரையுங் கெடுக்கிறார்கள்.

**331**. பக்குவிகளுக்கு குரு உபதேசச் சொல்லே போதுமானது; முத்திரை அணிவது அனவசியம். முத்திரைபோடுவது, கட்சிக்கு ஆள் சேகரிப்பதற்கும், ஷையாரிடமிருந்து பொருள் சம்பாதிப்பதற்கும், ஏற்பட்டதோர் உபாயமேயன்றி வேறன்று.

"நெற்றிநாம மிட்டுத்தோ ணெருப்பிலிட்ட சேமியால்
ஒற்றிக்கைப் பொருட்கவர்ந் துளத்தின்வெப் பொழித்திலார்
சுற்றிவந்து பாதபங்க யம்பணிந்த துட்டன்மெய்ம்
முற்றுவித்த வந்தகைமு கிழ்க்கிலே னென்மோசமே,"

என்று ஸ்ரீமான் நாராயண சுவாமி நாயகரவர்களும்,

"பன்முத்திரைச் சமயம் பாழ்படக்கல்லா லடிவாழ்
சின்முத்திரை† யரசைச் சேர்வேனோ பைங்கிளியே,"

என்று தாயுமானவரும் கூறியுள்ளார்.

**332.** இது நிற்க, முத்திரைதானம்பெற்றவர் இறந்த போது, வைணவர்கள் சில சடங்குகள் செய்து, அம்முத்திரைகளை இறக்குகிறதென்னும் ஒரு வழக்கம் அனுஷ்டித்து வருகிறார்கள். முத்தி அடைவதற்காகப் பெற்ற முத்திரையை இறக்குவானேன்? முத்தியடைந்தபின் அவை வேண்டியதில்லையென்றாலோ, இறக்காதிருந்தால் அதில் என்ன குற்றம்? அம்முத்திரைகள் அக்கினியில் எரியப்படாதென்றாலோ, சரீரத்தை விட்டு அவைகளை பிரித்தெடுக்கப்படுவதில்லையே; பின்னர் இவர்கள் செய்யும் சடங்கும் மந்திரமும் எதைக் கருதியோ யாம் அறிகிலோம். மேற்கூறிய காரணங்களினால் ஷை முத்திரைதானம் பெறுவதும், பெற்றபின் இறக்குவதும் பெரும் மயக்கமேயன்றி வேறன்று.

**333.** 1. சவரம்: ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டினங்களிலும் அம்பட்டர் முதலிய தொழிலாளர்களுக்கு (அவரவர் செய்யும் வேலையின் கூலியாக) ஏற்பட்ட தானியாதி பலசுதந்தரத்தைக் ‡ கொடுத்தும்,

---

† சின்முத்திரை என்றால் பெருவிரலின் மத்தியிலுள்ள இரேகையில் ஆட்காட்டி விரலைவைத்து மற்ற மூன்று விரல்களையும் ஆகாயமுகமாக நீட்டி கைகளை முழந்தாள்களின் மேல் வைத்து நிஷ்டை செய்வது.

‡ தற்காலத்தில் நம் நன்மை தீமைகளில் தானியாதி பல சுதந்தரத்திற்குப் பதிலாக சில இடங்களில் பணம் ரொக்கமாக கொடுக்கப்படுகிறது. அகவிலை அடிக்கடி அதிகரிப்பதனால் ஷை தொழிலாளர்கள் தங்கள் கூலிவிஷயமாய்

தட்டுபட்டு வந்த சமயத்தில் சாதமளித்தும் குடியான வர்கள் அவர்களை ஆதரிப்பது வழக்கம்.

2. ஆனல் பட்டினங்களில் தற்காலம் ஷெ சுதந்தரம் கொடுப்பதுபோய், பணத்தைக் கூலியாக கொடுத்து வருகிறதால், சிலர் தனவான்களாகி நன்மை தீமைகளில் வெகு அசாக்கிரதையாய் காலதாமதம் செய்து தேவைக்கு வந்த அநேகர் அனுவசியமாய் காத்திருக்கும்படிச் செய்கிறார்கள். இவர்களை காணியாட்சி சுதந்தரர்களாக ஏற்படுத்தினதால், இவர்களை நீக்கி வேறொருவனை வைத்து காரியம் செய்வதற்குக் கூடாமல் கஷ்டம் நேரிடுகிறது.

3. கலியாண காலத்தில் மாப்பிள்ளைக்குத் திருப்பூட்டுந்தினத்தில் சவரம் பண்ணுவது வழக்கம். இது மாப்பிள்ளையை அழகுபடுத்தும்பொருட்டு ஏற்பட்டது. அன்றைய தினமே செய்யவேண்டுமென்ற வழக்கத்தால் சமயத்தில் ஷெ தொழிலாளர் வராததினல், சனங்களுக்குக் கஷ்டம் நேரிடுகிறது. ஆகையால் திருப்பூட்டுந்தினத்துக்கு முதல்நாளே ஷெ மாப்பிள்ளை தனக்கு இஷ்டமானவனைக்கொண்டு சவரம் செய்வித்துக்கொள்ளுவது உத்தமம்.

4. பெரிய காரியத்திலும், கொள்ளிவைக்கிறவர்கள் சவரஞ்செய்வித்துக்கொண்டு, நீராடி கொள்ளி வைப்பதுண்டு; ஏனெனில், அன்று தவறினல் அன்றைய பதினறும்நாள் அதாவது, கருமாந்தரத்தினமே

---

விவாதம் செய்ய நேரிடுகிறது. ஆகையால் முக்கிய உணவு பொருள்களும் (அதாவது, 18 வயதிற்குக் குறைவில்லாத ஒரு தொழிலாளரின் குடும்பத்திற்கு ஒருநாள் அல்லது அரைநாளைக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் முதலியவைகளும்) மற்ற சில்லரைச்செலவுகளுக்கு வேண்டிய பணமும் இவ்வளவென்று ஆங்காங்கு ஒரு திட்டம் செய்துவிட்டால், தொழிலாளரின் மனஸ்தாபமின்றி சுபாசுபகாரியங்கள் சமாதானத்துடன் நெடுங்காலம் செவ்வையாய் நடைபெறும்.

சவரஞ்செய்யவேண்டுமாதலால், துக்கக்காரருக்கு அதிக மயிர் வளர்ந்து இம்சையாயிருக்குமென்றும், துக்க அறிகுறியாக மீசையை எடுத்துவிட வேண்டுமென்றும் முற்காலத்தில் ஏற்படுத்தினார்கள்போலும். இவ்வழக்கம் நம் சௌகரியத்திற்காக ஏற்பட்டதேயன்றி வேறல்ல. இதில் அசௌகரியம் ஏற்படும் பக்ஷத்தில் கொள்ளி வைக்கிறவர் ஷெ சவரம் செய்யாமலே ஷெ காரியத்தை நிறைவேற்றி கருமாந்தரத்தினத்திற்கு முன்னதாகவே ஒருநாளில் தங்கள் சௌகரியப்படி இஷ்டமானவரைக் கொண்டு சவரம் செய்வித்து மீசையையெடுத்து வழக்கம் ஏற்படுத்திக்கொள்ளவும்.

மு-க :—(1). வேலைக்காரர்கள் எவ்வளவு தனவந்தர்களாயிருப்பினும் வேலை செய்தபோது கூலி வாங்குகிறதனால், எசமானனுக்குக் கீழ்படிந்து காலத்தில் காரியத்தைச் செவ்வையாய்ச் செய்யவேண்டும். அப்படிக்கில்லாவிடில் நம் சௌகரியத்துக்குத் தக்கபடி (தொழிலாளர்களை நீக்கி) நம் காரியத்தை நிறைவேற்றவேண்டும்.

(2). இவ்விதமே வீரகுடியார்கள், தாதர்கள், வண்ணார்கள் முதலிய பல தொழிலாளர்கள் கிரமமாக வேலை செய்தால் அவர்களை வைத்தும் கிரமந்தப்பினால் அவர்களை நீக்கியும் விடவேண்டும்.

(3). ஷெயார்களில்லாமல் காரியத்தை நிறைவேற்றப்படாதென்னுங் கருத்து கொண்டதனால்தான், ஷெயார்கள் மெத்த எடுப்பாயிருப்பதற்கு ஏதுவாயிருக்கிறது. ஆகையால் எந்த இடத்தில் எச்சமயத்தில் எத்தொழிலாளரால், துன்பம் நேரிடுகிறதோ, அந்த இடத்தில் அச்சமயத்தில் அவர்களை நீக்கிச் செய்வதே பாங்கு. நாம் நம் வேலைக்காரர்களுக்கும் அடிமை அல்லவென்று நன்றாய் அறியவேண்டும்.

**334.** சமாதி : சம + ஆதி = சமாதி; அதாவது ஆதி மூலப்பொருளுடன் சமமாக (இரண்டற) கலத்தல்;

இவ்விதம் இரண்டறக் கலந்த ஒருவர் அடங்கியிருக்கிற அறைக்குச் "சமாதி" என்று பெயராயிற்று.

**335.** நம் நாட்டிலுள்ள ஒரு மகாயோகி உலக விருப்பமற்று சதா சமாதியிலிருக்கக் கருதி பூமிக்குள் தனக்கு ஒரு அறைகட்டி, தான் உயிருடன் வசிக்கையிலேயே அவ்வறையில் தானிருந்துகொண்டு ஷை அறையை மூடிவிடும்படிச் செய்விப்பதுண்டு.

**336.** (1). மேற்படியாரின் சீடர்கள் குருவாக்குப்படி ஷை அறையை மூடுவதுமன்றி, அதன்மேல் பிறரொருவரும் ஷையாருக்கு (ஷை இடத்தைத்தோண்டி) யாதொரு தீங்கும் விளைவிக்காவண்ணம் ஒரு கட்டடங் கட்டி, அதில் இன்னாரடங்கியிருப்பதாக ஒரு கருங் கல்லிலெழுதி விளம்பரப்படுத்துவது வழக்கம்.

(2). சனங்கள் ஒரு மகரிஷி இதனுள்ளடங்கியிருக்கிறாரென்று அறிந்து, ஷையாருக்கு மரியாதை பண்ணுவதைப் பார்த்து, சாதாரண சனங்களில் சிலர் அம்மரியாதையைக் கருதி, தாங்கள் இறந்தபிறகு, தங்கள் சந்ததியாரை ஷை சமாதி தங்களுக்குக் கட்டும்படிச் சொல்லி, எங்கு பார்த்தாலும் இத்தகைய சமாதிகள் விருத்தியாகி வருகின்றன.

மூ-க :—உயிரோடு அறையில் இறங்குபவர்களுக்கே சமாதி உரித்தானதேயன்றி உயிரிழந்த பிணத்திற்குச் சமாதி பொருத்தமன்று. ஒருவர் துர் அபிமானத்தால் செய்த காரியத்தை அனுசரித்து ஷையாரின் சந்ததிகள் அதை வழக்கமாகக் கொண்டனர்கள் போலும்.

**337.** கருடபுராணம் :

* * * * * * * பாகவத
மாதிப்புராண மனைத்த வியாசரிவை
யேதா தரவா விசைத்தார்காண்—போதமுற்ற
தத்துவத்தைக் காதைசெய்து தந்தனரோ கேட்டவற்றைப்
புத்திகொண்டு பாவாற் புனைந்தனரோ—சத்தியமாய்க்
கண்ணாரக்கண்டே கதைக ளெழுதினரோ

விண்ணுஞ்சிற் கண்ணில் விளங்கியதைப்—பண்ணுருவாய்ச்
செய்தனரோ தத்துவத்தைத் தேர்ந்துநங்கை சூத்திரர்க
ளுய்யவுருவகித் தோதினதாய்—மெய்யுணர்ந்தோர்
சொல்லத்தாங் கேட்டதாய்ச் சொல்லுகின்றார் சோதித்த
வல்லவர்க ணீரிதனின் வாய்மைதனை—பல்விதத்துஞ்
சங்கையற சொல்லிச் சழக்கறுப்பீ ரென்றும்பா †
லிங்கிதனைக் கேட்டே னிதுநிற்க—மங்காத
வேத முபனிடதம் வியனு கமமிருதி
யாதிநூ லிங்கிருக்க யாதுபற்றி—யோதினரோ
விப்பதி னெண்ணு மிரும்புரா ணங்கடமைச்
செப்புமுன்னர் சூத்திரர்க டேர்ந்ததூ—லிப்புவியில்
யாதோ விலையே லவர்க்கேன் றிவர்மறையை
யோதல் வெளியாக வோவ்வுமோ— * * *
* * * * * * * * * கருட
னடல்விண்டு வைக்கேட்க வன்றோ—திடமா
யறிய கருடபுரா ணம்ப்ரேத கட்ட
மிருபதெனு மத்தியா யத்து—விரிவாக
வோதினு ரென்றுலக ரோர்ந்து மயலறவே
வேதம் விரித்த வியாதனு—ரோதியுள்ளார்
பத்தி விராகம் பரஞானம் யோகமிவை
சித்தமுறச் செய்யவெண்ணித் தேர்ந்தோர்க-ளுத்தி
கற்பனைய லங்காரக் காதைகளைச் செப்பியிடைக் [கொண்டு
பற்பலஞா யங்கட் பகர்ந்துள்ளார்—நற்குணங்க
ளெல்லாம்வந் தெய்த விவற்றை யுணராதார்
சொல்வாத மேபுரிந்து சோருகின்றார்—மெல்லியலே
யெச்சொல்லு மாய்த விடர்துலைந்திங் கஞ்ஞான
வச்சமறற் கன்றோ வனைவதென்—மிச்சமாய்ச்
சொல்லவெனக் கிச்சையில்லை தோலா மறைமுதலாம்
பல்கலைசொல் லஞ்ஞானப் பற்றறவே—நன்னூ
லுருவகித்துச் சொன்னவைக ளொன்கதைமெய் யேனுந்
தருபொருளைக் கோள் கதையைந்—தன்,"

என்று ஸ்ரீமான் நாராயணசுவாமி நாயகர் அவர்கள் கூறியதை நன்குணர்க.

---

† "உம்பால்" என்றது ஷ நூலாசிரியரின் குருவை சுட்டிக் கூறப்பட்டது.

**338.** சமையற்காரர் : பரம்பரைப் பிராமணர்கள் சுத்தமாயும் நேர்த்தியாயும் சமைக்கிறார்களென்றும், இவர்களிடத்தில் சாப்பிடுகிறது குற்றமில்லையென்றுங் கருதி குடியானவர்களுள் பலர் இவர்களை சமையற்காரர் களாக நியமித்து தங்கள் சுபாசுபகாரியங்களில் சமைக்க செய்கிறார்கள்.

**339.** பிறப்பு முதல் இறப்பு வரையில் நகத்தில் அழுக்குபடாமல் யாசகமெடுத்து சமைத்துச் சாப் பிடுவதை தவிர வேறு தொழிலற்றவர்களாகையால், இவர்கள் சுத்தமாகவும் பதார்த்தங்களை நன்றாகவும் சமைத்து சாப்பிடும் வழக்கமுடையவர்களா யிருக் கிறார்கள்.

**340.** ஆனால் குடியானவர்களோ ஆண்பிள்ளை உழுது தண்ணீரிறைத்தால், பெண்பிள்ளை களைகொத்தி அல்லது நீர்ப்பாய்ச்சிய பின்பு சமைத்து குடும்பசவர க்ஷணை செய்யவேண்டி யிருப்பதால், பொழுதெல்லாம் பாடுபட்ட பெண் எங்ஙனம் சுத்தமாயும், அறுசுவையோ டும் சமையல் செய்யக்கூடும்? இப்படியே ஒவ்வொரு தொழில் செய்வோருக்கும் இவ்வித கஷ்டம் இயல்பா யிருக்கிறது. தொழில்செய்து சாப்பிடுவோர் சுத்தமே சுத்தம். அவர்கள் சமைத்த ஆகாரமே அறுசுவை குறையினும் அவரவர் நிலைக்குத் தகுந்த ஆகாரம்.

**341.** குடியானவர்களினும் சமைக்குந் தொழில் தவிர வேறுதொழில் செய்யாத பெண்டுகளுள் அநேகர் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் சமைப்பதை நாம் பல இடங்களில் பார்க்கலாம். "நளபாகம்" யென்றேற் பட்ட ஓர் நூலினாலேயே குடியானவர்களுக்கு இத் திறமை இல்லையென்று சொல்லுவதற்கு இடமில்லை. ஆகையால் குடியானவர்கள் சமைத்த சாதத்தையும் கொடுத்த நீரையும் அருந்துவதே உத்தமம். இதுவே நம்மவர்களுக்குப் பொருத்தம். இதைவிட சுத்த சுகம் தேடுவது இடம்பம்.

மு-க :—(1). குடியானவர்களால் சமைத்த சாப்பாட்டை அருந்த மனம் இல்லாதவர்களை கருமாந்தரம் முதலியவைகளுக்கு அழைக்கவும்படாது, அவர்கள் வரவும்படாது; அத்தகையோர்கள் இழவுக்கு வந்து கண்டுகொண்டால் போதுமானது.

(2). எந்த ஊருக்குப் போனாலும் கூடியமட்டும் குடியானவர்களாலேற்பட்ட சாப்பாட்டு விடுதியில் சாப்பிடுவதும், தண்ணீர்ப் பந்தல்களில் ஷியார்களை நியமித்து நீர் அருந்துவதும் உத்தமம்.

(3). வெளியூருக்குப் போகிற (Circuit) குடியான உத்தியோகஸ்தர்களும் சென்ற சென்ற இடங்களில் பரம்பரைப் பிராமணரைத் தேடாமல் தங்களால் இயன்றமட்டும் குடியானவர்களில் எவரேனும் ஒருவரை சாதஞ் சமைத்துப்போடும்படித் திட்டஞ்செய்து சாப்பிடுவது ஒழுக்கம். அவர்கள் மிகச் சுத்தமாகக் காணப்படாவிட்டாலும், நீராடும்படியும் சுத்தமாய் சமைக்கும்படியும் ஏயம்படவுரைத்து, அவரிடத்தில் சாப்பிடுவதே கிரமம்; இவ்விதம் ஒவ்வொருவரும் தன்னால் கூடியமட்டும் அனுஷ்டித்தால் குடியானவர்களுக்கு அனுபவமூலமாய் அறுசுவையோடு சுத்தமாய்ச் சமைக்கும் திறமை காலக்கிரமத்தில் வாய்த்துவிடும்.

(4). தகுந்த குடியானவர் கிடைக்காத சில இடங்களில், பரம்பரைப் பிராமணரிடத்தில் (தன்மதிப்புக் கிடையூறற்ற சமயங்களிலும்) பணம் கொடுத்து புசியாமலிருப்பது உசிதமன்று.

பராதீன பாழ்மாயைப் பாழாக்கிப் பலரும்
சுவாதீன சுகவாழ்வை பெறவேண்டி—நலமுடனே
நவின்ற பல கருத்துகளை நாளடைவில்
பயின்றவர்க்கு படியும் சுகம்.

86029

Y
N23

# விண்ணப்பம்.

எனதன்பார்ந்த நண்பர்களே,

1921-ஹூ ஜனவரி-மீ 8உக்குள் இப்புத்தகத்தை அச்சிட்டு தரும்படி சென்னையிலுள்ள ஜஸ்டிஸ் பிரஸ் (Justice • Press) காரியதரிசியிடம் ஒப்பந்தம் பேசி, வேண்டிய காகிதம் முதலியவைகள் வாங்கிக்கொடுத்து சில நாளான பின்பு, ஒரு அசந்தர்ப்பத்தினுல் ஷ ஒப்பந்தத்தை ரத்துபண்ணி, வேறு கரார்செய்து அப்படியும் ஷ பிரஸ்காரர்கள் நடவாமல், எனது காகித முதலியவைகளை இதோ தருகிறேன் அதோ தருகிறேன் என்று ஷ யார்கள் பல சாக்குப்போக்குகள் சொன்னதை எதார்த்தமாகக்கொண்டு, நான் பல நண்பர்களுக்கு இப்புத்தகம் இந்தத் தேதிக்குள் வெளியாகிவிடும் அந்தத் தேதிக்குள் வெளியாகிவிடுமென்று கூறி வாக்கிழந்ததைப்பற்றி மிகவும் விசனிக்கிறதுமன்றி, நண்பர்கள் அதற்காக என்னை மன்னிக்கும்படி தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள,
கி. துரைசிங்கம்,
4எ, பாலக்கரை இடைத்தெருவு,
திருச்சிறுப்பள்ளி.

---

# விளம்பரம்.

இப் புத்தகத்தின் விலை ரூ. 1—8—0; தபால் கூலி முதலியவைகள் பிரத்தியேகம். கீழ்கண்ட விலாசத்தில் இது விற்கப்படும்:—

மகா-ா-ா-ஸ்ரீ,
அ. இராஜரேத்தினம் பிள்ளை அவர்கள்,
வியாபாரம்,
40, மலைவாசற்படி,
தெப்பக்குளம் தபாலாபீஸ்,
திருச்சிறுப்பள்ளி.